

சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய
கலாசார விழா நினைவு மலர்-2009

M.I. MOHAMED SAAKIR
SAMMANTHURAI.

பிரதேச சாகித்திய கலாசார விழா

2009

படைப்பு

சிறப்பு மலர்



பிரதேச சாகித்திய கலாசார பேரவை
பிரதேச செயலகம்
சம்மாந்துறை

2009

ಗಣಿತ

ಕೈಪಿಡಿ ಭಾಗ

சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழா



சமர்ப்பணம்

சகல வளங்களையும்
தன்னகத்தே கொண்டிலங்கும்
சம்மாந்துறைத்தாயே,
எங்களின் உணர்வுகளை
பக்குவப்படுத்தி
ஓங்கச்செய்த அன்னையே,
உன் உயர்வுக்காகவும்,
சாந்தி சமாதானத்துக்காகவும்,
இறைவனைப் பிரார்த்தித்து
இம்மலரை உனக்காகச்
சமர்ப்பணம் செய்கின்றோம்

சாகித்திய கலைப் பெருவிழா – 2009
பிரதேச செயலகம், சம்மாந்துறை.

பிரதேச சாகித்திய கலாசார விழாப் பேரவை

தலைவர்
ஜனாப் ஏ.மன்சூர், பிரதேச செயலாளர்

துணைத் தலைவர்கள்
கலைவேள் மாறன் - யூ.ஸெயின் (ஓ.பெற்ற அதிபர்)
ஜனாப் ஜே.லியாகத் அலி, (உதவி பிரதேச செயலாளர்)

செயலாளர்
ஜனாப் எம்.ஐ.எம்.அஷ்ரப், (கலாசார உத்தியோகத்தர்)

துணைச் செயலாளர்கள்
ஜனாப் ஏ.எம்.நவாஸ் (முகாமைத்துவ உதவியாளர்)
ஜனாப் ஐ.எல்.ஜலீல்

பொருளாளர்
ஜனாப் ஏ.எல்.ம.்.றூப், (கணக்காளர்)

உறுப்பினர்கள்
ஜனாப் யூ.எம்.முஸ்தபா (ஓ.பெற்ற அதிபர்)
கலாபூசணம் ஏ.ஸி.இஸ்மாலெவ்வை (ஓ.பெற்ற அதிபர்)
ஜனாப் எஸ்.ஏ.றாஸீக் (தவிசாளர், இணக்க சபை)
ஜனாப் றமீஸ் அப்துல்லாஹ் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
இறையருள் கவிஞர் ஏ.இப்றாஹீம் (ஓ.பெற்ற அதிபர்)
ஜனாப் மன்சூர் ஏ.காதர் (பதிவாளர்)
ஜனாபா பரீதா இஸ்மாயில் (ஆசிரியை)
ஜனாபா மசூறா ஏ மஜீது (ஆசிரியை)
ஜனாப் ஏ.எல்.சாய்வுத்தம்பி (அதிபர்)
ஜனாப் என்.ம.்.றூப் (உதவி அதிபர்)
ஜனாப் ஏ.அகமட் (PM)
ஜனாப் எஸ்.எம்.எம்.ஜவாட் (ஊடகவியலாளர்)
திரு எஸ்.கோணேசமூர்த்தி (அதிபர்)
ஜனாப் ஏ.எம்.இல்யாஸ் (GS)
ஜனாப் எல்.எம்.அஸ்லம்
ஜனாப் எம்.எம்.சலீம் (GS)
ஜனாப் ஏ.எல்.எம்.இஸ்மாயில் (GS)
ஜனாப் எம்.ஐ.எம்.தௌபீக் (GS)
ஜனாப் எம்.எஸ்.எம்.பஸ்றி
ஜனாப் ஏ.ஜே.எம்.ஹனீபா (AM)
ஜனாப் ஏ.எல்.எம்.இஸ்மாயில் (ஆசிரியர்)
ஜனாப் எம்.ஐ.எம்.பஷீர்(DA)
ஜனாப் எம்.எம்.ஜுனைதீன்(SPA)

சாகித்திய கலாச்சார விழாப்பேரவை



முன்வரிசை இடமிருந்த வலம்: எஸ்.ஏ.றாஸீக், ஏ.இப்றாஹீம், மன்சூர் ஏ காதர், எம்.எம்.சலீம், யு.செயின், எஸ்.கோணேசமூர்த்தி, ஜே.லியாக்கத் அலி, (A.D.S) மசூறா ஏ.மஜீட், ஏ.மன்சூர்(D.S), பரீதா இஸ்மாயில், ஏ.எல்.ம:றூப்(Acct.) ஏ.சீ.இஸ்மாலெவ்வை, ஏ.எம்.நவாஸ், எம்.ஐ.எம்.அஸ்றப்(C.O) பின்வரிசை இடமிருந்து வலம்: எம்.எம்.ஜூனைத், பஸீர்,ஏ.எம்.இல்யாஸ், எம்.ஐ.எம்.தௌபீக், ஏ.எல்.எம்.இஸ்மாயில், யு.எல்.எம்.முஸ்தபா, எஸ்.எம்.எம்.ஜவாட்



பேரவைத் தலைவரின்
இதயங் கனிந்த நன்றிகள்.



"அஸ்லாமு அலைக்கும்"

ஒரு சமூகத்தின் அல்லது ஒரு பிரதேசத்தின் பாரம் பரிய சமூக விழுமியங்களை கட்டிக் காப்பதில் அங்கு வாழ்ந்த , வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களினால் வாழையடி வாழையாக பேணிப் பாதுகாக்கப்படும் கலை கலாசாரப் பண்பாடுகள் எப்பொழுதுமே முக்கிய பங்கினை வகிக்கின்றன. அந்த வகையில் சம்மாந்துறை மண் பதியின் பாரம்பரிய மண் வாசனையை மணம் பரப்பச் செய்வதில் அன்று முதல் , இன்று வரை கலைஞர்களும், எழுத்தாளர்களும் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

அக் காலத்திலிருந்தே சம்மாந்துறை எல்லைக்குள் வாழ்ந்த மக்கள் பாரம்பரியமாகக் கவி பாடுதல், நாடகம் நடித்தல், இசைக் கச்சேரி நடத்தல், சிலம்படி, சீனடி, கோலாட்டம், வாள் வீச்சு போன்ற இன்னோரன்ன கலை கலாசார நிகழ்ச்சிகளில் பங்கேற்றமையால் அவர்களின் பெயர்களுடன் அக் கலைகளின் பெயர்களும் இணைந்தவாறு நிலைத்து இன்று வரை பேசப்படுகின்றது.

ஐம்பதுகளின் பின் சில கலாமன்றங்களும், பாடசாலைகளும், நாடகங்கள் நடித்தல், கலை கலாசாரப் போட்டிகளை ஏற்பாடு செய்தல் போன்ற செயற்பாடுகளால் இளைஞர்களுக்கிடையே கலை நிகழ்ச்சிகள் குறித்து விழிப்புணர்வுகள் தோன்றின. பாடசாலைகளில் நிகழும் மாணவர் மன்றங்கள், தமிழ் மொழித் தினப் போட்டிகள், கலை விழாக்கள் என்பன இவற்றுக்கு மேலும் உரமூட்டின.

எண்பதுகளின் பிற் பகுதியில் நம் நாட்டில் ஏற்பட்ட அசாதரண நிலை காரணமாக மேற்படி நிகழ்வுகளை சிரமமாக மேற் கொள்வதில் ஏற்பட்ட தொய்வு நிலை காரணமாக இத்தகைய கலை கலாசார விழுமியங்கள் முற்றாக மறைந்து போய்விடுமோ என்ற அச்ச நிலைமை எம் அனைவரையும் ஆட் கொண்டது. இதன் காரணமாக, இதனைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு எமது பிரதேச செயலகத்திற்கும், பிரதேச செயலாளர் என்ற வகையில் எனக்கும் இன்றியமையாத ஒரு சமூகக் கடப்பாடாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சாகித்திய விழாக்களின் மூலமாக இலக்கியவாதிகளின் திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. அவர்களின் திறமைகளுக்கு புடம் போடப்படுகின்றது. எமதூர் இலக்கிய வாதிகளை கௌரவப்படுத்தி கை தூக்கி விடும் நன் நோக்கத்தின் பொருட்டு எமது பிரதேச செயலகமும் சில வருடங்களின் முன் 'கலை இலக்கிய கலாசாரப் பேரவை' என்ற ஒரு அமைப்பை மாறன் யூ. ஸெயின் அவர்களின் முயற்சியினால் பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் உருவாக்கி, மாகாண கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. இதன் மூலம் பிரதேச மட்டத்தில் கலை இலக்கிய கலாசாரப் போட்டிகள் நடாத்தி சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு முத்தாப்பு வைத்தாற் போல் இவ் வருடம் பிரதேச சாகித்திய விழா ஒன்றை நடாத்துவதாக நாங்கள் தீர்மானித்தோம்.

இதன் பிரகாரம் எங்கள் செயலகத்துள் அடங்கிய கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரினதும் ஆலோசனைகளைப் பெற்று "பிரதேச சாகித்திய கலாசார விழாப் பேரவை" ஒன்றை நிறுவியுள்ளோம். இதன் தலைவராக பிரதேச செயலாளரான நானும், துணைத் தலைவர்களாக மாறன் யூ-ஸெயின், உதவிப் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அவர்களும், பொதுச் செயலாளராக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப் அவர்களும், துணைச் செயலாளர்களாக ஐ.எல்.ஜலீல் அவர்களும், முகாமைத்துவ உதவியாளர் ஏ.எம்.நவாஸ் அவர்களும், பொருளாளராக ஏ.எல்.ம.்.றுப் அவர்களும் தெரிவு

செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து விழா நிகழ்ச்சி திட்டமிடப்பட்டு விழாப் பேரவையில் அங்கீகாரம் பெறப்பட்டது.

விழா நிகழ்ச்சித் திட்டங்கள்.

- ❖ ஏற்கனவே நடாத்திய கலை இலக்கிய கலாசார போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குதலும், சான்றுப் பத்திரம் வழங்குதலும்.
- ❖ எமது பிரதேசத்தில் கலை இலக்கிய கலாசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட முன்னோடிகளை இனங்கண்டு விருது வழங்கல்.
- ❖ கவித்துவ சிறப்பை ஆழமாக எடுத்துக் காட்டும் கவிதை அரங்கம் நடாத்துதல்.
- ❖ சாகித்திய விழா நினைவாக சிறப்பு மலர் ஒன்று "பட்டறை" என்ற பெயரில் வெளியிடுதல்.
- ❖ இப் பிரதேச பாடசாலைகள், நிறுவனங்கள் தயாரித்தளிக்கும் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றல்.
- ❖ பிரமுகர்களை அழைத்து பகிரங்கக் கூட்டம் நடாத்துதல்.

இவற்றுக்கு செயலாற்றுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அக் குழுக்களும் அவற்றின் தலைவர்களும்.

1.	நிதிக் குழு:	ஜனாப்.ஏ.எல்.ம.்றுப் (கணக்காளர்)
2.	ஊடக பிரசார விளம்பரக் குழு	:ஜனாப்.ஏ.ஜே.எம்.ஹனீபா (ச.அ.உ)
3.	பட்டறை சிறப்பு மலர்க் குழு	:ஜனாப்.ஏ.சி.இஸ்மாலெவ்வை (ஓய்வு பெற்ற அதிபர்)
4.	கலை கலாசார நிகழ்ச்சிக் குழு	:ஜனாப்.எல்.எம்.அஸ்ஸம்
5.	வரவேற்புக் குழு	:ஜனாப். ஏ.எல்.எம்.இஸ்மாயில் (கிராம உத்தியோ)
6.	உபசரணைக் குழு	:ஜனாப்.எம்.எம்.சலீம் (கிராம உத்தி)
7.	மேடை அமைப்புக் குழு	:ஜனாப்.எம்.பி.எம்.ஹுசைன் (சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்)

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு குழுக்களுக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறி வரையறுக்கப்பட்டன. குறிப்பாக நிதியைப் பெற்றுக் கொள்ளும் வழிகள், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் முறைகள், மலர் வெளியீடு தொடர்பான செயற்பாடுகள் என்பவற்றை முதற் கண் ஒழுங்கு செய்ய வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டது. கலாசார நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் நெறியாளர்கள் சென்று பார்வையிட வேண்டும் என்று கருத்துக் கூறப்பட்டது. இதன் பின்னர் தலைவர்களின் தூண்டுதலால் குழுக்கள் கன கச்சிதமாக இயங்கத் தொடங்கின. குறிப்பாக மலர்க் குழுவும், நிதிக் குழுவும் பகீரதப் பிரார்த்தனம் செய்து தமது கருமங்களைச் சிறப்பாக ஆற்றினவென்றால் மிகையாகாது. இதன் போது நலமாக இருந்தமையை உணர்ந்த ஏனைய குழுக்களும் உற்சாகமாக உள்ளுணர்வுடன் செயலாற்ற சித்தமாயினர்.

இதனிடையே தோன்றும் இடர்களை பிரதி சனிக்கிழமைகளில் கூடும் பேரவையின் அமர்வுகளில் கலந்துரையாடி திருத்தங்களையும், திருப்பங்களையும் மேற் கொண்டோம். இப் பேரவையில் சிறப்புக்குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், ஆலோசகர்களும் பங்கு பற்றினார்கள். இக் குழுக்களில் எமதூரின் பெண் எழுத்தாளர்களான பரீதா இஸ்மாயில், மசூறா சுஹைர்தீன் ஆகியோர் பங்கேற்று பெண்கள் சார்பான கருத்துக்களையும், வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

அத்துடன் நாளிலும், பொழுதிலும் நலம் கூர்ந்து இதமுடன் இதயம் கலந்து இயங்கிய துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் கணனியோடு இரண்டறக் கலந்து இயங்கிய

ஏ.எம்.நவாஸ், எம்.எம்.ஜுனைதீன் ஆகியோரும், இவர்களுக்கு உறு துணை புரிந்த செல்விகளான வி.ஜீவித்தா, எம்.ரி.பாத்திமாறிபானா, என்.அமுதா, வீ.ரி.வாரிதா, ஏ.சர்மிலா ஆகியோரும், ஊடகவியலாளர்களும், எம் இவ் ஆக்கப் பணிகளுக்கு தம்மை அர்ப்பணித்து செயலாற்றியமை குறிப்பிடத்தக்கது.

தேவைகளைப் பொறுத்து தொடர்பாடர்களாகவும், நெறியாளர்களாகவும் இயங்கிய ஐ.எல்.எம்.றாபிஉ, எம்.ஐ.எம்.பஸீர், எம்.ரி.எம்.வாஹிட், எம்.ஏ.சி. யூசுப் லெவ்வை,யூ.எம்.முஸம்மில், எஸ்.அஸீஸ் உல்லா, எஸ்.எல்.எம்.மன்சூர், எம்.ஐ.ஆதம்பாவா, எம்.ரி.எம்.சரீம் ஆகியோரும், வெளிவிவகார செயற்பாடுகளில் முழு மூச்சாக இயங்கிய கிராம உத்தியோகத்தர்களும், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நெஞ்சம் நிறைய நினைவு கூறத்தக்கவர்களாவர். அன்றியும் தோன்றாத் துணையாக இருந்து பிரியமுடன் செயலாற்றிய எமது செயலகப் பெண் உத்தியோகத்தர்களும் பாராட்டுக்குரியவர்களே.

மேலும் காரியங்கள் கச்சிதமாய் முடிய ஊன்றுகோல் போன்று உதவிய மேலதிக அரசாங்க அதிபர் யூ.எல்.ஏ.அஸீஸ் அவர்களால் உபகரிக்கப்பட்ட கணனி இயந்திரம், ஜனாப்.எம்.பி.எம்.றைஹான் எல்.எல்.பி. அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பரிசளிப்புப் புத்தகங்கள் என்பன நம் கவனத்தில் கொள்ளத்தக்கன. அத்துடன் இவ் விழாவை இனிதே நடாத்த நிதி உதவிகளை நல்கிய வர்த்தகப் பெருமக்கள், பிரமுகர்கள், மற்றும் பல் வகைப்பட்ட அமைப்புக்களும் இந்த "பட்டறை" மலருக்கு பாசமுடன் ஆசிகளை நேசமாக வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ.எம்.எம்.நௌஷாட், கௌரவ மாகாணசபை உறுப்பினர் எம்.எல்.ஏ.அமீர்,கௌரவ பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஐ.எம்.மன்சூர், அரசாங்க அதிபர் மற்றும் மேலதிகாரிகள், மார்க்க வழிகாட்டிகள், ஆக்கங்களை அள்ளி வழங்கிய புத்தி ஜீவிகள், இவ்வினிய சாகித்திய விழாவை இன்புற நடாத்த களமாக நகர மண்டபத்தை அனுமதித்து நல்கிய எமது பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஐ.எம்.மன்சூர் அவர்களுக்கும், ஏனையோருக்கும் நன்றி எனும் நறுமண மலர்களை சூடி நிற்கின்றேன்.

மேலும் இவ் விழாவை சிறப்பிக்க நிகழ்ச்சிகளை வழங்கிய மாணாக்கர்கள், அவற்றைத் தயாரித்து நெறியாழ்கை செய்த ஆசிரியர்கள், அனுமதி நல்கிய அதிபர்கள், கவித்துவம் ஊடாக எமது சிந்தனையை தெளிவுபடுத்திய கவியரங்கில் பங்கேற்ற கவிஞர்கள் அனைவரும் இப் பிரதேச சாகித்திய விழா பங்காளர்களே என்பதனை மறுக்க முடியாது. இவற்றுக்கெல்லாம் களம் கட்டிய மேடை அமைப்பாளர்கள், வரவேற்பாளர்கள்,உபசரிப்பாளர்கள், விழாவை கண்டு களித்து கச்சிதமாக நிறைவு செய்த பொது மக்கள், உறு துணை புரிந்த பொது மக்கள் அனைவருக்கும் எனது இதயத்தில் மலர்ந்த நன்றி எனும் இன் மலர்களால் சரம் தொடுத்து சாற்றுகின்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இச் சாகித்திய விழாவை சந்தோசமாகவும், சங்கையாகவும் கொண்டாடி மகிழ எமக்கெல்லாம் சிந்தனையில் தெளிவூட்டி, சீரிய வழிகாட்டி செயலாக்கம் பெற ஆசீர்வதித்த எல்லாம்வல்ல இறைவனுக்கே ஏற்றும் புகழனைத்தும்.

'அல்ஹம்துலில்லாஹ்'

வஸ்ஸலாம்

ஏ.மன்சூர்,

பிரதேச செயலாளர்,

தலைவர்,

பிரதேச கலை இலக்கிய கலாசாரப் பேரவை,

பிரதேச செயலகம்,

சம்மாந்துறை.

அம்பாறை மாவட்ட செயலாளர் திரு சுனில் கன்னங்கர அவர்களின்



ஆசிச் செய்தி

சம்மாந்துறைப் பிரதேசம் இன்று தனது கலாசார விழாவை மிக விமரிசையாக கொண்டாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த விழாவின் சிறப்பு மலராக வெளியிடப்படும் "பட்டறை" என்ற மலருக்கு எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சம்மாந்துறைப் பிரதேசம் பல்லின மக்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழும் ஒரு இடமாகும். நீண்டகால - கலாச்சார மரபுகளை பேணிக்காத்து வரும் இப்பிரதேசம் வயல் நிலங்கள் நிறையப்பெற்ற ஒரு பெரிய பிரதேசமாகும். நல்ல உழைப்பாளிகளையும், தன்னலமற்ற சேவைசெய்யும் மக்களையும், சிறந்த கலைஞர்களையும் இது தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது.

ஒரு மனிதனுக்கு அவனது கலை உணர்வுகள் மூலமாகத்தான் அன்பு, இரக்கம், உதவிசெய்யும் மனப்பான்மை போன்ற நல்ல குணங்கள் அவனில் தோற்றம் பெறுகின்றது. அழகை இரசிக்கக்கூடிய தன்மை அவனில் ஏற்படுகின்றது. இந்த அழகுணர்ச்சியின் வெளிப்பாடுதான் மனித நேயம். அது இன்று மனித மனங்களில் அருகிக் கொண்டுவரும் இந்தக்காலகட்டத்தில் பாரம்பரியமாக தாம் பேணி வந்த கலாச்சார விழுமியங்களை இனிவரும் சந்ததிகள் மூலமாகக் கட்டிக்காத்திடும் ஒரு நடவடிக்கையாக இந்த கலாச்சார விழாவை நான் காண்கின்றேன்.

அந்த வகையில் இவ்விழாவை முன்னின்று நடாத்தும் பிரதேச செயலாளர் அவர்களுக்கும் அவருடன் சேர்ந்து இவ்விழாவை நடாத்த முன்னின்று உழைத்த காரியாயலய உத்தியோகத்தர்கள், மற்றும் கலைஞர்கள், விழா ஏற்பாட்டாளர்கள், ஊர்மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

சுனில் கன்னங்கர
மாவட்ட செயலாளர்
அம்பாறை

அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர்
யு. எல். ஏ. அஸீஸ்
அவர்களின்



ஆசிச் செய்தி

சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற 2009ம் ஆண்டுக்கான சாஹித்திய கலைப்பெருவிழாவுக்கு இவ் ஆசிச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பன்னெடுங்கால கலாசார பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டு தழிழ் முஸ்லிம் உறவுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெரு நிலப்பரப்பைக் கொண்ட ஒரு பிரதேச செயலகப் பிரிவு சம்மாந்துறையாகும்.

உழைக்கும் மக்களால் அவர்களின் தொழிலை இலகுவாக்கவும், தொழில் களைப்பு தெரியாதிருக்கவும் பாடப்படும் வாய்ப் பாடல்கள் கவிகளாகவும், நாட்டார் பாடல்களாகவும் பரிணமிக்கின்றன. மண் வளத்தைப் பறைசாற்றி நிற்கும் இக்கவித்துவ வெளிப்பாடுகளெல்லாம் காலப்போக்கில் மறைந்து கொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

இப்படியான காலக் கட்டங்களில் இவ்வாறான கலாச்சார விழாக்களை ஏற்பாடு செய்து நடாத்தும் போது மறைந்து போகும் கலையம்சங்கள் மீண்டும் மெருகூட்டப்படும் நிலையையும், அவை அச்சுருக்களில் தொகுக்கப்படும் நிலையையும் கொண்டுவர முடியும் என்பதில் ஐயமில்லை.

அந்தவகையில் நமது கரையோரப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு பிரதேசச் செயலகமும் இவ்வாறான கலாசார, விழாக்களை ஏற்பாடு செய்து கொண்டு வரும் இந்நிலையில் சம்மாந்துறைப் பிரதேசச் செயலகமும் இவ்வரவேற்கத்தக்க நிகழ்வை நடாத்துவதோடு அதன் சிறப்பம்சமாக "பட்டறை" என்ற மலரையும் வெளியிடுவது ஒரு நல்ல சகுனமாகும். இது காலத்தின் தேவையுமாகும்.

இவ்விழாவை ஏற்பாடு செய்த அனைத்து தரப்பினரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. அந்த வகையில் இதற்காக முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் கலாசாரப் பேரவையினர் ஆகியோர்களின் முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

இவ்விழா, சிறப்புற நடந்தேற எனது பிரார்த்தனைகள்.

ULA அஸீஸ்,
BA (Hons), M.A,
SLAS,
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாரை.

அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர்
திரு அஸங்க அபேவர்தன
அவர்களின்



ஆசிச் செய்தி

சம்மாந்துறைப் பிரதேசம் தனது கலாசார விழாவை பெருமையோடு கொண்டாடும் இந்த வேளையில் அவ்விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தியொன்றை வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தில் மிகப் பெரிய பிரதேச செயலகமாக - பெருந்தொகை மக்களைக்கொண்டு அமைந்திருக்கும் சம்மாந்துறைப் பிரதேச செயலகம் தனிச் சிறப்புடன் சேவையாற்றி வருகின்றது.

நாற்புறமும் வயல் நிலங்களைக்கொண்டு காணப்படும் இந்த பிரதேசம் விவசாயத்தில் பெரு விளைச்சலை வழங்கிக்ககொண்டிருக்கும் ஒரு பிரதேசமாகும். அதேபோல் இங்கு வாழும் மக்களும் நல்ல தொழிலாளிகளாக நவீன இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட முன்பிருந்தே தங்களது உடல் வலிமை கொண்டு உழைப்பை மேற் கொண்ட சிறந்த நெல்விளைச்சலைக் கண்ட மக்களாக உள்ளனர்.

அந்த வகையில் மரபு வழியாக கிராமத்திற்கேயுரிய கலை கலாச்சார அம்சங்களைப் பேணிப்பாதுகாத்துக் கொண்டுவரும் இம்மக்களின் இப்பிரதேசத்தின் கலைத்துவ வெளிப்பாடுகளாக இந்த கலாச்சார விழாவை நான் நோக்குகின்றேன்.

எனவே, இதற்காக முன்னின்று உழைத்த பிரதேசச் செயலாளர் மற்றும் இதனோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

அஸங்க அபேவர்தன
மாவட்ட மேலதிகச் செயலாளர்
அம்பாறை

கிழக்கு மாகாண கலாச்சார பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர்
திரு DWU வெலிகல அவர்களின்



ஆசிச் செய்தி

DWU வெலிகல
கிழக்கு மாகாண கலாச்சார பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர்
திருக்கோணமலை.

சம்மாந்துறைப் பிரதேசம் மிகப்பழைய பூர்வீக வரலாறுகளினைக் கொண்டதும், கலாசார பாரம்பரிய விழுமியங்கள் இன்றுவரை பேணிக்கொண்டு வரும் பிரதேசம் என்பதையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இப்பிரதேசம் சார்பாக கொண்டாடப்படும் சாஹித்திய கலைப் பெருவிழா தொடர்பான சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்வுறுகிறேன்.

எமது கலை கலாசார பாரம்பரிய உயிரோட்டத்தின் மூலமாக இனங்களுக்கிடையே சமாதான சகவாழ்வு உயிர்பெற வேண்டும்மென்றும், தத்தமது கலாசார பாரம்பரியங்களினை பேணும் அதே வேளையில் மறைந்து செல்லும் விழுமிய வரலாறுகளினை ஆவணமாக்கப்படவேண்டும் என்ற கருத்தினையும் முன்னிறுத்தி இந்த வகையில் இச்சிறப்பு மலர் விசேட பெறுமானத்தினைப் பெற வேண்டும் என ஆசீர்வதிக்கிறேன்.

நன்றி

DWU வெலிகல,
கலாச்சார பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்.



சமய விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜனாப்.எம்.ஐ.அமீர். அவர்கள் வழங்கிய

வாழ்த்துரை

சம்மாந்துறை மண்ணின் சாஹித்திய விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வுறுகிறேன். சம்மாந்துறைப் பிரதேசச் செயலகமும், கலை இலக்கிய அமைப்புக்களின் கூட்டான பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் சாஹித்திய விழாவின் சரித்திரத்தில் முதல் தடவையாக வெளிவரும் சிறப்பிதழானது " பட்டறை" எனும் நாமத்துடன் இன்றைய காலத்தின் தேவைகருதி ஆவணமாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலக்கியம் என்பது இலக்கியத்துக்காக என்று இல்லாமல் அது இலட்சிய வடிவம் பெறும் போதுதான் அதனுடைய உண்மையான தாக்கம் சமூகத்தில் ஏற்படும். அந்த வகையில் கலை இலக்கிய பாரம் பாரியங்கள் கொண்ட சம்மாந்துறைப் பிரதேசம் பல இலட்சிய கலை இலக்கிய வாதிகளினை வரலாற்றில் கண்டுள்ளது.

இன்றைய சமகாலத்தில் கலை இலக்கியவாதிகளின் பங்களிப்பு மிகவும் கூடுதலாக உணரப்படுகின்ற இச் சந்தர்ப்பத்தில் இத்தகைய விழா பிரதேச செயலக ரீதியான அரச அனுசரணையுடனும், கலை இலக்கிய வாதிகளின் பங்கு பற்றுதலுடனும் கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இச் சாஹித்திய விழாவில் வெளியிடப்படும் இப் "பட்டறை" இப்பிரதேசத்தின் பூர்வீக வரலாறு, குழுக்களின் தொன்மை, கலை-இலக்கியம் ஆத்மீக வரலாறு , கல்வி , பொருளாதார நிர்வாக வரலாறு ஊடக வெளியீடுகளின் தேடல்களினையும், பதிவுகளினையும் உள்ளடக்கி இப்பிரதேசம் பற்றிய தேடலுக்கான ஆரம்பமாகக் கருதுகிறேன்.

இவ்வகையில் இவ்விழாவின் ஏற்பாட்டாளர்களான பிரதேசச் செயலாளர் ஏ.மன்சூர் தலைமையிலான பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்ற அதிபர் ஏ.ஸீ.இஸ்மாலெப்பை தலைமையிலான மலர்குழு உறுப்பினர்கள், கலாசாரப் பேரவைத் தலைவர், உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இப்பட்டறை தொடர்ந்தும் வெளிவரவேண்டும் எனப் பிரார்த்தித்து சாஹித்திய விழா வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

எம்.ஐ.அமீர்.
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
சமய விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு

திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஏ.எம்.எம்.நௌஷாத் அவர்களின்



ஆசிச் செய்தி

சம்மாந்துறையில் "சாஹித்திய கலைப் பெரு விழா" என்பதை நினைக்கும் போதே நெஞ்சம் இனிக்கிறது! ஏனெனில் இச் சாஹித்திய விழாவானது இம் மண்ணின் மூலை முடுக்கினது தன்மைகளையும், இம் மண்ணில் வாழும் எல்லா குழுக்களினதும் விழுமியங்களையும், இம் மண்ணில் நிறைந்து கிடக்கும் சகல வளங்களையும் பிரதிபலிக்கும் ஒரு விழாவாக அமையப் போகும் முதற் சந்தர்ப்பம் என எண்ணி மகிழ்கிறது என் நெஞ்சம்.

அத்துடன் இவ் விழாவின் சிறப்பம்சமாகப் "பட்டறை" எனும் மலரும் வெளியிடப்படுகின்ற காரணத்தினால் இப் பட்டறைக்கும் அதன் மூலக்கருவான சாஹித்திய விழாவுக்கும் என் மனம் நிறைந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பட்டிப்பளை ஆற்றில் துறைமுகம் கண்ட எம் சம்மாந்துறை மண்ணின் கலை, இலக்கிய, கலாச்சார பாரம்பரியங்களாவன: சாதாரணமான ஒரு வரலாற்றுப் பதிப்பல்ல, இவை மண்ணில் பூர்வீக காலத்திலிருந்து காலத்திற்கு காலம் மக்கள் வாழ்வியலோடு முகிழ்ந்து, மலர்ந்து, மணங்கள் பரப்பி வந்துள்ளதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் சம்மாந்துறை மண்ணானது, பிரதான ஜீவனோபாய தொழிலாக விவசாயத்தையும் அதனோடு சார்ந்த கைத்தொழில்களையும் மற்றும் அரச துறை தொழில்களையும் தம் வாழ்வாதாரமாகக் கொண்டு விளங்குகிறது. சிறந்த மொழியாற்றலையும், இரங்கும் குணத்துடன் ஈந்து வாழும் தன்மையையும் பெற்ற, விசாலமனங்கள் கொண்ட மக்கள் வாழும் ஒரு அற்புத மண்ணாக இருப்பதுடன், இவைகளே எமது சாஹித்திய பின்னணிகளாகவும் இருக்கின்றன என்றால் மிகையேதுமில்லை.

வேலைகளில்லாத ஓய்வுநேரங்களை விநோதமாகக் களிக்கவும், வயல்வெளிகளில் களைப்பினைப் போக்கி, உற்சாகமூட்டி, வேலைகளை முன்னெடுக்கவும், பண்டிகைக் காலங்களில் பாங்காக இரண்டு, மூன்று நாட்களை கழிக்கவும் என பாரம்பரிய விளையாட்டுக் கலைகள் தொடங்கி, கவிப் பாடல்கள், கோடு கச்சேரிகள் நாட்டுக்கூத்துக்கள், கும்மியாட்டங்கள், பாட்டுக்கச்சேரிகள் என இன்னும் பல கலை வடிவங்களும் எம் சம்மாந்துறை மண் வாழ் இஸ்லாம், இந்து, சைவ, கிறிஸ்தவ மக்களிடையே சரளமாக விளங்கின.

காலப்போக்கில் கல்வி அறிவு விருத்தியோடு, கலைகளை அறிவுபூர்வமாகக் கற்று தேர்வதில் இம் மண்ணின் மைந்தர்கள் காட்டிய ஆர்வம் காரணமாக கட்டுரைகள் கவிதை, சிறுகதை, நாடகம் போன்ற இன்னோரன்ன வடிவங்களில் எமது கலைகள் வளர்ச்சி பெற்றதை எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய வளர்ச்சியின் பின்னணியில் கையெழுத்து சஞ்சிகைகளும், கல்லச்சுப் பிரதிகளும் பின்னர் அச்சுப்பிரசுரங்களும் இந்த நவீன யுகத்தில் கணனிப் பிரசுரங்களும் தத்தமது பங்களிப்பினைத் தாரளமாகவே செய்துள்ளன என்பதை எண்ணி நாம் சந்தோசப்படுகின்றோம்.

மேலும் மேற்சொன்ன கலைவடிவப் பிரசுரங்களை வெளிக்கொணரும் பணிகளிலும் அவற்றினை முன்னெடுத்துச்செல்லும் பணிகளிலும், காலத்திற்கு காலம் பல்வேறு அமைப்புக்கள் ஈடுபட்டு வந்துள்ளதையும் எமது வரலாற்றுப் பதிவுகள் எமக்கு எடுத்து இயம்புகின்றன. அவ்வாறான அமைப்புக்களில், முதிர்வுபெற்ற அமைப்புக்களான இன்றைய சம்மாந்துறை கலா அபிவிருத்திக் கழகம் தொடங்கி, இக்பால் மன்றம் எழுத்தாளர் சங்கம், மக்கள் கலை வட்டம் உட்பட இன்றைய சம்மாந்துறை எழுத்தாளர் சங்கம் வரை எமது நினைவில் நிழலாடுகின்றன.

மேற்கூறப்பட்ட சங்கங்கள், அமைப்புக்களின் எழுச்சிக்கும் அவற்றின் வெளியீடுகளுக்கும் பிரசுரங்களுக்கும் கால்கோள் இடுவனவாக அமைவன கல்விக்கூடங்களும், கலாசாலைகளும் என்றால் அதனை யாரும் மறுதலிக்கமுடியாது.

அந்தவகையில் எம்மண்ணின் ஆரம்பகால சமயங்கள் சார்ந்த அறநெறிப் பாடசாலைகள் தொடங்கி இன்றைய மகா வித்தியாலயங்களும் மத்திய கல்லூரிகளும் எம்மால் மறக்கமுடியாத நிறுவனங்களாக உள்ளதுடன் பல்தொழில் நுட்ப கல்லூரி, தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் என்பவற்றின் பங்களிப்புக்களையும் கண்டு நாம் மகிழ்வடையக்கூடியதாக உள்ளோம்.

இருப்பினும் மிக அண்மைக்காலமாக எமது பிரகாசமான மேற்போந்த முயற்சிகளில் மங்கலான ஓர் இருள் சூழ்ந்த நிலைமையை நான் உணர்கின்றேன்.

ஆனால், இந்த நிலைமையை மாற்றி மீண்டும் ஒரு பிரகாசமான, ஆரோக்கியமான இலக்கிய, கலை, கலாசார, சமய, பண்பாடுகளை உள்ளடக்கிய சாஹித்திய சூழலை இம் மண்ணில் தோற்றுவிக்கும் ஒரு முயற்சியாக எமது பிரதேச செயலக மட்ட "சாஹித்திய விழா" அமையலாம். என்ற எண்ணத்தினாலும் அதற்கு முத்தாப்பு வைப்பான் போன்று "பட்டறை" எனும் சஞ்சிகை வெளியிடுவதனாலும் எதிர்கால சாஹித்திய எழுச்சியில் நம்பிக்கை வைத்தவனாக இம் முயற்சியில் முன்னின்று உழைத்துக்கொண்டிருக்கும் உங்கள் யாவரையும் நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்தவனாக இந் நிகழ்வு முழுவதற்கும் என் உளப்பூர்வமான ஆசிகளை வழங்கி நிற்கின்றேன்.

உங்களில் ஒருவனும்
உங்களின் பிரதிநிதியுமான,

ஏ.எம்.எம்.நௌஷாத்,
திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்,
ஜனாப். எம். எல். ஏ. அமீர், T.A. அவர்களின்

வாழ்த்துச் செய்தி



திறமைகளுக்கு மணிமகுடம் சூட்டும் சாஹித்திய விழாவினைக் கொண்டாடும் இந்நாளில் "பட்டறை" ஒரு சிறப்பு மலராக எம் முன்னே மலரவிருக்கிறது. இம்மலருக்கான வாழ்த்துக்களை வழங்கக்கிடைத்தமை நான் பெற்ற பாக்கியமாகும்.

இலை மறை காய்களைாய் மறைந்து கிடைக்கும் கலை கலாசார, இலக்கிய திறன்கள் மேடையேற்றப்பட்டு மகுடம் சூடும் விழாவாய் இந்த சாஹிக்திய விழா வருடா வருடம் இடம் பெற்று வருகிறது.

அதுவும் இம்முறை, கிழக்கிலங்கையில் புகழ்பூத்த கவிஞர் ஈழமேகம் பக்கீர்தம்பி முதலான ஈழத்து இலக்கியவாதிகள் பலரைத் தந்த சம்மாந்துறை மண்ணில் விழாக்கோலம் பூணும் வாய்ப்பை "சாஹித்தியம்" பெற்றிருக்கின்றது. இது எம் மண்ணின் கலை, இலக்கிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

இத்தகைய வேளையில் வெளிவரும் சாஹித்திய மலராகிய பட்டறையும் எமது இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல் என்பதில் ஐயமில்லை.

"திறமைகள் என்றும் வெளிக்கொணரப்பட வேண்டும்" "திறனாற்றலுடையோர் என்றும் போற்றப்பட வேண்டும்" என்பதற்கு சாஹித்திய விழாவும் "பட்டறை" சஞ்சிகையும் களமமைத்து கொடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது இம்முறை இதனை முன்னின்று நடத்தும் , இதற்காக பாடுபடும் சம்மாந்துறை பிரதேச செயலகமும் , செயலாளரும் அதன் ஊழியர்களும் முன்னின்றுழைக்கும் ஏனையவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

கலை, கலாசார, இலக்கிய திறன்களுக்கு கௌரவிப்பு வழங்கும் சாஹித்திய விழா இன்று போல் காலாகாலமாக தொடரவும் "பட்டறை" சஞ்சிகை சிறப்பாக இனி வரும் காலங்களிலும் வெளிவர வேண்டும் எனவும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் இறைவனையும் பிராத்திக்கின்றேன்.

மாகாண சபை உறுப்பினர்,
ஜனாப். எம். எல். ஏ. அமீர், T.A.
கிழக்கு மாகாணம்

சம்மாந்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் கௌரவ எம்.ஐ.எம். மன்சூர் அவர்களின் ஆசிச் செய்தி



சம்மாந்துறை மண்ணில் முதற் தடவையாக நடைபெறவுள்ள சாஹித்திய விழாவையொட்டி வெளிவரும் "பட்டறை" சஞ்சிகைக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்சி அடைகிறேன்.

அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் நகரங்களில் ஒன்றான சம்மாந்துறை தனக்கே உரித்தான பாரம்பரிய வரலாற்றையும் தொன்மையையும் கொண்டுள்ளது. முஸ்லிம்கள் மாத்திரமன்றி தமிழர்களும் தொன்று தொட்டு வாழும் இப்பிரதேசத்தில் இச் சமூகங்களின் தொன்மைக்குப் பறைசாற்றும் அடையாளங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய நிர்பந்தச் சூழலில் வெளிவரும் இச்சஞ்சிகை காலத்தின் தேவையாகும்.

வந்தேறுகுடிகளாக சிறுபாண்மைச் சமூகங்கள் வர்ணிக்கப்படும் காலகட்டத்தில் தங்களது பூர்வீகத்தையும், இருப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியமிருந்தும் அதற்கான தடையங்களைப் பாதுகாக்கும் விடயத்தில் முஸ்லிம்கள் தவறி இருக்கும் சூழலில் இச்சஞ்சிகை ஊடாக எமது பாரம்பரிய கலை, கலாச்சார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் கலைப்படைப்புக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளமையும் இவ்வம்சங்கள் தொடர்ந்தும் உயிர் வாழ உழைத்த படைப்பாளிகளை கௌரவிக்க முனைந்துள்ளமையும் பாரட்டுதற்குரியது.

சம்மாந்துறைப் பிரதேச செயலகம் பிரசவிக்கும் "பட்டறை"யில் பிரதேச செயலாளர் ஜனாப். A.மன்சூர் அவர்களால் சமர்பிக்கப்பட்டுள்ள, எமது நிர்வாக கட்டமைப்பின் பரிணாம வளர்ச்சி பற்றிய படைப்பும் எமது இருப்பிற்கு வலுச்சேர்த்திருக்கிறது.

இவ் விழாவை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கும், வெளியிடப்படும் மலரின் உருவாக்கத்திற்கும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எனது நன்றிகள்.

இவ்விழா வெற்றிகரமாக நடந்து முடிவதற்கும், இவ்வாறான படைப்புகள் மென்மேலும் வெளிவருவதற்கும் எனது ஆசிகள்.

எம்.ஐ.எம். மன்சூர் தவிசாளர்,
பிரதேச சபை,சம்மாந்துறை.

அல் ஹாஜ்.எம்.பி.அலியார் ஹஸரத் (தேவ்பந்தி) ஜே.பி,
அமீர், மஜ்லிஸ் அஷ்ஷுறா, சம்மாந்துறை,
தலைவர், ஜெம்மியத்துல் உலமா, சம்மாந்துறை,
அதிபர், தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி, சம்மாந்துறை.
அவர்களின் சாகித்திய விழா மலருக்கான
வாழ்த்துச் செய்தி

சமூக கலாசார பண்பாட்டு சமய விழுமியங்களை உள்ளடக்கிய கூட்டுமொத்தமான எடுத்துக்காட்டை "சாஹித்தியம்" என்றும் கூறலாம். சகல மார்க்கங்களும் தெய்வீகச் சட்டங்களும் நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்வதை வலியுறுத்துகின்றன. மார்க்கத்தின் நோக்கம் நேர்வழி, நன்மை, நீதி, அன்பு ஆகியவைகாகும். இவை சமூகங்களுக்கிடையிலும், தனிநபர்களுக்கிடையிலும் ஏற்பட வேண்டும்.

இஸ்லாமிய பார்வையில் :- நேர்மை ஏகத்துவத்துக்குச் சமனாகும்.
அநியாயம் இணைவைத்தலுக்குச் சமனாகும்.

சமூகத்தில் இன்று புரையோடிப் போயிருக்கும் அமைதியற்ற சூழலை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு முன்பு :- 1. சமூக நீதியையும்
2. ஒருமைப்பாட்டையும்
3. நல்லிணக்கத்தையும்

உத்ரவாதப்படுத்தக்கூடிய புதிய ஒரு நிலைக்கு மாறிச் செல்லத்தக்க வழிவகைகளை சமூகத் தலைவர்களாகிய நாம் முன்னெடுத்துச் செல்வதில் அக்கறை காட்ட வேண்டும். இதன் மூலம் பழைய உறவுகள் வலுப்பெற வழியேற்யடலாம்.

இதற்காக தனிப்பட்ட, உறவுரீதியான கட்டமைப்பு ரீதியான கலாசார ரீதியான மாற்றங்களினால் சமூகத்தில் ஆரோக்கியமான நிலைகள் ஏற்படலாம். பிரதேச, மாவட்ட முறையிலான இவ்விழாக்கள் மூலம் வேற்றுமையிலும் ஒற்றுமை ஏற்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்ல பிரார்த்தித்தவண்ணம் வாழ்த்துகின்றேன்.

அல் ஹாஜ்.எம்.பி.அலியார் ஹஸரத் (தேவ்பந்தி) ஜே.பி,
அமீர், மஜ்லிஸ் அஷ்ஷுறா, சம்மாந்துறை,

ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய செயலாளரின்

ஆசிச் செய்தி

கிழக்கிலங்கையின் அம்பாரை மாவட்டத்தில் எண் திசையிலும் செந்நெல் விளையும் காணிகளால் சூழப்பட்ட சம்மாந்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் இவ் வருடம் சாஹித்திய விழாவை வெகு விமர்சையாக நடாத்துவதையும், கலாசார சாஹித்திய விழாச் சிறப்பு மலரை வெளியிடுவதனையும் இட்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களிடையே பாரம்பரியமாகப் பேணப்பட்டு வளர்க்கப்பட்டு வந்த இலக்கிய கலை அம்சங்கள், கலாச்சார விழுமியங்கள் கால ஓட்டத்தின் காரணமாக மறையத்தொடங்கிய காலகட்டத்தில் அக் கலையம்சங்களுக்குப் புத்துயிரூட்டி புதுப்பொலிவு பெற இவ்வாண்டு கலாச்சார சாஹித்திய விழா வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதப் பேரவலங்களும் பயங்கரவாத நடவடிக்கைகளும் ஓய்ந்து நம் பிரதேச மக்கள் நிம்மதியான சுவாசக்காற்றைச் சுவாசிக்கத்தொடங்கிய இக் காலகட்டத்தில் இவ் வருட கலாச்சார சாஹித்திய பெருவிழா நடைபெறுவது எமது பிரதேச மக்களின் மனங்களில் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் சாஹித்திய பெரு விழாச் சிறப்பு மலரை வெளியிடுவதற்கு அரும் பாடு பட்டு வரும் பிரதேச செயலாளர் அவர்களுக்கும், கலாச்சார உத்தியோகத்தருக்கும் சம்பந்தப்பட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. கோவிந்தசாமி,
செயலாளர்,
ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்,
வீரமுனை.

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவர்
P.P.கிதிர் முகம்மது J.P அவர்களின்

வாழ்த்துச்செய்தி

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாவின் திருநாமத்தால் ஆரம்பம் செய்கிறேன். ஏல்லாப் புகழும் இறைவனுக்கே.

சம்மாந்துறை பிரதேசத்திலே மொட்டவிழ்ந்து விடும் தமிழ் சாஹித்திய விழா "பட்டறை" மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவை யொட்டி நடைபெற்ற கலைப் போட்டிகளிலே பரராட்டப் படும் கலைஞகர்கள் ஊர்பற்றிய கட்டுரைகள். போன்ற இன்னோரன்ன பல அம்சங்களைக் கொண்டு "பட்டறை" எனும் விசேட மலர் மலர்வது ஆரேக்கியமான நல்ல செயற்பாடாகும்.

இன்றைய நவீன உலகின் தமிழுக்காக ஒரு விழா எடுக்க வேண்டும் என்று எண்ணியவர்களுள் நானும் ஒருவன். அந்தவகையிலே எமது பிாதேசத்தின் தமிழுடன் இரண்டறக் கலந்த (இயல், இசை, நாடகம்) போன்றவற்றில் எமது பங்களிப்பை உணர்வதற்கு "பட்டறை" மலர் உறுதுணையாக அமைந்துள்ளது.

மேலும், இப்பிரதேசத்தில் தமிழுக்காகவும் பல்வேறு விடயங்களுக்காகவும் திறமைகாட்டிய படித்தவர் தொடக்கம் பாமரர் வரையிலானவர்களுக்கு விழா எடுத்து இப்பிரதேசத்தின் கலை, இலக்கியம் வளர்ந்து விருட்சமாக வளர எனது இதயம் கனிந்த நல்லாசியை வழங்குகிறேன்.

சம்மாந்துறை பிரதேச செயலகம் "பட்டறை" மலர் குழு உறுப்பினர் அனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் சகல பாக்கியங்களையும் வழங்க பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹாஜ் P.P.கிதிர் முகம்மது J.P
தலைவர் நம்பிக்கையாளர் சபை,
இஸ்லாமிய செயலகம்,
சம்மாந்துறை.



சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ரி.ஏ.தௌபீக் அவர்களின்

ஆசிச் செய்தி.

சம்மாந்துறைப் பிரதேசச் செயலகம் நடாத்தும் சாஹித்திய கலைப்பெருவிழாவையொட்டி வெளியிடப்படும் "பட்டறை" விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சம்மாந்துறை, தனிப் பெருஞ் சிறப்புக்களைக்கொண்ட ஊராகும். கிழக்கின் தானியக் களஞ்சியம் என்றும் கூறலாம். சம்பா விளைச்சல் அதிகமாக இருந்ததனால் சம்பாந்துறை என்ற பெயரும் இவ்வூருக்கு இருந்ததாக அறியப்படுகின்றது. எம் நாட்டின் கிழக்குப் பிரதேசத்தில் விளையும் அரிசிகளில் சம்மாந்துறை அரிசிச் சோறு தனித்தன்மையானது. ருசித்து ருசித்து உண்ணக்கூடியது. இதே போல் இவ்வூர் மக்களும் தனித்துவமானவர்கள்; விசேட பண்புகளைக் கொண்டவர்கள். இதனால்தான் போலும் "வந்தோரை வாழ வைக்கும் சம்மாந்துறை" என்று பக்கத்து ஊரவர்கள் புகழ்ந்து கூறுவதும் பெரும்பான்மையாக முஸ்லீம்களும் குறைந்தளவில் தமிழர்களும் வாழும் இவ்வூர் ஒற்றுமைக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

26.12.2004 இல் தென் கிழக்காசிய நாடுகளை அதிர வைத்த சுனாமிப் பேரலையின் காரணமாக பாதிக்கப்பட்ட தென் கிழக்கு கரையோர மக்களை அன்புடன் ஆதரித்து உதவியமையும், இவ்வூர் மக்கள் உயிர்த்தியாகங்கள் செய்து ஆயிரக் கணக்கான மையித்துக்களை அடக்கம் செய்து உதவியமையும் இவ் வேளையில் நினைவு கூரத்தக்கதாகும்.

கல்வி கலைகளிலும் இம் மக்கள் சளைத்தவர்கள் அல்லர். ஈழ மேகம் பக்கீர் தம்பி, பாவலர் பஸீல் காரியப்பர் முதலானவர்களின் நாமம் இவ்வூரை வெளிச்சமாக்கிக் கொண்டிருக்கின்றது. மற்றும் சீனடி, சிலம்படி, வாள் வீச்சு, பொல்லடி, நாட்டார் கவி முதலான துறைகளிலும் இவ்வூர் சிறப்பு பெற்றிருந்தது.

5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.பரீட்சைகள், தேசியப் போட்டிகள் பலவற்றிலும் இவ்வூரின் மாணவச் செல்வங்கள் முன்னணியில் திகழ்வதும் இவ்வூர் பெற்ற பாக்கியமாகும்.

எதற்கும் நேரமில்லை, நேரமில்லை என்று கூறப்படும் இக் காலத்தில் ஊடக சாதனங்கள் ஒருபுறம் மக்களின் நேரத்தை விழுங்கி கொண்டிருக்கின்றது. இவ்வேளையில் அவர்களைத் திசை திருப்பி கலைகளை உயிர்ப்பிக்க உரமூட்டுவதாக இவ்விழா அமைகின்றது.

இவ்விழா இனிவரும் காலத்திற்கும், இளையவர்களுக்கும் முன்னுதாரணமாக அமையட்டும். விழாவின்போது வெளியிடப்படும் 'பட்டறை' எல்லோர்க்கும் பட்டறையாகவிருந்து கலை இலக்கியப் பொக்கிஷங்களை வாரி வழங்கட்டும்.

இவ் விழா சிறப்புற என் இதய பூர்வமான நல் வாழ்த்துக்கள்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
சம்மாந்துறை.

பட்டறை மலர்க் குழு

1. ஜனாப் AC இஸ்மாலெவ்வை - தலைவர், ஆசிரியர்
2. ஜனாப் A இப்றாஹீம் - செயலாளர்
3. ஜனாப் UM முஸ்தபா – ஆலோசகர்
4. ஜனாப் றமீஸ் அப்துல்லாஹ்
5. ஜனாப் மன்சூர் ஏ காதர்
6. திரு S கோணேசமூர்த்தி
7. திருமதி பரீதா இஸ்மாயில்
8. திருமதி மஷ்ரூறா சுஹூர்தீன்
9. ஜனாப் IL ஜலீல்
10. ஜனாப் AJM ஹனீபா
11. ஜனாப் AM நவாஸ்
12. ஜனாப் MM ஜுனைதீன்
13. ஜனாப் MS அஸாருதீன்
14. ஜனாப் ZM றிஸ்வி
15. ஜனாப் AM முகம்மதுத்தம்பி (மௌலவி)

JEMSEEN RICE MILL



MALKAMPTTY ROAD, SAMMANTHURAI
SRI LANKA
TEL: 067 2260269

ஜெம்ஸீன் அரிசி ஆலை

மல்கம்பிட்டி வீதி, சம்மாந்துறை
067 2260269

மலர்க் குழு



முன் வரிசை இடமிருந்து வலம்: யு.எல்.எம். முஸ்தபா (ஆலோசகர்), ஏ.சி.இஸ்மாலெவ்வை (ஆசிரியர்), ஏ.இப்றாஹீம் (செயலாளர்), ஏ.மன்சூர் (D.S), எம்.ஐ.எம்.அஸ்றப் (C.O), பரீதா இஸ்மாயீல்
பின் வரிசை இடமிருந்து வலம்: எம்.எம். ஜூ ஜனத், ஏ.நவாஸ், எம்.ஐ.ஜலீல், எஸ்.கோணேசமூர்த்தி, ஏ.ஜே.எம்.ஹனீபா, ஏ.எம்.முஹம்மதுத் தம்பி, மசூறா சுஹூ ர்தீன்





மலர் ஆசிரியரிடமிருந்து.....

அன்று தொடக்கம் இன்றுவரை மக்கள் நெஞ்சில்
அழியாத பதிவான சம்மாந்துறையூர்
செந்நெற் களஞ்சியம் என்ற பெயர் பெற்று
சீராய் வளர்ச்சிகளைக் கண்டுவரும் ஓரூர்

போடிமார் சாகுபடி செய்பூமி யெல்லாம்
பொன்னாய் உதிர்க்கின்ற நெல்மணிகள் யாவும்
வாடிக்கருகிலே வைக்கோல் கொட்டாக்கி
வைக்கலில் விளைந்ததனை வைக்கலில் குவிப்பர்.

வைக்கோலில் நேர்த்தியாய்க் கத்தையடித்து
வைக்கோல் கயிறு எனும் புரிகள் அடுக்கி
பக்குவமாய்ப் புரிகளின் மேல் கத்தை பரப்பி
பரப்பியதன் நடுவிலே விளைச்சல் குவிப்பர்

குவியல் உயர்ந்திடப் புரியை உயர்த்தி
கூடுமட்டும் போதிய வைக்கோல் சொருகி
உயரத்தின் அளவினை மட்டுப்படுத்தி
உச்சியில் முடிவைத்துக் கூரையும் வேய்வர்

இப்படி வட்டையின் எல்லைகளிலெல்லாம்
இலங்குவதே நெல்நிறை பட்டறைகளாகும்
இப்பெயர் மலருக்குப் பட்டறையாக
இணைந்ததில் எல்லோரும் இன்பம் அடைவோம்.

நெல்லுக்குப் பட்டறை சம்மாந்துறையூர்
நேசத்தின் கொட்டறை சம்மாந்துறையூர்
சொல்லுக்குப் பட்டறை சம்மாந்துறையூர்
சொந்தமே யாவர்க்கும் சம்மாந்துறையூர்

என்ற பீடிகைகளோடு சில வார்த்தைகள்:-

மேற்படி பட்டறைகள், ஒவ்வொரு போடிமார்களினதும் வயல்களிலும் வயல்களின் பரப்பளவுக்குத் தக்கவாறு எண்ணிக்கையில் குவிந்து காணப்படும். வெளிப்பார்வைக்கு வைக்கோல் போர் போலத் தெரிந்தாலும் அவ்வளவும் நெல் முத்துக்கள். இவை ஒவ்வொரு போடிமாரினதும் (வண்டிக்கரான்) ஏருவைக்காரனால் போடிமார் வீட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டியவை. ஏருவைக்காரன் தனியனாக இருப்பதால் அவ்வளவு விளைச்சலையும் இலகுவில் கரைசேர்க்க முடியாததால் ஏருவைக்காரர்களுக்குள் உள்ள நடைமுறைப்படி அத்தக்கூலிக்கு வண்டிக்காரர்களை பேசித் தேவையான அளவு எண்ணிக்கையில் வண்டிகளை வயலுக்குள் கொண்டு வந்து சேர்ப்பான்.

மாடுகள் அவிழ்க்கப்பட்டுக் கயிற்றுடன் மேய விடப்படும். வண்டிக்காரர்கள் பட்டறை பிரித்து நெல் அளந்து சாக்கு நிரப்பிக் கட்டி வண்டியில் ஏற்றுவர். இந்தச்செயற்பாடு ஒன்றிரண்டு வயல்களில்ல – வட்டை முழுவதும் நிகழ்வதால் திரும்பிய திசையெல்லாம் பட்டறைகளைச் சூழ்ந்து மக்கள் கூட்டமும்,வண்டிகளும், வட்டைமுழுவதும் பற்பல வண்ணங்களில் மாடுகளும் தெரியும். இது கண்கொள்ளாக்காட்சி. இவ்வழகுக்காட்சி இப்போதுள்ளவர்களுக்குக் கற்பனையாகிவிட்டது.

சாக்குகள் அடுக்கப்பட்ட வண்டிகள் சாரிசாரியாக "ஹரிகன் லாம்புகள்" கட்டப்பட்டவைகளாக வாது கவி இசையுடன் வந்து சேர்க்கின்றன போடியார் வீட்டுக்கு. போடியார்களின் வீடுகள் கூட,

நெல்லுக் கொட்டறைகள் பலவற்றைக் கொண்ட பட்டறைகள்தான். அந்தக் கொட்டுக்களாகிய சாக்குப்பட்டறைகளில் நெற்சாக்குள் சொரியப்பட்டுப் பக்குவப்படுத்தப்படும். எனவே, தானிக்களஞ்சியமான சம்மாந்துறையின் சாகித்திய மலருக்குப் பட்டறையென்ற பெயரை மலர்க்குழு சூட்டியதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

சம்மாந்துறைச் செயலகத்தில் அத்திபூத்தாற் போல் நிகழும் சாகித்திய விழாவில் மலர்ந்த மலரிது இம்மலர், செயலகத்தின் மையக்களமான சம்மாந்துறையின் பாரம்பரியங்கள், வழக்குகள், வரலாறுகள், கலை,கலாச்சார இலக்கியத் தொடர்புகள் என்பவற்றை ஓரளவேனும் தொட்டுச்செல்லக்கூடியதாக அமைய வேண்டுமென்றதில் கருத்து வேற்றுமை இருக்கவில்லை. இதன்பொருட்டு திரட்டப்பட்டுள்ள ஆக்கங்களைக் கொண்டே மலர் ஆக்கப்பட்டுள்ளது. மிகவும் பரந்து விரிந்த எமதூரின் பாரம்பரியங்களை இச்சிறிய மலருக்குள் அடக்கிவிட முடியாது. இதைப்போல் இன்னும் பல மலர்கள் வெளிவரவேண்டிய அவசியம் இருக்கிறது.

இம்மலருக்கான ஆக்கமுயற்சியின் போது தொட்ட, தொடர்பு பட்ட அனைவருமே "பிஸி" யானவர்களாக இருந்தனர். இந்த "பிஸி", எனது தொடாந்த முயற்சிகளை இழுத்தப்பிடிப்பதாகவும் அமைந்தது. இந்நிலையில் பிரதேசச் செயலாளர் ஜனாப் ஏ.மன்சூர் அவர்களின் தொடர்ந்தோச்சியான முயற்சியும், ஆக்கித்தந்த பக்க பலங்களும் ஏராளமானவைகளாகும். மலர்த் தொழிற் பாட்டுக்காகத் தனியறை, ஆளணிகள், தந்ததோடு தனது செயலகத்தின் நிருவாக உறுப்பினர்கள் அனைவரையும் எங்களோடு அன்பிணைப்புச்செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக சாகித்திய விழாவையும், அதன் மலரையும் உள்ளத்தளவில் பெரும் நேசம் வைத்து உழைத்தார்; அடிக்கடி கூட்டங்கள் கூட்டி அபிவிருத்திகளை மட்டிட்டார்; கலந்துரையாடித் தடங்கல்களை இனங்கண்டு நிவர்த்திக்க முனைந்தார். அத்துடன் சம்மாந்துறைப் பிரதேசச் செயலகத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் வரலாற்று அடிப்படையில் வரைந்து கட்டுரையாகத் தந்துள்ளார். இவை அனைத்தும் மலரின் செயற்பாட்டை ஊக்குவித்தன.

வாழ்த்துக்களையும், ஆசியுரைகளையும் மக்கள் பிரதி நிதிகள், அரச பிரதி நிதிகள், சமயப்பெரியர்கள், பிரமுகர்கள் வழங்கியுள்ளனர். அவர்களுக்கு எங்கள் கடமைப்பாடுகள். மலரில் சம்மாந்துறையின் அரசியல், கல்வி, ஆத்மீகம், கலை, கலாச்சாரம், பண்பாடு இவைகள் பற்றியும், இவற்றின் வரலாறுகள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்ட, வரலாற்றுப்பதிவுகளான பல கட்டுரைகள் இருக்கின்றன. சிரமத்தோடு இக்கட்டுரைகளை ஆய்வு செய்து தொகுத்துத் தந்த கட்டுரையாசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

சாஹித்தியம் என்பது இலக்கியம். இந்த இலக்கிய விழாவில் மலரும் இம்மலரில் இலக்கியப்பதிவுகளும் இருக்க வேண்டியதன் அவசியம் கருதிச் சம்மாந்துறையின் இலக்கியத் தொடாபுகளைப் பல்வேறு கோணங்களில் வெளிக்காட்டியுள்ளோம். வெளியீடுகளும்,வெளியீட்டாளர்களும் இணைந்த பட்டியல்,பெருந்தேடல்களின் விளைவாக தொகுக்கப்பட்டு இங்கு பதியப்பட்டுள்ளது. அறிந்திருக்க வேண்டிய பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்ட பல இலக்கிய விலாசங்கள், பழமொழிகளுடன் சில மொழிகள் என்றவொரு புதுமையான ஆக்கம், பாரம்பரியங்களில் இழையோடும், பண்பாடுகள், கலைவண்ணங்கள், நாட்டார் இலக்கிய கவிநயங்கள், சம்மாந்தறையின் தனித்துவப் பேச்சு வழக்கைப் பிரதி பலித்த சொற்பட்டறை ஆகியன ஆய்வு செய்தும், தேடல் செய்தும், ஆக்கம் செய்தும் திரட்டப்பட்டு மலரில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் கர்த்தாக்கள் இத்திரட்டல்களைப் பிற் சந்ததியினரின் ஒரு சொத்தாக வழங்கியுள்ளனர். சம்மாந்தறையின் தனித்துவமான ஆத்மீக, கலாச்சார, நிருவாக, அமைப்பு முறை பற்றிய முக்கியமான தகவல்களைக் கொண்டவோராக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு இணையாகச் சம்மாந்துறைப் பிரதேச, சைவ ஆலயங்கள் என்றவொரு கட்டுரை பல பூர்வீகங்களை விளக்கி நிற்கிறது. பலராலும் பல கவிதைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய அனைத்திலும் நமது தாய் மண்ணின் அறிவிப்புக்களே விரவிக்கிடக்கின்றன. இரண்டு சிறுகதைகள் மலரை அலங்கரிக்கின்றன. கலை இலக்கியப் போட்டித் தெரிவுகள், கௌரவிக்கப்பட வேண்டியவர் பெயர்ப் பட்டியல், செயலகத்தின் நிருவாக உட்பிரிவுப் பட்டியல்கள், பல குழுப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மலரின் மணப்பெருக்கத்துக்காக ஊரின் மூலை முடிச்சுக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில அழகுத்தோற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு காலங்களில், வாசிப்புக்களால் கிடைத்த சில அறிவுத் துணிக்கைகள்,சுவைக்கத் தக்கனவாக ஆங்காங்கே மலரில் மின்னுகின்றன விளம்பரங்களும் காணப்படுகின்றன வழங்கியவர்களுக்கு நன்றிகள். அத்தனை பண்டங்களும் இருந்தாலும் அவற்றை முறைப்படி ஆக்கி முடிக்கத் தேர்ச்சி பெற்றவர்கள் தேவைப்படுவார்கள். இதேபோல இம்மலரின் விடயதானங்களைக் கணனிப்பதிவு செய்து பிரதியிட்டார்கள் செயலகத்தின் நவாஸ், ஜுனைதீன் ஆகியோர். இவர்களுக்கு துணையாகச் செயலாற்றினார்கள் பாதிமா றிபானா, அமுதா, விஜிதா வாரிதா, சர்மிலா ஆகியோர். மிகப்பொறுமையோடு இப்பணியைச் செய்த அவர்களுக்கு எமது நன்றிகள். மலரில் இழையோடிக்காணப்படும் இப்பிரதேசத்தின் ஜீவனோபாயப் பாரம்பரியக் கதைகூறும் ஓரட்டைப்படம் தேவைப்பட்டது. அதற்கான கருத்தையும், அமைவுச்சாயலையும் கொடுத்துக் கலந்துரையாடியதன் மூலம் வெளியானதே இவ்வட்டைப்படம். ஊர் காட்ட முகப்பு, விவசாயம் காட்ட வயல் வெளியும், ஊர்க்கரையும், உழவு, விதைப்புக்களைக் காட்டுவதற்கு கலப்பையுடன் சோடிமாடுகள், விளைந்ததைக்கட்ட பட்டறை, பட்டறை பிரித்து, கொண்டுவர நெல்மூடைகள் ஏற்றிய மாட்டு வண்டியும், வண்டிக்காரனும். இக்கதையைக் கைத்தூரிகையைக் கொண்டு சொல்லியுள்ளார் சம்மாந்துறைக் கல்வி வலயத்தின் தற்போதயக் கோட்டக்கல்வி அதிகாரியும், வலயத்தின் சித்திரக் கல்விப் பணிப்பாளருமான என் அன்புக்குரிய மாணவன் ஐ.ஏ. றசூல். இத்தகைய பணிகள் அவர்மூலம் தொடர்வதற்கு வாழ்த்துகின்றேன்.

மலருக்குத் தேவையான. குழுப்படங்கள், பின் அட்டைப்படங்கள், காட்சிப்படங்கள் யாவுக்குமான தொடர்பாடலை, தொடர்பாடல் துறை சமூர்த்தி ஹனிபாவிடம் வைத்துக்கொண்டேன். ரோடு சுற்றி, காடு சுற்றி, ஆறு சுற்றி, இப்படங்களைச் சம்பாதித்தோம். அத்தனையும் நமது மண்பதியைச்சேர்ந்தவைகள். இவைகள் போல் எத்னையோ ஆயிரம் இன்னும் எடுக்கலாம் எமதூரில். எங்களுக்கு இம்முயற்சியில் தொழில் நுட்பங்களை வழங்கி உதவி செய்தார் "டிஜிடல்" ஸ்ரூடியோ உரிமையாளர் பைஸால், அட்டையையும், புற மட்டையையும் என் கருத்துக்கு இயைய வடிவமைத்துத் தந்தார் நிந்தவூர் மல்டி டிசைன் உரிமையாளர் பாதிக் அவர்கள்,நிந்தவூர் குட்லக் ஒப்செட் உரிமையாளர். ஐ.எல்.றாபிஹ அவர்கள் மலரை அச்சிட்டு மலர வைத்துள்ளார் சாஹித்திய விழா, மலராக்கம், அவைகளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தளர்ந்து விடாமல் ஒவ்வொரு கணமும் ஊக்கப்படுத்திக் கொண்டிருந்த எமது பிரதேசச் செயலாளர் ஜனாப் ஏ. மன்சூர் அவர்கள், "பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்" என்பார்கள். அது போல அவரோடிணைந்து தொழிற்பட்ட உதவிச் செயலாளர் ஜனாப் ஜே. லியாக்கத் அலி அவர்கள், கணக்காளர், ஜனாப் ஏ.எல். மஹ்றூப் அவர்கள், சிற்சில சந்தர்பங்களில் நிந்தனைக்குள்ளாகியும், இறுதியில் வந்தனை பெற்றும் நிற்கும் கலாச்சார உத்தியோகத்தர் ஜனாப் அஷ்ரப் அவர்கள், பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் மலருக்குதவிய அத்தனை தரத்தார்களும், அவர்களிலும் விஷேடமாக எனது இந்த மலைபோன்ற சுமையைத் தோளோடு தோள் நின்று சுமந்து இம்மலரின் மலர்வுக்குத் துணையாக இருந்த அன்புக்குரிய யூஎல்எம். முஸ்தபா ஓய்வு பெற்ற அதிபர் அவர்கள், இழுத்த இழுப்புக்களுக்கெல்லாம் என்னோடு காடு மேடு சுற்றித்திரிந்த கமராக்காரர் ஹனீபா, எங்களின் உபத்திரவங்களால் எரிச்சல்படாமல் கணனிப்பணி செய்த நவாஸ், ஜுனைதீன் ஆகியவர்கள், மலரில் ஆர்வமும், அதனோடு சேர்ந்த சாகித்திய விழாவின் ஏற்பாடுகளில் கரிசனை கொண்ட விழாவின் ஏற்பாட்டுச்சபை உப தலைவர் மாறன் யூ. ஸெயின், ஏனைய குழுக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த மலரை, மணமற்ற காகித மலராக, அதன் வண்ணங்களை மட்டும் சுவைத்து வீசி விடாதீர்கள். இது காக்கப்பட வேண்டியதும், நுகரப்படவேண்டியதுமான ஓராவணம். தகவல்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய பொக்கிஷம். இந்த "ஸமானில்" பிறக்கின்ற பிள்ளைகள் அத்தனையுமே டொக்டராகவும், இங்கினியராகவுமே பிறக்கின்றன; பெற்றார்களும் அவர்களைத்தான் பெறுகின்றாகள். இதனால் அப்பதவிகளைப் பெறுவதற்குரிய எத்தனங்களே பிறந்த நாள் தொட்டு நடைபெறுவதால் வேறு எவற்றையும் ஏறெடுத்தும் நோக்குவதாகத் தெரியவில்லை. இதனால் நூல் நுகர்வுகள் அற்று விட்டன. "தான் கற்ற நூலறிவேயாகுமாம் நுண்ணறிவு" என்பதனால் வாசிப்பபை அதிகரியுங்கள். அந்த வழியில் இந்த நூலையும் நுகர்ந்து இன்புறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கலாபூஷணம், கலைமணி
ஏ.ஸீ. இஸ்மாலெவ்வை

சம்மாந்துறை மண்பதியில் கலை இலக்கிய கலாசார விழுமியங்கள் சரியக்கூடாது – சரித்திரமாகவேண்டும்!

சாகித்திய விழா பேரவை – துணைத்தலைவர்

எமது சம்மாந்துறை பிரதேசம் என்பது இஸ்லாமிய -இந்துசைவ - கிறிஸ்தவ மக்கள் பலரும் வாழ்கின்ற ஓர் இனிய பதியாகும். இவர்கள் வெவ்வேறு மதங்கள் சார்ந்தவர்களாக இருந்தாலும் மொழியால், தொழில் முறையால் இரண்டறக்கலந்து வாழ்கின்றவர்களாகவும், தத்தமது கலாசாரங்களை ஆரோக்கியமாகப் பேணிவரு கின்றவர்களாகவுமே இலங்குகின்றனர்.

இவர்களது வாழ்வியலில் அவ்வப்போது பல்வேறு கலைகள் முகிழ்ந்து மணந்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றன.

விளையாட்டுக்கள், பாட்டுக்கச்சேரிகள், கோடுக்ச்சேரிகள், நாட்டுக்கூத்துக்கள், கும்மி நடனங்கள்... பலவும் கலகலப்பாக்கிக்கொண்டிருந்தன இவர்களது வாழ்வியலை.

இவற்றின் மத்தியில் கவிகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள்... இன்னோரன்ன இலக்கியங்களையும் இம்மண்பதியின் ஆர்வலர்கள் வடிப்பவர் களாகவும் இருந்தனர்.

இந்தக்கலைகளும், இலக்கியங்களும், கலாசார விழுமியங்களும் காக்கப்பட வேண்டும் - வளர்க்கப்படவேண்டும்... என்பதில் காத்திரமான உணர்வுகள் 1948 ஆம் ஆண்டு காலத்தின் பின்னர் தான் இத்துறைகளிலான ஆர்வலர்கள் மத்தியில் இழைந்தன.

இந்த உணர்வுகளைத் தொட்ட இலக்குகளை முன்னெடுத்துச் செல்லும் நிமித்தமாக அவ்வப்போது பல குழு அமைப்புக்களும் முகிழ்ந்து இயங்கின. இந்தக் குழு அமைப்பு முறைகள் பிற்காலத்தில் சங்கங்கள் என்றும், மன்றங்கள் என்றும், கழகங்கள் என்றும் அவசியங்களுக்கு ஏற்ப விரிந்தும் வளர்ந்தும் இலங்கின.

இந்த வகையில் 1956 ஆம் ஆண்டு முகிழ்ந்து வரலாறு படைத்த ஒருகாத்திரமான அமைப்பு 'கலாபிவிருத்திக்கழகம்' என்றால் மிகை இல்லை.

இக்கழகம் முதற்கொண்டு இதற்குப்பின்னர் முகிழ்ந்த பல அமைப்புக்களும் இவற்றினது ஆர்வலர்களின் சுய முயற்சிகளாலும், சுறுசுறுப்பான செயற்பாடுகளாலும்தான் தத்தம் இலட்சியப்பணிகளை மேற்கொண்டு இயங்கின. சொந்தப்பணத்திலும், சொற்ப நன்கொடைகளிலும், சோர்வுகள் இல்லாத அர்ப்பணிப்புக்களிலும்தான் தங்கியிருந்தன அப்போதய கலை இலைக்கிய சேவைகள். இத்தனை முயற்சிகளுக்கும் அப்போது அரச பலங்கள் எதுவுமே இல்லை.

இவ்வாறான ஒரு கால கட்டத்தில்தான் 2002 ஆம் ஆண்டு கலைஞர் எம்.ஐ.எம்.பிர்தௌஸ் அவர்கள் எமது பிரதேச செயலத்தில் கலாசார உத்தியோகத்தராக நியமனம் பெற்று இயங்கினார். இது கனம் தங்கிய எம்.ஐ.எம்.அமீர் பிரதேச செயலாளராகப் பதவியில் இருந்தகாலம்.

இக்காலகட்டத்தில் எமது பிரதேச செயலத்தைத் தளமாகக்கொண்டு இம்மண்பதியின் கலை இலக்கிய ஆர்வலர்கள் பலரும் ஒன்றிணைந்த 'பிரதேச கலை இலக்கிய கலாசாரப் பேரவை' எனும் அமைப்பு 2002.01.13 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இயங்கியது.

இந்தப் பேரவையின் பதவி வழித்தலைவராக பிரதேச செயலாளர் அவர்களும் பதவி வழிச் செயலாளராகக் கலாசார உத்தியோகத்தர் அவர்களும் இலங்கினர். இதன் துணைத் தலைவராகக் கலைவேள் மாறன் .பூ.ஸெயின் அவர்களும், துணைச் செயலாளராகக் கலைஞர் எஸ்.எம்

ஜவாத் அவர்களும், பொருளாளராகக் கலைஞர் ஏ.எல்.எம் பயாஸ் அவர்களும் தெரிவாகி இயங்கினர்.

இந்தப் பேரவையானது வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டும் இருந்தது.

இந்தப் பேரவையின் முகிழ்வு சம்மாந்துறை மண்பதியின் கலை இலக்கிய வரலாற்றில் புதிய ஓர் ஒளிக்கீற்று என்றால் மிகை இல்லை. இதற்குக் காரணம் இந்தப் பேரவையின் பின்புலமாக பிரதேச செயலகமும் இதன் பின்பலமாக கலாசார திணைக்களமும் இயங்குவதுதான்.

அரசினது உதவிகள் - ஒதுக்கீடுகளால் இம்மண்பதியின் கலை இலக்கிய கலாசார முயற்சிக்களுக்குக் கடுகளவாவது நன்மைகள் கிடைக்கும் என்ற ஓர் அங்கலாய்ப்பு.

இப்பேரவை தனது முதன் முயற்சியாகக் கல்முனை சமாதான அமைப்பை இணைத்து 2004.06.12 ஆம் திகதி 'கலைஞர்கள் வாரவிழா' ஒன்றை விமரிசையாகக் கொண்டாடி இருந்தது. இந்த விழாவிற்கான உதவிகள் ஒத்துழைப்புக்கள் பலவற்றையும் வழங்கிய சமாதான அமைப்பின் தலைவர் திரு தேவகடாட்சம், வெளிக்கள உத்தியோகத்தர்களான திருமதி கிருபைநாயகி சிவகுமார், செல்வி எம்.எச்.எம்.சபியா ஆகியோரை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூரவேண்டி இருக்கிறது.

இதைத்தொடர்ந்து 2006ஆம் ஆண்டும் இப்பேரவை இலக்கியக் கலைப் போட்டிகளை நடாத்தி இலக்கியக் கலைப் பெருவிழாவையும் கொண்டாடி இருந்தது. இதன்போது பிரதேச செயலாளர் ஜனாப் எம்.எம்.நஸீர் அவர்கள் பேரவையின் பதவிவழித் தலைவராக இயங்கினார்.

இதுகாலம்வரை கலாசார உத்தியோகத்தராகவும், பேரவையின் பதவிவழிச் செயலாளராகவும் கலைஞர் எம்.ஐ.எம்.பிர்தௌஸ் அவர்களே கடமையில் இருந்தார். இவரது கடமைக்காலங்களில் இம் மண்பதியின் வரலாற்றில் இல்லாதவகையில் இவரது முயற்சிகளால் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட எட்டு கலை இலக்கிய அமைப்புக்கள் இன்றும் தத்தமது சேவைகளை மேற்கொண்டு இயங்குகின்றன. இந்தவிதமாக இவர் தனது கடமைக் காலங்களில் செய்த சேவைகளை எமது மண்பதியின் கலை இலக்கிய நெஞ்சங்கள் என்றும் மறக்க இயலாது.

இதன் பின்னர் இவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதும் இதனால் ஏற்பட்ட வரட்சி நிலையைப் போக்க பிரதேச செயலாளர் அவர்கள் சமூக சேவை உத்தியோகத்தர் ஜனாப் எம்.எம்.இத்ரீஸ் அவர்களையும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கலைஞர் கே.எம்.றியாஸ் அவர்களையும் தற்காலிகமாக நியமித்து இருந்தார்.

இவர்கள் எனதும், ஆர்வலர்களினதும் உதவிகளுடன் இலக்கியக்கலைப் போட்டிகளை நடாத்தி வைபவ ரீதியாகப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் - சான்றிதழ்களையும் வழங்கி இருந்தனர். இந்தவகையில் இவர்களது பணிகளையும் மறக்க இயலாது. இதன்போது பிரதேச செயலாளர் ஜனாப் ஏ.எல்.எம்.தாஸீம் அவர்கள் பேரவையின் பதவிவழித் தலைவராக இயங்கினார்.

இதன் பின்னர் 2007ஆம் ஆண்டு பிரதேச செயலாளராகக் கடமையேற்ற மாண்புறு ஏ.மன்சூர் அவர்கள் பேரவையின் தலைவராகவும், 2008 ஆம் ஆண்டு கலாசார உத்தியோகத்தராகக் கடமையேற்ற கவிஞர் எம்.ஐ.எம்.அஷ்ரப் அவர்கள் பேரவையின் செயலாளராகவும், கணக்காளர் ஜனாப் ஏ.எல்.மன்றூப் அவர்கள் பேரவையின் பொருளாளராகவும் இலங்கினர்.

இந்தக்காலக்கட்டத்தில்தான் இந்த 'பட்டறை' சிறப்பு மலருக்குக் காரணமாக இலங்கும் 'பிரதேச சாகித்திய கலாசார விழா' ஏற்பாட்டு முயற்சிகள் இடம்பெற்றன.

இதன் நிமித்தமாக இந்த விழாவைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் சென்று முடிக்கும் வகையில் 'பிரதேச சாகித்திய கலாசார விழாப் பேரவை' ஒன்று உருவாக்கப்பட்டு இலங்கியது.

இதன் தலைவராக பிரதேச செயலாளர் மாண்புறு ஏ.மன்சூர் அவர்களும், துணைத்தலைவர்களாக பிரதேச உதவிச் செயலாளர் ஜனாப் ஜே.லியாகத் அலி - கலைவேள் மாறன் - யூ.ஸெயின் ஆகியோரும், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் கவிஞர் எம்.ஐ.எம்.அஷ்ரப் அவர்களும், துணைச் செயலாளர்களாக எழுத்தாளர் ஐ.எல்.ஜலீல் - முகாமைத்துவ உதவியாளர் கலைஞர் ஏ.எம்.நவாஸ் ஆகியோரும், பொருளாளராக கணக்காளர் ஜனாப் ஏ.எல்.ம.்றூப் அவர்களும் இலங்கினர். இவர்களுடன் இம்மண்பதியின் கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் சிலரும் விசேட உறுப்பினர்களாக விழாப் பேரவையில் இணைக்கப்பட்டனர்.

இந்த விழாவின் வேலைத்திட்டங்களை இலகுவாக்கிக்கொள்ளும் நிமித்தமாகப் பல பணிக்குழுக்கள். ஒவ்வொரு பணிக்குழுவிற்கும் ஓர் ஆலோசகர் – ஒரு தலைவர் – ஒரு செயலாளர்.

இவ்வாறான கட்டமைப்புக்களின் காத்திரமான முயற்சிப் பணிகளால் விழா ஏற்பாடுகள் களைகட்டி இலங்கின.

இந்த விழா தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் இவ்விழாவினைத் தொட்டு இடம்பெற்ற இலக்கியக் கலைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கல், கவி அரங்கு, கலைஞர் எழுத்தாளர்கள் கௌரவிப்பு, விழா சிறப்பு மலர் 'பட்டறை' வெளியீடு, கலை கலாசார நிகழ்ச்சிகள்.... என்று எம் பிரதேச மக்களுக்குப் பல்வகையான இனிப்புக்கள்.

இவ்வாறு விழா முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கும்போதுதான் கவலைதரும் சம்பவங்கள் இரண்டு. சாகித்திய கலாசார விழாப் பேரவையில் விஷேட உறுப்பினர்களாக இலங்கிய கலைஞர் எம்.ஏ.ஸீ.எம்.மக்கீன், கலைஞர் எஸ்.அருளம்பலம் ஆகியோரின் எதிர்பாராத மரண இழப்புக்கள்.

இந்த இழப்புக்களையும் தாங்கிக்கொண்டு பலதரப்பட்ட அரசியல் பிரமுகர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பல்வேறு மதங்களையும் சார்ந்த சமூக – சமயப் பெரியார்கள்... என்று இன்னோரன்ன பலரும் சங்கமம் ஆகிய வெள்ளத்தில் சாகித்திய கலாசார விழா இலங்கியது.

இதற்கு வரலாற்று முத்திரை பொறிக்கும் ஒன்றாக பிரதேச கலை இலக்கிய கலாசாரப் பேரவையின் 'பட்டறை' எனும் சஞ்சிகை விழாச் சிறப்பு மலராக கலாபூசணம் ஏ.ஸி.இஸ்மாலெவ்வை அவர்களின் தலைமையில் இயங்கிய மலர்க்குழுவினது அயராத முயற்சியில் வெளிவருவது பாலுக்குள் தேன் கலந்த பாங்கு என்றால் மிகை இல்லை.

இந்த விழாவினது விழுமியத்திற்கும் வெற்றிக்கும் எமது பிரதேச செயலாளரும், பேரவைத் தலைவருமான மாண்புறு ஏ.மன்சூர் அவர்கள் பல வகையிலும் அவ்வப் போது தந்த தைரியங்களும், தளராத செயற்பாடுகளும் எமக்குச் சாலவும் பக்க பலமாக இருந்தன என்றால் மிகை இல்லை.

இதற்கு இயைவாக கலாசார உத்தியோகத்தரும் பேரவைச் செயலாளருமான கவிஞர் எம்.ஐ.எம்.அஸ்ரப், கணக்காளரும் பேரவைப் பொருளாளருமான ஜனாப் ஏ.எல்.ம.்றூப் ஆகியோரின் அயராத சேவைகளையும் மறக்க இயலாது.

இந்த பிரதேச சாகித்திய கலாசார விழாப் பேரவையின் துணைச் செயலாளர்களான எழுத்தாளர் ஐ.எல்.ஜலீல் - முகாமைத்துவ உதவியாளர் கலைஞர் ஏ.எம்.நவாஸ் என்போரதும், பணிக்குழுக்களின் இணைப்பளரான எமது அபிவிருத்தி உதவியாளர் ஜனாப் எம்.ஐ.எம்.பஷீர் ஆகியோரதும் அர்ப்பணிப்புக்கள் என்றும் இழைகின்றன எம் இதயங்களில்.

இந்த விழாவின் நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றிகளுக்கு பணிகளாற்றிய பணிக் குழுக்களின் ஆலேசகர்கள், தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் அயராத உழைப்புக்களும் காரணங்கள் என்றால் மிகை இல்லை.

இன்னும் பிரதேச செயலகத்தில் பணிகளாற்றும் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள்... என்று இரு பாலரும் இவ்விழாவிற்காக அவ்வப் போது ஒத்துழைப்புக்கள் நல்கிய அனைவருமே எமது இதயங்களில் நன்றிக்குரியவர்களாக இழைகின்றனர். இரவு பகலாக இயங்கிய துணைச் செயலாளர் கலைஞர் ஏ.எம்.நவாஸ் அவர்களுடன் இணைந்து கணினிப் பணிகளைச் செய்து இவ்விழாவிற்காக உழைத்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கலைஞர் எம்.எம்.ஜுனைதீன் அவர்களது இனிய சேவைகளையும் மறக்க இயலாது.

இந்த விழாவை கலகலப்பாக்கும் வகையில் கல்லூரிகள், வித்தியாலயங்கள், கலை இலக்கிய அமைப்புக்கள் என்பன கலை, கலாசார நிகழ்ச்சிகளை வழங்கி இருந்தன. இந்த நிறுவனங்கள் - அமைப்புகளின் அதிபர்கள், தலைவர்கள், நிகழ்ச்சிகளின் கதாசிரியர்கள், கவிஞர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இவற்றில் பாத்தி ரங்களை ஏற்றுப் பங்களிப்புச்செய்த கலைஞர்கள், கலைஞினிகள் எல்லோருக்குமே எமது நன்றி இதயங்கள்.

ஆண்டுதோறும் இந்த பிரதேச சாகித்திய கலாசார விழா இம்மண்பதியில் பயனுள்ளவகையில் இலங்கவும், இளைய - முதிய கலை இலக்கிய நெஞ்சங்களின் ஆரோக்கியமான வாழ்வியலுக்கு விருந்தாக அமையவும், இதற்கான வாய்ப்புக்கள் - வளங்களை எமது பிரதேச செயலகத்தின் அர்ப்பணிப்போடு இணைந்து இனறைய எமது இதயங்கள் சம்மாந்துறை மண்பதியில் கலை இலக்கிய கலாசார விழுமியங்கள் சரியாது சரித்திரமாக ஒளிர காத்திரமாய் பயணம் தொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது.

மாறன் ~ யூ.ஸெயீன்
துணைத் தலைவர்
பிரதேச சாகித்திய கலாசார விழாப் பேரவை.



அலுவலக உத்தியோகத்தர்கள்



பெயர்கள் மறுபக்கத்தில்



அலுவலக உத்தியோகத்தர் விபரம்.

1. ஜனாப். ஏ.மன்சூர்	பிரதேச செயலாளர்
2. ஜனாப் ஜே.லியாகத் அலி	உதவி பிரதேச செயலாளர்
3. ஜனாப் ஏ.எல்.ம.்றூப்	கணக்காளர்
4. ஜனாப் கே.எல்.ஏ.ஹமீட்	உதவி திட்டமிடல் பணிப்பாளர்
5. ஜனாப் எம்.ரி.ஏ.வாஹிட்	நிருவாக உத்தியோகத்தர்
6. ஜனாப் சீ.எம்.எம்.சத்தார்	மேலதிக மாவட்ட பதிவாளர்
7. ஜனாப் எஸ்.அஸீஸ் உல்லா	தலைமை முகாமை உதவியாளர்
8. ஜனாப் எம்.ஐ.ஆதம்பாவா	தலைமை முகாமை உதவியாளர்
9. ஜனாப் எஸ்.எல்.எம்.மன்சூர்	தலைமை முகாமை உதவியாளர்
10. ஜனாப். எம்.ரி.எம்.சரீம்	நிதி உதவியாளர்
11. திருமதி.பி.மாஜிதா	அரச முகாமை உதவியாளர்
12. ஜனாப்.எம்.ஏ.முகைதீன் பாவா	அரச முகாமை உதவியாளர்
13. ஜனாப். கே.பி.சலீம்	அரச முகாமை உதவியாளர்
14. திருமதி.ஏ.யூ.சித்திக்	அரச முகாமை உதவியாளர்
15. திருமதி. எஸ்.ஏ.நபீறா	அரச முகாமை உதவியாளர்
16. திருமதி.ஏ.பழீனா	அரச முகாமை உதவியாளர்
17. திருமதி.ஏ.யூ.பஸீல்	அரச முகாமை உதவியாளர்
18. ஜனாப்.ஏ.எம்.நவாஸ்	அரச முகாமை உதவியாளர்
19. திரு.கே.இராமச்சந்திரன்	அரச முகாமை உதவியாளர்
20. திருமதி.எம்.ஏ.சி.சீனத் உம்மா	அரச முகாமை உதவியாளர்
21. ஜனாப்.ஏ.எல்.ஹம்சா	அரச முகாமை உதவியாளர்
22. திருமதி.என்.எம்.தௌபிக்	அரச முகாமை உதவியாளர்
23. திருமதி.எஸ்.யு.எம்.மாஹிர்	அரச முகாமை உதவியாளர்
24. ஜனாப்.ஏ.ஜாபிர்	அரச முகாமை உதவியாளர்
25. திருமதி.ஏ.எல்.சபீனா	அரச முகாமை உதவியாளர்
26. திருமதி.ரி.எம்.றகீமா	அரச முகாமை உதவியாளர்
27. திருமதி.ஏ.யு.எம்.சமீம்	அரச முகாமை உதவியாளர்
28. திருமதி.எம்.எல்.பரிதா	அரச முகாமை உதவியாளர்
29. ஜனாப்.எம்.ரி.எம்.இஸ்மாயில்	அரச முகாமை உதவியாளர்
30. திருமதி.எம்.பி.பௌசுல் நிஹாரா	அரச முகாமை உதவியாளர்
31. திருமதி.ஜே.மனோகரன்	அரச முகாமை உதவியாளர்
32. ஜனாப்.ஏ.ஏ.கபூர்	அரச முகாமை உதவியாளர்
33. திருமதி.ஏ.எஸ்.றபீனா	அரச முகாமை உதவியாளர்
34. திரு.எஸ்.சண்டேஸ்வரன்	அரச முகாமை உதவியாளர்
35. ஜனாப்.எம்.ரி.ஹமீன்	அரச முகாமை உதவியாளர்
36. திருமதி.எம்.எல்.எஸ்.றெஜினா	அரச முகாமை உதவியாளர்
37. திரு.ஒ.ஜி.கே.குசுமிந்த கீர்த்தி	அரச முகாமை உதவியாளர்
38. திரு.கே.விக்கினேஸ்வரன்	அலுவலக ஊழியர்
39. திரு.ஏ.பவானந்தன்	அலுவலக ஊழியர்
40. திரு.எஸ்.சந்திரன்	அலுவலக ஊழியர்
41. திரு.கே.சண்முகநாதன்	சாரதி
42. ஜனாப்.எம்.எச்.எம்.பிர்தௌஸ்	சாரதி
43. திரு.கே.அழகையா	அலுவலக ஊழியர்
44. ஜனாப்.எம்.ஏ.அஸீஸ்	அலுவலக ஊழியர்
45. ஜனாப்.எம்.ஏ.மன்சூர்	அலுவலக ஊழியர்

சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சம்மாந்துறையின் வரலாறு.

கிழக்கிலங்கையில் சிறப்புடன் விளங்கும் வரலாற்றுப் பெருமை கொண்ட பழம் பெரும் நகரங்களில் முக்கிய இடத்தை சம்மாந்துறை வகிக்கின்றது. அதற்கு அதன் அமைவிடமும் புவியியல் நிலமைகளும் நெல் வயல்களைக் கொண்ட சுற்று சூழலும் அடிப்படையாக அமைகின்றன.

G.சின்னத்தம்பி என்பவரின் "Ceylon in Ptolemy's Geography " எனும் புத்தகத்தில் சம்மாந்துறையினைப் பற்றி பின்வருமாறு கூறப்படுகின்றது.

இலங்கையின் மிகப் பழமையான நெல் வயல்கள் கிழக்குப்பிரதேசத்தில் அமைந்திருந்தன. மகா வம்சத்தில் பராக்கிரமபாகு வெளிநாடுகளுக்கு நெல்லை ஏற்றுமதி செய்ததாகக் கூறப்படுகின்றது. அக்காலத்தில் கிழக்கில் அதிக நெல் உற்பத்தி இடம்பெற்றிருக்கின்றது என்றும் அவ்வாறாயின் அவ் உற்பத்தி சம்மாந்துறையிலேதான் இடம்பெற்றிருக்க வேண்டும் என்றும், இவ்விடயம் ஏற்றுக்கொள்ளப்படக் கால்கோளாக எகிப்திய புவியியல் ஆய்வாளரான "தொலமி" இலங்கைப்படத்தில் குறிப்பிடும் **"Magnus, Lidusis"** எனும் இடம் சம்மாந்துறையாகவே இருக்க வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

இக்கூற்றிலிருந்து சம்மாந்துறை பண்டைக்காலம் முதல் ஒரு துறைமுகமாக இருந்துள்ளதையும் நெல் உற்பத்தி, அரிசி ஏற்றுமதியுடன் நேரடித் தொடர்புடைய விவசாயப் பொருளாதார பின்னணியைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளதையும் அவதானிக்கலாம்.

பொதுவாக நோக்குமிடத்து பண்டைக்காலம் முதல் சம்மாந்துறை விவசாய பொருளாதார அமைப்பையும் அத்துடன் கைத்தொழில் நடவடிக்கைகள் வர்த்தக முயற்சிகள் அரச வேலைவாய்ப்புக்கள் என வளர்ச்சியடைய புவியியல், வரலாற்றுக் காரணிகள், கலாசார அம்சங்கள், அரசியல் பின்னணி என்பன சாதகமாக அமைந்ததை இங்கு குறிப்பிட முடியும். எமது பிரதேசத்தின் துரித வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக கல்முனைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கேற்முதலியார் MS.காரியப்பர் அவர்களின் தூண்டுதலினால் நம் நாட்டின் முதல் பிரதமரும், தேச பிதாவும் சுதந்திரப் போராளியுமான கௌரவ முன்னாள் பிரதமர் DS.சேனநாயக்கா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சேனநாயக்கா சமுத்திரம் நிர்மாணிக்கப்பட்டதும், அதனுடன் இணைந்தவாறு கல்லோயா அபிவிருத்தி சபை(GODB) இயங்க ஆரம்பித்ததும் முக்கிய காரணியாக அமைந்தது.

சம்மாந்துறை எனும் பெயர் வரக்காரணமாகவிருந்த விடயம் பற்றி ஆராயும் போது பண்டைக்காலம் தொட்டே "துறை" அதாவது பொருட்களை ஏற்றி இறக்கும் துறையாகவும், ஓடங்களைக் கட்டுகினற துறையாகவும் எமது ஊர் இருந்து வந்ததாகவும் அவ்வாறு பாவிக்கப்பட்ட ஓடங்களை அக்காலத்தில் சம்பத் என்று அழைத்திருக்கின்றார்கள். சம்பத் கட்டப்பட்டிருந்த துறை இவ்வூரில் இருந்ததன் காரணமாக சம்பத்துறை என அழைக்கப்பட்ட இவ்வூர் நாளடைவில் சம்மாந்துறை என பெயர் நாமம் பெற்றதாக முதியோர்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது.
மேலும் கிழக்கிற்கும் கண்டிக்கும் உரிய வர்த்தக மையமாகவும், மட்டக்களப்பிற்கு எல்லையாகவும், சம்மாந்துறை இருந்து வந்ததன் காரணமாகவும், இந்திய முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபார நோக்கோடு வங்காள விரிகுடாவிலிருந்து மட்டக்களப்பு வாவியினூடாக சம்மாந்துறையை வந்தடைந்த வரலாறுகள் பல ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வியாபார நோக்கோடு வந்த முஸ்லிம் வர்த்தகர்களான சம்மான்கதாரர் என அழைக்கப்பட்டதாகவும் அவர்கள் இத்துறையினூடாக பொருட்களை ஏற்றி, இறக்கி சென்றதால் சம்மான்கதாரர் துறை என்று அழைத்து, பின் அத்துறை சம்மாந்துறை என அழைக்கப்பட்டதாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

சம்மாந்துறையின் பொது நிருவாக கட்டமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும்

சம்மாந்துறை ஆரம்பத்தில் தனி நிருவாக அமைப்பாக இருக்கவில்லை. 1766.12.14 இல் கண்டி ராஜதானிக்கும் டச்சுக் கம்பனிக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் டச்சுக் கம்பனி நேரடி நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு இக்கம்பனியின் ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு தென் பகுதி பின்வரும் எட்டுப் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன,

1. பாணமைப் பற்று
2. அக்கரைப் பற்று
3. மண்முனைப் பற்று
4. எரிவில் பற்று
5. போரதீவுப் பற்று
6. மட்டக்களப்புப் பற்று
7. கோரளைப் பற்று
8. கரவாகுப் பற்று

சம்மாந்துறைப் பிரதேசம் கரவாகுப்பற்றுடன் இணைக்கப்பட்டிருந்தபோதும் இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரிட்டிஸ் ஆட்சியின் போது சம்மாந்துறையின் நிருவாகம் கரவாகுப்பற்றிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு, சம்மாந்துறை வேவகம் பற்று எனும் பெய்ருடன் தனி நிருவாகமாக இயங்கி வந்தது. அன்றைய சம்மாந்துறை வேவகம் பற்றின் எல்லைகளாக,

1. இங்கினியாகலை
2. தமணை
3. உகனை
4. பறகஹல
5. அம்பாறை

போன்ற பிரதேசங்கள் வரை பரந்து காணப்பட்டது. இப்பிரதேசத்து மக்கள் தமது பணிகளை நிறைவேற்ற சம்மாந்துறை குடிமகன் ஒருவரின் காணியில் அமைந்த அலுவலகத்தில் (அப்போதைய 2ம் குறிச்சியின் மரத்துரை கலந்தர் வளவில்) அமைந்திருந்த வன்னிமை எனும் நிருவாக உத்தியோகத்தர் காரியலாயத்திற்கு வந்து சென்றதாகவும் (தற்போது சம்மாந்துறை 5ம் பிரிவில் உள்ளது). அதன் பின் அக்கந்தோர் அவ்விடத்திலிருந்து கிராமக் கோட்டடி மெசனறி வளவுக்கு (தற்போது முன்னாள் அமைச்சர் கௌரவ MA. அப்துல் மஜீட் வளவு) மாற்றப்பட்டு, மிக நீண்ட காலமாக இயங்கியதாக எம் முதியோர் கூறுகின்றனர்.

1935ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் பின்வருவோர் நிருவாக உத்தியோகத்தர்களாக கடமைபுரிந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ள போதிலும், அவர்கள் கடமையாற்றிய கால எல்லைகளை சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

1. மாணிக்கப்போடி வன்னியனார்
2. எதிர் மனசிங்க வன்னியனார்
3. AL. காரியப்பர் வன்னியனார்
4. MS. காரியப்பர் வன்னியனார்

பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் சம்மாந்துறை வேவகம்பற்று 1935ம் ஆண்டு வரை M.முகம்மது அலி வன்னிமை (அலி வன்னியனார் இஸ்மாயில் துரையின் சகோதரர், மேசா இன்ஜினியரின் தந்தை அவர்கள்) என்பவராவர். அதன் பின் 1944ம் ஆண்டு வரை M.அப்துல் மஜீட் வன்னிமை (சம்மாந்துறை வன்னியனார், கௌரவ மர்ஹும் MHM.அஸ்ரப் அவர்களின் பெரிய தந்தை அவர்கள்) ஆகியோரால் நிருவாகம் செய்யப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் 1944ம் ஆண்டு பிரிவு வருமான அதிகாரி முறை (DRO) அறிமுகப்படுத்தப்பட்டு இந் நிர்வாக முறையின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட நிருவாகத்தின் ஆளுகைக்குள்ளாக்கப்பட்டிருந்த சம்மாந்துறை வேவகம் பற்று 1961ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாரை

மாவட்டம் தனிமாவட்டமாக பிரிக்கப்பட்டு அதன் செயலகம் உகணையில் தொடங்கியபோது சம்மாந்துறை வேவகம் பற்று அம்பாரை மாவட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, சம்மாந்துறை வேவகம் பற்றின் கீழ்

1. இங்கினியாகலை
2. தமணை
3. பறகஹல
4. அம்பாற

போன்ற பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன உகண செயலகம் அம்பாறைக்கு மாற்றப்பட்டதன் பின் சம்மாந்துறை வேவகம் பற்றுக்குப் பதிலாக சம்மாந்துறைப் பற்று உருவாக்கப்பட்டு மேற்படி கிராமங்களான இங்கினியாகலை, தமணை, பறகஹல, அம்பாற போன்ற கிராமங்கள் நீக்கப்பட்டிருந்தன.

சம்மாந்துறைப் பற்று 256.7 சதுர கிலோமீற்றர் பரப்புடைய பிரதேசமாக குறுகி 83 கிராம சேவகர் பிரிவுகளுடன் காணப்பட்டாலும் இலங்கையில் நன்னப்புறா பிரதேச செயலகத்துக்கு அடுத்ததாக 2ம் இடத்தில் பெரும் பிரிவாக செயற்பட்டுள்ளமை ஒரு விசேடமாகும்.

1944ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டு வரை பிரிவு வருமான அதிகார முறையின் கீழ் சம்மாந்துறைப் பற்றில் பின்வரும் நிர்வாக அதிகாரிகள் கடமையாற்றியுள்ளனர்.

1. இஸ்ஸதீன் முஹையதீன் DRO – 1944 தொடக்கம்
2. MAM. யூசுப் DRO, திஹாரியை சேர்ந்தவர்
3. N.பூரணலிங்கம் DRO,யாழ்ப்பாணம்
4. S.சிதம்பரப் பிள்ளை – DRO,யாழ்ப்பாணம்
5. K.நல்லநாதன் – DRO,யாழ்ப்பாணம்
6. S.சிவானந்தன் – DRO,யாழ்ப்பாணம்
7. MM.மக்பூல் – DRO,யாழ்ப்பாணம்
8. BAP. தம்பினாயகம் – DRO & AGA,யாழ்ப்பாணம்

1971ஆம் ஆண்டின் பின் பிரிவு வருமான அதிகாரி காரியாலயம் 1972 இருந்து 1991வரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு உதவி அரசாங்க அதிபர்கள் நிர்வாக கடமைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் BAP.தம்பிநாயகம் அவர்கள் சம்மாந்துறையின் பிரிவு வருமான அதிகாரியாகவும், முதலாவது உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து பின் வருவோர் உதவி அரசாங்க அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.

1. சந்திரபால – AGA
2. K. துரைராஜா – AGA (1978)
3. K. ரங்கராஜா – AGA
4. A. விக்னராஜா– AGA
5. KMA. காதர் – AGA
6. MIM. சரீப் – AGA

இலங்கையின் அரச இயந்திரத்தின் முக்கிய 3 அடிப்படைகளான சட்டவாக்கம், நிருவாகம், நீதித்துறை என்பன கிராமமட்டம் வரை பரவலாக்கம் செய்யப்பட்டு, நாட்டின் ஒட்டு மொத்த அபிவிருத்திக்கும் பொதுமக்களின் இலகு செயற்பாட்டுக்கும் வழி அமைக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

இந்த வேளையில் நிருவாகத்துறையானது அதிகாரம் கொண்ட மேன்மை தங்கிய ஜனாதிபதியை தலைவராகக் கொண்டு, அமைச்சரவை, அமைச்சர்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்கள் வரை நிர்வாகம் பரவலாக்கப்பட்டுள்ளது.

1992ம் ஆண்டின் 58ம் இலக்க சட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்ட போது அதன் அடிப்படை அர்த்தம் கிராமங்களை அடிப்படைகளாகக் கொண்டு மக்கள் காலடிக்கு அரச நிர்வாகம் கொண்டு செல்லப்பட வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டதாகும்.

இலங்கயின் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அதிகளவான இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு அதிக தேவை இருந்ததன் காரணமாக அப்போதைய ஜனாதிபதி மேன்மைதங்கிய R.பிரேமதாச அவர்கள் அதிகளவான தமிழ் பேசும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை தெரிவு செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தார். இதன் விளைவாக அதிகமான தமிழ் மற்றும் முஸ்லிம்கள் இலங்கை நிர்வாக சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்பட்டார்கள். இத்தகைய இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு பயிற்சியின் பின் மேலதிக அரசாங்க அதிபர்கள் நியமனம் வழங்கப்பட்டு, உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு சேவைக்காக அமர்த்தப்பட்டார்கள். இதனால் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மேலதிக அரசாங்க அதிபர் காரியாலயங்களாக செயற்பட்டன.

சம்மாந்துறையில் 1991 ஏப்ரல் வரை ஜனாப் MIM.சரீப் அவர்கள் பதில் உதவி அரசாங்க அதிபராக இருந்த போது 1991 மே மாதம் எமது ஊரைச் சேர்ந்த ஜனாப் A.மன்சூர் அவர்கள் மேலதிக அரசாங்க அதிபராகவும் ஜனாபா திருமதி றிபா ஜலீல் அவர்கள் உதவி அரசாங்க அதிபராகவும் நியமனம் செய்யப்பட்டார்கள்.

1992 ஆம் ஆண்டு MIM.அமீர் அவர்கள் மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். 1993 இல் மீண்டும் A.மன்சூர் மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். இவ்வாறு 1991 மே மாதம் தொடக்கம் 1993 ஜூலை 17ம் திகதி வரை சம்மாந்துறை மேலதிக அரசாங்க அதிபர் செயலகமாக இயங்கியுள்ளது.

அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் முதலாவது உத்தியோகபூர்வ பிரதேச செயலகமாக சம்மாந்துறை பிரதேச செயலகம் 1993.07.17ம் திகதி திறந்துவைக்கப்பட்டது. அன்றைய வைபவத்தில் சம்மாந்துறையின் முதலாவது பிரதேச செயலாளர் A.மன்சூர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி அப்போதிருந்த இலங்கை ஜனநாயகக் குடியரசின் கௌரவ அமைச்சர்களான MA.அப்துல் மஜீட், AR.மன்சூர், P.தயாரெட்ண, மற்றும் வட கிழக்கு மாகாண ஆளுனர் கௌரவ நளீன் செனவிரட்ண போன்றோர் கலந்து கொண்டதுடன் கௌரவ MA.அப்துல் மஜீட் அவர்கள் தலைமை வகித்து, திறந்து வைத்ததமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1993இல் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் 83 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இக் காலப்பகுதியில் உப பிரதேச செயலகங்கள் இறக்காமத்திலும் சொறிக்கல்முனையிலும் இயங்கி வந்தன.

இறக்காமம் உப பிரதேச செயலகம் ஜனாபா றிபா ஜலீல் அவர்களாலும் சொறிக்கல்முனை உப பிரதேச செயலகம் திரு.N.சிவலிங்கம் அவர்களாலும் நிருவகிக்கப்பட்டு வந்தது. A.மன்சூர் அவர்கள் பிரதேச செயலாளராக சம்மாந்துறைக்கும் மற்றும் அதன் கீழ் இயங்கி வந்த இதர உப பிரதேச செயலகங்களான இறக்காமம், சொறிக்கல்முனை போன்றவற்றிற்கும் பொதுவாக சேவையாற்றி வந்தார்.

1993இல் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் எல்லைகளாக

தமண

அக்கரைப்பற்று

அட்டாளைச்சேனை
நிந்தவூர்
காரைதீவு
கல்முனை
அம்பாரை
உகனை

ஆகிய பிரதேச செயலகங்களின் ஆள்புல எல்லைகள் அமைந்திருந்ததுடன்,வடக்கே மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் எல்லையும் அமைந்திருந்தது ஈங்கு குறிப்பிடத்தக்கது.

1994ம் ஆண்டு அக்டோபர் மாதம் சம்மாந்துறை பிரதேச செயலாளராக அஸ்-ஸேக் அமீர் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்

1999ம் ஆண்டு சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவிலிருந்து 06 கிராமங்களையும், 12 கிராம சேவக பிரிவுகளையும் கொண்ட இறக்காம உப பிரதேச செயலகம் தனிப் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. இப்பிரதேச செயலகத்தின் முதலாவது பிரதேச செயலாளராக ஜனாப் ஐ.எம். அனீபா நியமிக்கப்பட்டிருந்தார் அதன் காரணமாக சம்மாந்துறை பிரதேச செயலகம் 71 கிராம சேவக பிரிவுகளைக் கொண்டதாக குறுகியதுடன் 248.37 சதுர கி.மீட்டர் பரப்பினையும் கொண்டதாகக் காணப்பட்டது. இதனால் இதன் தென் மேற்கு எல்லையாக இறக்காம பிரதேச செயலகம் காணப்பட்டது
2001ம் ஆண்டு சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 14 கிராமங்களையுள்ளிட்ட 20கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி செயற்பட்டு வந்த நாவிதன்வெளி உப பிரதேச செயலகம் தனிப்பிரதேச செயலகமாக தனியாக தரமுயர்த்தப்பட்டு திரு கே. கோபாலரெட்ணம் எனும் பிரதேச செயலாளரின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

சம்மாந்துறை பிரதேச செயலகம் 21 கிராமங்களை உள்ளடக்கி 51 கிராம சேவகர் பிரிவுகளையும் 132.79 சதுர கிலோ மீற்றர் பரப்பினையும் கொண்டதாக இயங்கி வருவதுடன் வடக்கே முன்னர் மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் எல்லையாகக் காணப்பட்ட சம்மாந்துறைப் பிரதேச செயலகம் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தின் தென் அந்தத்தில் தன்னைக் குறுக்கிக் கொண்டது.

1996 ஆம் ஆண்டு சம்மாந்துறை பிரதேச செயலாளராகவிருந்த அஸ்-ஸேஹ் MI.அமீர் அவர்கள் முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதனால் ஜனாப் MM.நஸீர் அவர்கள் சம்மாந்துறையின் பிரதேச செயலாளராக நியமிக்கபப்பட்டார்கள். அவரைத் தொடர்ந்து ஜனாப் ALM.தாஸீம் அவர்கள் கடமையாற்றினார். 2007.07.01ஆம் திகதி தாஸீம் அவர்கள் ஓய்வு பெற்றதன் பின் ஜனாப் A.மன்சூர் அவர்கள் மீண்டும் பிரதேச செலாளராக கடமை புரிந்து வருகின்றார்.

2001ஆம் ஆண்டு நாவிதன்வெளி பிரதேசம் தனியாக தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தின் எல்லைகள் பின்வருமாறு மாற்றமடைந்தது.

- வடக்கே - நாவிதன் வெளி பிரதேச செயலகப்பிரிவு
- கிழக்கே – சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுகள்
- மேற்கே – அம்பாறை, உகணைப் பிரதேச செயலகப் பிரிகள்
- தெற்கே - இறக்காம பிரதேச செயலகப் பிரிவு

போன்றன காணப்பட்டன. தற்போதய சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவு இலங்கைத் தேசப்படத்தின் வட அகலாங்கு 7’ 20" லும் கிழக்கு நெட்டாங்கு 81’ 45" லும் அமைந்துள்ளது. இப் பிரதேசத்தின் சராசரி வருடாந்த வெப்பநிலை 27செல்சியஸ் தொடக்கம் 30செல்சியஸ் வரையாகும். வருடாந்த மழை வீழ்ச்சியானது 1500MM தொடக்கம் 2225MM வரையாகும்.

இலங்கையில் கிழக்கில் காணப்படும் இந்து சமுத்திர கடற்கரையில் காரைதீவு கிராமத்திற்கு நேராக மேற்கே 4.8 கிலோமீற்றர் தூரத்திலும் மட்டகளப்புக்குத் தெற்காக 48 கிலோமீற்றர் தூரத்திலும் சம்மாந்துறை அமைந்து காணப்படுகின்றது. மேலும் கடல் மட்டத்திலிருந்து இப்பிரதேசத்தின் தாழ்நிலப்பகுதி 09 மீற்றர் உயரமுடைய போதிலும், உள்நோக்கிச் செல்லச் செல்ல உயரம் படிப்படியாக 27 மீற்றர் வரை கூடிச் செல்கின்றது. அத்துடன் தட்டையான பரந்த

சமவெளியினையும், வண்டல் மணல் கலந்த தரையினையும் கொண்டதும், 50 மீற்றர் உயரமுடைய சிறு குன்றுகளும் இடையிடையே கொண்டதுமான ஒரு பிரதேசமாகும்.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கிராம அலுவலர் பிரிவு விபரம்

தொ. இல	கிராம சேவகர் பிரிவு	இல:	தொ இல	:கிராம சேவகர் பிரிவு	இல:
01.	சம்மாந்துறை - 01	78C	27.	புளேக் "ஜே" கிழக்கு - 02	79K
02.	சம்மாந்துறை - 02	78	28.	புளேக் "ஜே" கிழக்கு - 03	79L
03.	சம்மாந்துறை - 03	78D	29.	புளேக் "ஜே" மேற்கு - 01	79A
04.	சம்மாந்துறை - 04	78A	30.	புளேக் "ஜே" மேற்கு - 02	79R
05.	சம்மாந்துறை - 05	78B	31.	கல்லரிச்சல் - 01	79D
06.	சம்மாந்துறை - 06	80	32.	கல்லரிச்சல் - 02	79M
07.	சம்மாந்துறை - 07	80A	33.	கல்லரிச்சல் - 03	79N
08.	சம்மாந்துறை - 08	81	34.	விளினையடி - 01	79C
09.	சம்மாந்துறை - 09	81A	35.	விளினையடி - 02	79 I
10.	சம்மாந்துறை - 10	92B	36.	விளினையடி - 03	79J
11.	சம்மாந்துறை - 11	92C	37.	உடங்கா - 01	79B
12.	சம்மாந்துறை - 12	92D	38.	உடங்கா - 02	79G
13.	தமிழ் பிரிவு - 01	77	39.	மலையடி கிராமம் - 01	79F
14.	தமிழ் பிரிவு - 02	77C	40.	மலையடி கிராமம் - 02	79O
15.	தமிழ் பிரிவு - 03	77D	41.	மலையடி கிராமம் - 03	79B
16.	தமிழ் பிரிவு - 04	77E	42.	மலையடி கிராமம் - 04	79Q
17.	மட்டக்களப்புத்தரவை - 01	77A	43.	சென்னல் கிராமம் - 01	79E
18.	மட்டக்களப்புத்தரவை - 02	77B	44.	சென்னல் கிராமம் - 02	79H
19.	கருவாட்டுக்கல் - 01	92A	45.	மல்வத்தை - 01	89
20.	கருவாட்டுக்கல் - 02	92G	46.	மல்வத்தை - 02	89D
21.	கருவாட்டுக்கல் - 03	92H	47	மல்வத்தை - 03	89E
22.	வீரமுனை - 01	92	48	மல்வத்தை - 04	89A
23.	வீரமுனை - 02	92E	49.	வளத்தாப்பிட்டி - 01	89B
24.	வீரமுனை - 03	92 I	50.	வளத்தாப்பிட்டி - 02	89C
25.	வீரமுனை - 04	92F	51.	மல்கம்பிட்டி	82
26.	புளேக் "ஜே" கிழக்கு - 01	79			

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவின் பரப்பளவும் சனத்தொகையும் கிராமசேவையாளர் பிரிவு அடிப்படையில்

இல	கி.சே.பிரிவு	காணிப்பரப்பு	சனத்தொகை
1.	சம்மாந்துறை – 01	0.171	959
2.	சம்மாந்துறை – 02	0.127	1537
3.	சம்மாந்துறை – 03	0.171	1504
4.	சம்மாந்துறை – 04	0.64	956
5.	சம்மாந்துறை – 05	0.127	844
6.	சம்மாந்துறை – 06	0.64	942
7.	சம்மாந்துறை – 07	0.127	1524
8.	சம்மாந்துறை – 08	0.64	1342
9.	சம்மாந்துறை – 09	0.127	1390
10.	சம்மாந்துறை – 10	0.64	896
11.	சம்மாந்துறை – 11	0.127	736
12.	சம்மாந்துறை – 12	0.127	949
13.	தமிழ் பிரிவு – 01	3.84	858
14.	தமிழ் பிரிவு – 02	0.171	784

15.	தமிழ் பிரிவு – 03	0.171	1307
16.	தமிழ் பிரிவு – 04	0.853	375
17.	மட்டக்களப்புத்தரவை- 01	0.706	1192
18.	மட்டக்களப்புத்தரவை- 02	0.726	1240
19.	கருவாட்டுக்கல் - 01	0.140	1535
20.	கருவாட்டுக்கல் - 02	0.127	1185
21.	கருவாட்டுக்கல் - 03	0.127	1676
22.	வீரமுனை - 01	0.640	696
23.	வீரமுனை - 02	0.640	655
24.	வீரமுனை - 03	0.127	739
25.	வீரமுனை - 04	0.400	810
26.	புளேக் "ஜே" கிழக்கு - 01	0.728	1513
27.	புளேக் "ஜே" கிழக்கு - 02	0.728	1300
28.	புளேக் "ஜே" கிழக்கு - 03	0.728	1819
29.	புளேக் "ஜே" மேற்கு - 01	0.320	1043
30.	புளேக் "ஜே" மேற்கு - 02	1.90	1263
31.	கல்லரிச்சல் - 01	0.728	824
32.	கல்லரிச்சல் - 02	0.740	2351
33.	கல்லரிச்சல் - 03	0.740	1314
34.	விளினையடி - 01	0.329	2298
35.	விளினையடி - 02	0.320	1039
36.	விளினையடி - 03	0.320	1236
37.	உடங்கா - 01	0.640	1973
38.	உடங்கா - 02	0.640	1557
39.	மலையடி கிராமம் - 01	0.320	1640
40.	மலையடி கிராமம் - 02	0.320	2996
41.	மலையடி கிராமம் - 03	0.320	1535
42.	மலையடி கிராமம் - 04	0.320	1117
43.	சென்னல் கிராமம் - 01	0.930	1641
44.	சென்னல் கிராமம் - 02	1.930	2081
45.	மல்வத்தை - 01	3.20	1150
46.	மல்வத்தை - 02	1.920	1145
47.	மல்வத்தை - 03	9.60	1056
48.	மல்வத்தை - 04	4.84	630
49.	வளத்தாப்பிட்டி - 01	13.52	2784
50.	வளத்தாப்பிட்டி - 02	41.171	300
51.	மல்கம்பிட்டி	32.440	460

சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவுள்ள கிராமங்களின் விபரம்.

01. 01. புளக் "ஜே" கிழக்கு
02. புளக் "ஜே" மேற்கு
03. ஹிஜ்ராபுரம்
04. இஸ்மாயில்புரம்
05. கல்லரிச்சல்
06. கருவாட்டுக்கல்
07. கணபதிபுரம்
08. மலையடிக்கிராமம்
09. மல்கம்பிட்டி
10. மல்வத்தை
11. மல்லிகைத்தீவு
12. மஜிட்புரம்
13. நெய்னாகாடு

14. பளவெளிக்கிராமம்
15. சம்மாந்துறை
16. தம்பிநாயகபுரம்
17. உடங்கா
18. வீரமுனை
19. விளினியடி
20. வள்ளுவர்புரம்
21. வளத்தாப்பிட்டி

கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் சனத் தொகை, குடும்பம் ஆண் பெண் அளவு விபரம்.

தொ. இல.	கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்	மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை	சனத் தொகை		
			ஆண்	பெண்	மொத்தம்
01	சம்மாந்துறை – 01	262	499	460	959
02	சம்மாந்துறை – 02	365	770	767	1537
03	சம்மாந்துறை – 03	326	735	769	1504
04	சம்மாந்துறை – 04	214	441	515	956
05	சம்மாந்துறை – 05	238	421	423	844
06	சம்மாந்துறை – 06	198	412	530	942
07	சம்மாந்துறை – 07	298	752	772	1524
08	சம்மாந்துறை – 08	332	653	689	1342
09	சம்மாந்துறை – 09	376	670	720	1390
10	சம்மாந்துறை – 10	238	468	428	896
11	சம்மாந்துறை – 11	136	352	384	736
12	சம்மாந்துறை – 12	217	492	457	949
13	தமிழ் பிரிவு – 01	225	425	433	858
14	தமிழ் பிரிவு – 02	216	396	388	784
15	தமிழ் பிரிவு – 03	340	646	661	1307
16	தமிழ் பிரிவு – 04	109	192	183	375
17	மட்டக்களப்புத்தரவை - 01	311	613	579	1192
18	மட்டக்களப்புத்தரவை - 02	312	624	616	1240
19	கருவாட்டுக்கல் - 01	320	727	808	1535
20	கருவாட்டுக்கல் - 02	329	587	598	1185
21	கருவாட்டுக்கல் - 03	375	830	846	1676
22	வீரமுனை - 01	195	343	353	696
23	வீரமுனை - 02	182	342	313	655
24	வீரமுனை - 03	188	367	372	739
25	வீரமுனை - 04	162	410	400	810
26	புளேக் "ஜே" கிழக்கு - 01	395	759	754	1513
27	புளேக் "ஜே" கிழக்கு - 02	330	617	683	1300
28	புளேக் "ஜே" கிழக்கு - 03	397	876	943	1819
29	புளேக் "ஜே" மேற்கு - 01	252	515	528	1043
30	புளேக் "ஜே" மேற்கு - 02	325	639	624	1263
31	கல்லரிச்சல் - 01	218	418	406	824
32	கல்லரிச்சல் - 02	535	1075	1276	2351
33	கல்லரிச்சல் - 03	311	617	697	1314
34	விளினையடி - 01	503	1138	1160	2298
35	விளினையடி - 02	282	510	529	1039
36	விளினையடி - 03	316	611	625	1236
37	உடங்கா - 01	470	984	989	1973
38	உடங்கா - 02	363	786	771	1557

39	மலையடி கிராமம் - 01	441	760	880	1640
40	மலையடி கிராமம் - 02	562	1420	1576	2996
41	மலையடி கிராமம் - 03	398	743	792	1535
42	மலையடி கிராமம் - 04	265	548	569	1117
43	சென்னல் கிராமம் - 01	429	828	813	1641
44	சென்னல் கிராமம் - 02	514	952	1129	2081
45	மல்வத்தை - 01	255	571	579	1150
46	மல்வத்தை - 02	289	627	518	1145
47	மல்வத்தை - 03	289	519	537	1056
48	மல்வத்தை - 04	176	314	316	630
49	வளத்தாப்பிட்டி - 01	785	1371	1413	2784
50	வளத்தாப்பிட்டி - 02	78	158	142	300
51	மல்கம்பிட்டி	126	235	225	460
	மொத்தம்	**15,768**	**31,758**	**32,938**	**64,696**

சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தின் எல்லை வரைபடம்



சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

முகாமைத்துவம் இறுதி இலக்கை திட்டமிட்ட அடிப்படையில் எய்துவதற்கும், பல்வேறு மாற்று வழிகளுள் சிறந்த வழியை இனங்கண்டு செய்வதற்கும் இன்றியமையாததவையாகும். இதில் நிதி, உற்பத்தி, சந்தைப்படுத்தல், ஆளணி என பல்வேறு முகாமைத்துவ பிரிவுகள் உள்ளபோதும் ஆளணிமுகாமைத்துவம் பிரதேச செயலக நிர்வாகத்திற்கு மிக அவசியமாகின்றது. சம்மாந்துறை பிரதேச செயலகம் 1993.07.17ம் திகதி உத்தியோகபூர்வமாக குறிக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு இங்கு காட்டப்பட்டள்ளது. தற்காலம் ஆளணி முகாமைத்துவம் முன்னேற்றமடைந்த

நவீன யுகத்துக்கு ஈடு கொடுக்கக்கூடிய தேவைக்கேற்றவாறு வளர்ச்சியடைந்துள்ள நிலையில் தற்போதைய நிர்வாகக் கட்டமைப்பு நோக்கப்பட வேண்டும்.

1944ம் ஆண்டு வருமான அதிகாரி முறை {(DRO) முறை} சம்மாந்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது 09(ஒன்பது) கிராம உத்தியோகத்தர்கள் (கிராம சேவைகள்) பிரிவு மட்டுமே இருந்தன.

சம்மாந்துறை 1944இல் பிரிவுக்காரியதிகாரி(DRO) அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டபோது, அப்போது 09 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சம்மாந்துறை சவளக்கடை, சொறிக்கல்முனை, வளத்தாப்பிட்டி, இறக்காமம், ஆகிய 5 கிராமங்கள் இருந்தன அதனை 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாக பரிபாலிக்கப்பட்டுள்ளன.

இங்கு முஸ்லீம், சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்கள் வாழ்கின்றனர். இஸ்லாம், பௌத்தம், இந்து, கிறிஸ்தவ சமயங்களும், சமய வழிபாட்டுத் தலங்களும் தமிழ், சிங்கள மொழிகளும் பேச்சு வழக்கில் உள்ளதுடன் இம்மக்கள் சகோதர வாஞ்சையுடனும் பரஸ்பர நல்லுறவுகளுடனும் வாழ்வதற்கான அத்திவாரம் இச் செயலகப்பிரிவில் இடப்பட்டுள்ளது. இந்நிலைமை இன்றுவரை தொடர்வது ஒரு விசேட அம்சமாகும்.

சம்மாந்துறை உதவி அரசாங்க காரியாலயம் நிரந்தர கட்டிடமின்றி தற்காலிகக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இதற்கான நிரந்தரக் கட்டிடமொன்று சம்மாந்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், நெசவுக் கெத்தொழில் அமைச்சருமான கௌரவ MA. அப்துல் மஜீட் (BA) அவர்களின் நிதி ஒதுக்கீட்டினால் தற்போதைய இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு 17.07.1993இல் திறந்து வைக்கப்பட்டதுடன், உதவி அரசாங்க காரியாலயம் பிரதேச செயலகமாகவும் தரமுயர்த்தப்பட்டது.

மேலும், இக் கட்டிடததிற்கு தெற்குப் புறமாக மாடிக் கட்டிடமொன்று திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மரஹூம் M.I. அன்வர் இஸ்மயில் (சட்டத்தரணி) அவர்களினால் அப்போதைய கௌரவ உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை அமைச்சர் அலிக் அலுவிகார அவர்களினால 2003.08.05ம் திகதி புதிய நிர்வாகக் கட்டிடமானது வைபவ ரீதியாக திறந்தும் வைக்கப்பட்டது. அதுவே இப்போது இயங்கும் பிரதேச செயலக கட்டிடமாகும்.

அரசின் தீர்மானத்திற்கு அமைய 1988/1989 ஆண்டுகளில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டன. அதன் படி சம்மாந்துறை பிரதேச செலகப்பிரிவு 83 கிராம சேவக பிரிவாக மாற்மடைந்தன. அதாவது சமூக சேவை உத்தியோகத்தர்கள்(SSO), விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள்(KVS), பயிர்செய்கை உத்தியோகத்தர்கள்(CO) கிராம உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கப்பட்டனர். சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவிலிருந்து நாவிதன்வெளி, இறக்காமம், புதிய பிரதேச செயலகங்கள் உருவாகியதனால், 83 கிராம சேவகர் பிரிவாக இருந்த தொகை 51 கிராம சேவகர் பிரிவாக குறைவடைந்து விட்டது. அதன் விபரம் வருமாறு.

சம்மாந்துறை மு.பி	-	12
சம்மாந்துறை த.பி	-	04
மட்டக்களப்புத்தரவை	-	02
கருவாட்டுக்கல்	-	03
வீரமுனை	-	04
புளேக்"ஜே"	-	05
கல்லரிச்சல்	-	03
விளினையடி	–	03
உடங்கா	–	02
மலையடி கிராமம்	-	04
சென்னல் கிராமம்	-	02
மல்வத்தை	–	04

வளத்தாப்பிட்டி –		02
மல்கம்பிட்டி	–	01
		51

சம்மாந்துறை பிரதேச செயலகம் :- நிருவாகம், காணி, சமூக சேவை, சமூகப் பராமரிப்பு மையம், திட்டமிடல், மேலதிக மாவட்டபதிவாளர், கணக்கு, சமுர்த்தி, எனும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இக்கூறுகள் மக்களுக்காக, மக்கள் சேவைக்காக பொது நிர்வாக அமைச்சின் பிரஜய பட்டயத்துக்கு விசுவாசத்தை வெளிப்படுத்தி "நாளை" என்பதை விட "இன்று" என்னும் மெய்க்கருத்தை மக்களின் செவிகளுக்கு எட்டவைத்து உரிய சேவைகளை மக்களுக்கு அளிக்கும் நிறுவணமாக, சேவை நிலையமாக சம்மாந்துறை பிரதேச செயலகம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

சம்மாந்துறைப் பிரதேச செயலக நிர்வாகத்திற்கு பிரதேச செயலாளர் தலைமை உத்தியோகத்தராகவும் உதவி பிரதேச செயலாளர் உதவி தலைமை உத்தியோகத்தராகவும் இருந்து கொண்டு பிரதான நிர்வாகப் பகுதியையும் அதனோடு இணைத்தவாறு கணக்காளர் பிரிவு, சமூக பராமரிப்பு மையம், காணிபிரிவு, பதிவாளர் பிரிவு, திட்டமிடல் பிரிவு, சமுர்த்திப் பிரிவு, என பல பிரிவுகளையும் அப்பிரிவுகளுக்கு பகுதி தலமை உத்தியோகத்தர்களையும், அவர்களின் உதவி உத்தியோகத்தர்களாக முகாமைத்துவ உதவியாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் போன்றோர்களைக் கொண்டதாக எமது நிர்வாகக் கட்டமைப்பு காணப்படுகின்றது.இப்பிரிவுகளில் பின்வரும் சேவைகள் பொதுமக்களுக்கு ஆற்றப்படுகின்றன.

நிருவாகப் பிரிவு – செயலகத்தின் அனைத்துப் பிரிவு பதவி நிலை உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள், கிராம சேவகர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், அலுவலகப் பணியாளர்கள், சாரதிகள் ஆகியோரின் சுயவிபரக் கோவையை கையாள்தல், அவர்களது தின வரவுகள், விடுமுறைகள் என்பவற்றை பதிதலும், கொடுப்பனவுகள் ஏதும் வழங்க வேண்டியிருப்பின் தயார்படுத்தலும் விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுத்தலும் உத்தியோகபூர்வ / தனிப்பட்ட பிரயானங்களுக்கான புகையிரத ஆணைச்சீட்டுகளை வழங்குதல், ஓய்வு பெறுதல், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள், என்பன சம்பந்தமான வேலைகளைக் கவனித்தல், தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு சம்பந்தமான விண்ணப்பங்களை விநியோகித்தலும், அதனை பெற்றுக்கொடுக்க ஆவணை செய்தலும், நாளாந்த தபால்களை பெறுதலும், உரிய பகுதிகளுக்கு விநியோகித்தலும், கிடைக்கும் பதிலை உடன் அனுப்ப நடவடிக்கை எடுத்தலும், செயலக வாகனங்கள் மேற்பார்வை செய்தலும், ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கும் தேவையான பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுத்தலும், தேசிய விழாக்களை நடாத்துதல் தேர்தல் காலங்களில் தேவையான தேர்தல் நடவடிக்கைகளை கையாழ்தல், சமய கலாச்சார சம்பந்தமான வேலைகளிலும் சுதேச வைத்தியம், ஆயுள் வேதம் போன்றவை சம்பந்தமான கடமைகளை மேற்கொள்ளுதல், பொது மக்களின் தேவையை கருத்திற் கொண்டு அவர்களுக்கு இலகுவாக சேவையைப்பெற வழிகாட்டல்களை வழங்குதல் இது போன்ற இன்னும்பல சேவைகளை அள்ளி வழங்குகின்றது.

காணிப்பிரிவு

- சம்மாந்துறை பிரதேசசெயலக எல்லைக்குட்பட்ட அரசகாணிகளை நிர்வகித்தல், பராமரித்தல், மற்றும் பாதுகாத்தல் தொடர்பான விடயங்களை காணிச்சட்டதிட்டங்களுக்கமைவாக மேற்கொள்ளல் காணிப்பிரிவின் பிரதான பணிகளும்
- இங்கு மாகாணங்களுக்கிடைப்பட்ட அரச காணிகளும் (மத்திய அரசு), கிழக்கு மாகாண நிருவாகத்திற்குட்பட்ட காணிகளும் உள்ளன.

காணிப்பிரிவில் மேற்கொள்ளப்படும் கடமைகள்

- அரசகாணிகளை பாதுகாத்தலும், அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளும்.
- காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக மேற்கொள்ளப்படும் கடமைகள்

- **உத்தரவுப்பத்திரம் தொடர்பானவை**

அரசகாணிகளை வரையறுத்தல், காணிக்கச்சேரிகளை நடாத்துதல், மீள் குடியேற்றம் செய்தல்,உத்தரவுப்பத்திரம் வழங்குதல், பின்னுரிமை நியமனம் செய்தல், முன்னுரிமை/ அடுத்துரிமை மாற்றம் செய்தல், உத்தரவுப்பத்திரத்தை இரத்துச் செய்தல் மற்றும் மீள் பாராதினம் செய்தல், இரத்த உறவு முறையினுள் உரிமை மாற்றம், உபபிரிவிடல் செய்தல், உத்தரவுப்பத்திர பிரதி வழங்குதல், வருடாந்த அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தலும் LDO உத்தரவுப்பத்திரங்களாக மாற்றி வழங்குதலும், தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட உத்தரவுப்பத்திரங்களை விடுவித்தலும் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

- **அளிப்புப்பத்திரம் தொடர்பானவை**

உப பிரிவிடல், மற்றும் அளிப்பு நடவடிக்கைகளுக்காக நில அளவை செய்தல், அளிப்பு வழங்குதல், அளிப்புகளுக்கான பின்னுரிமை நியமனம், அடுத்துரிமை நியமனம் போன்றன செய்தல், அளிப்பு உப பிரிவிடல், உரிமை மாற்றம் செய்தலுக்கான அனுமதி வழங்கல் , அளப்புக்களின் நிபந்தனைகளை இலகுவாக்குதல், பிழை திருத்தம் செய்தல், அரசுக்கு பாரமளித்தல் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- காணிப்பிணக்குகள், எல்லைப்பிரச்சனைகள் போன்றவற்றை விசாரணை செய்தலும் ஆலோசணை வழங்குதலும், தீர்வுகளை பெற்றுக்கொடுத்தலும்.

- அரசகாணி தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள், பொலிஸ் நடவடிக்கைகள், பிரதேச சபை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- அரச காணிச் சட்டத்திற்கமைவாக மேற்கொள்ளப்படும் கடமைகள்

அரச திணைக்களங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், அதிகார சபைகள், சமய நிறுவனங்கள், வர்த்தக நோக்கினாலான இடங்கள் (கடை நிலங்கள்) போன்றவற்றுக்கு காணிகளை வழங்குதலும், உரிய ஆவணங்களை பெற்றுக்கொடுத்தலும்

- பூரண உரிமையுள்ள அளிப்பு வழங்கல், நீண்ட கால, குறுகிய கால குத்தகைகளுக்கான அறவீடுகளும் அளிப்பு சேவைக் கட்டணங்ளும் அறவீடு செய்தல்
- **காணிச் சுவீகரிப்புச்சட்டம்.**

பொதுத்தேவைகளுக்காக தனியார் காணிகளை சுவீகரித்தலும் அதற்கான நட்டஈடு வழங்குதலும்.

- மண் ஏற்றுதல், கருங்கல் உடைத்தல், மரம் வெட்டுதல், அதனைக் கொண்டு செல்லுதல் தொடர்பான அனுமதி வழங்குதலும் அது தொடர்பான கடமைகளை மேற்கொள்ளலும்.

சமூகசேவைப் பிரிவு - மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மூலம் சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்துதல், பாதைகள் சிரமதானம் செய்தல், பாலர் பாடசாலைகள் ஆரம்பித்தல், தையல் பயிற்சி, நெசவுப் பயிற்சி என்பவற்றை வழங்கல். இளைஞர் விவகார அமைச்சின் தேசிய இளைஞர் சபையினால் நடாத்தப்படும் மாவட்ட மாகாண தேசிய மட்டங்களில் நடாத்தப்படும் சகல இளைஞர்

அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கும் எமது பிரதேச செயலகப்பிரிவுக்கட்பட்ட இளைஞர் யுவதிகளை பங்குபற்றச் செய்தல், இளைஞருக்கான கல்வி, அரசியல், உளவியல் சுகாதார மதுவிலக்கு விழிப்பூட்டல் கருத்தரங்குகளை நடாத்தல். வருடாந்த பிரதேச செயலக மட்ட விளையாட்டுப் போட்டியினை நடாத்தல், புனர்வாழ்வு கொடுப்பனவுடன் சம்பந்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறப்படுத்தல் பயங்கரவாத, தேர்தல் வன் செயல்களுடன் தொடர்புடைய பாதிப்புக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தல், பொது உதவி மாதாந்த கொடுப்பனவுக்கான வினியோகத்தை மேற்கொள்ளல்.

சமூகப்பராமரிப்பு மையம் - சமூகப் பராமரிப்பு மையம் சமூக சேவையின் ஒரு புதிய முன்னெடுப்பாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர மாவட்டங்களில் இருபத்தியேழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமூகப்பராமரிப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. எமது பிரதேச செயலகப் பிரிவில் சமூகப்பராமரிப்பு மையம் நிறுவப்பட்டது எமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். மேலும் அகில இலங்கைரீதியில் எட்டு மாவட்டங்களில் செய்து காட்டும் நிலையங்கள் (Demonstration Center) நிறுவப்பட்டுள்ளன. இதில் அம்பாரை மாவட்டத்தில் எமது சமூகப்பராமரிப்பு நிலையம் செய்து காட்டும் நிலையமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

பெண்கள்,சிறுவர்கள்,ஊனமுற்றோர்கள்,முதியோர்கள் தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன், பொதுசன மாதாந்த உதவி, நோய்க் கொடுப்பனவு, உளவளத்துணை ஆலோசனை, சுய தொழில் ஓய்வூதியத் திட்டம், அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள், போதைப் பொருள் ஒழித்தல், அனர்த்த முகாமைத்துவம், சிறைக் கைதிகளின் குடும்பங்களுக்கான நலனோம்பு சேவைகள் என்பன இங்கு வழங்கப்படுகின்றன.
இச் சேவைகளை வழங்குவதற்காக சமூகசேவை உத்தியோகத்தர், சிறுவர் உரிமை ஊக்குவிப்பு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவள ஆலோசனை உதவியாளர் , சமூக அபிவிருத்தி உதவியாளர், ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி உதவியாளர், முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உதவியாளர்கள், நிவாரண சகோதரி என்போர் குழுவாக இணைந்து இங்கு கடமைபுரிகின்றனர்.

சேவை நாடியின் பிரச்சினைகளுக்கு விடய மகாநாடு (Case Conference), விடய முகாமைத்துவம் (Case Management), குடும்ப மகாநாடு (Family Conference) போன்ற இந் நூற்றாண்டிற்கு பொருத்தமான நவீன அணுகு முறைகள் மூலம் ஒரே கூரையின் கீழ் தீர்வு வழங்கப்படுகின்றது.

திட்டமிடல் பிரிவு - பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட அபிவிருத்தி வேலைகளும், பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி வேலைகளும், கம நகும, மக நகும, அபிவிருத்தி வேலைகளும் மீள் எழுச்சி அபிவிருத்தி வேலைகளும் அவைகளுக்கான கொடுப்பனவுகளும். உலக உணவு வேலைத்திட்டம், பிரதேச மட்ட மூலவளத்திரட்டும், புள்ளி விபரவியல் கையேட்டுப் புத்தகமும் தயாரித்தல். மேலும் வீடமைப்புத் திட்டங்களை முன்கொண்டு செல்லல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் செயற்திட்டங்கள், சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகள், கிராமத்திற்கு தொழில்நுட்ப முன்னோடியான "விதாதா" வள நிலையமும் இப் பிரிவின் கீழ் செயற்படுகின்றன.

மேலதிக மாவட்ட பதிவாளர் பிரிவு - இப் பிரிவில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பத்தினை வழங்கலும், பின்னர் பரிசீலனை செய்து சான்றிதழ் வழங்கலும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிமுகாமைத்துவப் பிரிவு -

01. பொது நிருவாக அமைச்சு, திறைசேரி, திணைக்கள சுற்று நிருபங்களுக்கமைய நிதி முகாமைச் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் கட்டுப்படுத்தலும்.

02. ஊழியர்களுக்கு சம்பளம், கடன் வழங்கல் மற்றும் அரச சொத்தோடு தொடர்பான நடவடிக்கைகள்.
03. ஏனைய திணைக்களங்கள் சார்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
04. பொருள் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் இது தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்.
05. ஓய்வூதியக் கொடுப்பனவு, மற்றும் ஓய்வூதியக்காரர்களுக்கு புகையிரத ஆணைச்சீட்டு வழங்கல்.
06. வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்.
07. சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல்.
08. வாகனத்தின் உடமை மாற்றம் செய்தல் மற்றும் உரிமையாளரின் முகவரி மாற்றம், அடிச்சட்டம், நிறம் என்பவற்றில் செய்யப்படும் மாற்றங்களை பதிவு செய்தல்.
09. தனியார் மற்றும் கூட்டு வியாபாரத்தினைப் பதிவு செய்தல்.
10. வருமானச் சான்றிதழ் வழங்கல்.
11. பரீட்சைக் கட்டணங்கள், போக்குவரத்து தொடர்பான தண்டப்பணங்கள் என்பவற்றை ஏற்றுக் கொள்ளல்.
12. அரச வருமானங்களை ஏற்றல்.

சமுர்த்திப் பிரிவு - இனம் காணப்பட்ட சமுர்த்திக் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இனம் காணப்பட்ட சமுர்த்தி கிராமங்களின் ஜீவனோபாய வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல். இனம் காணப்பட்ட சமுர்த்திக் கிராமங்களின் திரிய பியச வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல். போதைப் பொருள் கலாச்சார செயற்பாடு, உளநலத்துறை செயற்பாடு, சிரமதானம், இலவச புலமைப்பரிசில்கள் மற்றம் சமூக செயற்பாடுகள் சமுர்த்தி சமூக பாதுகாப்பு, சமுர்தி சிப்தெர புலமைப்பரிசில்கள் திட்டம் என்பவற்றையும் அதிஸ்ட லாபச் சீட்டிழுப்பு வீடமைப்பு வேலைத்திட்டம் என்பவற்றையும் செயற்படுத்தல். மேலும் வங்கிச் செயற்பாடு, கட்டாய சேமிப்புச் செயற்பாடு, சமுர்த்தி முத்திரைச் செயயற்பாடு, பால் மா முத்திரை, மண்ணெண்ணெய் முத்திரை வினியோக செயற்பாடுகளையும் மேற்கெள்ளல்.

இப்பிரதேச செயலகம் பல வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்ப்ட போதிலும் கலாச்சார விழா ஒன்றையேனும் நடாத்தி அதன் வெளியீடாக மலரொன்றை இதுவரையும் வெளிக்கொணராது இருந்துள்ளது. அக் குறை இவ் வெளியீட்டுடன் நீங்குகின்றது - என்பது வெள்ளிடை மலை.

எனவே, இங்கு காட்டப்பட்டுள்ள சம்மாந்துறைப் பிரதேச செயலக நிர்வாகக் கட்டமைப்பையும், அதனை மையமாகக் கொண்டு என்னால் எடுத்துரைக்கப்பட்டுள்ள விளக்கங்களையும் உற்று நோக்குவோமாயின், இலங்கையின் பொது நிர்வாக முறையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள் பொது மக்களுக்கு சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பாரிய முன்னேற்றங்கள் நவீன தேசிய, சர்வதேச முகாமைத்துவ, மற்றும் ஆளணி முகாமைத்துவ வளர்ச்சிக்கேற்ப சம்மாந்துறை பிரதேச செயற்பாடுகள் மாற்றமடைந்து முன்னேற்றம் கண்டுள்ளதை அவதானிக்கலாம். அத்துடன் பொதுமக்கள் தமது பணியை சிறப்பாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய நிர்வாகக் கட்டமைப்பு முறைகள் இங்கு காணப்படுவதுடன் மேலும் இங்கு ஆற்றப்படும் சேவைகள் விரிவு படுத்தப்பட்டு முன்னேற்றமடைய உத்தியோகத்தர்களும் பயநுகரிகளான பொதுமக்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

A.மன்சூர்
பிரதேச செயலாளர்,
சம்மாந்துறை.

ORGANAIZATION CHART



FINANCE DIVISION	LAND DIVISION	REGISTRAR DIVISION	ADMINISTRATION DIVISION	SOCIAL SERVICES	SOCIAL CARE CENTER	SAMURDHI DIVISION	PLAINING DIVISION
PRETARATION OF BUBGET, ALLPAYMENTS, REVENUE COLLECTION, REVENUE LICENCEISSUSING, INCOME CERTIFICATE, PENSION PAYMENTS, FINANCIAL REPORTING, BUSINESS REGISTRATION, VECHILE TRANSFER, RENEWAL OF DRIVING LICENCER.	ISSUSING COPIES OF LAND PERMIT,CHANGE OF PERMIT ISSUSING PERMIT 20A, GRANT PRE[ARATION, TRANSFER AND ISSUSING, LANDINQUIRY, CANCELATION AND REGULARIZATION COLONIZATION, LANG, TIMPERPERMITS ,SAND PERMITS,EXPLOSIVE PERMITS	ISSUSING OF CERTIFICATES OF BIRTH AND DEATH AND MERRIAGE,REGISTRATION OF BIRTH, DEATH AND MARRIAGE LATE BIRTH REGISTRATION REGISTRATION OF LOST PERSIN.	NATIONAL IDENTITY CARDS, PASS PORT, OFFICERS TRAINNIG, OFFICE PRACEDURES AND OFFICE SYSTEM,OFFICE LAYOUT OFFICE ORGANAIZATION, DELEGATION OF DUTIES DISCPILINARY INQURIES VALUVATION CERTIFICTES, GUNLICENCE	CASUAL RELIEF REHABLITATION WORKS, RURAL DEVELOPMENT WORKS YOUTH SETVICE WORKS SPORTS WORKS CULTURAL WORKS PAMA PAYMENTS, PAYMENTS FOR THE DISEASESE, SOCIETY REGISTRATION, NGO, INGO COORDINATION	SERVICE FOR CHILDREN,ELDERS,WOMER. AND DISABLES, COUNSALING SERVICES, DISASTER MANAGEMENT,AWARNESS PROGRAMME, POR RELIEF WORKS, SOCIAL EMPOWERMENT WORKS	SELECTION OF SAMURDHI BENIFICIARIES,ISSUSING SAMURDHI FOODAND MILK STAMP,SAMURDHI CECUR ITY FUND SOCIAL ACTIVITIES SAMURDHI PROJECTSB,ANK ACTIVITIES, EMPOWERMENT PROGRAMME, SISUTHIRIYA PROGARAMMES	PREPARATION OF PROJECT AND IMPLIMENTING,DCB WORKS,FOREIGN FUNDED PROJECT,ILO,WFP PROGRMME GAMANEGUMA MAANEGUMA,VIDHADHA ACTIVITIES AWEAKENING PROJECT UNDP WORKS PR OVINCIAL DEVELPOMENT WORKS,SELF EMPLOYMENT, ENVIRONMENTA L SERVICES


Divisional Secretary
Asst. Divisional Secrtary
Samurdhi Head Quarter Manager
Samurdhi Bank and Zonal Manager
Managing Director
Project Manager
Mahasanga Assistant
Smurdhi Bank Assistant
Zonal Assistant
Book Keeper
Cashier
Lone Clerk
Recovery Clerk
Field staff
Project Assistant
Social Development
Compulsory Saving
Bank Clerk (2)
Samurdhi Stamp (M A)
Accounts Clerk
Admini stration
Social Secutity
Progressive
Divisional Field SDO's

நகரச் சின்னங்களின் செறிவு



ஹிஜ்றாச் சந்தி

எனது ஊர்

தன் பெரும் நிலத்தைக் கொத்தி
தாரணிக் கன்ன மீந்து
மண் பசிக் கொடுமை யோட்டி
மானிலம் தாங்கும் வண்ணம்
பொன் மணிக் குவியல் சேர்க்கும்
போடிமார் மலிந்த ஊரே

அல் பகல் அரிசி குற்றி
அலுத்திடும் அரிவை நெஞ்சம்
கொல் பகல் வயலிற் சென்ற
கொழுனனை நினைத்த போது
வல்லயக் கணியம் பார்த்து
வருபவர் அயர்வு நீக்கி
கொல்லையில் கொதி நீர் கூட்டும்
கோலம் என் ஊரில்தானே!

சிந்திடும் பாற்சீனட்டி
சீரகச் சம்பாச் சோறும்
பந்தியில் கறந்த மாட்டு
பால் தயிர் ஆடை வேதும்
அந்தியில் வடித்துத் தீய்த்த
அறுசுவைச் சிறுமீன் கூட்டும்
வந்தவர் வயிர் புடைக்க
வழங்குவ தெனது ஊரே

உள்ளத்தில் உயர்வு கொண்டு
உய்யவே வாழும் மக்கள்
அல்லலே இல்லை இங்கு
அவனியே போற்றும் எம்மூர்
நல்லவை நாளும் பெருகும்
நலமிக்க எமது ஊரில்
இல்லையே இல்லை என்னும்
இகத்தினில் ஈடில்லா ஊர்

கல்வியில் உயர்ந்து நிற்கும்
கலைகளும் ஓங்கி நிற்கும்
எல்லை இல்லா வளங்கள்
எம்மூர்க்கு அழகு சேர்க்கும்
பள்ளியாலயங்கள் கோயில்
பல்கியே பெருகி இங்கு
பக்தியில் மிக்ககோர் எங்கும்
பரவியே செறிந்து வாழும்
சங்கைமிக்கோரைக் கொண்ட
சம்மாந்துறை எனது ஊரே.

- சம்மாந்துறை பரீதா இஸ்மாயில் -

மனிதப் பிடிமானங்களின் தளர்வு.

மனிதமே
உன் நேற்றைய விதைப்புக்கள்
வெறுமையடைந்துவிட்டன.
சிதைந்துவிட்ட சமூகப்பள்ளத்தாக்கிலிருந்து
அமைதியும், அழகும் செத்து
மீளக்கட்டாமற்போகும் உயரமாய்
கொடூரங்களும் அழிவுகளும்
ஊடுருவித் தாவுகின்றன.

முற்றத்தின் ரோஜா வாசங்கள்
சுமந்துவரும் காற்றின் வேகமும்
ஒடிந்தே விட்டன.
மனித இதயங்கள்
கறை படிந்து
குகை மண்டலமாய் மாறி
நானா நீயா எனப் போட்டியிட்டு
சாகடிக்கின்றன

மனிதப் போர்வைகளை .....
வலிமையற்றிருக்கும் மனிதமே
மனிதத்துவத்தின் மிருதுவைப்பற்றி
நுழையத்தயங்கும் மனிதாபிமானம் பற்றி
உயிர்ப் பெறுமதிகளின் உணர்வுகள் பற்றி
பாசறைகள் சொல்லும் பாடங்கள்
மடிந்து மண்ணாய்ப் படிகின்றன.

இன்றிலிருந்து எழுமின்!
நேசங்களை, தோழமைகளை
இனங்காணுமின் !
பொறுமையும் - புரிந்து கொள்ளலும்
பிடிமானமாய் உனக்குள் .....

கவிஞினி சித்தி றபீக்கா

ஆத்மீக கலாசார வரலாற்றில் சம்மாந்துறையின் தனித்துவமான நிருவாக அமைப்பு

அம்பாரை மாவட்டத்தின் தென்கிழக்கு என அடையாளப் படுத்தப்பட்ட பிரதேசம், முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதியாகும். சம்மாந்துறை இப்பிரதேசத்தின் முக்கிய இடமாக கணிக்கப்படுகின்றது. புவியியல் ரீதியிலும் கேந்திர முக்கியத்துவமான இடத்திலும் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. கண்ணுக்கிட்டிய தூரம் வரை சுற்றிவர நெற்காணிகளால் பச்சைப்பசேலென காட்சியளிப்பதும் இவ்வூரின் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

கண்டிராச்சியத்தின் கிழக்கின் முக்கிய துறைமுகமாகவும் சம்மாந்துறை விளங்கிய வரலாற்றைக் காண்கின்றோம். சம்மாந்துறையிலிருந்து ஐந்து பாதைகள் மலைநாட்டை நோக்கிச் சென்றுள்ளதாக "மட்டக்களப்புத் தமிழகம்" எனும் நூல் குறிப்பிடுகின்றது. இஸ்லாத்துக்கு முந்திய காலங்களிலும் பாவா ஆதம் மலையைத் தரிசிப்பதற்கும், வெளிநாட்டார் சம்மாந்துறைத் துறைமுகத்தில் கப்பல்களைக் கட்டிவிட்டுச் சென்றுள்ள தகவலை "காத்தான்குடி வரலாறு" குறிப்பிடுவதையும் அறிகின்றோம்.

டிஒய்லி – Dioyly என்ற பிரித்தானியத் தூதுவர் "போர்த்துக்கீசரின் காலத்தில் சம்மாந்துறை கண்டி இராச்சியத்தின் பிரதான துறைமுகமாக அமைந்திருந்தது" என தனது தினக் குறிப்பில் பதிந்துள்ளார்.

1676இல் ஒல்லாந்து அதிபதியாகக் கடமைபுரிந்த ஜேக்கப் பெர்னாந்து "மட்டக்களப்பு என்ற சம்மாந்துறையையும் கண்டியையும் ஐந்து காட்டுப்பாதைகள் இணைத்தன" என்று கூறிய ஆதாரமும் கிடைக்கின்றன. ஒல்லாந்து தளபதியான ஸ்பில்பேர்க்கன் என்பவர் இந்தியாவில் "மட்டக்களப்பு ஆறு எங்கே உள்ளது" என விசாரித்தறிந்து சம்மாந்துறையை வந்தடைந்த குறிப்பேடுகளும் உண்டு. சம்மாந்துறை முஸ்லிம்களின் உதவியோடு கண்டி அரசன் விமலதர்மசூரியனை சந்திக்கச் சென்றுள்ளான்.

இவ்வாறு வரலாற்று ஆதாரங்கள் சம்மாந்துறைத் துறைமுகத்தையும், வர்த்தக நடவடிக்கைகளையும், கண்டி அரசனுக்குள்ள தொடர்புகளையும் விளக்குவதை அறியலாம். சம்மாந்துறை கடல் சார்ந்த துறைமுகமா? என்ற கேள்வி எழலாம். மட்டக்களப்பு வாவியூடாக அதன் தென்பகுதியின் கரைதான் சம்மாந்துறை. பரந்து விரிந்த இவ்வாவியின் தென்பகுதியைத்தான் மட்டக்களப்பு என பெயர்குறித்து வழங்கப்பட்டு வந்துள்ளது. "புளியந்தீவு" என்ற இடத்தில் 1628இல் போர்த்துக்கீசர் தமது பாதுகாப்புக்காக கோட்டையைக் கட்டிய பின்தான் புளியந்தீவு மட்டக்களப்பாக மாற்றமடைந்தது. இன்றும்கூட சம்மாந்துறையில் மட்டக்களப்புத் தரவை – 01,02 என இரண்டு கிராம அலுவலர் பிரிவுகள் இருப்பதை அறியலாம்.

இந்தியாவில் இருந்து முக்குகர் வருகை , சோழநாட்டு இளவரசி சீர்பாததேவியின் வருகை, சிந்துபாத்தின் வருகை, அராபியர் , பாரசீகர் வருகை என்பன மட்டக்களப்பு வாவியூடாக சம்மாந்துறை துறைமுகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. வங்காள விரிகுடாவிலிருந்து இலங்கையினுள் பிரவேசிக்கும் பிரயாணப் பாதையாகச் சம்மாந்துறை இருந்து வந்துள்ள வரலாற்று ஆதாரங்கள் இன்னும் பலபல எடுத்துக் காட்டலாம். விரிவஞ்சி விடுகின்றேன்.

சம்மான் - துறை என இரு பதங்களாக வகுக்கும்போது துறை என்பதற்கான காரண காரியங்களைக் கண்டோம். இந்திய முஸ்லிம் வர்த்தகர்களில் ஒரு பகுதியினர் 'சம்மான் காரர்' என அழைக்கப்பட்டனர். கொழும்பு 'சம்மான் கோட்டுப் பள்ளி' இந்திய முஸ்லிம்களின் அடையாளச் சின்னம். அத்துடன் சாமான்கள் வந்திறங்கிய ஏற்றுமதி செய்யப்பட்ட துறைமுகமாக இருந்தபடியாலும் சாமான்துறை, சம்மாந்துறையாக பெயர் பெற்றிருக்கலாம். 'சம்பன்' என்பது மலாய மொழியில் வர்த்தக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் வள்ளங்களைக் குறிக்கும் சொல்லாகும். இந்திய முஸ்லிம் வியாபாரிகளும், மலாயர்களும் வர்த்தக நோக்கில் வங்காள விரிகுடாவிலிருந்து

மட்டக்களப்பு வாவியூடாக, அதன் தென்பகுதித் துறையில் வந்திறங்கிய படியால் சம்மாந்துறை என பெயராயிற்று எனலாம்.

மிகப் பழைய காலந்தொட்டு சம்மாந்துறை நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கியமைக்கான ஆதாரங்கள் அனேகமுள்ளன. சிந்துபாத்தின் கூற்றில் வயலுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொண்டிருந்த ஒருவரைப் பார்த்ததாகவும், அவர் அரபியில் தன்னுடன் பேசியதையும் குறிப்பிட்டுள்ளார். எனவே 'சம்பா' என்ற அரிசியை ஏற்றுமதி செய்த துறையாகவும் விளங்கியதால் சம்மாந்துறையாகவும் பெயர்பெற்றிருக்கலாம். இங்குள்ள பழைய உறுதி ஆவணங்களில் 'சம்பாந்துறை' எனப் பொறிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சம்மாந்துறையின் முக்கியத்துவத்தினால் இங்கு அமையப்பெற்றிருந்த பாரிய சந்தை (ஆலையடி என்றழைக்கப்பட்ட பழைய மார்க்கட்) யின் அவசியத்தினால் வெளிநாட்டு வர்த்தகர்கள், இறைநல்லடியார்கள் வந்துகொண்டிருந்ததினால் அராபிய முஸ்லிம்களின் வருகையும் தவிர்க்க முடியவில்லை. அதனடிப்படையில் சிறுசிறு அளவில் முஸ்லிம்களின் குடியிருப்புக்களும் இங்கு அமையப்பெறலாயின. துறைமுகமும், சந்தை வசதிகளும் அமையப்பெற்றிருந்த வகையால், உள்ளூர் வாசிகளின் உதவிகளோடு 'தாவளம்' என்றழைக்கப்படும் மாடுகளின் மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்காக சம்மாந்துறையில் தாமதித்துச் செல்லவேண்டியிருந்ததால், வணக்கஸ்தலத்தின் அவசியம் உணரப்பட்டதால் முதன்முதலாக 12ம் நூற்றாண்டளவில் 'முகையதீன் பள்ளி' என்ற முதல் பள்ளிவாசல் சம்மாந்துறையில் அமையப்பெறலாயிற்று. முகையதீன் அப்துல் காதிர் ஜீலானி என்ற மார்க்கப் பெரியார் அக்காலத்தில் பிரபல்யமான மார்க்க அறிஞராக விளங்கியமையால், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் 'முகையதீன்' என்ற பெயரை இப்பள்ளிக்கு வைத்திருக்கலாம்.

இதைத் தொடர்ந்து 15ஆம் நூற்றாண்டளவில் சம்மாந்துறை துறைமுகத்தில் வந்திறங்கிய சரக்குக் கப்பலில் இருந்து இரண்டு இறைநல்லடியார்களும், அவர்களுடன் ஆறு வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஒன்றும் இன்றைய பெரியபள்ளியடியில் இருந்த மரத்தடியில் இளைப்பாறினர். இதன் அண்மையிலிருந்த சந்தையில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த மக்கள் இவ்நல்லடியார்களின் வருகையைக் கேள்விப்பட்டு அவர்களைத் தரிசிப்பதற்காக கூட்டம் கூட்டமாக ஒன்று கூடினர். அவர்களில் ஒருவர் மத்திய கிழக்கைச் சேர்ந்த சாயலையுடையவராகவும், மற்றவர் தென்னிந்திய சாயலையுடையவராகவும் காணப்பட்டனர். இவ்விருவரையும் அக்குழந்தையையும் அப்போதைய சின்னப்பள்ளியில் தங்குமாறு மக்கள் வேண்டியும் மறுத்த படியால், பெரிய பள்ளி வளவிலேயே அவர்களுக்கான இருப்பிடம் அமைத்துக் கொடுத்தனர். அன்றைய சம்மாந்துறை முஸ்லிம்கள் கோசப்பா, கோஸ்முகையதீன் அப்பா, உம்முகுல்தூம் என இவர்களை அழைத்தனர். இவர்களது மார்க்கப்பிரசங்கம், பேணுதலான நடவடிக்கைகள் ஆகியவற்றால் அப்பிரதேசத்தில் இஸ்லாத்தின் இருப்பும், வளர்ச்சியும் அதிகரிக்கலாயின. முஸ்லிம்கள் மாத்திரமன்றி தமிழ் மக்களும் இந்நல்லடியார்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்கி வரலாயினர். இவ்விறை நல்லடியார்களின் மறைவின் பின்னர் மக்கள் இவர்களை அவுலியாக்கள் என மதிப்பும் மரியாதையும் வழங்கி வந்ததுடன் அவ்விடத்தில் பள்ளிவாசல் ஒன்றையும் அமைத்தனர். இதனால் முதலாவது பள்ளிவாசல் "முகையதீன் (சின்னப்பள்ளி) பள்ளிவாசலுடன் இரண்டாவது பள்ளியாக அவுலியாவின் பெயரில் "கோசப்பா பள்ளி"யும் உதயமாயிற்று.

அவர்களுடன் வந்திருந்த பெண் குழந்தை உம்முகுல்தூம் அப்பகுதி முஸ்லிம் குடும்பம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டு வளர்ந்து வாழ்க்கைப்பட்டு குடும்பமாக சீவித்து வரலாயினார். உம்முகுல்தூம் என்ற இப்பெண்ணின் வம்சத்தவர்களே இன்று சம்மாந்துறையில் "கோசப்பா குடி"யினர் என்றழைக்கப்படும் வம்சத்தவர்.

1800ஆம் ஆண்டளவில் கோசப்பா பள்ளி என்ற சிறு குடிசை ஓரளவுக்கு கல்லாலும் , சிப்பி ஓட்டினாலும் விஸ்தரிக்கப்படுகின்றது. இதன் பிற்பாடு ஜும்ஆத் தினங்கள் முகையதீன் பள்ளியிலும், கோசப்பா பள்ளியிலுமாக மாறி மாறி நடைபெற்று வரலாயிற்று. இவ்விரு பள்ளிகள் தவிர சம்மாந்துறையின் சுற்றாடலில் இறை நல்லடியார்களின் தங்குமிடங்களாக இருந்த இடங்களும்

பள்ளிகளாக உருப்பெற்றென. கலந்தரப்பா பள்ளி மல்கம்பிட்டியிலும், குருந்தையடியப்பா குடாவட்டையிலும், காட்டவுலியா சேனைவட்டையிலும், வீரயடியப்பா கொண்டவட்டுவானிலும் கண்கத்தியப்பா சின்னப்பள்ளி ஒழுங்கையிலும் அமையப்பெறலாயின.

சம்மாந்துறையில் முஸ்லீம்களின் குடியிருப்புக்கள் வளர்ந்து வருவதின் அவசியத்தின் காரணமாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் தக்கியாப் பள்ளி தோற்றம்பெற்றது. அன்றைய காலக் கட்டத்தின் சிறிய பள்ளியாக இருந்த படியால் "தைக்கியா" எனப் பெயர் பெற்றது. மத்ரஸா நடத்தப்பட்டு வந்த இடத்திலும் பள்ளியொன்று தேவைப்பட்டதால் அவ்விடத்தில் "மத்ரஸாப் பள்ளி" தோற்றம்பெற்றது. 1947ஆம் ஆண்டளவில் இப் பள்ளி அமையப்பெற்றதெனலாம். ஊரில் புதிதாக தோன்றிய பள்ளியாகையால் காலகெதியில் மத்ரஸாப்பள்ளி என்ற பெயர் மாற்றமடைந்து "புதுப்பள்ளி" என வழங்கலாயிற்று. இன்று "மஸ்ஜிதுல் உம்மா" என பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. சம்மாந்துறையின் அன்றைய மரைக்கார் சபை உறுப்பினராக இருந்த "கண்ணாடி மரைக்கார்" எனும் பெரியார் இவ்வளவை அன்பளிப்புச் செய்திருந்தார் .

சம்மாந்துறையின் குடியிருப்புக்கள் தெற்கு நோக்கி "ஜே புளக்" குடியேற்ற பிரதேசங்களிலும், மேற்கு, கிழக்கு நோக்கியும் விரிவடையத்தொடங்கின. இதன் நிமித்தம் செட்டிட வட்டையில் மஸ்ஜிதுல் ஸலாம், சம்புமடுவில் மஸ்ஜிதுல் அழ்பர், கைகாட்டியடியில் மஸ்ஜிதுல் ஜாரியா, விளினையடியில் மஸ்ஜிதுல் ஜலாலியா, வீரமுனைப் பகுதியில் மஸ்ஜிதுல் கைர், மட்டக்களப்புத் தரவையில் மஸ்ஜிதுல் நகர் என பள்ளிகளின் தொகைகள் விரிவடைந்து செல்லலாயின. இவ்வாறு பள்ளிகளின் தொகை 1980களில் 25 பள்ளிகளாக இருந்த படியால் இவற்றின் நிருவாகத்தை ஒரேயமைப்பில் கொண்டுவரும் முயற்சியில் ஊர் பெரியார்களும், அன்றைய நம்பிக்கையாளர் சபையினரும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக "மஜ்லிஸ் அஷ்ஷூரா" அமைப்பு 1985ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பில் சகல பள்ளிவாசல்களின் பிரதிநிதிகளும், குடிமரைக்கார்மார்களும், சமய, சமூக, கலாசார, கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவ்வமைப்பு சம்மாந்துறைப் பிரதேசத்தில் உள்ள 44 பள்ளிவாசல்களையும் ஒரு நம்பிக்கையாளர் சபையூடாக நிருவாகித்து வருகின்றது. மஜ்லிஸ் அஷ்ஷூரா ஊராளுமன்றமாகவும், நம்பிக்கையாளர் சபை ஒரு மந்திரிசபை போன்றும், ஒவ்வொரு ஜமாஅத் நிறுவாகங்களும் மாநில அமைப்பாகவும் செயற்பட்டுவருவதை அவதானிக்கலாம். மஜ்லிஸ் அஷ்ஷூராவின் அமீர் (தலைவர்) சம்மாந்துறையில் அதியுயர் சபையின் அமீர் ஆகையால், இவர் சம்மாந்துறையின் சமூகத் தலைவராகவும் கணிக்கப்படுகின்றார். மஜ்லிஸ் அஷ்ஷூரா அமைப்பு நம்பிக்கையாளர் சபையைத் தெரிதல், வரவு செலவுத் திட்டங்களை அங்கீகரித்தல், கணக்காய்வு அறிக்கைகளைப் பரிசீலித்தல், சமய நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லல், சமூகங்களுக்கிடையில் இன நல்லுறவை ஏற்படுத்தல், மிக முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ளல் என்பனவாகும்.

இன்று சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களின் விபரங்கள்.

01. பெரிய பள்ளி (கோசப்பா பள்ளி) ஜும்மாப்பள்ளி
02. மஸ்ஜிதுல் சலாம் (கல்லரிச்சல்) ஜும்மாப்பள்ளி
03. மஸ்ஜிதுல் அழ்பர் (சம்புமடு) ஜும்மாப்பள்ளி
04. மஸ்ஜிதுல் பத்ர் (ஹிஜ்ரா சந்தி) ஜும்மாப்பள்ளி
05. மஸ்ஜிதுல் ஹிலால் (பல்கலைக்கழக வளாகம்) ஜும்மாப்பள்ளி
06. மஸ்ஜிதுல் ஜாரியா (கைகாட்டியடி) ஜும்மாப்பள்ளி
07. மஸ்ஜிதுல் உம்மா (புதுப்பள்ளி) பூமரத்துச் சந்தி
08. மஸ்ஜிதுல் முகையதீன் (சின்னப்பள்ளி)
09. மஸ்ஜிதுல் தக்கிய்யா (மையவாடி)
10. மஸ்ஜிதுல் ஜலாலியா (விளினையடிப் பிரிவு)

11. மஸ்ஜிதுல் கைர் (மையவாடி)
12. மஸ்ஜிதுல் மபாஸா (மட்டக்களப்புத் தரவை)
13. மஸ்ஜிதுல் நூரியா (சாலி றோட்)
14. மஸ்ஜிதுல் மனார் (மஸ்தார் பள்ளி)
15. மஸ்ஜிதுல் முனீர் (செந்நெல் கிராமம் தாய்வண்டு வீதி)
16. மஸ்ஜிதுல் ஜமாலியா (வீரமுனைச் சந்தி)
17. மஸ்ஜிதுல் ஜபல் (மலைப்பள்ளி)
18. மஸ்ஜிதுல் ஹுதா (மல்கம்பிட்டி றோட்)
19. மஸ்ஜிதுல் முஅல்லா (மலையடிக்கிராமம் மையவாடி)
20. மஸ்ஜிதுல் இலாஹி (வைக்கோல் கொள்வனவு நிலையம்)
21. மஸ்ஜிதுல் சபூர் (சமீட் புரம்)
22. மஸ்ஜிதுல் புஸ்ரா (மட்டக்களப்புத் தரவை)
23. மஸ்ஜிதுல் பதஹ் (கருவாட்டுக்கல்)
24. மஸ்ஜிதுல் அல்-அக்ஸா மலையடிக்கிராமம்
25. மஸ்ஜிதுல் நகர் (தேசிய பாடசாலை)
26. மஸ்ஜிதுல் மிஸ்பாஹ் (பயினன்டகட்டு)
27. மஸ்ஜிதுல் பிர்தௌஸ் (எஸ்.பி.05 வீதி)
28. மஸ்ஜிதுல் அப்ரார் (செந்நெல் கிராமம்)
29. மஸ்ஜிதுல் உம்ரா (தொழில் நுட்பக் கல்லூரிக்குப் பின்னால்)
30. மஸ்ஜிதுல் அரபா (செந்நெல் கிராமம்)
31. மஸ்ஜிதுல் கலந்தரப்பா (மல்கம்பிட்டி)
32. மஸ்ஜிதுல் வீரயடியப்பா (கொண்டவட்டுவான்)
33. மஸ்ஜிதுல் காட்டவுலியா (சேனைவட்டை)
34. மஸ்ஜிதுல் ஹமீதிய்யா (ஏத்தாலக்குளம்)
35. மஸ்ஜிதுல் பலாஹிய்யா (பெரிய வெளி வட்டை)
36. மஸ்ஜிதுல் றாஜி (மல்வத்தை)
37. மஸ்ஜிதுல் நேந்திலா (நேந்திலா வட்டைப் பள்ளி)
38. மஸ்ஜிதுல் கங்கத்தியப்பா சியாரம் (சின்னப்பள்ளி ஒழுங்கை)
39. மஸ்ஜிதுல் றஹ்மானிய்யா (கொட்டை கட்டயடி வட்டை ஹிஜ்ராபுரம்)
40. மஸ்ஜிதுல் களியம்பத்தை (களியம்பத்தை வட்டை)
41. மஸ்ஜிதுல் முஸ்தகீன் (தேன்பானைக் காலையடி)
42. மஸ்ஜிதுல் தக்வா (தென்னம்பிள்ளைக் கிராமம், கைப்பூரவள்ளி மலை)
43. மஸ்ஜிதுல் ஸாலிஹீன் (20 வீட்டுத்திட்டம்)
44. மஸ்ஜிதுல் அன்வர் (நெல்லுப்பிடியாற்றுச் சந்தியடி) இப்பள்ளிவாசல் கட்டிடம் சது/ ஜம்மியத்துல் உலமாவுக்காக மர்ஹும் அன்வர் இஸ்மாயில் அமைச்சர் அவர்களின் முயற்சியினால் கட்டப்பட்ட கட்டிடத்தில் இயங்கிவரும் பள்ளியாகும். இப் பள்ளி வாசல் இதுவரை நம்பிக்கையாளர் சபையின் பராபரிப்பிலோ , மஜ்லிஸ் அஷ் ஷூரா நிருவாகத்திலோ இணைக்கப்படவில்லை.

இதுபோல் நெயிநாகாடு (ஹயாத்து நபிக்குடி), மஜீட் புரம், வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம், கணபதி புரம், போன்ற இடங்களிலுள்ள ஜும்ஆப்பள்ளிகளும் ஏனைய பள்ளிகளும் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிகளில் மஜ்லிஸ் அஷ் ஷூரா நம்பிக்கையாளர் சபையில் இணைக்கப்படாத பள்ளிகளாகும். இப் பள்ளிகளின் நிருவாகங்களோ அப்பிரதேச மக்களோ சம்மாந்துறையின் பள்ளி நிருவாகத்தில் சேர்ந்திருக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இப்பள்ளிகளை சம்மாந்துறை பள்ளிவாசல்களின் நிருவாகத்தில் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை மஜ்லிஸ் அஷ்ஷூரா மேற் கொண்டும் நடைமுறைப்படுத்தப்படாதது கவலைக்குரிய விடயமாகும். இப்பிரதேசங்களில் குடியேறியிருப்பவர்கள் வேறு ஊர்களில் இருந்து குடியேறியவர்களாயிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகலாம். சம்மாந்துறைச் செயலகப் பிரிவுக்குட்பட்ட சகல பள்ளிவாசல்களும் ஒன்று சேர்க்கப்படல் அவசியம். அப்போதுதான் தனித்துவமான நிருவாக அமைப்பு என்பது அர்த்தமுள்ளதாக அமையும்.

இதனிடையே கோசப்பா பள்ளி, முகையதீன் பள்ளிகளின் பெயர்களில் ஏற்பட்ட மாற்றங்களை சிறிது தொட்டுக் காட்டல் அவசியம். 12ம், 15ம் நூற்றாண்டுகளில் உதயமான முகையதீன் பள்ளியில், கோசப்பா பள்ளிகளில் மாறிமாறி ஜும்மாக்கள் நடைபெற்று வந்ததை அறிந்தோம். 1936ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20ஆந் திகதி வெள்ளிக்கிழமை கோசப்பா பள்ளியில் ஜும்மா முடிவடைந்ததும் அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. தென்னிந்தியாவைச் சேர்ந்த "நீடூரை" பிறப்பிடமாகக்கொண்ட ஹாஜி. செய்யது முகம்மதுக் காசின் மௌலானா என்னும் பெரியார் மக்கள் முன் தோன்றி பிரசங்கம் செய்தார். இப்பள்ளியை மெத்தைப் பள்ளியாக கட்டும் திட்டத்தை முன்வைத்தார். மாதிரி பள்ளியின் அமைப்பையும் பலகையினால் அமைத்துக் காட்சிப்படுத்தினார். மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தின் மூலம் புதிய பள்ளிவாசல் கட்டும் பணிகள் ஆரம்பமாகி 1949ஆம் ஆண்டு முடிவடைந்தன. இப்பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நிதி முதலானவை முழுக்க முழுக்க சம்மாந்துறை மக்களாலேயே வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்திலிருந்து வரி அறவீடு செய்தும், தகுதி வரிமூலமும், வண்டில்காரர்கள் மண், கல், மரம் என்பன ஏற்றிக்கொடுத்தும் உதவிபுரிந்தனர். மௌலானா அவர்களின் மேற்பார்வையில் ஊர்ப்பெரியார்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்றுவரும் காலத்தில் இன்னுமொரு அற்புதம் நிகழ்ந்ததையும் குறிப்பிடுதல் அவசியம். பள்ளிவாசலுக்கு கூரை போடுவதற்கான ஓடுகள் வாங்குவதற்கு வசதியில்லாதிருந்த அக்காலத்தில், அன்று ஒரு நாள் அஸர் தொழுகையை முடித்துக் கொண்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அவ்வேளை பெண்கள் சாரி சாரியாக கோசப்பா பள்ளியை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஓடுபோடுவதற்கு வட்டாக் கொண்டு வந்திருந்தனர். அக்காலத்தில் மோட்டு வளை ஏற்றுதல், ஓடு போடுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு உறவினர், அயலவர் பண அன்பளிப்புக்களை (வட்டா) கொண்டு செல்லுதல் வழக்கம். அதன் அடிப்படையில் கோசப்பா பள்ளியின் ஓடு போடுவதற்கான அன்பளிப்புக்களுடன் பெண்கள் சமூகமளித்திருந்த உச்சாகம், கண்கொள்ளாக் காட்சியென பெரியார்கள் கூறக் கேள்விப்பட்டுள்ளோம்.

1950 களில் மெத்தைப்பள்ளி ஒன்று சம்மாந்துறையில் நிமிர்ந்து நின்றது. கிழக்கு மாகாணத்தில் முதல் முதலாக கட்டப்பட்ட மெத்தைப் பள்ளி இதுவாகும். வெளியூரவர்கள் சாரி சாரியாக இப்பள்ளியைப் பார்வையிட வந்து காணிக்கை செலுத்திச் சென்ற வரலாறுகளும் உண்டு. இப்போது கோசப்பா பள்ளி பெரிதாக காட்சியளித்ததால் பெரியபள்ளி என்றும், முகையதீன் பள்ளி சிறிதாக காட்சியளித்ததால் சின்னப்பள்ளி என்றும் பெயர் மாற்றமடைந்தது. இதைத் தொடர்ந்து பெரியபள்ளியில் மாத்திரம் ஜும்ஆ நடைபெறலாயிற்று. சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா பள்ளிவாசல்களின் நிருவாகத்தை முன்னெடுத்துச் செல்லுவதற்கான ஆலோசனைகளையும், வழிகாட்டலையும், மார்க்கத் தீர்ப்புக்களையும் வழங்கி மேற்பார்வை செய்துவருவதும் முக்கிய அம்சமாகும்.

குடிகளும் அதன் பாரம்பரியங்களும்

தென்கிழக்கு முஸ்லீம்களின் வரலாற்றுப் பின்னணியிலும், சமுகங்களுக்கிடையிலான உறவிலும் குடி வழக்கு முறைகள் நீண்ட சரித்திரத்தை உடையன என்றால் மிகையாகாது. இந்துக்களிடத்திலிருந்துதான் இக்குடிமுறைக்கான பூர்வீக வரலாறு ஆரம்பமாகின்றது. இந்தியாவிலிருந்து வந்த முக்குவர் (முக்குகர்) வெள்ளாளர் (வேளாளர்) சீர்பாதக்காரர், பரவர் (பரதவர்) போன்ற குடிகளினாலும், கோத்திரங்களினாலும் குடிவழி மரபு தோன்றிருக்கின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் அராபியர்களினதும், முஸ்லிம்களினதும் கோத்திர பாரம்பரியமும், பரம்பரை அலகும் தந்தை வழியூடாகவே இருந்து வந்துள்ள கண்டிப்பான நியதிக்கு மாறாக தாய்வழி ஆதிக்கத்தையுடைய குடிப்பரம்பலைக் காணலாம்.

முக்குவர்கட்கும் திமிலர்கட்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியில், வியாபாரிகளாக வந்த முஸ்லிம்கள் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முக்குவர்கட்கும், உதவிய முஸ்லிம்களுக்குமிடையே திருமண உறவுகள் ஏற்படலாயின. முக்குவர்களிடையே இருந்து வந்த ஏழு அல்லது ஒன்பது குடிகளிலிருந்தும் பெண்கள் முஸ்லிம்களுக்கு திருமணத்தின் மூலம் உறவுப் பாலம் ஏற்படலாயிற்று. இதன் மூலம் முஸ்லிம்களின் இருப்பு இங்கு உறுதிப்படலாயிற்று. கிழக்கிலங்கை முஸ்லிம்களிடத்தில் மாத்திரம், குறிப்பாக தென்கிழக்கு முஸ்லிம்களிடத்தில் குடிவழிமுறை, சமுதாய அமைப்பு இருந்து வருவதை அவதானிக்கலாம்.

மட்டக்களப்பிற்கும் துலுக்கர், பட்டாணியர்களுக்கிடையிலான உறவுகள் இறுக்கமாக இருந்து வந்துள்ள ஆதாரங்கள் அனேகம். குலவிருதுகள் பற்றிய ஒரு பாடலில் :-

தோணிகரையாருக்கு தொப்பி துலுக்கருக்கு
காணியுழுமேழி களிகாராளருக்கு
நாணி வில்லம்பு.....
என்று தொடர்வதை அவதானிக்கலாம்.

இந்துக் கோவில்களில் பட்டாணி பூசையும், குறுமன்வெளிக் கோயிலில் தொப்பியணிந்த சிலையொன்று காட்சியளிப்பது போன்ற இன்னோரன்ன சம்பவங்கள் திராவிடர்களான முக்குவர்கட்கும், முஸ்லிம்களுக்கிடையிலான தொடர்புகள், திருமணப்பந்தங்கள், நிலைத்திருந்த உறவுகளை உதறிவிட முடியாது. அதன் தொடர்தான் குடிவழிமுறை நிலைத்திருப்பதற்கு அத்திவாரம்.

அரசியல் உதவிகளுக்காக, வேறு உபகாரங்களுக்காக மாறுபட்ட இனங்களுக்கிடையில் பெண்களை மணம்முடித்துக் கொடுக்கும் வழக்கம் ஒரு கர்ணபரம்பரை நிகழ்வுகளாக இருந்து வந்த இதிகாச சம்பவங்கள் அதிகம் எனலாம். இந்த வகையில் முஸ்லிம்களின் அனுபவங்களையும் அவர்களது திறமை, தொழில் முறையிலான எழுச்சி, வாழ்க்கை முறைகளினால் உள்ள நன்நோக்கங்கள் என்பவற்றிலுள்ள கவர்ச்சியும் முஸ்லிம்களை இங்கு வாழ வைப்பதில் திராவிடர்களுக்கு மேலும் உச்சாகத்தைக் கொடுத்திருக்கும். இப்படியான யதார்த்தங்களால் முஸ்லிம்களின் இருப்பு உறுதிப்பட்டதுடன், மேலும் பற்பல நிகழ்வுகளாலும், குடியேற்றங்களாலும் சனத்தொகை அதிகரித்து செல்லலாகின.

ஏழு அல்லது ஒன்பது குடிகளாக இருந்து வந்த முஸ்லிம்களிடத்தில் மேலும் குடிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. ஏழு அல்லது ஒன்பது குடிகளின் பெயர்களிலும் திரிபுகள் ஏற்பட்டு பெயர்மாற்றமடைந்துமுள்ளன. தற்போது நடைமுறையிலுள்ள (சம்மாந்துறையில்) 31 குடிகளில் சுமார் 10 குடிகளின் பெயர்களில் முஸ்லிம் பெயர்கள் வெளிப்படுவதை அவதானிக்கலாம். சனத்தொகை அதிகரிப்பினாலும், வேற்றிடங்களிலிருந்து மக்கள் இங்கு குடிபெயர்ந்ததினாலும், சிங்கள மக்களின் கலப்பினாலும், இந்திய முஸ்லிம்களின் வருகையினாலும் சமூக கலாசார விழுமியங்களின் கலப்புக்களினாலும், ஒரு குடிக்குள்ளேயே அதிகாரப்போட்டி காரணமாக பிளவுபட்டதினாலும் குடிகளின் தொகை அதிகரித்தன என்றால் மிகையாகாது. 1940ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட குடிக்கூட்டத்தில் 16 குடிகள் மாத்திரம் இருந்துள்ளதான ஆவணம் ஒன்று கிடைத்துள்ளது. ஒரு குடியென்பது ஒரு மக்கள் குழுமத்தைக் குறிக்கும் சொற்பிரயோகம் எனலாம். இக்குடியில் இடம்பெறும் எந்த நிகழ்வானாலும் அது சமயம் சார்ந்த, திருமணம் சார்ந்த எந்த முக்கிய நிகழ்வுகளிலும் அந்தந்த குழுமத்தின் தலைவர், குடிமரைக்கார் பங்குபற்றாமல் அந்நிகழ்வு நடைபெறாது. அந்தளவுக்கு அன்று இம்மரபுவழி வந்த சட்டமாக மதித்து மக்கள் வாழலாயினர்.

எமது பண்பாட்டு அம்சமாக விளங்கிக் கொண்டிருக்கும் இக்குடிமுறை நமது பள்ளிவாசல் அமைப்பான மஜ்லிஸ் அஷ்ஷூறாவிலும் உள்ளடக்கப்பட்டிருப்பதையும் காணலாம். ஏன்றாலும் இன்றைய காலகட்டத்தில் இக்குடிமுறை பேணப்படல் அவசியமா? இஸ்லாமிய அடிப்படையில் தந்தை வழிக்கு இக்குடிமுறை மாற்றியமைத்தால் என்ன? என்பன போன்ற கருத்துக்களும

இன்று முன்வைக்கப்பட்டிருப்பதையும் சிந்திப்போமாக. என்றாலும் எமது பாரம்பரியத்தின் வரலாற்றை அறியுமுகமாக தற்போது வழங்கப்பட்டு வருகின்ற குடிகளின் பட்டியலை அவதானிப்போமாக.

குடிகள்	குடிமரைக்கார்
01. கணக்கன்கத்தர குடி	அல்-ஹாஜ் எஸ்.எம்.வதூர் ஜே.பி
02. மாமனாப்போடி குடி	அல்-ஹாஜ் எஸ்.எம்.முகம்மது முஸ்தபா ஜே.பி (ஓய்வு . ஜீ.எஸ்)
03. தேன்முதலிக்குடி (கொசுக்குட்டான்)	அல்-ஹாஜ் ஏ.எல்.ஹபீப் முகம்மட் (T.O)
04. பெரிய வெள்ளரசன் குடி	ஜனாப் எம்.ஏ.முகைடீன் (ஜே.பி)
05. சங்கதி குடி	அல்-ஹாஜ் எஸ்.எல்.ஆதம்பாவா (ஜே.பி) (ஓய்வு. கல்விப் பணிப்பாளர்)
06. இராசாம் புள்ள குடி	அல்-ஹாஜ் கே.எம்.முஸ்தபா (ஜே.பி) ஓய்வு அதிபர்
07. சுல்தான் குடி	அல்-ஹாஜ் ஏ.எல்.சம்சுதீன் (ஓய்வு வங்கி உத்தியோகத்தர்)
08. கோசப்பா குடி (பள்ளிக் குடி)	அல்-ஹாஜ் எஸ்.அப்துல் றாஸீக் ஜே.பி (ஓய்வு அதிபர்)
09. சின்ன வெள்ளரசன் குடி	அல்-ஹாஜ் M.Z.அகமட் லெப்பை (ஓய்வு ஆசிரியர்)
10. சேனைக் குடி	அல்-ஹாஜ் யூ.எல்.இப்றாலெப்பை (வர்த்தகர்)
11. பெரிய படையான் குடி	அல்-ஹாஜ் எம்.ஐ.ஹனீபா (A.I)
12. ஆதம்பட்டாணி குடி (சோழிய குடி)	அல்-ஹாஜ் எம்.டி.எம்.சஹீட் (பணிப்பாளர்)
13. நெயினா ஓடாவி குடி	அல்-ஹாஜ் ஏ.எல்.எம்.யாசின் (ஜே.பி.) ஓய்வு அதிபர்
14. ஓடாவி குடி	அல்-ஹாஜ் ஏ.எம்.இஸ்மாயில் (படவரைஞர்)
15. வடக்கன்னா குடி	அல்-ஹாஜ் மௌலவி ஏ.அப்துல் றகுமான்
16. மாந்தரா குடி	அல்-ஹாஜ் எம்.கலந்தர் லெப்பை போடி
17. செட்டி புள்ளக் குடி	அல்-ஹாஜ் எம்.ஏ.தம்பிக்கண்டு (ஓய்வு பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
18. உதுமான் புள்ள குடி	ஜனாப் . எம்.ஏ.அலியார் போடி
19. உலவிப் போடிக் (சாயக்காரன்) குடி	அல்-ஹாஜ் ஏ.முகம்மட் தம்பிப் போடி
20. ஆராய்ச்சிக் குடி (பட்டிசிங்கிபவள ஆராய்ச்சி)	அல்-ஹாஜ் எம்.எல்.எம்.இஸ்மாயில் போடி
21. மாப்பிள்ளை மரைக்கார் குடி	அல்-ஹாஜ் எம்.எஸ்.எம்.சிறாஜுடீன் (ஆசிரியர்)
22. கச்சன் ஓடாவி குடி	அல்-ஹாஜ் எம்.பக்கீர் முகையடீன் (வர்த்தகர்)
23. பொன்னாச்சி குடி	அல்-ஹாஜ் ஏ.எல்.இஸ்மாயில் (வர்த்தகர்)
24. சேர் முகம்மட் குடி(சேகு முகம்மது)	அல்-ஹாஜ் எம்.ஐ.கின்னராசா (ஜி.எஸ்)
25. பெரிய படையான்ட குடி	அல்-ஹாஜ்எஸ்.எம்.வரிசை முகம்மட் (வர்த்தகர்)
26. மடத்தடி குடி (மரத்தடி குடி)	ஜனாப். யூ.எல்.நவாஸ் (அரச உத்தியோகத்தர்)
27. மூத்த நாச்சியார் குடி	அல்-ஹாஜ் ஏ.எல்.அலியார் (ஜே.பி) ஓய்வு அதிபர்
28. பணிக்கனா குடி	அல்-ஹாஜ் ஏ.நசுருதீன் (BA, பிரதி அதிபர்)
29. கையூம் மலையார் குடி(கைமலயார்)	அல்-ஹாஜ் மன்சூர் ஏ.காதர் (பதிவாளர் தெ.கி.ப.கழகம்)
30. மலையாளத்து லெப்பை குடி (அழகு வெற்றிலைக் குடி)	அல்-ஹாஜ் மௌலவி எம்.ஆதம் லெப்பை ஆசிரியர (ஜே.பி.)
31. வைத்தியநாச்சியார் குடி	அல்-ஹாஜ் யூ.எம்.முஸ்தபா (ஜே.பி) ஓய்வு அதிபர்

குடிமரைக்கார் மார் 31பேரும் குடிமரைக்கார்மார் சம்மேளனம் என ஒரு நிறுவணமாக இயங்கிவருகின்றனர். சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையில் குடிமரைக்கார்மார் சம்மேளனத்தின் சார்பாகவும் ஒரு நம்பிக்கையாளர் அங்கத்துவம் பெறுகின்றார். சென்ற

காலத்தில் அல்-ஹாஜ் ஏ.எல்.எம்.யாசீன் ஜே.பி. அவர்களும் தற்போது அல் ஹாஜ் கே.எம்.முஸ்தபா ஜே.பி. அவர்களும் நம்பிக்கையாளர் சபையில் இடம் பெற்றனர்.

சில குடிகளுக்கு இரட்டைப் பெயர்கள் இருக்கின்றன. அந்தவகையில் குடிமரைக்கார்மார் பட்டியலில் அடைப்புக்குறிக்குள் இருப்பது அக்குடியின் மறு பெயராகும். ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு குடிவிருதுகள் (அடையாளம்) இருந்து வந்துள்ள சம்பிரதாயங்களும் உண்டு. மாடுகளுக்கு குறி வைக்கும் போது இது பேணப்பட்டு வந்துள்ளது. தற்போதும் சிலர் பாவிப்பதுண்டு. வேலி கட்டும் போது அக்குடிக்கான அடையாளம் இடம் பெறுவதாகவும் கதைப்பார்கள். திருமண நிகழ்வின் போது அக்காலத்தில் மேளம் அடித்து திருமணத்தை அமர்க்களப்படுத்துவர். அப்போது மேளக்காரர் மேள வாத்தியங்களில் அக் குடிக்கான ஓசையை எழுப்புவதாகவும் அறியமுடிகின்றது. குடிப் பாரம்பரியம் நமது பண்பாட்டு அம்சங்களில் மிக முக்கியமான இடத்தை வகித்து வந்துள்ள பிடிமானத்தை அறிகின்றோம்.

சென்ற காலங்களில் குடிமரைக்கார்மார்கள்தான் பள்ளிவாசல்களின் நிருவாகத்தை நடாத்தி வந்துள்ள ஆதாரங்களும் நிறையக் கிடக்கின்றன. மரைக்கார் என்பது "மறை"யை – மார்க்கத்தை – காப்பவர் என்பதாகும். அதன் அடிப்படையில்தான் மரைக்கார் என்ற பதம் நிலைபெற்றிருக்கலாம்.

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிவாசல்களில் பின்வருபவை மஜ்லிஸ் அஷ்ஷூறா நிருவாகத்தில் இல்லாதவைகளாகும்.

நெய்னாகாடு

01. மஸ்ஜிதுல் ஹயாத்து நபிகுடி ஜும்ஆ பள்ளிவாசல்
02. மஸ்ஜிதுல் றஹ்மானியா பள்ளிவாசல்

வளத்தாபிட்டி

01. மஸ்ஜிதுல் உலாஹ் ஜும்ஆ பள்ளிவாசல்
02. மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல்

மஜீட் புரம்

01. மஜீட்புரம் ஜும்ஆ பள்ளிவாசல்
02. மஸ்ஜிதுல் இக்ராம் பள்ளிவாசல்
03. மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் - கணபதி புரம்

அல் ஹாஜ். எஸ்.அப்துல் றாஸிக் ஜே.பீ. ஓய்வு ~ அதிபர்
தவிசாளர் , சம்மாந்துறை மத்தியஸ்தர் சபை ~ 2009.05.09.

இது மனித நேயம்

எம்.ஐ.எம். அஷ்ரப் கலாசார உத்தியோகத்தர்

வளம் தந்து உயிர்களை வாழ்வித்த கடலன்னை
ஆக்ரோச முற்றாள் வளர்த்த நாகரீகம் மறுதலித்ததால்
கரைகள் தழுவி கொஞ்சிச் சென்ற கடலலை
நளின மிழந்து புதுப்பிறவி எடுத்தாள் பேரலையாய்

படிதாண்டா பத்தினி அத்துமீறி கரையேறி வந்து
அடித்துச் சிதைத்தாள் அண்மித் திருந்த பிரதேசமெல்லாம்
கொள்ளை அழகால் உல்லாசம் கொண்டு வந்ததை
நொடியில் வீணாக்கிப் போனாள் கோரத் தாண்டவத்தால்

மனைகள் இடிந்து வீழ்ந்திட மனதை மகிழ்வித்த
பொன் பொருளெல்லா மதற்குள் புதையுண்டு போயின
உயர்ந் தெழுந்த உப்புநீரில் பிராணன்களும் பிரிந்திட
கதிகலங்கி நின்றார் மாந்தர் கண்ணிமைக்கும் நேரத்திலே

உறவெல்லாம் வெவ் வேறாகி உடுத்திருந்த உடையோடு
ஓடியது சனத்திரள் உயிரைத் தானும் தக்கவைக்க
வாழ் நாளிலென்றும் கண்டிடாக் கோர நிகழ்வாய்
அலைபோல் இரைந்து அள்ளுண்டு வந்தது கரையோரம்

பாகுபடுத்திய இனமத பிரதேச மெல்லாம் தொலைத்து
பசிமறந்து மனிதம் பயத்தால் உறைந்து போனது
அண்டை அயல் ஊரெல்லா மிங்கு அடைக்கலமாகிட
பலஊர் சேர்ந்து ஓரூரானது துறையூர் அன்று

ம.ஷர் வெளியில் மனிதரின் நிலையிது தானென
நினைவூட்டி நின்றதக் காட்சி பார்த்தோருக் கெல்லாம்
உடுக்கை இழந்தவன் கரமாக செய்வதேநல் உதவியென
விழித் தெழுந்தார் இவ்வூரார் வாழ்வித்தார் மனிதாபிமானத்தை

எந்த வீட்டிலொரு குடும்ப மில்லையென வந்தோர்தங்க
வீதிதோறும் வியாபித் திருந்தது விருந்தோம்பல் ஏற்பாடுகள்
ஹிஜ்ரத்தில் அன்சாரீன்கள் தியாகத்தையது நினைவு படுத்திட
தன்னலமிலா சேவையினால் புளகாங்கித மடைந்தா ரிம்மக்கள்

விழித்திருந்தவர் உறவுகள் தேடித் தத்தளிக் கையில்
ஆவிதுறந்த காயம் யாரைச் சொந்தமாய் கொள்ளும்
உயிர்கள் வந்தது போதாதென இம்மண்ணடங்க வாகனமேறி
உயிரற்ற யாக்கைகளும் போட்டிக்கு வந்து குவிந்தன

படித்தவர் பாமரரோடு இருப்பவர் இல்லாதாரு மொருங்கே
சாகரம் சாதித்த இடம்போய் பொறுக்கிய குற்றுயிர் எத்தனை
சொத்து சுகமிழந்து உயிர்வாழ வந்தோரை அரவணைத்து
கிலிநீங்கி சேருமிடம் செல்லும்வரை மனிதனேயம் ஓயவில்லை

உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகர்க் கென்பதற் கொப்ப
நன்றிக்கடன் மறவா மாந்தரதை தியாகமாய்க் கொண்டிட்டார்
நினைவு கூரும் போததை நெஞ்சிலிருத்தி எடுத்தியம்புகையில்
பெருமிதம் சேர பேருவகையால் பூரித்து நிற்கும் சம்மாந்துறை..

கிராம சேவகர்கள்



முன்வரிசை இடமிருந்து வலம்:எம்.ரி.எம்.நஸீர், எம்.எல்.தாசீம், எம்.எம்.எம்.ஜலால், எம்.ஐ.எம்.தௌபீக், கே.எல்.ஏ.மஜீட், எ.ஜீ.பி.அஸ்ரப், ஏ.எம்.றபீக், ஜே.லியாக்கத் அலி(A.D.S) ஏ.எல்.உதுமாலெவ்வை, ஏ.மன்சூர்(D.S) ஏ.புவனேந்திரன், ஏ.எல்.மஃறூப்(Acct.) யு.எல்.சலீம், எம்.ஐ.எம்.அஸ்ரப்(C.O) என்.கோவிந்த சாமி, ஏ.எம்.இல்யாஸ், எம்.எம்.பாரீஸ், எம்.எம்.சலீம், எம்.எல்.எஸ்.பரீதா, ஏ.எல்.எம்.இக்பால்

பின்வரிசை இடமிருந்து வலம்: ஐ.உபைதுல்லா, எம்.எம்.நஸீர், ஏம்.ரி.சஹீட், கே.பிரகாஸ், எம்.ஐ.சின்னராசா, கே.ரவி, எம்.ரி.ஏ.கபூர், என்.புவனராஜ், எம்.உதயராஜன், எ.பிரதீபன், ஐ.எல்.எம்.ஒஜீஸ்கான், கே.எல்.அபுசாலி, எம்.ஏ.எம்.ஹூ தா, எஸ்.இராசமாணிக்கம், எஸ்.எம்.எம்.அறபாத், எம்.எம்.சல்மான், எம்.எம்.சதக், ஏ.சுந்தரலிங்கம், ஐ.எல்.எம்.பரீட், ஏ.எல்.எம்.இஸ்மாயில், ஏ.எல்.அமீர் அலி, யு.எல்.சல்தீன்



தேசிய கலை இலக்கிய போட்டித் தெரிவுகள் -2008

பிரதேச மட்டம் - சம்மாந்துறை

போட்டி நிலை	பெயர்	முகவரி

கனிஷ்ட பிரிவு

கவிதை	1	MM. பர்ஹா பாத்திமா	முஸ்லிம் மகளிர் வித்தியாலயம் சம்மாந்துறை.
	2	MI. இசாறா சௌன்	முஸ்லிம் மகளிர் வித்தியாலயம் சம்மாந்துறை.
	3	I. பாத்திமா ஜுமைலா	அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
கட்டுரை	1	MM. சாஹிதா அப்றோஸ்	முஸ்லிம் மகளிர் வித்தியாலயம் சம்மாந்துறை.
	2	AMM. பஸ்லான்	முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் சம்மாந்துறை.
	3	AS. பாத்திமா சிறாபா	அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
சிறுகதை	1	A. மிஸ்பாஉல் ஹக் -	முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயம் சம்மாந்துறை.

சிரேஷ்ட பிரிவு

கவிதை	1	AM. மஸ்மியா	அல்- மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
	2	கனி பௌமிலா	அல்- மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
	3	J. பாதிமா சிரோமியா	அல்- மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
கட்டுரை	1	A. சிறாஜுன்னிஸா	அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
	2	T. யசோதினி	ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியலயம்
	3	U. சிறாஜுன்னிஸா	அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
சிறுகதை	1	MI.பாத்திமா அனுசாபானு	அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்

திறந்த பிரிவு

கவிதை	1	LM. அஸ்லம்	219,மல்14வது வீதி, மலையடிக்கிராமம்-01, சம்மாந்துறை
	2	சித்தி மஸூரா சுகுறுத்தீன்	57/1 அம்பாறை வீதி, சம்மாந்துறை.
	3	AL. றிசானா	மலையடிக்கிராமம் -03, சம்மாந்துறை.
பாடலாக்கம்	1	LM. அஸ்லம்	219, மல் 14 ஆம் வீதி, மலையடிக்கிராமம் -01
	2	சித்தி மஸூரா சுகுறுத்தீன்	57/1 அம்பாறை வீதி, சம்மாந்துறை.
சிறுகதை	1	LM. அஸ்லம்	219, மல் 14 ஆம் வீதி, மலையடிக்கிராமம் -01
	2	சித்தி மஸூரா சுகுறுத்தீன்	57/1 அம்பாறை வீதி, சம்மாந்துறை.
	3	MM. மகிசா பானு	464, 3 ஆம் குறுக்குத் தெரு சம்மாந்துறை-09

சம்மாந்துறைப் பிரதேசத்தின் அரசியல் வரலாறு

அரசியல் வரலாற்றுப்பின்னணி

அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தினை ஆட்சி செய்வது என்ற அடிப்படையில் நோக்கப்பட வேண்டியதாகும். சம்மாந்துறையின் அரசியல் வரலாற்று, பின்புலம் மிகவும் முக்கியமானதாகும். சம்மந்துறை என்பது கிழக்கின் கடல் வாணிபத்தின் மிக முக்கிய துறைமுகமாக மிக நீண்ட காலமாக விளங்கி வந்தமைக்குப் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு வாவியூடாக உள்நுழையும் வர்த்தகக்கப்பல்கள் தென்புறமாக ஏறத்தாழ 40 கிலோமீற்றர் தூரம் வாவியில் சென்று சம்மாந்துறையை அடைந்தார்கள். இங்கு தரை தட்டிய கப்பல்கள் பொருட்களை இறக்கி இங்கிருந்து கண்டி இராதானிக்கும் உள்நாட்டுக்கும் கொண்டு சென்றார்கள். இங்கிருந்துதான் கண்டிக்கான தரை வழி பாதையும் ஆரம்பமாகின்றது. மட்டுமன்றி இலங்கையின் பெரிய நதிகளில் ஒன்றான கல் ஓயா ஆற்றின் இடப்பக்கமாக அமைந்த (இது பட்டிப்பளையாறு என அக்காலத்தில் அழைக்கப்பட்டது).பரந்து விரிந்த வளமான நிலப்படுக்கையின் நடுவே காணப்பட்டமையால் இப்பிரதேசம் மக்கள் வாழ்க்கைக்கு வசதியாயமைந்தது.

இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். விவசாயத்துக்கான அனைத்து வளங்களும் இப்பிரதேத்தில் அமைந்து காணப்பட்டன. பண்டைய மக்கள் தங்களுக்கிடையே ஒரு தலைவரைத் தெரிந்து கொண்டு அவரின் கட்டுப்பாட்டிலேயே ஊர் முழுவதும் ஓர் அரசியல் ஒழுக்க விழுமியங்கள் மிக்கதாக கட்டிவளர்க்கப்பட்டது. அந்தத் தலைவரே அவர்களின் முழு ஆட்சியாளராகத் திகழ்ந்தார். அவர் மரைக்காயர் என்று அழைக்கப்பட்டார். அந்த மரைக்காயர் தமக்குச் சிலரை உதவியாளர்களாக வைத்துக்கொள்வது வழக்கம். இந்த அடிப்படையில் அரசியல் ஆட்சியில் நிர்வாக முறை அமைந்தது. அவரின் தலைமையிலேயே ஊரின் பாதுகாப்பு, நிர்வாகம், நீதி, திருமணம், விவாகரத்து, சொத்துப்பிரிப்பு போன்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. கிராமத்தின் வசதிபடைத்தவரும் கல்வி அறிவு, புத்திசாதுர்யம் போன்றவற்றில் திறமையானவரையும் மரைக்காராக நியமித்தார்கள். இது பிற்காலத்தில் ஒரு பரம்பரை ரீதியான வாரிசுரிமையாக வந்தமையும் நாம் அவதானிக்கலாம். இப்படியே சம்மாந்துறையிலும் அரசியல் பின்னணி அமைந்து காணப்பட்டது. காலத்துக்குக்காலம் மாறிமாறிப்பலர் ஆட்சி செய்தமை வரலாற்றில் காணப்படுகிறது. இவர்கள் கண்டிய மன்னர்களின் பிரதிநிதிகளாக இருந்துள்ளனர். அவர்களுக்குச் சேவகம் செய்துள்ளனர். மன்னனின் பிரதிநிதியாக இவர்கள் இருந்தமையால் மக்களும் மதித்தனர். இது பிற்காலத்தில் போர்த்துக்கேயரை எதிர்க்கவும் ஒல்லாந்தரை ஆதரிக்கவும் இப்பதவிகளே பெரிதும் உதவின. இவர்கள்தான் கிராம ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர். பிற்காலத்தில் உள்ளூராட்சி சபைகளாகவும், பாராளுமன்ற சட்டசபை-உறுப்பினர்களாகவும் வளர்ச்சி பெற்று காணப்பட்டது என்பதை அறியமுடிகின்றது. இன்று இலங்கையிலேயே அதிக சனத்தொகையையும் அதிக நிலப்பரப்பையும் கொண்ட ஊராக சம்மாந்துறை திகழ்ந்தாலும் அவ்வளவுக்கும் ஒரு நம்பிக்கையாளர் சபையைக்கொண்டே இயங்கி வருகின்றமை இவ்வூரின் ஆட்சியியல் வரலாற்றின் வளர்ச்சியின் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தனர். காரணம், இப்பிரதேசத்தின் நிலத்தோற்றமும் நீர்ப்பாசன வடிகால் அமைப்பு முறையுமேயாகும். இப்பிரதேசத்தின் அரசியல் வளர்ச்சி என்பது ஒரு விவசாய சமூகத்தின் பரிணாம வளர்சியை அடிப்டையாகக் கொண்டது என்பதைக் கருத்திற்கொண்டே நோக்கவேண்டியுள்ளது.

நிர்வாக முறைமை

பொதுவாக - தென்கிழக்குப்பிரதேசம் தமிழ் முஸ்லிம் மக்கள் கலந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இப்பிராந்தியத்தில் 12ம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் பரவலாக வாழ்ந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. என்றாலும் கண்டி மன்னன் செனரத் காலத்திலேயே (1604 – 1635) அதிகமான முஸ்லிம்கள் இப்பிரதேத்துக்குக் குடியேற்றப்பட்டனர். இதன் பின் இப்பிரதேசம் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசமாகக் காணப்பட்டு வந்துள்ளது. இம் மக்களின் அரசியல் நிர்வாக முறைமைகள், விவசாயம், வர்த்தகம் என்பவற்றை

அடிப்படையாகக் கொண்டமைந்தன. இங்கு மிக நீண்ட வரலாற்றையும் பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட சமூக அமைப்பு முறை காணப்பட்டுள்ளது. நிர்வாகஸ்தர்களாக வன்னியனார், போடிகள், காரியப்பர்கள், மரைக்காயர்கள், உடையார்கள் என்பவர்கள் அல்லது பதவிகள் அக்காலத்து உயர் நிர்வாகப்பதவிகளக காணப்பட்டன. இவர்களின் நீதி முறைமை, சட்டங்கள் என்பனவும் தனித்துவமனதகக் காணப்பட்டமை வரலாற்றின் மூலம் அறியக்கிடக்கிறது. இவர்கள் அனைவரும் கண்டி அரசனின் ஆளுகைக்குக்கீழேயே தமது அதிகாரங்களைப் பெற்று, செலுத்தி வந்துள்ளனர். தென்கிழக்குப் பிராந்தியம் மிக நீண்ட காலமாக கண்டிய இராசதனியின் ஒரு பிரிவாக இருந்து வந்தது.

கண்டிய இராசதானியும் சம்மாந்துறைப் பிரதேச வன்னிமைகளும்

முஸ்லிம்கள் கண்டி இராஜ்யத்தின் மன்னனுக்கு மிகவும் விசுவாசமாகவே இருந்து வந்துள்ளனர். கண்டி மன்னன் செனரத் (1604 – 1635) காலத்தில் தென் இலங்கையில் ஒல்லாந்தரும் முஸ்லிம்களும் நம்பிக்கையிழந்து முஸ்லிம்கள் அப்பிரதேங்களிலிருந்து இடம் பெயர்ந்தனர் அல்லது முஸ்லிம்கள் துரத்தப்பட்டனர். அப்போது செனரத் மன்னன் 4000 முஸ்லிம் குடும்பங்களை தற்போதைய அம்பாறை மட்டக்களப்புப்பகுதிகளில் குடியமர்த்தினான். அவர்களுக்குத் தேவையான நிலம், இருப்பிடம் போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்ததோடு மட்டுமன்றி முன்பிருந்த பழங்குடிகளையும் புதிய குடியேற்றக்காரரையும் ஆட்சி செய்வதற்காக பதவி வழித்தலைவர்களை நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்கு காரியப்பர் என்ற அதிகாரிகளை நியமித்தான். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பள்ளிவாசல்கள், கோயில்களின் காணி உறுதிகளான செப்பேடுகளில் " மட்டக்களப்பு இஸ்லாமியர்களின் தலைமை இஸ்மாலெவ்வைக் காரியப்பரும் தம்பி நெயிந்தைக் காரியப்பரும் ஆகியவர்கள் " என்ற வாசகம் காணப்படுகிறது. இக்காரியப்பர்கள் கண்டி வெல்லசக் கலவரத்தில் கொல்லப்பட்ட ஹஜ்ஜுமரைக்காரின் பரம்பரையைச் சார்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

கண்டி இராசதானிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து யானைகள், தேன், மெழுகு, பாக்கு, புகையிலை பேன்றவைகளை திறையாக அனுப்பிவைத்தனர். அது மட்டுமன்றி போர்க்காலங்களில் போர் வீரர்களைத்திரட்டிக் கொடுக்க வேண்டியதும் இவர்களின் கடமையாகும். இராஜ்ய பரிபாலனத்தில் இவர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அரசன் தீர்மானங்களை எடுத்தமையும் அப்படியான ஆலோசனைக் கூட்டங்களில் இவர்கள் பங்கு பற்றியும் வந்தனர். இன்னும் கண்டி தலதா மாளிகை தியவதன நிலமே தெரிவின் போது சம்மாந்துறை வன்னிமைக்கும் ஒரு வாக்கிருந்தது இதற்கான சான்றாகும். அரசன் காலத்திலேயே சம்மாந்துறைப்பற்று வன்னிமை இவ்வாறு மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமைக்கு இது சான்றாகும். கண்டி மன்னனுக்கு பொருட்களை தவளங்கள் மூலம் கொண்டு சென்றவர்களும் யானைகளைப் பிடித்து வழங்கியவர்களும் சம்மாந்துறையிலும் இருந்துள்ளனர்.

பின்பு போர்த்துக்கேயரின் ஆதிக்கம் கிழக்கில் வீழ்ச்சி கண்ட போது அவர்களுக்கெதிராக ஒல்லாந்தருடன் இணைந்து பல போர்களில் சுதேசிகளும் பங்கு கொண்டனர். அவ்வாறான உள் நாட்டுப் படைகளுக்கு வன்னியர்களே தலைமை தாங்கினர். திருகோணமலையில் உள்ள போர்த்துக்கேயரின் கோட்டையை ஒல்லாந்த கடற் படைத் தலைவனான வெஸ்டர் வேல்ட் என்பவன் 12 கப்பல்கள் அடங்கிய படையுடன் 1639ல் முற்றுகையிட்டான். இதற்கு உதவியாக கொட்டியாரம், மட்டக்களப்பு, சம்மாந்துறை என்ற பகுதிகளிலிருந்து உள்நாட்டுப்படைகள் சென்றன. இது ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா 500 போர் வீரர்கள் சென்றதாக கூறப்படுகிறது. சம்மாந்துறை வன்னிபமும் படைகளும் மட்டக்களப்பு வழியாகச் சென்றமைக்குச் சான்றுகள் உள்ளன. இச்சம்பவம் 1639 ல் சம்மாந்துறையில் ஒரு வன்னிபம் பலம் பெற்றிருந்தமையை எடுத்துக் காட்டுகிறது.

பிரித்தானியர் காலம் (1796 - 1948)

சம்மாந்துறை அரசியல் வரலாற்றில் பிரித்தானியர் காலம் மிகவும் முக்கியமானது. மட்டக்களப்புப் பிரதேசம் வெருகல் முதல் பொத்துவில் வரையும் பிரித்தானியர் வசமான போது 1796 முதல் இங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் அவர்களோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களும் தமது நலனுக்காக முஸ்லிம்களில் பலரை உயர் உத்தியோகங்களில் நியமித்தனர். இதில் வன்னியனார், உடையார், பிஸ்கால்

உத்தி யோகத்தர்கள், அதிகாரிகள், விதானைமார் போன்ற உயர் பதவிகளை வழங்கினர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதிகளில் முஸ்லிம் அதிகாரிகளை நியமிப்பது அவர்களது ஆட்சிக்கும் வரி அறவீட்டுக்கும் இலகுவானதாயிருந்தது. இந்த வழியில் பல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

1854ல் சம்மாந்துறையைச் சேர்ந்த அல்லிலெளவ்வை உடையார் பிரித்தானிய தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டதாகக் குறிப்புகள் உண்டு. இதே காலத்தில் பல தமிழர்களும் உடையார்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கு முன்பும் இருந்திருக்கின்றனர். அவர்களது பெயர்கள் சரியாக அறிய முடியவில்லை. இதே பதவிகள் ஒல்லாந்தர் காலத்திலும் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த உடையார்களின் கடமை பற்றி ஒரு செப்பேட்டுக் குறிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

"உடையார்களாக இருக்கப்பட்ட பேர்கள் இந்த ராச்சியத்தின் அந்தக் குடியானவர்களிடமாகத் தாங்கள் தலைக் கடமை முதலாக நிலங்கள், தோட்டங்கள், மரங்களுக்கு வாங்கப்பட்ட கடமைப் பணங்களுக்குத் திட உறுதின கைச்சாத்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது. அந்தப்படியாகத்தானே இறைசுவதோரமாருந் தங்கள் கீழாகிய உடையார்கள் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட நிலக்கடமை, தலைக்கடமை முதலான பணங்களுக்கும் தாங்கள் ஒப்புக்கொண்ட படிக்கு கைச்சாத்துக் கொடுக்க கடனாளியாயிருக்கிறார்கள்....."
என நீண்டு செல்கிறது.

இதில் உடையார்களின் பொறுப்புக்கள், கடமைகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வரியை அறவிட்டு அதிகாரியிடம் கொடுத்து பற்றுச்சீட்டுப் பெறல், அறவிடுவோருக்கு பற்றுச்சீட்டு வழங்குதல் இவை பட்டோலையாயிருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. இவர்களின் மற்றைய பிரதான பொறுப்பு ஊர்க்காவல் பற்றியதாகும். களவு, கொள்ளை, கற்பளிப்பு, போன்ற சமூக விரோத செயல் புரிவோரை அறுக்கை பண்ணுவது(கட்டுப்படுத்துவது) அமைதியை நிலைநாட்டுவது, மக்களை அரசுக்கு விசுவாசமாக இருக்கச் செய்வது, நீதியை நிலை நாட்டுவதில் உயர் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது இதில் இவர்களது அதிகாரமும் அரசியல் பலமும் தெளிவாக விளங்குகிறது.

சம்மாந்துறையைச் சேர்ந்த பலர் இவ்வாறு பிரித்தானியரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாணிக்கப்போடி வன்னியன்
மஜீது வன்னியனார்
அலி வன்னியனார்
சங்கநாத பிள்ளை உடையார்
வேலுப்பிள்ளை உடையார்
உமறுலெவ்லைவப்போடி உடையார்
அல்லிலெவ்வை உடையார்
மீராலெவ்வைப்போடி உடையார்
முகம்மதுலெவ்வை உடையார்
அகமதுலெவ்வை உடையார்
முகைதீன்வாவா உடையார்
இப்றாலெவ்வை உடையார்
பிஸ்கால் உடையார்

பிஸ்கால் என்பது காணி சார்ந்த வேலைகளைக் கவனிப்பவர் எனப்பொருள்படும். இவர்களது ஆட்சிக்காலம் சரியாக வரையறுத்துக் கூற முடியாவிட்டாலும் பல சம்பவங்கள், குறிப்புக்கள் இவர்கள் கடமை புரிந்தமையை எடுத்துக்காட்டுவனவாயுள்ளன.

கொஸ்தாப்பர் என்ற ஒரு அதிகாரப் பதவியும் வழங்கப்பட்டிருக்கிறது. இது பொலிஸ் கடமைகளைச் செய்யும் ஒரு பதவியாகும். குற்றவாளிகளைக் கைதுசெய்து நீதி மன்றத்துக்குச் சமர்ப்பிப்பது இவர்கள் பொறுப்பாயிருந்துள்ளது.

கண்டி மன்னன் விசுவாசிகள்

பலர் ஆங்கிலேய ஆட்சிக்கு ஆதரவாக இருந்து பல பதவிகளைப் பெற்றிருந்தது போல கண்டிய மன்னனுக்கும் மற்றொரு சாரார் விசுவாசமாயிருந்துள்ளனர். குறிப்பாக அந்நியர்கள் கண்டி இராஜ்யத்துக்கு ஆபத்தை அல்லது அச்சுறுத்தலை ஏற்படுத்திய போது சுதேசிகளான முஸ்லிம்களும் தமிழர்களும் அந்நியப்படைகளைத் தடுத்துப் போராடினர். அதற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஒந்தாச்சி மடம் என்ற இடத்தில் பிரித்தானியப்படைகளின் - கண்டி நோக்கிய முன்னேற்றத்தைத் தடை செய்த சுதேசிகளைப் பிரித்தானிய அரசு தேசத்துரோகிகள் என்ற பிரகடனம் செய்தது. இது பிரகடனப்படுத்தப்பட்டது 04 – 06 – 1804 ம் திகதியாகும். பின் குறிப்பிடப்படுவோர் 01 – 09 – 1804 ம் திகதிக்கு முன்னர் சரணடையாவிட்டால் அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனப் பிரகடனப்படுத்தியது. அப்போதைய தேசாதிபதி றொபட் நோட் என்பவராவார். இதில் மொத்தம் 169 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இவர்களில் 7 பேர் முஸ்லிம்கள் அவர்களில் 3 பேர் திருகோணமலை மாவட்டத்தையும் 4 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள். இவர்கள் பின்வருபவர்களாவர்.

1.	ஹசன் அபூபக்கர் உதுமாலைவ்வை	கல்முனை
2.	அனுஸ்லெப்பை மரைக்கார்	மருதமுனை
3.	ஈசா முகாந்திரம்	சம்மாந்துறை
4.	மீராலெவ்வை முகாந்திரம்	ஏறாவூர்

சம்மாந்துறையில் கண்டி மன்னனின் ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்தும் ஒரு சக்தி படைத்தவராக இந்த ஈசா முகாந்திரம் திகழ்ந்தார். இதில் குறிப்பிடும் முகாந்திரம் என்பது ஒரு குழுவின் தலைவரைக் குறிக்கும். இன்று கூட முகாமை என்ற சொல் வழக்கில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது சபையின் அல்லது இயக்கத்தின் தலைவரையே முகாந்திரம் என்று குறிப்பிட்டமை வழக்காகும். ஈசாலெவ்வை என்பது இவரின் இயற்பெயராகவும் முகாந்திரம் என்பது தலைமைப்பதவிக்கான அடைமொழியாகவும் கொண்டு அமைந்த பெயரே ஈசா முகாந்திரம்.

வன்னியனார் என்பது ஆட்சி அதிகாரம் மிக்க பதவியாகக் காணப்பட்டது. இவர்கள் மிகப் பரந்த நிலப்பரப்புக்குப் பொறுப்பாயிருந்தனர். இவர்களுக்குக் கீழ் சிறு நிலப் பரப்புக்கு பொறுப்பாக உடையார்கள் இருந்து செயலாற்றியுள்ளனர். மக்களின் தேவைகள் அனைத்தையும் இவர்கள் கவனித்து வந்துள்ளனர். விவசாயம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், நீதி, குற்றத்தடுப்பு, வரிஅறவீடு, வனபரிபாலனம் போன்ற அனைத்து விடயங்களிலும் இவர்கள் பணியாற்றினர். மன்னனின் கீழ் குறுநில மன்னன் போலும், பிரித்தானிய அரசின் கீழ் ஒரு தேசாதிபதி போலவும் இவர்கள் கடமையாற்றினர். இதனால் தமது பிரதேச அபிவிருத்தியில் இந்த வன்னியர்கள் மிக கண்ணும் கருத்துமாயிருந்து கடமையாற்றியுள்ளனர்.

உதுமாலெவ்வைப்போடி உடையார்

இவர் சம்மாந்துறையை மீக நீண்ட காலம் நிர்வகித்தமைக்கான பல சான்றுகள் உள்ளன. உடையாரகவும் பள்ளிவாசல் தலைவராகவும் இருந்து மக்கள் நலனுக்குத் தன்னாலான சேவைகளைச் செய்து வந்துள்ளார். இவர் 1800ம் ஆண்டளவில் வாழ்ந்ததாகக் கருத முடிகிறது. இவரதுவாழ்விடம் மல்கமபிட்டியாயிருந்துள்ளது. அக்கால விவசாயச் செய்கை, நீர்ப்பாசன வசதி சுவாத்தியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் அக்கிராமத்தில் அடங்கப்பட்ட அவுலியாவின் சிறப்பைக்கொண்டும் அங்கு நடைபெற்ற சில விசேட அதிசயங்களைக் கொண்டும் மல்கம்பிட்டி, பிரதான கிராமமாகக் திகழ்ந்தது. இங்கு வாழ்ந்த உமறுலெவ்வைப்போடி உடையார் சம்மாந்துறைப்பற்று பிரதேச உடையாராகவும் பள்ளிவாசல் பரிபாலகராகவும் இருந்துள்ளார். இன்னும் சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான், பள்ளிவாசல்கள், சேத்திரங்கள் பராபரிப்பு சபை என்றே எமது பள்ளி பரிபாலனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மிகப் பரந்த பிரதேசத்தை தன்னகத்தே கொண்டிருப்பதும் இச் சபைக்குச் சொந்தமான காணி மல்கம்பிட்டி பள்ளிவாசலை அண்மித்துப் பெருமளவு காணப்படுவதும் மல்கம்பிட்டியை மிக முக்கிய இடமாகக் காட்டுகிறது. இந்த உமறுலெவ்வைப்போடி உடையாரும் மல்கம்பிட்டியிலேயே தமது இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். ஊரின் தலைவரின்றி இங்கு எந்த வேலையும் நடைபெறமாட்டாது. ஜும்ஆத்தொழுகை கூட தலைவர் வராமல் ஆரம்பிக்கப்படமாட்டாது.

அக்காலத்தில் தொழுகைக்கான நேரம் முக்கியமல்ல தலைவரின் பிரசன்னமே முக்கியமாயிருந்தது. இவர் தனது மகன் சுலையுமாலெவ்வையை இந்தியாவில் மார்க்கக்கல்வி கற்பதற்காக அனுப்பி கற்பித்தார். மிக நீண்டகாலம் கல்வி கற்றுத்தேறியபின் சுலையுமாலெவ்வை, ஆலிமாக வெளியாகி ஊர் வந்திருந்தார். அப்போது இவர்களுக்கு சம்மாந்துறையிலும் வீடு இருந்தது. ஒரு நாள் வெள்ளிக்கிழமை ஜும்ஆத்தொழுகை நாள் எல்லோரும் வந்திருந்தனர். குறிப்பிட்ட இமாமும் வந்துவிட்டார் ஆனால் உமறுலைவ்வைப்போடி உடையார் வரவில்லை; உரிய நேரம் கடந்து செல்கிறது. சுலையுமாலெவ்வை ஆலிம் "ஏன் இன்னும் ஜும்ஆ ஆரம்பிக்கவில்லை" எனக்கேட்டார். அதற்கு இமாம் "உங்கள் தந்தையான ஊர்த்தலைவர் வரவில்லை" எனக் கூறினார். "நான் கூறுகிறேன் நீங்கள் ஜும்ஆவை ஆரம்பியுங்கள்" என்று கூறி தொழுகையும் முடிந்த பின்புதான் உமறுலெவ்வைப்போடி உடையார் வந்தார். மக்கள் கலைந்து செல்வதைப்பார்த்த அவர் "ஏன்" என்று விசரித்தார். "உங்கள் மகன் சுலையுமாலெவ்வை ஆலிம் உரிய நேரத்துக்கு தொழுகை நடாத்தக்கூறினார்" என்ற விடயம் கூறப்பட்டது. "இன்றிலிருந்து எனது மகன் சுலையும்லெவ்வை ஆலிமே ஊர்க் கடமைகளுக்குப் பொறுப்பாயிருப்பார்" எனக் கூறிச் சென்றார். இங்கு இரு விடயங்களைக் காணமுடிகிறது.

1. மார்க்கப்புரட்சி ஒன்று நடைபெற்றுள்ளது உரிய நேரம் முக்கியம் என்பதும் தலைவர் முக்கியமில்லை என்பதும் உணர்த்தப்படுகிறது.
2. ஊர்ப் பொறுப்புக்கள் தந்தை வழியாக மாற்றப்படுகிறது. இது அன்றிருந்த அரச பரம்பரையும் இவ்வாறு தந்தை வழி மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

A.L.காரியப்பர் (1900)

முன்பு கூறியது போல பிரித்தானியர் தமது நிர்வாக உத்தியோகத்தர்களாக காரியப்பர்களை நியமித்தனர். 1900ம் ஆண்டில் A.L. காரியப்பர் சம்மாந்துறைப் பற்று வன்னிபமாக நியமிக்கப்பட்டார். இவர் பற்றி விரிவான விளக்கங்கள் கிடைக்கப்பெறாவிட்டாலும் இவர் ஆங்கிலம் பேசக் கூடியவராக இருந்துள்ளார். விவாகம், விவாகரத்து, சொத்துப்பிணக்குகள் தீர்த்தல், கல்வி, தொழில், விவசாயம், நீர்ப்பாசனம், வனபரிபாலனம், கட்டாக்காலி மாடுகள் பராமரிப்பு, வன விலங்குகள் பாதுகாப்பு, வேறு பிரதேசங்களுக்குச் செல்ல அனுமதி வழங்குதல், வரி அறவீடு, காணி அபிவிருத்தி போன்ற கடமைகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

மீராலெவ்வை முகம்மதலி (அலிவன்னியார்)

இவர் சம்மாந்துறைப் பற்று வன்னியனாராக இருந்துள்ளார். 1933ம் ஆண்டில் இவர் மரணித்ததாக கூறப்படுகிறது. அதற்கு முன்பு இவர் வன்னியனராகக் கடமையாற்றியுள்ளார். இவர் நீர்ப்பாய்சல் வன்னியனராகவும் கடமையாற்றியுள்ளார். இவரது காலத்தில் பல அபிவிருத்தி வேலைகள் சம்மாந்துறைப்பற்றில் நடைபெற்றுள்ளது. வீதிகள் அமைத்தல், பல புதிய வாய்க்கால்கள் அமைத்தல், புதிய நிலங்கள் விவசாயத்துக்குட்படுத்தப்படல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மிசனறிப் பாடசாலைகள் அமைப்பதிலும் இவர் முன்னின்றுழைத்துள்ளார்.

K.M. மஜீது வன்னியனார் (1933க்குப் பின்)

இவர் சம்மாந்துறையில் திருமணம் செய்தவர். சாய்ந்தமருதைச் சேர்ந்தவர். முன்னாள் MP A.M. மேர்சாவின் தந்தை. M.A. அப்துல் மஜீது MP யின் தாயின் தந்தையும் இவரே. இவரும் சம்மாந்துறைக்குப் பல சேவைகளைச் செய்துள்ளார். உணவு உற்பத்தியில் கூடிய கவனம் செலுத்தியுள்ளதாகக் காணக்கிடக்கிறது. இவர் 1936ம் ஆண்டு நடைபெற்ற சட்ட சபைத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்துள்ளார்.

இம் மூவரது காலத்திலும் பல உடையார்களும் இங்கு இவர்களுக்குக் கீழ் சேவையாற்றியுள்ளனர்.

M. S. காரியப்பர்

இவர் பொத்துவில் பாணமைப்பற்று வன்னியராகவும், கரைவாகுப்பற்று வன்னியராகவும், பின் சம்மாந்துறைப்பற்று வன்னியராகவும் கடமையாற்றியுள்ளார். இவரது காலத்தில் மஞ்சள் உடையார், (இவர் சிவசம்பு விதானையின் தந்தை) என்பவரும் உடையாராகக் கடமையாற்றியுள்ளனர். இதே காலத்தில் சோலை வரி அறவீட்டாளர்களாக பின்வருவோர் கடமையாற்றினர்.

பள்ளித்தெருப் பகுதிக்கு	சாமித்தம்பி
வீரமுனைப் பகுதிக்கு	காளிக் குட்டி
1ம் குறிச்சி	சக்கர விதானை
2ம் குறிச்சி	முகம்மது யாசீன்
3ம் குறிச்சி	வெள்ள விதானை
4ம் குறிச்சி	தொப்பியர் விதானை மீ. முகம்மதுத் தம்பி

சம்மாந்துறையின் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் பெரும்சிரமும் வியாபாரிகளின் சுரண்டலுக்கும் உள்ளாகித் தவித்தனர். அதனை நிவர்த்தி செய்ய ஊர் பிரமுகர்களான முகம்மதலி போஸ் மாஸ்டர், இப்றாலெவ்வை போன்றவர்களுடன் இவர் இணைந்து "ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம்" எனற பெயரில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்து அதன் மூலம் மக்கள் நன்மையடையச் செய்தார். இதற்குப் பிரதி உபகாரமாக M.S. காரியப்பர் 1947ம் ஆண்டு கல்முனைத் தொகுதிப் பாராளுமன்றத் தொகுதிக்குப் போட்டியிட்ட போது அவரை வெற்றி பெறச் செய்தனர். 1952ம் ஆண்டு வரை MP யாக இருந்து சம்மாந்துறைக்குப் பல சேவைகளைச் செய்துள்ளார். 1952ம் ஆண்டு தேர்தலில் A.M. மேர்சா(இப்தி மேர்சாவின் தந்தை) என்பவரிடம் தோல்வி அடைந்தார். பின் 1956ல் M.A. அப்துல் மஜீத் கல்முனைத் தெகுதிக்குப் போட்டியிட்டார். அதில் M.S. காரியப்பர் வெற்றியீட்டினார்.

A.M. மேர்சா

இவர் மஜீது வன்னியனாரின் தந்தையாவார். சம்மாந்துறையைச் சேர்ந்தவர்; சாய்ந்தமருதில் திருமணம் செய்தார். 1952ம் ஆண்டு தேர்தலில் M.S. காரியப்பரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் விவசாய உற்பத்தியிலும் கால் நடை வளர்ப்பிலும் மிகக் கூடிய கவனம் செலுத்தினார். இவர் பதவியிலிருக்கும் போதும், பின்பும் உயிருடன் இருக்கும் வரை அம்பாறை மாவட்டத்தில் மேய்ச்சல் நிலம் ஒன்றை ஒதுக்கிக் கொள்வதற்குப் பெரிதும் பாடுபட்டார். அது கைகூடவில்லை. இவரது பதவிக் காலத்தில் சம்மாந்துறை ஹிஜ்றா வீதியில் அரச தேவைக்காகப் பெரும் நிலப் பகுதியை ஒதுக்கி வைத்ததன் மூலம் வைத்தியசாலை, பிரதேச செயலகக் காரியாலயம், பொலிஸ் நிலையம், தபாற்கந்தோர், உரக்களஞ்சியம், கல்விக்காரியாலயம் போன்றவை ஒரே பகுதியில் அமைவதற்குக் கர்த்தாவாக இருந்தார். இவர் தனது பதவிக் காலத்தில் ஜப்பான் நாட்டுக்குச் சென்று நவீன விவசாய முறைகளைப் பார்வையிட்டுப் பயிற்சி பெற்று வந்து எமது மக்களுக்கு எடுத்துக் காட்டினார். பின்பு வாழைச் சேனை காகித ஆலையில் முகாமையாளராக இருந்தும் எமது மக்களுக்குச் சேவையாற்றியுள்ளார். 1956ம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்த போது சம்மாந்துறையைச் சேர்ந்த M.A. அப்துல் மஜீத் அவர்கள் தேர்தலில் போட்டியிட விரும்பியமையால் தான் வெற்றி பெறக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் தனது சகோதரியின் மகனான அப்துல் மஜீதுக்கு இடம்விட்டு விலகிக் கொண்டார். இது இவரது மிகப் பெருந் தன்மையைக் காட்டுகின்றது. இத் தேர்தலில் அப்துல் மஜீத் M.S. காரியப்பரிடம் தோல்வி கண்டார்.

M.A. அப்துல் மஜீத்

1960 ம் ஆண்டுத் தேர்தலில் மார்ச் - ஜூலை ஆகிய மாதங்களில் நடைபெற்ற இரு தேர்தல்களிலும் வெற்றி பெற்று, தொடர்ந்து பல தேர்தல்களிலும் வெற்றி பெற்று 1994 வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். இவர் தமது காலத்தில் சம்மாந்துறையில் காணப்பட்ட அரசியல் பிரிவினைகளைப் பெருமளவு களைந்து ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தார் எனக் கூறப்படுகின்றது. அவரது காலத்தில் கூடுதலாக கல்வித் தேவைகளை நிறைவு செய்வதில் மிகக் கூடிய கவனம் செலுத்தினார்.

கல்முனை, பொத்துவில் என இரு தொகுதிகளாக்கப்பட்ட போதும் பொத்துவில் தொகுதியின் உறுப்பினராக இருந்து பின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் எனப்பிரிக்கப்பட்ட போது சம்மாந்துறைத் தொகுதிக்கும் உறுப்பினராக இருந்தார். இந்தப் பிரதேசத்தில் மிக நீண்ட காலம் (34வருடம்) பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தமை இவரது நற்பண்புகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இக்காலத்தில் காணி விவசாய பிரதிஅமைச்சராகவும், மின்சார பிரதிஅமைச்சர், தபால்தந்தி பிரதிஅமைச்சர், மட்டக்களப்பு மாவட்ட

அமைச்சர், நெசவுக்கைத்தொழில் பிரதிஅமைச்சர் போன்ற பதவிகளையும் வகித்துள்ளார். சம்மாந்துறை ஒரு விவசாயக் கிராமம் என்பதனாலும் அதிக மக்கள் விவசாயத்தில் தங்கியிருப்பதனாலும் விவசாய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இவர் கூடிய முக்கியத்துவமளித்துள்ளார். பல நீர்ப்பாசன அணைகளையும் சம்மாந்துறை, மல்வத்தை, சவளக்கடை, இறக்காமம் விவசாய விஸ்தரிப்பு நிலையங்களையும் அமைத்தார். சம்மாந்துறை தபாற்கந்தோர், வைத்தியாலை விடுதிகள் எனபவற்றைக் கட்டுவித்தார். சம்மாந்துறையின் விஸ்தரிப்புக்குப் பெரிதும் உதவினார். 10 வீட்டுத்திட்டம், 60 வீட்டுத்திட்டம், 100 வீட்டுத்திட்டம், வீரமுனை 30 வீட்டுத்திட்டம், சம்புமடு 150 வீட்டுத்திட்டம் எனப் பல வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவைகளுக்குத் தேவையான பாதை, மின்சாரம் போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தார். மஜீட்புரம் பேரின மக்களால் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு கிராமமாகும். இதனை நடுநிசியில் சென்று அங்கிருந்த பேரின மக்களை விரட்டி முஸ்லிம் மக்களைக் குடியமர்த்தியமையால் இது இவரது பெயரில் மஜீட்புரம் என அழைக்கப்பட்டது. மேலும் தொழில்நுட்பக் கல்லூரியை ஏற்படுத்தியமை, பல பாடசாலைக் கட்டடங்களை அமைத்தமை யாவும் இவரது கல்வியின்பால் இருந்த ஊக்கத்தைக் காட்டுவனவாகும். இவர் தனது வீட்டில் ஒரு வாசகம் எழுதிவைத்திருந்தார். "எனது கூலி, விவசாயியின் மகன் எனது நிலைக்கு உயர உழைப்பதே எனது வேலையாகும், அதனையே நான் விரும்புகிறேன்." இது அவரது தாராள மனதுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சட்டம் வந்த போது பல-ப.நோ. கூ.ச. களை ஏற்படுத்தினார். இதனால் மக்கள் பெரிதும் நன்மை பெற்றார்கள். 32 ஏக்கர் பரப்புடைய மிகப்பெரிய மையவாடியை ஏற்படுத்தி அதற்குச் சுற்றுமதிலும் அமைத்திருந்தார். சுனாமியின் போது ஒரே நாளில் 3000க்கு மேற்பட்ட ஜனாசாக்களை அடக்கக்கூடிய வாய்ப்பு இதனாலேயே ஏற்பட்டது. இது இவரின் தூரப் பார்வைக்கு உதாரணமாகும்.

இவரது காலத்தில் இன உறவு பெரிதும் பேணப்பட்டு வந்தது. தமிழ் மக்களுடன் மிக நெருங்கிய உறவு வைத்திருந்தார். பல தேர்தல்களில் சுயேச்சை உறுப்பினராகவே போட்டியிட்டார். இவரை ஒரு முஸ்லிம் பிரேரித்தால் ஒரு தமிழர் ஆமோதிப்பார். அந்தளவு அவர் தமிழ் முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தார். வாக்காளர்களில் பெரும்பாலான தமிழ் வாக்காளர்கள் இவருக்கு வாக்களித்தனர். அதே போல தமிழ் பிரதேசங்களுக்குத் தன்னாலான உதவிகளை செய்வதில் பின்னிற்கவில்லை. இவர் தமிழரசுக் கட்சியில் சேர்ந்ததில்லை. ஆனால், 1956ம் ஆண்டு சத்தியாக்கிரக காலத்தில் இவரும் சத்தியாக்கிரகம் செய்வதற்கு பங்கு கொண்டார். மேலும் சிங்கள மக்களுடனும் நெருக்கமான உறவை வைத்திருந்தார். இவரது தொகுதி மக்கள் மட்டுமன்றி எல்லா பிரதேசங்களிலும் எல்லா இனத்திலும் மிகக் கூடிய நண்பர்களைக் கொண்டிருந்தார். சுயேச்சை உறுப்பினராக இருந்து கொண்டு பெருமளவு சேவை செய்வதற்கு இவரது உயர்மட்ட அறிமுகத்தன்மையே காரணமாயிருந்தது. எதிரியிடமும் இன்முகத்துடன் பழகும் சுபாவமுடையவராக இருந்தார்.

M.H.M. அஷ்ர.்.ப்

மிக நீண்ட காலமாக சுயேச்சை அரசியல் பெரும்பான்மைக் கட்சி அரசியல் நிலவி வந்த எமது பிராந்தியத்தில் ஒருகட்சி அரசியல் புகுத்தப்பட்டது. முஸ்லிம்காங்கிரஸ் என்ற அழகிய பெயருடன் ஒரு கட்சி தோன்றியது. இதன் தாபகத்தலைவராக எம்.எச்.எம். அஷ்ர.்.ப் இருந்தார். அவர், இதுவரை இருந்து வந்த அரசியல் அம்சங்களையும் கலாச்சாரங்களையும் புறந்தள்ளி மிகக் கூடிய சமுக நம்பிக்கையை மக்களுக்கூட்டி தனித்தனி மனிதர்களால் பெற்ற செல்வாக்கு எமக்கு பயன்தராது என்றும் நாம் ஒன்றுபட்டால் எமது உரிமைகளையும் அரசியல் அதிகாரத்தினையும் பெறமுடியும் என்ற கோசத்துடன் பிரச்சாரம் செய்தார். இவரது பிரச்சார உத்திகளும் வேறாக இருந்தன. அரசியலில் மார்க்கம் புறம்பானதல்ல என்ற உயர்ந்த கருத்தை முன்வைத்தார். முஸ்லிம்களின் ஒற்றுமையின் அவசியத்தை அவர்கள் இழந்திருக்கின்ற உரிமைகளை அடிப்படையாகச் சுட்டிக்காட்டி மக்களை மிகவும் உணர்வுபூர்வமாக ஒன்றுபடுத்தினார். மக்கள் இது எமது கட்சி இந்தக்கட்சியின் மூலம்தான் எமது உரிமைகளைப் பெறமுடியும் என்று மிகத் தீவிரமாக ஒன்று திரண்டனர். அவரால் மக்கள் மிகவும் கவரப்பட்டனர். இந்த அடிப்படையில் 1987ல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ்

அதன் பிரதேசங்களில் மிகக் கூடிய வெற்றியைப்பெற்றது. அதில் சம்மாந்துறையில் இருந்த இரு உறுப்பினர்களில் ஒருவர் ஜனாப் M.Z. முனாஸ்காரியப்பர், மற்றையவர் M.Y.M. மன்சூர். இவர் பின்னர் LTTE யினரால் சுடப்பட்டு கடத்திச் செல்லப்பட்டார். இன்று வரை இவரது உடல் கிடைக்கவில்லை. இவர்களும் தங்களாலான பங்களிப்பை மாகாணசபை ஆட்சியின் போது செய்தனர் என்பது திருப்திப்படக்கூடியதே.

இந்த வழியில் 1989ம் ஆண்டு முதன்முதல் பாராளுமன்றத் தேர்தல், தொகுதி முறையின்றி மாவட்ட அடிப்படையில் விகிதாசார பிரதிநிதித்துவ ரீதியாக நடைபெற்றது. இதில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு மிகக் கூடிய வாக்குகளைப் பெற்ற போதும் முன்பிருந்த பெரும்பான்மைக் கட்சிகளைச் சார்ந்த தனிப்பட்ட செல்வாக்குப் பெற்ற முஸ்லிம் பிரதிநிதிகளின் பிரிவினையினால் 1341 வாக்குகளினால் மூன்று உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இழந்து ஒரு உறுப்பினர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார். அந்த உறுப்பினர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களாவார். இவர், பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தார். இக்காலத்தில் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்தது என்றாலும் பாராளுமன்றத்தில் இவரது உரை காத்திரமாக அமைந்தது. முழுப் பாராளுமன்றத்தையும் இவர் தமது ஆளுமை மூலம் கைக் கொண்டிருந்தார் என்றே கூறலாம். தினமும் வானொலியிலே பாராளுமன்றத்தின் இன்று என்ற நிகழ்ச்சியைக் கேட்பதில் முஸ்லிம் மக்கள் மிகத் திருப்தியினைப் பெற்றிருந்தனர். இக்காலத்தில் கட்சி மிகக் கூடிய வளர்ச்சியைப் பெற்றது. இவர் 1994 மார்ச் மாதம் நடைபெற்ற பிரதேசசபைத் தேர்தலில் கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளச்சேனை, அக்கறைப்பற்று, பொத்துவில் ஆகிய ஆறு பிரதேச சபைகளில் ஒன்றைத் தேற்றால் கூட எனது பாராளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்வேன் எனச்சபதமிட்டார். அன்று ஐக்கிய தேசிய கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் மிகக் கூடிய போட்டி நிலவிய காலம். ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சர்களாக இருந்த இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் மிகப்பலமான எதிர்ப்பைக் காட்டினர். இதனாலேயே இச்சபதத்தைச் செய்தார். ஈற்றில் நிந்தவூர் 150 வாக்குகளாலும், பொத்துவில் 530 வாக்குகளாலும் தோல்வியுற்றது. இதனால் உடனடியாகத் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து அடுத்த வாக்கினைப் பெற்றிருந்த U.L.M. முகைதீன் அவர்களுக்கு அதனை வழங்கினார். இதன் மூலம் அவரது வாக்குறுதியின் உண்மைத் தன்மை முழு உலகுக்கும் எடுத்துக் காட்டக்கூடியதாக இருந்தது.

பின்பு 1994 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இதே போல இரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஒருவர் தலைவர் அஷ்ரப் அவர்கள் மற்றவர் சட்டத்தரணி U.L.M. முகைதீன் அவர்கள். இந்த பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அமைச்சரவையில் மிக முக்கியமான கப்பல் துறை துறைமுகங்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக நியமனம் பெற்றார். அன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சிதான் பாராளுமன்றத்தை அமைப்பதற்கு உதவியது, அது இல்லாவிட்டால் தமது பெரும்பான்மையை இழந்து விடும் நிலை இருந்தது. அத்துடன் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாக வருவதற்கும் அஷ்ரப் அவர்களும் SLMC யும் மிகக்கூடிய உதவியைச் செய்தது. இவைகளால் அன்று அஷ்ரப் ஜனாதிபதியால் மிகவும் மதிக்கப்பட்டார். இவரது காலத்தில் மிகக் கூடிய இளைஞர்களுக்குத் துறைமுகத்தில் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும் பல துறைகளில் முஸ்லிம் இளைஞர்கள் மட்டுமன்றி தமிழர் சிங்களவர்களும் வேலைவாய்ப்பினைப் பெற்றனர். இக்காலத்தில் ஒலுவில் துறைமுகத்திட்டம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம், கல்முனை தெற்கு அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, மகாபொல பயிற்சிநிலையம் என்பவற்றையும் மேலும் பல பாடசாலைகள் வைத்தியசாலைகள் என்பவற்றுக்கு பலமாடிக்கட்டிடங்கள் போன்றவற்றையும் செய்ததுடன் கட்சி அரசியலின் கட்டாயத்தையும் ஸ்திரத்தன்மையையும் வலியுறுத்தி வந்தார். இவருக்குப்பின் சுயேச்சையாக ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத ஒரு சூழ்நிலை எற்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக அடுத்த பாராளுமன்ற தேர்தலில் A.M.நௌசாட் அவர்கள் மிகப் பெரிய அரசியல் பின்னணியுடனும் பல ஊர்களின் பங்கு பற்றுதலுடனும் போட்டியிட்ட போதும் கூட வெற்றிபெற முடியாமற் போய்விட்டது என்பதைக் குறிப்பிடலாம். மேலும் அஷ்ரப் அவர்கள் மக்கள்

பாதிக்கப்டுவதை மிகவும் விசனத்துடன் எதிர்த்து வந்தார். இதனால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு நட்டயீடு வழங்கினார். புனர்வாழ்வு அமைச்சின் மூலம் பல தமிழ் முஸ்லிம் கிராமங்களை மீளமைப்புச் செய்தார். இதில் சம்மாந்துறை ஹிஜ்ராபுரம் ஒன்றாகும். இவர் அரசியல் சட்டம் போன்றவற்றில் உயர்ந்து விளங்கியது போல இலக்கியத்திலும் சிறந்து விளங்கினார். "நான் எனும் நீ" என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டு வைத்தார். இது 600 பக்கங்களைக் கொண்டிருந்தது. இப்படிப் பல்வேறு கோணங்களில் தமது ஆளுமையை நிலை நிறுத்தி நாட்டின் அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியல் சக்தியாக வந்த போது அவர் 2000 ம் ஆண்டு செப்டம்பர் 16 ம் திகதி கொலை செய்யப்பட்டார். இதனால் முழு நாடுமே அழுதது. குறிப்பாக முஸ்லிம் சமூகம் தமது அரசியல் அந்தஸ்தை இழந்தது என்றே கூற முடியும்.

U.L.M. முகைதீன்

சம்மாந்துறையின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மர்ஹூம் U.L.M. முகைதீன் அவர்கள் தலைவர் அஷ்ரப் அவர்களுடனேயே பாராளுமன்றத்தில் இருந்தார்.இவர் தனது பாராளுமன்றப் பணியை மிகச் சிறப்பாகச் செய்தார் என்று அஷ்ரப் அவர்களே புகழ்ந்து கூறியுள்ளார். முஸ்லிம்களின் அடையாளமான துருக்கித் தொப்பியுடன் கோட்டும் சூட்டுமாக பாராளுமன்றம் செல்வார். இவரது தோற்றமும் உடையும் இவருக்கு ஒரு கௌரவத்தை அளித்தது. எல்லோரும் செல்லமாக இவரை "தொப்பி முகைதீன்" என்றே அழைத்தார்கள். அது இவரின் காரணப் புனைப் பெயராக இன்று வரை திகழ்கிறது. தொப்பி முகைதீன் என்றால் முழு நாடுமே அறியும். நீதிபதி அப்துல் காதர், அறிஞர் சித்தி லெப்பை, சேர் றாசீக் பரீட் போன்றவர்களின் பின், துருக்கித் தொப்பியை இவர் மிகவும் கவனமாகப் பேணி வந்தார். நீதிமன்றம், பாராளுமன்றம் போன்றவற்றுக்கு மட்டுமன்றி அனைத்து நிகழ்ச்சிகளிலும் இவர் அந்தத் தொப்பியுடனேயே காட்சியளித்தார். இலங்கையில் துருக்கித்தொப்பி அணிந்த கடைசி மனிதர் இவர் என்று கூறலாம். அதன் பின் வேறு யாரும் இவ்வாறு தோற்றமளிக்கவில்லை என்றே கூற வேண்டும். இவர் வரலாற்று நிகழ்வுகளுடனும் தலைவர்களுடனும் மிகக் கூடிய தொடர்பை வைத்திருந்தது மட்டுமன்றி அவர்களின் கொள்கைகள் மீதும் மிகக் கூடிய பற்றுடையவராகக் காணப்பட்டார்.

இவர் நீண்ட காலமாக இடதுசாரிக் கொள்கையின் பிடிப்புடன் காணப்பட்டாலும் 1956ம் ஆண்டு பண்டாரநாயக்க ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தீவிர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார். இது இவர் டாக்டர் பதியுதீன் ம.மூத் அவர்களுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவின் காரணமாக இருக்கலாம். இவர் சட்டக் கல்லூரியில் பயிலும் போதே பல பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வந்தார். தனது அரசியல் அறிமுகத்தை வைத்துப் பலருக்கு ஆசிரிய நியமனங்களை பெற்றுக் கொடுத்துள்ளார். குறிப்பாக W.W. தஹநாயக்க கல்வி அமைச்சராக இருந்த போது பலருக்கு ஆசிரிய நியமனங்களைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். பின் ஊர் வந்து சட்டத்தரணியாகத் தொழில் புரியும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளராகவும் இருந்து அக் கட்சியை இப்பிரதேசத்தில் பிரபல்யப்படுத்தினார். பல்வேறு தேர்தல்களிலும் அவரும் ஏனையவர்களும் நின்று போட்டியிட்ட போதிலும் வெற்றி பெறமுடியாமற் போய்விட்டது.

1947 ல் மல்வத்தை கமநல சேவை மத்திய நிலையத்தின் தலைவராக இருந்து APC கட்டிடத்தை அமைத்தார். அக்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருந்தமையால் கல்வியமைச்சரும் அவரது நண்பருமான பதியுதீன் அவர்கள் மூலம் சம்மாந்துறைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் திறந்து வைக்க மிகவும் பிரயத்தனமெடுத்து ஆரம்பித்து வைத்தார். அன்றைய பராளுமன்ற உறுப்பினரான அப்துல் மஜீத் அவர்களும் இதற்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். 1989ல் நடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து போட்டியிட்டார். இதில் மர்ஹூம் M.H.M அஷ்ரப், சேகுஇஸ்ஸதீன் ஆகியோருக்கு அடுத்த வாக்கினைப் பெற்றார். ஆனால் 615 வாக்குகள் குறைந்தமையால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூன்று உறுப்பினர்களை பெற முடியாத நிலை ஏற்பட்டது. இதில் அஷ்ரப் மட்டுமே பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.அதனால் முகைதீன் பாராளுமன்றம் செல்ல முடியவில்லை. ஆனால் 1994ம் ஆண்டு

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆறு முஸ்லிம் பிரதேச சபைகளும் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிபெறாவிட்டால் நான் ராஜினாமாச் செய்வேன் என்று அஷ்ரப் சூழுரைத்திருந்தார். அதில் நிந்தவூர், பொத்துவில் ஆகிய இரு சபைகளும் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசயத்தில் தோல்வி கண்டன. இதனால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார். இரண்டாவது வாக்கைப் பெற்றிருந்த சேகு இஸ்ஸதீன் தலைவருடன் முரண்பட்டு கட்சிமாறியிருந்தமையால் அடுத்த வாக்குப் பெற்றிருந்த முகைதீன் பாராளுமன்ற உறுப்பினரானார். அடுத்து 1994ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸில் இரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமையால் இரண்டாவது தெரிவு வாக்கைப் பெற்ற U.L.M. முகைதீன் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலப் பகுதியிலேயே சந்திரிக்கா அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருந்தது. சமூர்த்தி உத்தியோகத்தர்கள் நியமனம் முழுவதும் இவரது காலப் பகுதியிலே வழங்கப்பட்டது. மேலும் துறைமுகத்துக்கான ஊழியர்கள் நியமனமும் தலைவர் அஷ்ரப் மூலமாக வழங்கப்பட்ட போது இவர் மிகவும் ஒத்துழைப்பாக இருந்தார். மேலும் இவரது காலத்தில் சம்மாந்துறைப் பிரதான வீதி விஸ்தரிப்பும், மணிக்கூட்டுக் கோபுர அமைப்பும், பௌசி மாவத்தை, முகைதீன் மாவத்தை என்பவற்றைச் சிறப்பாக அமைத்ததன் மூலம் சம்மாந்துறையின் குடியேற்றப் பிரதேசம் நகரப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சம்மாந்துறை வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டிடம் அன்றைய சுகாதார அமைச்சராக இருந்தவரும் இவரது நெருங்கிய நண்பருமான A.H.M.பௌசி மூலம் அமைத்தது சிறப்பம்சமாகும். 'கொலி சென்றர்' என்ற விவசாய நிலையக் கட்டிடம், பஸ்டிப்போ என்பவற்றையும் மிக நீண்டகாலமாக விவசாயிகள் நீரப்பாசனத்துக்கு ஆறுகள் தோண்டப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தமையை உணர்ந்து பலகோடி ரூபா செலவில் ஆறுகளையும் தோண்டுவித்தார். கல்முனைக் கல்வி நிலையம் இரண்டாகப் பிரித்து வலயக் கல்வி வலயம் அமைய இருந்தது. அவரின் விடாமுயற்சியாலும் சாதுரியத்தாலும் மூன்றாகப் பிரித்து சம்மாந்துறைக்கும் ஒரு கல்வி வலயம் ஏற்படுத்தியமை மிக்க நினைவு கூறத்தக்கதாகும். பின் 2000ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நுவாக் கட்சியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். சுமுகமான அமைதியான ஒரு அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவிக்க பகீரதப் பிரயத்தனம் செய்தும் அவரது உறவினர்கள் விட்டுக் கொடுக்காமையால் அவரால் அதனை அடைய முடியவில்லை. இறுதியாக 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் திகதி இறையடி எய்தினார்.

M.I. அன்வர் இஸ்மாயில்

U.L.M. முகைதீன் அவர்களின் தோல்வியின் பின் 2000ம் ஆண்டு தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரானார். இவர் தலைவர் அஷ்ரப் அவர்களால் வளர்க்கப்பட்டமையால் அவரின் சாணக்கியமும், அரசியல் அறிவும் கைவரப்பெற்றிருந்தார். மிகவும் இளைஞரான இவர் மிகப் பெரிய பொறுப்புக்களைச் சுமந்ததுடன் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தினார். மிக விரைவில் ஆட்சியாளர்களுடன் இணைந்து பிரதி அமைச்சரானார். தன்னையும், தன்னுடன் சேர்ந்தவர்களையும் நல்ல நிலையில் வைக்க வேண்டும் என்ற பேரவாக் கொண்டவர். சம்மாந்துறை மிக அழகாக தோற்றமளிக்க வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டவராவார்.

சம்மாந்துறை ஹிஜ்றாச் சந்தியில் அமைந்துள்ள பொதுச் சந்தைக் கட்டடம் மிக அழகாகக் கட்டப்பட்டது. ஊரின் இருபுறமும் வரவேற்பு வளைவுகள், ஜம்யத்துல் உலமாவுக்கான கலாச்சாரக் கட்டிடம் என்பவற்றை அமைத்து பிரமிக்கத்தக்க வகையில் அழகுபடுத்தும் அவாவும் ஆற்றலும் மிக்கவராக காணப்பட்டார். சம்மாந்துறையின் பள்ளிவாசல்களில் சிலவற்றை அபிவிருத்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தி வந்தார். இதுவும் ஊரின் அழகை மேலும் அழகுபடுத்துவதுடன் மக்களின் ஆத்மீக மேம்பாட்டுத் திருப்தியினையும் தோற்றுவித்தது. வீதி அபிவிருத்தி வேலைகள் விடுபட்டிருந்ததை தூண்டி செயற்படுத்தினார். லத்தீப் சேமன் வித்தியாலயம், இஸ்மாயில் வித்தியாலயம் போன்ற புதிய பாடசாலைகளை உருவாக்கி அப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவினார். விவசாய

உற்பத்தியை உயர்த்தும் பொருட்டு ஆறுகளை ஆழத் தோண்டுதல், அணைக்கட்டுகளைச் சீர் செய்தல், விவசாயப் பாதைகளை அமைத்தல் என்பவற்றில் கவனம் செலுத்தினார். குறிப்பாக வீரயடி அணைக்கட்டு, உடங்கா அணைக்கட்டு மோறாவில் அணக்கட்டு என்பவற்றை புதிதாக அமைத்துள்ளார். மேலும் நெய்னாகாடு குடிலில் பாதையை மிகக் கூடிய பணச் செலவில் செப்பனிடவும் அப்பாதையில் அமைந்துள்ள திராஓடை, விசாரை வாய்க்கால், சாவாறு என்பவற்றில் நவீனமான மிகப்பிரமாண்டமான பாலங்களைப் பாடுபட்டமைத்து மக்களின் போக்குவரத்து வசதியை மிகவும் இலகுபடுத்தியுள்ளார். இதனால் விவசாயிகள் மட்டுமன்றி செங்கல் உற்பத்தியாளர்களும் பயன்பெறுகின்றனர்.

சம்மாந்துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஜனாதிபதி கலாச்சார மற்றும் விளையாட்டுத் துறைக்கான கட்டிடத் தொகுதியொன்றையும் நிர்மாணித்துள்ளார். தலைவர் அஷ்ரப் உருவாக்கிய தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய அறபுக் கற்கை பீடமொன்றை உருவாக்க உழைத்தார். அதே போல விவசாய பீடத்தை உருவாக்கவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தார். அது இன்னும் கைகூடவில்லை. அவர் பெற்றுள்ள நீர்ப் பாசனத்திட்ட அமைச்சுப் பதவி இப்பகுதி மக்களுக்கு பெரிதும் பயன்பட வேண்டும் என்ற நோக்குடன் இப்பகுதி விவசாயிகள் நீண்ட காலமாக கல்முனைக்குச் சென்றே தமது நீர்ப்பாசன பொறியியலாளரைச் சந்தித்து வந்தனர். அதனைச் சம்மாந்துறை பிரதேசத்திற்கும் ஒன்றாகப் பிரித்து சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் திறந்து வைத்ததன் மூலம் விவசாயத்தையே அடிப்படைத் தொழிலாகக் கொண்ட மக்களுக்கு காலடியில் நீர்ப்பாசன நிர்வாகத்தை கொண்டு வந்தமை பாராட்டத்தக்க விடயமாகும்.

மேலும் கல்ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் 55 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதனைப் புனரமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்காக 300 மில்லியன் ரூபா செலவில் ஒரு திட்டத்தை வகுத்து அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றுள்ளார். இதனால் இம்மாவட்டத்தின் அனைத்து மக்களும் பயன்பெற வாய்ப்பிருந்தது. இவர் மேலும் பல சேவைகளைச் செய்யவும் எண்ணியிருந்தார். துரதிஸ்டவசமாக 14.09.2007 ந் திகதி இறையடி சேர்ந்தார்.

உள்ளூராட்சியின் பெயர்ச்சியும் அதிகாரமும்

1925ம் ஆண்டு காலப் பகுதியில் பிரித்தானிய தேசாதிபதியினால் உள்ளூர் நிர்வாக முறைமைக்கு ஒரு ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது. முன்பிருந்த ஊர்மட்ட அதிகார சபையுடன் அவரால் நியமிக்கப்பட்ட ஓரிருவர் சில பணிகளை செய்வதற்காக அமர்த்தப்பட்டனர். இது local board ஊராட்சி சபை என அழைக்கப்பட்டது. இதன் மூலம் தெருக்களையும் பாதைகளையும் துப்பரவாக வைத்திருத்தல், நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். இக்காலத்தில் மலேரியா மிக மோசமாக மக்களை தாக்குவதனையும் நுளம்பின் மூலம் இது பரப்பப்படுகின்றது என்பதனையும் அறிந்திருந்தனர். சிறு பாலங்களை அமைப்பதுடன் பதைகளை ஏற்படுத்தி செப்பனிடல், இரவு நேரங்களில் மக்களின் வசதிக்காக தெருவிளக்குகளை ஏற்படுத்துதல், ஊரின் குப்பைகூழங்களை அப்புறப்படுத்துதல்,சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை இச்சபை செய்துள்ளது. இது மக்களால் தெரிவு செய்யப்படாது தேசாதிபதியால் நியமிக்கப்பட்டது. இவர்கள் பல்வேறு விதமான ஊரின் முக்கியஷ்தர்களாக இருந்தனர். 1931ம் ஆண்டைத் தொடர்ந்து டொனமூர் சீர்திருத்தத்தின் பின் இதனுடைய அதிகாரம் அதிகரிக்கப்பட்டது. அன்று மட்டக்களப்பு கோட்டைதான் கச்சேரியாக தொழிற்பட்டதாகவும் அங்கிருக்கும் அரச அதிபர் (GA) தான் இவர்களுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகவும் அறியமுடிகின்றது. இந்த சபை சுகாதார சபை எனப்பட்டது. (SANITARI BOARD) இச்சபைக்கு தேசாதிபதி கொடையாக வருடந்தோறும் குறிப்பிட்ட தொகைப்பணம் வழங்கினார். அவர்கள் இப்பணத்தின் மூலம் மேற்கூறிய பலசேவைகளையும் செய்து வந்தனர்.

பிரதி நிதிகள்தான் ஊரின் முக்கிய பணிகளை மேற்கொண்டனர். ஒப்பந்த அடிப்படையில் குப்பைகளை அகற்றுதல், வீதிகளை அமைத்தல், தெருவிளக்கு ஏற்றுதல் போன்ற பல்வேறு வேலைகளைச் செய்தனர். இது அரசாங்கம் சார்பாக அரச அதிபர் ஒதுக்குகின்ற நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் இச்சபை எந்தவித வருமானத்தையும் ஈட்டக்கூடியதாக இருக்கவில்லை. எமதூரைப் பொறுத்தவரை

முகம்மது உடையார் முகைதீன் பாபா போடி என்பவர் பிரதிநிதியாக இருந்து செயற்பட்டுள்ளார். இதே காலப் பகுதியில் ஊரின் உள்ளூராட்சி வேலைகள் சில மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. பாதைகள் செப்பனிடுதல், பாலம் அமைத்தல் என்பன ஒரு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளும் அமைப்பொன்று இக்காலப் பகுதியில் தோற்றுவிக்கப்பட்டது எனக்கூறலாம். 1950 ம் ஆண்டு கல்லோயா அபிவிருத்தித்திட்டம் ஆரம்பிக்கும் வரை கரையோரப் பாதையான மட்டக்களப்பு பொத்துவில் மட்டுமே பிரபலமாக இருந்தது. சம்மாந்துறைக்கான போக்குவரத்து தொடர்புகளும் பாதைகளும் போதியதாக இருக்கவில்லை. மட்டக்களப்பில் அமைந்திருந்த கச்சேரி, பிரதான பாடசாலை, நீதிமன்றம் என்பவை போன்ற வேறு பலவுமான கருமங்களுக்குச் செல்லும் பயணிகள் சம்மாந்துறையில் இருந்து காரைதீவு வரை கரத்தையில் அல்லது நடந்தே சென்று அங்கிருந்துபஸ் வண்டியில் பிரயாணம் செய்தனர்.

இதன் பின் 1947ம் ஆண்டு உள்ளூராட்சி சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அப்போது கிராம சபைகளும், நகர சபைகளும், மாநகரசபைகளும் என வகைப்படுத்தப்பட்டன. அதில் இப்பிரதேசத்தில் கல்முனையும் சம்மாந்துறையும் மட்டுமே பட்டினசபையாக அமைக்கப்பட்டன. ஏனைய நிந்தவூர்பற்று, கரைவாகுப்பற்று வடக்கு, கரைவாகுப்பற்று தெற்கு, அக்கறைப்பற்று எனப்படும் கிராம சபைகளும் தோற்றுவிக்கப்பட்டன. அன்றைய சம்மாந்துறை பட்டின சபை ஐந்து வட்டாரமாக பிரிக்கப்பட்டு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பட்டின சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் யூ.எம். சுலைமாலெவ்வை (யூ.எல். எம். முகைதீன் அவர்களின் மாமனார்) அவர்களைக் தலைவராகக் கொண்டு இயங்கியது இக்காலத்தில் மக்களிடம் சோலை வரி அறவிடப்பட்டது. அந்த வரிப்பணம், சந்தையைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் பெறப்படும் பணம் - இவற்றைக் கொண்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு வந்தனர். அதன் பின் 1950ல் நடைபெற்ற தேர்தலில் MU உதுமாலெவ்வை தலைவராக இருந்து 1952 வரை சேவையாற்றியுள்ளார். இவர்கள் இருவரும் இடம், காரியாலயம், தளபாடம், ஊழியர் என்பனவற்றை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்துவதிலேயே தமது காலத்தை முடித்துக் கொண்டனர். இதன் பின் 1953ம் ஆண்டு நடை பெற்ற தேர்தலில் MIA லத்தீப் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரது காலத்தில் பட்டினசபைக் காரியாலயக் கட்டிடம் கட்டப்பட்டது. சம்மாந்துறைக்கான மின்சாரமும் இவரது காலத்திலேயே கொண்டு வரப்பட்டது. அதற்கு அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் A.M. மேர்சா அவர்கள் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கினார். பட்டின சபையின் கூட்டங்களும் விதிமுறைகளும் இவர்களது காலத்திலேயே பின்பற்றப்பட்டது எனக் கூறலாம்.

1956ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் M.A.அப்துல் மஜீட் B.A அவர்கள் பேட்டியிட்டு M.S. காரியப்பர் வெற்றி பெற, அதன் பின் நடைபெற்ற பட்டினசபைத் தேர்தலில் வெற்றிபெற்று தலைவராகத் தெரிவானார். இவர் 1960ம் ஆண்டு தேர்தல் வரை தலைவராக இருந்து சேவையாற்றினார். இவர் பல்கலைக் கழக பட்டதாரியாக கல்வி கற்றிருந்தார். இளைஞர், புரட்சிகரமான சிந்தனையுடையவராக காணப்பட்டமையினாலும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதனாலும் பல வேலைகளைச் சிறப்பாகச் செய்து வந்தார். இவரது காலத்தில் மிகக் கூடுதலாக சம்மாந்துறையின் குடிநீர்ப் பிரச்சினைக்குப் போதியளவு திட்டங்கள் தீட்டியதுடன் பல குடிநீர்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்து அதன் மூலம் மக்களிடம் நன்மதிப்பைப் பெறலானார். இவர் தமிழ் மக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி தமிழ் முஸ்லிம் மக்களின் உறவைப் பெரிதும் கட்டியெழுப்பினார் என்றே கூற வேண்டும். இதன் பின் 1960 முதல் பாராளமன்றத்துக்கு ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1961ம் ஆண்டு நடைபெற்ற பட்டின சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற M.A. அமீர்அலி அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உள்ளூராட்சியின் பெயர்ச்சியும் அதிகாரமும்

இவர் 1968ம் ஆண்டு வரை இரு தேர்தல்களில் வெற்றி பெற்றுத் தலைவராகச் சேவையாற்றினார். இவரது காலத்தில் சம்மாந்துறைப் பிரதேசம் பெரிதும் வளர்ச்சியடைந்ததென்றே கூறவேண்டும். குறிப்பாக வீதிகளைத் திருத்தியமைத்தல், வீதிகளைப் பெரிதாக்குதல், சம்மாந்துறையின் உள்வீதிகள் கூடப்போதியளவு பெரிதாகக் காணப்படுவதற்கு பலரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாதைகள் விஸ்தரிப்பு வேலைகளைச் செய்தார். மேலும் பல பகுதிகளில் வடிகான்களை அமைத்தார். உள்ளூராட்சி சபையின்

அதிகாரத்தைப் பூரணமாகப் பயன்னடுத்தினார் என்றே கூறவேண்டும். முக்கியமாகக் கல்வியின் மீது மிக்க அக்கறை கொண்டிருந்தார். அந்த அடிப்படையில் வாசிகசாலைகளைப் பல பகுதிகளிலும் ஏற்படுத்தினார். சம்மாந்துறைக்கென சிறந்த ஒரு வாசிகசாலையை அமைக்க வேண்டும் எனப்பாடுபட்டு அதற்கென நிலத்தையும் பெற்று மிக அமைதியான சூழ்நிலையில் இன்று அமீர்அலி நூலகம் என்ற பெயரில் இயங்கி வருவது நாம் எல்லோரும் சந்தோசப்படக் கூடிய விடயமாகும். மேலும் அரசியல் குழப்பநிலை காரணமாக 1968ம் ஆண்டுக்குப் பின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறாமல் விஷேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். 19-01-1969 முதல் 28-02-1970 வரை அன்ரன் அல்பிரட் என்ற உதவி உள்ளூராட்சி ஆணையாளர் விஷேட ஆணையாளராக கடமையாற்றினார். பின் 20-09-1970 முதல் 08-08-1977 வரை எம்.ஏ. அமீர்அலி அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அக் காலத்திலும் மிகக் கூடிய சேவையாற்றினார்.

பின் குறிப்பிடப்படுவோரும் இவ்வூரின் விஷேட ஆணையாளர்களாக கடமையாற்றினர்.

திரு V.P.சற்குணராஜா	09-08-1977 –	07-11-1977
திரு K.துரைராஜா(A.G.A.சம்மாந்துறை நடை பெற்றது)	09-11-1977 –	17-05-1979
ஜனாப் A.S.M. ஆரிப்	18-05-1979 –	16-09-1979
ஜனாப் M.A.M. மேர்சா	17-09-1979 –	30-06-1981
(இவரது காலத்திலேயே ஹிஜ்ரா சந்தி வீட்டுத் திட்டம்)		
மாவட்ட அபிவிருத்திச்சபை	01-07-1981 –	06-09-1981
திரு A. விக்னராஜா	07-09-1981 –	31-12-1982
ஜனாப் T.A. ஜாயா	01-01-1983 –	31-12-1987

01-10-1988 முதல் பிரதேச சபைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவும் ஒரு பிரதேசசபையாக பிரகடனப்படுத்தப்பட்டு சம்மாந்துறைப் பிரதேசசபை, சம்மாந்துறைப் பட்டினசபை, சம்மாந்துறைக் கிராமசபை, மல்வத்தைக் கிராமசபை, நாவிதன்வெளி கிராமசபை, இறக்காமம் கிராமசபை ஆகியவற்றை ஒன்றிணைத்ததாக காணப்பட்டாலும் 1988ல் நடைபெற இருந்த தேர்தல் உள்நாட்டு யுத்தம் காரணமாக நடைபெறவில்லை. இது 1994ம் ஆண்டு முதன் முறையாக நடைபெற்றது. 01-03-1994ம் ஆண்டு நடைபெற்ற சம்மாந்துறைப் பிரதேச சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றி U.L.M. முகைதீன் தலைவராகவும் I.M.இப்றாகீம் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். U.L.M. முகைதீன் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக 01-06-1994 முதல் ராஜினாமாச் செய்து I.M. இப்றாகீம் தலைவராகப் பதவி ஏற்றார். இக்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மரஹூம் M.H.M. அஷ்ரப் அவர்கள் அரசாங்கத்தின் பங்காளியாகவும் துறைமுகங்கள் புனரமைப்பு புனருத்தாபன அமைச்சராகவும் இருந்தமையையும் பயன்படுத்தி ஹிஜ்ராபுரம், மல்வத்தை, வளத்தாப்பிட்டி ஆகிய மாதிரிக் கிராமங்களை அமைத்ததன் மூலம் வீடுகளைக் கட்டி வழங்குதல், பாதை, மின்சாரம், சுகாதரம் போன்ற பல்வேறு பணிகளில் மிகச்சிறப்பாக ஈடுபட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. முக்கியமாக இக்காலத்திலேயே சம்மாந்துறையின் குடிநீர்ப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. பல விவசாயப் பாதைகள் கூட அமைக்கப்பட்டன. அதன் பின் நடைபெற்ற தேர்தலில் M.I.M.மன்சூர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு இன்று வரைப் பல்வேறு சேவைகளையும் செய்துகொண்டிருக்கின்றார்.

– ஐ.எம். இப்றாஹீம் –

சிரிப்பின் நற்குணம்.

கண்பார்த்துச் சிரிப்பவன்	-	காரியவாதி
காணமல் சிரிப்பவன்	-	கஞ்சன்
கற்பனையில் சிரிப்பவன்	-	கவிஞன்
கோபத்தில் சிரிப்பவன்	-	சிந்தனையாளி
மோகத்தில் சிரிப்பவன்	-	வெறியன்
தெரியும் என்று சிரிப்பவன	-	பசப்பன்
தெரியாதென்று சிரிப்பவன்	-	நடிகன்
இடம்பார்த்துச் சிரிப்பவன்	-	எத்தன்
ஓயாமல் சிரிப்பவன்	-	பைத்தியக்காரன்
ஓடவிட்டு சிரிப்பவன்	-	வஞ்சகன்
நீதியோடு சிரிப்பவன்	-	அறிஞன்
நிலைமறந்து சிரிப்பவன்	-	காதலன்

MUBARAK PLAZA

Stationary,School Bags,Gift Items, Office Furniture,Steel Furniture,
Plastic Items,Electrical Appliances,Van,Car,Lorry for Hire,Many More







20,Hijra junction,Police Road,Sammanthurai
Tel:076 2260540, 060 2670970,0777489843

ASKY GLASS & FITTING CENTRE

Dealers in Glass items, Plywoods,MDF, Formica Sheets,Aluminium Fittings Items,General Hardware Marchand & Power Dools





Ampara Road,
Sammanthurai
Tel:067 2260300,077 7142230

காலத்திற்கு ஏற்றவாறு மங்கயரை மகிழ்ச்சியூட்டும் வகையில் அசல் 22 கரட் தங்கத்தில் பழிச்சிடும் அழகிய வண்ண டிசைன்களில் பெற்றுக்கொள்ள தங்க நகைகளின் சுரங்கம்



ஆர்.ஜே. கோல்ட் ஹவுஸ்

R.J. GOLD HOUSE



விளினையடி சந்தி, பௌஸி மாவத்தை, சம்மாந்துறை

067 2260327, 077 9005465

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் அசல் 22 கரட் தங்கத்தில் உத்தரவாத முத்திரை பொறித்துத் தரப்படும்

சம்மாந்துறை : சில இலக்கிய விலாசங்கள்

சம்மாந்துறையின் சமூக, அரசியல், பொருளாதார, இலக்கிய , கலை, விளையாட்டு அம்சங்கள் பற்றி எழுத வரும்போது அதன் சாதனையாளர்கள் குறித்து விரிவாக குறிப்பிட வேண்டி உள்ளது. ஆனால் இதற்கென தனியான ஒரு நூலின் உருவாக்கம் அவசியமாகும். இது தொடர்பான நூலொன்றின் அல்லது இக் கட்டுரையின் அவசியத்தை உணர்த்துவதற்கு சில உதாரணங்களை முன்வைக்கமுடியும்.

உலகளாவிய அளவில் விளையாட்டுச் சாதனைபுரிந்த 'இலங்கைச் சம்பியன் சரீப்' சம்மாந்துறையைச் சார்ந்தவர். தேசிய அளவில் இலங்கை முஸ்லிம்களை ஒன்றுபடுத்திய கவிஞர் திலகம் எம்.எச்.எம்.அஷ்ர.ப் இவ்வூரைச்சேர்ந்தவர். உச்ச நீதிமன்ற நீதியரசர், பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பதிவாளர் முதலான பதவிகளை வகித்தவர்களும் சம்மாந்துறைக்குப் புகழ்சேர்த்தவர்களே. அதே போல் சமாதானத்திற்காகப் பணியாற்றியவர்கள் என்ற வகையில் உலகளாவிய ரீதியில் கௌரவிக்கப்பட்ட கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயிலும், கலாநிதி ஐ.எம்.இப்றாகிமும் இந்த மண்ணின் புதல்வர்களே. அரசியல் வரலாறு படைத்த மக்கள் பிரதிநிதிகளும் இம் மண்ணின் வரலாற்றுக்குச் சொந்தமானவர்களே.

இவ்வகையிலே சம்மாந்துறையின் இலக்கியப் பாரம்பரியத்திற்கும் ஒரு நீண்ட வரலாறுண்டு. வாய் மொழி இலக்கிய வளர்ச்சியிலிருந்து அவ் வரலாறு ஆரம்பமாகிறது. செந்நெறி இலக்கிய மரபில் முதலில் அறியப்பட்டவராக இஸ்மாலெவ்வைப் புலவரைக் குறிப்பிடமுடியும். அவருக்குப் பின் நன்கு அறியப்பட்டவர்களுள் ஈழமேகம் முக்கியமானவர். ஈழமேகம் பற்றித் தனியான ஒரு நூலே வெளிவந்துள்ளது. அதே போல் இவ் வரலாற்றைப் பற்றி அறிவதற்கு தென் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவர்கள் செய்த ஆய்வேடுகளும் சில உள.

இருப்பினும் இந்த வரலாற்றுத் தேடலைச் செய்யும்போது ஈழத்து இலக்கியத்தோடு தொடர்புபடுத்தி சில விடயங்களைத் தெளிவாய் முன்வைக்கமுடியும். உலக கவிதைப் போட்டிகளில் பரிசுபெற்ற கலாபூஷணம், கலைமணி ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை, தி.மு.க. பிரச்சாரத்தினால் மிகவுமே ஈர்க்கப்பட்ட மாறன் யு.செயின் "அழகான ஒரு கோடிக் கண்கள்" என்ற வானொலி மெல்லிசைப் பாடல் மூலம் நன்கு அறியப்பட்ட பாவலர் பஸீல் காரியப்பர், தற்கால பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதிவரும் இறையருள் கவிஞர் ஏ.இப்றாகிம், சம்மாந்துறை அஸீஸ் , தினகரன் இஸ்மாயில் போன்றவர்களும் முதல் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற அஸாருதீன் வரை நீண்டு செல்லும் நமது கவிதைப் பாரம்பரியம் தனித்துவமாய் பேசப்படவேண்டியது. ஈழத்துக் கவிதை மரபில் 1950,60களில் வெளிவந்த மாறன் யூ.செயினினதும், பஸீல் காரியப்பரினதும் கவிதைகளைத் தனியாக நோக்கமுடியும். இசையோட்டம், சொல்லாட்சி, கவித்துவச்சிறப்பு முதலானவற்றால் அவ்வேறுபாடு தெற்றனத்தெரியும். இதுபோல் அண்மைக்கால வரலாற்றில் சாகித்திய மண்டலப் பரிசு பெறத்தக்க அளவு அஸாருதீனின் கவிதைப்பாணி ஈழத்துக் கவிதை மரபில் தனியாய் நிற்கின்றதுதானே. பரீதா இஸ்மாயில், மசூறா ஏ.மஜீட், போன்றவர்கள் முதல் றபீக்கா வரை எழுதும் நமது பெண்கவிஞர்களின் பாரம்பரியமும் குறிப்பிடத்தக்கது. ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் வெளிவரும் பெண்களின் கவிதைத் தொகுப்புக்களில் மசூறாவின் கவிதைகளும் உள்ளடங்குகின்றன. இப்படியான தனித்துவமான பெண் கவிதைப் பாரம்பரியம் ஒன்றும் எமக்குள் இருக்கின்றது என்பது மறுதலிக்கத்தக்கதல்ல.

இதே போல் ஈழத்துப் புனை கதை மரபில் எம்.பி.எம்.ஜலீல் அவர்கள் எழுதிய "ஒரு வெள்ளைப் பூ சிரிக்கின்றது", "சரித்திரம் தொடர்கிறது" என்ற இரு நாவல்களும் சமூக நாவல் வரிசையில் ஒரு புதிய பார்வையை தோற்றுவிக்கத்தக்கனவாய் அமைந்தன. அதே போல் சம்மாந்துறையின் சிறுகதையாளர்களுள் எம்.எம்.நௌசாத், எம்.எம்.நௌபாத் ஆகிய இருவரும் முத்திரை பதித்தவர்கள். 1980, 90 களில் முன்னணி இலக்கியப் பத்திரிகைகளில் எழுதிய இவர்கள் மிகத்தரம்வாய்ந்த சிறுகதையாளர்களாய் கணிக்கப்பெற்றனர். அதே வேளை சம்மாந்துறையின் சிறுகதையாளர்களுள் சுபைதா அமீரும் பெயர்பெற்றவர். இவருடைய வானொலி நாடகங்கள் பல ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இதற்கப்பால் பல்துறையாற்றலுள்ள எழுத்தாளராய் விளங்கியவர்களுள் சம்மாந்துறையைச் சேர்ந்த வீ.ஆனந்தன் முக்கியமானவர் . ஆனந்தன் சம்மாந்துறையின் கலாபிவிருத்திக் கழகத்திற்குப் பிறகு இலக்கிய ஆளுமையை ஏற்படுத்திய ஒரு முக்கியமான தனி நபர். மன்சூர் ஏ.காதர் முதலானவர்களைக் கொண்டு அவர் இயக்கிய 'வாசகர் வட்டம்' அவரது பணிக்கு முக்கிய சான்று. ஆனந்தன் வாய் மொழி இலக்கிய மரபில் மிகுந்த ஈடுபாடுடையவர். அதில் ஆழமான ஆய்வுகளையும் மேற்கொண்ட ஒருவர். ஆனந்தன் மரணித்தபின்னரே "ஆனந்தன் கவிதைகள்" என்ற ஒரு தொகுப்பும் வெளிவந்தது. ஆனந்தன் மலையாளத்திலிருந்து மொழிபெயர்த்த சிறுகதைகள் தமிழுக்கு புது வரவைத் தந்தன. ஆனந்தனது இலக்கிய , சமூக , அரசியலை விளங்க அவர் அவ்வப்போது எழுதிய பத்தி எழுத்துக்களின் தொகுப்பும் மேடைப் பேச்சுக்களும் மிக முக்கியமானவையாகும். ஆகவே, ஆனந்தன் சம்மாந்துறையின் இலக்கிய சாதனையாளர்களுள் மிக முக்கியமானவரே .

இவ்வாறே எமது இலக்கிய பாரம்பரியத்தின் சாதனையாளர்களாக இன்னும் இருவரைக் குறிப்பிடமுடியும். ஒருவர், நல்ல கட்டுரையாளரான யூ.எல்.அலியார் அவர்கள் மிக நீண்டகாலமாய் இலக்கியம், கல்வி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வருகின்றார். இவரது பல கட்டுரைகள் சில நூல்களாய் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. மற்றவர், அபூ நஜாத் என்ற பெயரில் எழுதிய எம்.ஐ.எம்.பௌஸ்தீன் அவர்கள் இவர் பத்திரிகையாளராகவும், கவிஞராகவும் செயற்பட்ட போதும் உரைநடையாளர் என்ற வகையில் விதந்துகுறிப்பிடத்தக்கவர்.

தமிழகத்தின் பெருங்கவிஞர்களில் ஒருவரான வைரமுத்து எழுதிய 'வடுகப்பட்டி முதல் வால்கா வரை' என்ற தொகுதிக்கு எதிர்வினையாக 'சம்மாந்துறை முதல் அஜர்பைஞான் வரை' என்ற ஓர் உரை நடைத் தொகுதியை அபூநஜாத் வெளியிட்டார். இத் தொகுதி சமய, சமூக, அரசியல், மொழி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நூல் தனியாய் ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். அந்த வகையில் அபூநஜாதின் எழுத்துக்கள் தேசிய அளவில் கவனத்தை பெறத்தக்கனவாகும்.

மிகப்பெரும் பத்திரிகையாளர்களுள் ஒருவர் சம்மாந்துறையிலிருந்து பணியாற்றியிருக்கிறார். ஆக்கபூர்வமான பல முயற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளார். அப் பணிகளில் முக்கியமானது சம்மாந்துறையில் இருந்து அவர் வெளியிட்ட பத்திரிகைகளாகும் . இப் பத்திரிகை ஈழத்து முஸ்லிங்களின் புரட்சிகரமான குடும்ப ஏடாகவும், ஈழத்து முஸ்லிங்களின் புரட்சிகர ஏடாகவும் - தேசிய கலை இலக்கிய புரட்சி ஏடாகவும் வெளிவந்தது. பிற்காலத்தில் பிறைக்கவசம், கலைமுரசு முதலான பத்திரிகைகளையும், இப் பத்திரிகையாளரே வெளியிட்டுள்ளார். இந்தப் பணிகளின் சாதனையாளர் சம்மாந்துறையைச் சேர்ந்த M.A.M.அமானுல்லாஹ் மௌவியாகும். "கலைத் தொண்டன்" என்ற பெயரிலேயே இவரது பத்திரிகைப் பணி அமைந்திருந்தது. முஸ்லிங்களுக்கு என்று தனியான ஒரு பல்கலைக்கழகம், தனியான ஒரு கட்சி அமைய வேண்டும் என்ற கருத்துக்களை அக்காலத்திலே அவர் தனது பத்திரிகை, ஆசிரிய தலையங்கங்களில் எழுதியதாக அறியமுடிகிறது.

வெகுசனத்துறையின் மற்றொரு துறையான வானொலிக் கலைஞனாக செயற்பட்டார் மௌலவி ACAM புஹாரி அவர்கள் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக 'வரலாற்றில் ஓர் ஏடு' நிகழ்ச்சியை இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் அள்ளி வழங்கி வந்தார். இவரது கம்பீரமான குரல் என்றும் நாடெங்கிலும் சம்மாந்துறையை அக்காலத்தில் பறைசாற்றி வந்தது.

இத்தகைய தமிழ்மொழியிலான பணிகளுக்கப்பால் சம்மாந்துறையின் சாதனையாளர்கள் பற்றிக் குறிப்பிடும்போது அரபு மொழி இலக்கிய பணிகள் பற்றியும் குறிப்பிடவேண்டியுள்ளது. அந்த வகையில் ஒருவர் 'சின்னாலிம்' என அழைக்கப்படும் அப்துல் காதிர் ஆலிம் ஆவார். இவர், சில அரபு மொழிக் கவிதைகளையும் காவியமும் ஆற்றியதாய் அறியமுடிகிறது. மற்றவர் சம்மாந்துறையின் பெயரை இலங்கைத் தீவெங்கும் ஒலிக்கச் செய்த O.M.பாஸி ஆலிம் ஆவார். இவர் நமக்கு மத்தியில் பாடப் புத்தகம் எழுதி சாதனைபடைத்தவர். குர்ஆனை ஓதுவதற்கான ஒரு பாடநூலாக தத்ரிஸுல் குர்ஆன் என்பதை பாட நூலாக எழுதினார். த.ீலீமுல் அரபியா, தொழுகை ஷாபி, அஹ்காமுல் இஸ்லாம் முதலானவை இவரின் முக்கிய தொகுதிகளாகும்.

இக் கட்டுரை சம்மாந்துறையின் இலக்கிய சாதனையாளர்கள் பற்றிய ஒரு மிகச் சிறிய குறிப்பே. இந்த குறிப்புக்களினூடே இக் கட்டுரை மிக விரிவாக்கப்படவேண்டிய தொன்று. இந்த இலக்கிய விலாசத்தைப் பற்றி எழுதும்போது உச்சரிக்கப்பட்ட சில பெயர்கள் மாத்திரம் தமது விலாசத்துக்குரியன என்பதல்ல. வெவ்வேறு கோணத்தில் பார்க்கப்பட வேண்டிய இன்னும் பல மூத்தவர்களும், இளையவர்களும் நமக்கிடையே உள்ளனர். நமது விலாசம் மிக அகன்றதும், ஆழமானதும். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விரிவாகவும் , ஆழமாகவும் முத்திரை குத்தப்படவேண்டியது.

றமீஸ் அப்துல்லாஹ்
சிரேஷ்ட வீரிவுரையாளர்

பின்னிணைப்பு

மேற்படி தொடரை ஒட்டியதாக இன்னும் பல விலாசங்கள் பல்வேறு தேடல்களில் இருந்து கிடைத்துள்ளன. அவற்றையும் பின்னிணைப்பாக இதனுள் இணைத்துள்ளோம்.

வைத்தியத்துறையில் பல்வேறு பரீட்சைச் சான்றிதழ்கள் பெற்ற ஈழக்குயில் இத்ரீஸ், கணக்காளராக இருந்து கொண்டு வைத்திய நூல்கள், கவிதைத் தொகுப்புக்கள் வெளியிட்டதோடு சஞ்சிகை வெளியீடுகளை, தனியாகவும், கூட்டாகவும் செய்துள்ளார். ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த மீராலெவ்வை ஆசிரியர் இடதுசாரிக் கொள்கை வசப்பட்டவராக இருந்தார். இவர் தமிழ் கவிதை நூல் வெளியிட்டுள்ளார். கம்பன் கழகத்தினரால் நடாத்தப்பட்ட பல கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்ற இளைஞர் றிஸ்வானுல் ஹக் தனது திறன்களைப் போட்டிகளோடேயே நிறுத்திக்கொண்டார் போல் தெரிகிறது. ஐ.எல். ஜலீல் அவர்கள் ஆய்வுத்துறை ஈடுபாடு கொண்டவர். அத்துறையில் நூலும், கட்டுரைகளும் எழுதியதோடு பத்திரிகையும் வெளியிட்டுள்ளார். சபீனத்துல் நுஹா கவிதை நூல் வெளியிட்டுள்ளார். சம்மாந்துறை வீரமுனையைச் சேர்ந்தவரான எஸ். வேலாயுதம் ஆசிரியர் அவர்கள் சோதிட நிபுணராகவும், சோதிட நூல், சமயநூல் வெளியீட்டாளராகவும் இருக்கிறார். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பலர் நூல் வெளியீடுகள் செய்திருக்கின்றனர். எச்.எம்.அன்வர் அலி ஆசிரியர் தனது அரசியல் பாடத்துறையோடு ஒட்டிய நூல்களும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். அதேவேளை ARM.அஷ்ர.ப், இஸ்லாமிய வரலாறு தொடர்பான ஒரு முக்கியமான நூலையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எம்.ஏ.எம்.றூஹுல்லாஹ் மௌலவி, ஐ.எல் காதர் மிரா சாஹிபு மௌலவி, எம்பி.அலியார் மௌலவி (அலியார் ஹஸரத்) ஆகியவர்கள் சமய நூல்கள் எழுதியுள்ளனர்.

இவற்றைத் தொடர்ந்து:-

காவியனார் முகம்மது சரீபு	- 1949
புலவர் உமர் சாஹிப்	- 1949
கவிஞர் வைத்திய சிகா அருணாசலம்	- 1919
கவின் மணி அழகு ரெத்தினம்	- 1932
கவிஞர் சோம சுந்தரத் தேசிகர்	- 1955
எஸ். முகம்மதலி (ஆங்கிலம்)	- 1957
குழந்தைக் கவிஞர் அலி.எம். இஸ்மாயீல்	- 1958
கவிஞர் வீ. நாகமணி	- 1959
கவிஞர் ஆ.மு.அலி	- 1962
கவிஞர் எஸ்.எல் இப்றாஹீம்	- 1966
கவிஞர் மு.அ. சறூக்	- 1967
கவிஞினி மும்தாஜ் பேகம்	- 1968

கவிஞர் எஸ்.எச்.எம் முஸ்தபா - 1959
கவிஞர் எச்.எம் பாறூக் - 1970
எழுத்தாளர் எம். எல் ஹமீமா - 1970
கவிஞர் ஏ. முகம்மட் முஸ்தபா - 1973
கவிஞர் கே.எல் சலீம் - 1973
கவிஞர் இஸற். எம். மன்சூர் - 1986
கவிஞர் ந.்பர் அலி - 1987
எழுத்தளர் இஸற்.எம்.றிஸ்வி - 1990
கவிஞினி எம்.ரி தஸ்லிமா - 1999
கவிஞர் ஏ.பி. முகம்மட் - 2000
எழுத்தாளர் எல்எம். அஸ்லம் - 2000
ஐ.எல். பரீட் - 1965
ஜாபிர் - 1970
எம்.ஏ.சீ.ஏ மக்கின் - 1965
எழுத்தாளர் யூ.எம்.முஸ்தபா - 1956
எழுத்தாளர் எம்.ஏ.றசீது - 1956
எழுத்தாளர் எஸ்.ஏ றாசீக் - 1959
எழுத்தாளர் எஸ்.எல்.ஏ சலாம் - 1963
எழுத்தாளர் எம்.எஸ்.எம் அப்துல் காதர் - 1968
எழுத்தாளர் எம்.ஐ.எம் ஹனீபா - 1976
எழுத்தாளர் அல் - ஆலீம் ஏ. மஹ்மூது லெவ்வை -
எழுத்தாளர் மௌலவி எம்ஐஎம் அபூபக்கர் - 1936
கலைஞர் ஏ.ஏ கரீம் - 1957
கலைஞர் எம்.ரி. ராசா - 1964
கலைஞர் எம் மீராலெவ்வை - 1964
எழுத்தாளர் பி. கனக நாயகம் -
எழுத்தாளர் ஏ. எல் மஹ்றூப் -
கலைஞர் நெயினா முகம்மத் -
கலைஞர் ஏ.ஜே.எம் ஹனீபா - 1987
கலைஞர் எஸ். எல் றியாஸ் - 1990
கலைஞர் எம்.சீ. அன்சார் - 2002
கலைஞர் எஸ்.எம். ஜஹாகான் - 2003
கலைஞா என்.எம். புவாட் - 2003
கலைஞர் யூ.எல்.எம். றியாஸ் - 2005
ஒலிபரப்பாளர் எஸ்யெம் ஹனீபா - 1975
அறிவிப்பாளர் யூனுஸ் கே றஹ்மான் - 1979
அறிவிப்பாளர் எஸ்யெம்மெம் ஜவாத் - 1996
அறிவிப்பாளர் ஏ முகம்மது - 2000
அறிவிப்பாளர் எஸ்எஸ்எம் ஸறூக் - 2002
அறிவிப்பாளர் இர்ஷாட் ஏ காதர் - 1985
அறிவிப்பாளர் ஏஸீயெம் கலீலுர் றஹ்மான் - 1987

ஆகியவர்களின் பட்டியலோடு:-

எழுதுவதை, இடையில் நிறுத்திக்கொண்ட கவிதைகள் எழுதுவதில் ஆர்வமும், ஆற்றலும் மிககவர்கள் சிலர்காணப்படுகின்றனர் (தகவல்கள் தெளிவில்லை)

கவிஞர் மகுமூது லெவ்வை ஆலீம்
கவிஞர் எஸ் அருளம்பலம்

கவிஞினி உம்மு செல்வம்
கவிஞினி மிஸறியா ஏ மஜீது
கவிஞர் எம்.எம். ஹசன் (ஆங்கிலம்)
கவிஞர் கே கருணாகரன்
கவிஞர் எம்.ஐ.எம். ஹனீபா
கவிஞர் ஏ.எம்.எம். நிஸாம்
கவிஞர் எஸ்.எஸ்.பி. நாதன்
கவிஞர் எம்.எம். நஜிமுதீன்
கவிஞர் எம்.ரி. ஜமாலுதீன்
கவிஞினி சம்சுன்னிஸா
கவிஞர் ஐ.எல் பரீத்

இங்கு அடையாளம் காட்டப்பட்டுள்ளவர்களில் கவிஞர்கள், கட்டுரையாளர்கள், நாடக கலைஞர்கள், வானொலிக் கலைஞர்கள், ஒலிபரப்பாளர்கள், தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் எனப் பலர் இருக்கின்றனர். அதேவேளை இவர்களுள் அநேகமானோர் பல்வேறு திறன்கள் உள்ள கலைஞர்களும் இருக்கின்றனர். அனைத்து விபரங்களும் துலக்குவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யவேண்டியுள்ளன.

– மலர்க்குழு –

8 அலங்காரங்கள்

1. ஏழ்மைக்கலங்காரம் - பேணுதலாக இருப்பது.
2. செல்வத்துக்கு அலங்காரம் - நன்றி செலுத்துவது.
3. துன்பத்துக்கு அலங்காரம் - பொறுமை கொள்வது.
4. கல்விக்கு அலங்காரம் - அடக்கமாயிருப்பது.
5. மாணவருக்கு அலங்காரம் - பணிவு கொள்வது.
6. இறையச்சத்திற்கு அலங்காரம் - அதிகம் அழுவது
7. உபகாரத்துக்கு அலங்காரம் - சொல்லிக்காட்டாமல் இருப்பது
8. தொழுகைக்கு அலங்காரம் - பயபக்தியாக இருப்பது

மரகதச் சோலை-முல்லைச்சாயல்



பள்ளாத்துச் சூழல்

சமாதானத் தந்தையின் சகுதியான வரவிற்காய்



எத்தனை காலம் எதிர்பார்த்திருப்பது
எங்கே போனாய் சுமைகள் கனத்தால்
சத்திரம் சாவடி எதனையும் தேடி
சாகும் வரையிலும் ஒதுங்கிக் கிடக்க
சத்தம் செய்யாது பதுங்கி உள்ளாயா?
சாமுன் ஒருதரம் எம்முகம் பாராய்.

சமா தானத் தந்தையே உந்தன்
செல்வக் குழந்தைகள் அனாதைக ளானோம்
நாமாய் உலகில் பிறந்தோம் இல்லை
நாய் படும் பாட்டிலும் இழிவாய் ஆனோம்
தாமாய் வருவாய் என்றே எண்ணி
தவித்திடும் மந்த புத்தியோர் உள்ளோம்

வெள்ளை உடுத்து வெண்கொடி ஏந்தி
வெற்றியின் பின்னே நீவரு வாயென
தள்ளி நின்று எதிர்பார்த் திருந்தோம்
தள்ளியே போனாய் தந்தையே எங்கே
எள்ளி நகை யாடிநின் றனையோ
எங்கள் பேதமை பார்த்துணர்ந்தனையோ

சமர்கள் நடந்தன உன்னை மீட்க
செலவும் செய்தோம் உன் பெயராலே
சேமம் இழந்துநீ குருதியின் ஆற்றில்
செயல்கள் குன்றி நிறமும் மாறி
நாமம் மாறி கிடப்பத னாலே
நாங் ளுன்னைக் காண வில்லையோ?

தந்தையே உன்றன் தலைமை இன்றி
அத்தைக ளிங்கு சிற்றப்ப னாகினர்
வெந்தளம் வாழ்வு சாம்பலாய்ப் போகுமுன்
வருக தந்தையே மழையாய்ப் பொழிக
நொந்த இதயம் ஆற்றிட வேண்டும்,
நொடிப் பொழுதேனும் வந்து பார்க்க.

சாம்பல் மேட்டில் உயிர்த்தெழு கின்ற
சரித்திரம் கூறும் பீனிக்ஸ் பறவையாய்
நாம்படும் துயர்கள் பனியாய் விலகவும்
நலிவுகள் அகற்றவும், எழுகவே வாழ்வெனும்
உம்மா கேட்கிறாள் வெள்ளை உடுத்தவா
உயர் நகை போடவா என்று

----- சம்மாந்துறை மஷூறா -----



பாரம்பரியப் பண்பாடுகளில் இழையோடும் கலைவண்ணமும் வடிவங்களும்

எல்லாம் வல்ல இறைவனின் படைப்புக்களும் இயற்கை வளங்களும் அழகும் பொருளும் கொண்டதாகவே அமைந்திருக்கின்றன. அழகுணர்ச்சி உள்ளத்தை செழுமைப் படுத்துவதற்காகவும் பொருள்வளம் உடல் வலுவை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளமை கவனத்திற் கொள்ளப்பாலன. அவற்றிற்கேற்பவே நில அமைப்பும் அதன் வளங்களும் வெவ்வேறாக அமைந்துள்ளன. அதனை உள்ளுணர்ந்தவர்கள் ஐந்திணைகளாக வகுத்துள்ளனர். அவை, கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமென்றும், மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை என்றும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும் அழைக்கப்படுகின்றன. கால ஓட்டத்தில் பாலை நிலம் அருகிவிடவே நானிலம் என்று பூமியை அழைப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பகுதியின் வளங்களுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறையும் உழைப்பூதியமும் உணர்வுகளும் வேறுபாடாக உள்ளமயை அறிவார் அறிவார்.

எமது பிரதேசம் மருதமும் முல்லையும் மயங்கி உள்ளதால் பெரும்பகுதியில் நெல் உற்பத்தியும் அதற்கு அனுசரணையாக கால்நடை வளர்ப்பும் கைத்தொழிலும் உழைப்பூதியமாக உள்ளன. இங்குள்ள நீர்வளத்தையும் நில அமைப்பையும் பொறுத்து குறிப்பிட்ட காலத்திலேயே உற்பத்திகள் செய்யக் கூடியதாக இருந்தன. அதன் மூலம் கிடைக்கும் விளைச்சல் சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்ததோடு பிற பிரதேசங்களுக்கும் விநியோகிக்கக்கூடியதாகவும் இருந்தமை கவனிக்கத்தக்கது. கால்நடைவளர்ப்பும் கைத்தொழில் விளைவும் அதற்கு அனுசரணையாகவே இருந்தன. அதனால் இங்கு வாழ்ந்த மக்களுக்குப் போதிய ஓய்வு இருந்தமையால் விளையாட்டுக்களிலும் வேடிக்கைகளிலும் ஈடுபடலாயினர். அன்றியும் உபயோகிக்கும் உழைப்புச்சாதனங்களை அழகுபடுத்துவதிலும் உறையும் வீடுகளை ஒழுங்குபடுத்துவதிலும் காலத்தைக் கழித்தனர், களித்தனர். இவற்றில் ஆண்களும், பெண்களும் பிள்ளைகளும் கூட ஈடுபடத்தவறவில்லை.

அன்று குச்சுக் குடில்களிலும் கூரை வீடுகளிலும் வாழ்ந்த மக்களுக்கு இருந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் இன்று மச்சு வீடுகளிலும் மாளிகைகளிலும் வாழும் மக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோவொன்றை இழந்துவிட்ட உணர்வும் மேலும் மேலும் எதனையோ எதிர்பார்க்கும் மனோ நிலையும் மேவி நிற்பதை அறியக்கூடியதாக உள்ளமையை உணரலாம். அதனாலன்றோ அன்றைய வாழ்க்கை முறையைச் சற்று இரை மீட்டிப்பார்ப்பது பொருத்தமுடைத்தாகுமென, நம்புகின்றேன். குறிப்பாக அவர்களது சொல்லும் செயலும் உழைப்பும் ஊதியமும் மனித நேசம் மிக்கதாகவே இருந்தது எண்ணிப்பார்க்கவல்லது.

தொழிற்சாதனங்களின் கலை வண்ணம்

கல்லிலே கலை வண்ணம் காணும் சகோதர இனத்தவரை நாம் காண்கிறோம். நெல்லிலே கலைவண்ணம் காணும் எம்மவரை நாம் காண்பதில்லை. நெல் அறுவடை செய்யும்போது நெற்கதிரை முழுத்தண்டோடு பிரத்தியேகமாக எடுத்து அவற்றை அழகு படுத்துவதை நினைத்துப் பாருங்கள். அவ்வாறு பெறப்படும் நெற்கதிர்களை சுமார் ஒரு அடி அகலமாகப் பரத்தி மத்தியில் இடைத்தடங்கலாக ஈர்க்கில் கட்டி மேல்கதிர்ப்பகுதி தண்டுகளை பாய் போன்று இழைத்து நுனிப்பகுதியைக் கூட்டிக் கட்டி சுவரில் தூக்கிவிடும் போது நெற்கதிர் கீழே தொங்கிக் கொண்டிருக்கும் அழகே அழகு. அதனைப் பார்த்து இரசித்து மகிழாதவர்கள் இல்லை எனலாம். சில வேளைகளில் வெளியூரவர்கள் இதனை எடுத்துச் சென்று தம் வீட்டில் தொங்க விடுவதால் "பறகத்" (அருள்) உண்டாகுமென நம்புபவர்களும் இருக்கின்றார்கள் என்றால் அழகும், பொருளும் உள்ளதென்பதை ஒப்புக் கொள்ளலாமல்லவா?.

மற்றும் வண்டி மாடுகளால் உழைப்பூதியம் பெற்று வாழ்பவர்கள் உயர்ந்த ஏரிகளைக் கொண்டதும் நீண்டு வளைந்த கொம்புகளைக் கொண்டதுமான மாடுகளை வாங்குவர். அவற்றின் கொம்புகளைச்சீவி செம்மை செய்து கூர்மையாக்கி செம்புக் குமிழ் தயாரித்து அவற்றை கொம்பு நுனிகளில் அணிந்து அழகு பார்ப்பதை அறிகிறோம். மட்டுமன்றி மாட்டின் கழுத்தில் சதங்கக் கோவையொன்றைத் தயாரித்து அதில் மணியொன்றையும் தொங்கவிட்டு மாட்டின் கழுத்தில் கட்டிவிடுவர். மேலும் வண்டியின் பக்கத்து அடைப்புப் பலகை தாங்கும் சட்டங்களைச் செதுக்கிப் பலகையில் பொருத்தி அப்பலகையில் சித்திர வேலைப்பாடுகளும் செய்வர். இன்னும் வண்டியின் முன் இருக்கையை "மணறா" உருவத்தில் வடிவமைத்து கொள்வார்கள். வண்டியில் அடுக்கடுக்காகப் பொருள்களை ஏற்றி வண்டிக்காரர் அதன் இருக்கையில் இருந்து மிடுக்காக மாட்டின் சேணத்தை பிடித்துக் கொண்டு செல்லும் போது பார்வையாளர்கள் வண்டி எடுப்பாக இருப்பதைப் பார்த்து மெய்மறந்து நிற்பர்.

இன்னும் திருமணம் முடித்த தம்பதியினரை அழைத்துச் செல்வதற்கும் அல்லது பெண்களை அழைத்துச் செல்வதற்கும் என்று கூட்டு வண்டி என ஒன்று இருந்தது. கூட்டு வண்டி என்பது வளைக்கக்கூடிய தடித்த பிரம்பு போன்ற கம்புகளை ஒருபக்கத்து சட்டத்திலிருந்து மறுபக்கத்து சட்டத்திற்கு சுமார் 3 அடி உயரத்திற்கு வளைத்தெடுத்து இணைப்பர். இவ்வாறு வண்டியின் முழுமையாக பொருத்தி அதனை கிடுகு போன்ற பொருட்களைக் கொண்டு மூடிவிடுவர். இது மறைவாகச் செல்வதற்கு வசதியாக இருக்கும். மேலும் பெரியவர்கள் பிரயாணம் செய்வதற்கு என்று வில்லுக்கரத்தை என்றொரு வாகனமும் இருந்தது.

உறையுள் வாசத்தில் உவகை

அக்காலத்திலுள்ளவர்கள் தங்கள் வீடுகளை களி மண்ணினால் சுவர் கட்டி, செம்மண்ணினால் பூசி, வைக்கோலால் அல்லது கிடுகுகளினால் கூரை வேய்ந்து குடி இருந்தார்கள். விரல்விட்டு எண்ணத்தக்க கல்வீடுகள் சிப்பி ஓடுகளால் கூரைவேயப்பட்டிருந்தன. அவ்வீடுகளில் சீவிச்செதுக்கப்பட்ட ஒற்றைத்தூண்கள் நிறுவப்பட்டிருந்தமை வியக்கத்தக்கது. அன்றியும் அதன் கதவுகளும் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்ததை நினைத்துப்பாருங்கள். நவீன கருவிகள் இல்லாத அக்காலத்தில் இப்படி செய்தார்கள் என்றால் அவர்களின் அழகுணர்ச்சியின் பெறுமானம் தான் என்ன.

வீடுகளின் உள்ளடக்கத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு வகையான வண்ணப்பாய்களை வாங்கி ஆறு அங்குல உள்ளீடு வைத்து மடித்து சுருட்டிக்கொள்வர். அவ்வாறு மடித்த போதிய பாய்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி அசவுகளில் பாதுகாப்பாக தொங்கவிடுவர். அத்துடன் மண்பானைகளை வெவ்வேறு அளவில் வாங்கி (பெரிதிருந்து சிறிதாக) வீட்டின் உள் சுவர் ஓரப்பகுதியில் களிமண்ணை அல்லது செம்மண்ணைக் குழைத்து கோதி வைத்து அதன் மேல் படிப்படியாக அடுக்கிவைப்பதை பெருமையாகக் கொள்வர். இதனைத்தான் அடுக்களை என்று அழைப்பர். மேலும் உடுப்புக்கள் நகைகள் பணம் போன்ற பாதுகாப்பான பொருட்களை வைப்பதற்காக பெட்டகம் ஒன்றையும் இணக்கிக்கொள்வர். பெட்டகம் என்பது முதிரையும் கருங்காலி பலகைகளைக் கொண்டு சுமார் 4x2x2 அடி கொண்ட பெட்டியொன்றை செழுமைப்படுத்தி தயாரிப்பர். இவ்வாறான பொருட்களை சேகரித்து வைப்பது மனதுக்குத் தெம்பைக்கொடுக்கும். போதாக்குறைக்கு பெண்களும் பிள்ளைகளும் சேர்ந்து வீட்டு முற்றத்திலே ஆற்று வாழை, கஞ்சாப் பூக்கண்டு, குறோட்டன் போன்ற அழகுத்தாவரங்களை நாட்டி வைத்து இரசிப்பது இனிமையான பொழுது போக்காகும்.

ஓலை வீடொன்றுக்கு கூரைவேய்வதாக இருந்தால் வீட்டுக்காரர் கிடுகுகள், அதனைக்கட்டுவதற்காக நார், கயிறு என்பவற்றை ஏற்பாடு செய்துவிட்டு அடுத்த வீட்டுக்காரருக்கும் அபிமானிளுக்கும் அழைப்பு விடுப்பர். அவர்களும் குறித்த நாளில் அதிகாலையில் மொல்லென வந்து விடுவர். காலை உபசாரத்தை முடித்துக்கொண்டதும் ஓரிருவரைத் தவிர ஏனையவர்கள் வீட்டுக் கூரையில் படபடவென ஏறி பழைய கிடுகுகளை காலால் உதைத்துத் தள்ளிவிடுவர் மேலும் கீழும் துப்பரவு செய்துவிட்டு அணியாக இருந்து கட்டத் தொடங்குவர்.

கீழே நிற்பவர்கள் மட்டை மட்டையாக பிணைத்து மேலே எறிய, மேல இருப்பவர்கள் இலாவகமாக பிடித்து அணி அணியாக வைத்து, மணிக்கட்டை அளவாக கொண்டு சீராக கட்டுவர். இவ்வாறு மேலே மேடு வரை கட்டி, அடுத்த பழுக்களையும் (பக்கங்கள்) நெற்றி முட்டுக்களையும் கட்டிப் பாரம் ஏற்றிவிட்டு இறங்குவர். இறங்கியதும் உள்ளே சென்று பார்த்தால் ஒழுங்காக இருப்பதைக் கண்டு மனநிறைவடைவர். மட்டுமன்றி வேலியையும் பிரித்து பழைய கிடுகுகளை உள்ளேயும் புதிய கிடுகுகளை வெளியேயும் சதுரமாக அல்லது நீளப்பாட்டில் வைத்து "குத்தூசி" என்னும் மரக்கருவியைக் கொண்டு வெளியே வைக்கும் கயிற்றைக் கொழுவி உள்வாங்கி தட்டுவேலி கட்டி முடித்து நிறைவுடன் கலைந்து செல்வர். இங்கு மனித நேசம் மேலோங்கி நிற்கிறது.

பெருநாள் காலத்துப் பெருமை நிகழ்வுகள்.

முஸ்லிம்களுக்கு பெருநாள் வருகின்றதென்றால் பெருமைப்படும் நிகழ்வாகத்தான் இருக்கும். காரணம் அவ்வாறு வரும் நோன்புப் பெருநாளும் ஹஜ்ஜுப் பெருநாளும் மார்க்கக் கடமைகள் இரண்டின் நினைவாக கொண்டாடப்படுகின்றன. நோன்புப் பெருநாள், நோன்பை ஒரு மாதம் நோற்றுவிட்டு அதன் நிறைவாக கொண்டாடப்படுகிறது. ஹஜ்ஜுப் பெருநாளும் கூட நபி இப்றாஹிம் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளைப்படி தன் அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை பலியிடத் துணிந்தமையினால், இறைவனால் அதிலிருந்து மீட்சியளித்த தியாகத் திருநாளாகப் பெருமையோடு கொண்டாடுவர்.

இத்தகைய பெருநாட்களுக்காக பெண்கள் பலவகைப் பலகாரங்கள் சுடுவதற்காக ஆயத்தம் செய்வர். எண்ணெய்ப் பலகாரம், அச்சுப்பலகாரம், சோபி, சுலோபி, துதழ், மஸ்கற், தேன்குழல் என பலவகைப்படும். பலகாரங்கள் அழகாகவும் சுவையாகவும் இருப்பதற்காக வேலைப்பாடுகள் செய்த அச்சுப்பலகை, தூக்கச்சி என்பனவும், நிறம், மணம் சுவை என்பனவற்றுக்காக அனுசரணைப் பொருட்களையும் ஆயத்தம் செய்வர்.

ஆண்கள் தன்மனைவி, மக்கள், மாமி, மாமா, தாய், தகப்பன் ஆகியோருக்கேற்ப துணிகளை தேடுவதில் ஆலாய்ப் பறப்பர். வேவ்வேறு வகையான உடைகள் ஓரிரு கடைகளில் எடுப்பது கடினம். அதனால் அலைந்து திரிவர். அப்போதுள்ள சூழ்நிலையில் கம்பாயம், பச்சவடம், தாவணி, பாவாடை, மோகினிப்பட்டு, பளையகாட்சாறன், பட்டுகரைச்சால்வை என பலவகைத் துணிகளை தேடி வாங்குவர். இவற்றில் நிறம், திறன், அழகு என்பன பொருத்தமாக பெறுவதன் காரணம் அழகுணர்ச்சியின் பிரதிபலிப்பென்றால் பிழையாகாது.

குறிப்பிட்ட பெருநாள் அன்றைக்கு அதிகாலையில் எழுந்து 'சுபஹ்' தொழுது குளித்து புத்தாடைகளை அணிந்து, நறுமணம் பூசி, ஆண்களும் பெண்களும் வெவ்வேறு இடங்களுக்குத் தொழுகைக்காகச் செல்வர். இவ்வாறு மக்கள் கூடுகின்ற காட்சி கண்களுக்கு குளிர்ச்சியாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை. அங்கு இமாம் அவர்கள் பெருநாள் தொழுகை முடிந்ததும் குத்பாவையும் ஓதி நிறைவுசெய்வார். அதன்பின் எல்லோரும் ஆளுக்காள் ஆரத்தழுவி முஸாபாஹ் செய்து குசலம் விசாரித்து சந்தோஷத்துடன் கலைந்து செல்வது சகோதரத்துவத்தின் சான்று எனலாம்.

ஊஞ்சல்களில் உல்லாசம்.

இவற்றின் இடையே இளம் வாலிபர்கள் ஊஞ்சல்கள் போடுவதில் போட்டி போட்டுக்கொண்டு ஆயத்தமாகுவர். அவை கயிற்றூஞ்சல்(உன் ஊஞ்சல்), கிறுக்கி ஊஞ்சல், தொட்டிலூஞ்சல் என பலவகையின. இவற்றில் கயிற்றூஞ்சலும், கிறுக்கி ஊஞ்சலும் போடுவது சற்று இலகுவானது. ஆனால் தொட்டிலூஞ்சல் என்பது சிரமமும் செலவும் செய்ய வேண்டியது. அதேவேளை சிறப்பானதுமாகும்.

இதற்காக நான்குசோடி பலகைச் சட்டங்களை குறித்த அளவில் எடுத்து மத்தியில் சற்று அகலமாகவும், இடையில் அகலம் குறைந்தும், இரு தொங்கல்களில் குவியமாகவும் அறுத்துத் தயாரிப்பர். அவற்றின் மத்தியில் அரையடி விட்டமான துளைகளை இட்டு இத்துளைகளுள் சொருகத்தக்கதாக சுமார் பதினைந்தடி நீளமான உருண்டை வளையொன்றை ஆயத்தம் செய்துகொள்வர். தொங்கவிடத்தக்க சாய்மணைக் கதிரைகளையும் சரிக்கட்டிக்கொள்வர். இவற்றைச் செதுக்க வேண்டிய விதமாகச் செதுக்கி பக்கத்து கைகளில் செங்குத்தாக இரு சலாகைகளை இருக்கையில் இருந்து நிறுத்தி பொருத்திக் கொள்வர்.

சுமார் பதினைந்தடி இடைவெளிவிட்டு உயரமான இரண்டு தூண்களை நட்டுவர், அத்தூண்களில் ஏற்கனவே குறிப்பிட்ட உருண்டை வடிவமான வளையை இணைத்து மேலே குறிப்பிட்ட பலகைச்சட்டங்களை இவ்விரண்டாக சகப்பொறிவில் பொருத்தி, ஒவ்வொரு சோடிச்சட்டங்களின் தொங்கலில் சாய்மணைக் கதிரைகளை தொங்கவிடுவர். புறம்பாக ஏணிகள் இரண்டை இரண்டு தூண்களிலும் சாய்த்து வைப்பர். இனி கதிரைகள் ஒவ்வொன்றிலும் ஆட்களை ஏற்றி இருக்கவிடுவர். பொருத்தப்பட்ட இரு ஏணிகளிலும் இருவர் ஏறி நின்று பலகைச் சட்டங்களை காலால் சுழற்றுவர். ஊஞ்சல் மேலும் கீழுமாக சுற்றிச் சுழலுவது பார்ப்பவர்களுக்கு பசுந்தாக இருக்கும். இருப்பவர்களுக்கு சற்றுப் பயமாக இருக்கும். பார்வையாளர்கள் கைதட்டிக் கரகோசம் செய்வர். இதற்காக கட்டனம் அறவிடுவதும் உண்டு. தொட்டிலூஞ்சல் போடும் குழுவில் முதன்மையாளராக மர்ஹும் சாஹுல் ஹமீது (பள்ளிப்பிள்ளை) அவர்களும் இருந்திருக்கின்றார். தற்காலத்தில் நவீன முறையில் இதன் பிரதியீடாக வட்டமிட்டுச் சுழலும் ஊஞ்சல்தான் புழக்கத்தில் உள்ளது.

மெத்தை வீடு கட்டுவதன் மேன்மை.

மேற்குறிப்பிட்ட ஆக்க வேலைகளுக்கு அனுசரணையாக மெத்தை வீடு கட்டுவது விதந்துரைக்கத்தக்கது. அக்காலத்தில் பட்டினங்களுக்குச் செல்லுபவர்கள் அங்கு கண்டு களித்த மாடி வீடுகளுக்கு பிரதியீடாக மெத்தை வீடு கட்டிப் பார்வையாளர்களை பரவசப்படுத்த விழைந்திருக்கலாம்.

சுமார் பதினைந்தடி சதுரமான இடப்பரப்பில் நான்கு மூலைகளிலும் பன்னிரண்டு அடி உயரமான தூண்களை நட்டி பக்க வளைகளால் தொடர்பு படுத்துவர். சுமார் ஆறடி உயரத்தில் பலகை பரவத்தக்கதாக இடைத் தடங்கல் கம்புகளைக் கட்டிப்பிணைத்து பலகைகளைப் பரவுவர். மேலே சதுரமான கூரையையும் கூம்பு வடிவமாகக் கட்டி கிடுகினால் வேய்ந்து விடுவர். பின் நிறத்தாள்களை ஒட்டி பின் மூன்று பக்கங்களிலும் சீலைகளால் மறைத்து கட்டிக் கொள்வர். இடைத் தடங்கல் பலகையில் சாக்கு விரித்து கம்பளங்களால் மூடிவிடுவர். இருப்பதற்கு கதிரைகளும் ஏற்ற மேசையும் போட்டுக்கொள்வர். ஏறுவதற்கு ஏணியும் அமைத்துக்கொள்வர். ஓரங்களில் நிற ரிசு பேப்பர்களால் பந்தல் வெட்டி தொங்கவிடுவர். பூமியில் மணல் இட்டு பரப்பிவிடுவர். முற்றத்தில் குறோட்டன் செடி சாடிகளை வைத்துவிடுவர். இப்போது மெத்தை வீடு கெம்பீரமாகவும் அழகாகவும் காட்சியளிக்கும்.

பார்வையாளர்கள் பரவசத்தோடு ஏறியிருந்து உபசாரங்களை பெற்றுக்கொண்டு இறங்குவர். இவ்வாறு குழுக் குழுக்களாக ஏறி இறங்கிக்கொண்டே இருப்பர். ஓகோ.. ஓகோ.. என கூட்டங்கூடுவதன் மூலம் சிறு வியாபாரிகள் தம் கைவரிசையைக் காட்டத்தவறமாட்டார்கள். ஊஞ்சல் ஆடுபவர்கள் பயம் நீங்குவதற்காக பாடல்களை பாடிக்கொண்டிருப்பர். இதற்கென ஊஞ்சல் பாட்டுக்கள் உள்ளன இவற்றை மனனம் செய்தவர்களும் உள்ளனர். ஊஞ்சல் ஆடுபவர்கள் இவர்களையும் அழைத்துக் கொண்டு வருவர். இந்நிகழ்வு மூன்று, நான்கு நாட்கள் நிகழும். இரவும், பகலும் மக்கள் கோலாகலமாக கூடிக்கலைவர்.

கோடு கச்சேரியும், மேடை நிகழ்ச்சிகளும்.

இதனிடையே மேடை நிகழ்ச்சிகள் வெவ்வேறு நோக்கில் நிகழ்ந்திருக்கின்றன. கோடு கச்சேரி நடாத்துதல், பள்ளுப் பாடுதல், பஜனை செய்தல் என்பனவற்றுக்காக மேடைகள் அமைத்து தம் கலை உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றுள் கோடு கச்சேரி நடாத்துவது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக இருந்திருக்கின்றது. இதன் முன்னோடியாக மர்ஹும் உதுமாலெப்பை (கிடுகிடுப்பர்) என்பவர் இருந்திருக்கிறார். பட்டினங்களில் கோடு கச்சேரிக்குச் சென்று வந்ததன் பிரதிபலிப்பாக இந் நிகழ்ச்சி நடந்திருக்கலாம். இதன் மூலம் கிராமிய மக்கள் கோடு கச்சேரிகளின் செயற்பாடுகளையும் அவற்றின் நோக்கங்களையும் அறிந்து கொள்வதற்கு அனுசரணையாக இருந்தமை மறக்கமுடியாது.

ஒரு கோட்டில் உயர் பீடத்தில் நீதவான் இருப்பதையும் அவருக்குப் பக்கத்தில் சேவகர் வெஞ்சாமரை வீசிக்கொண்டிருப்பதையும் பொலிஸார் பாதுகாப்புக்கு நிற்பதையும் காணலாம். கீழே அரை வட்ட வடிவமாக போடப்பட்டிருக்கும் மேசையைச் சுற்றி பெருக்கிளாசிமார் (சட்டத்தரணிகள்) தத்தம் புத்தகங்களோடு இருப்பார்கள். முதலியினால் வழக்கு கூப்பிடப்பட்டதும் எதிரியும் வழக்காளியும் அவர்களுக்குரிய கூடுகளில் வந்து நிற்பர். அதே வேளை அவர்களுக்குச் சார்பாக வாதிடும் பெருக்கிளாஸ்மாரும் எழுந்து நிற்பர். நீதவான் வழக்கை விசாரித்துக்கொண்டிருப்பார். சட்டத்தரணிகள் நீதவானின் அனுமதியைப்பெற்று குறுக்குக் கேள்விகளும் கேட்பர். இதன் மூலம் மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிப்படும். சிலவேளை பிழையாக வழக்கு வைத்தவர்கள் வாபஸ் பெறுவதும் உண்டு. இறுதியாக நீதவான் தீர்ப்புக் கூறுவார். பார்வையாளர்கள் அவதானித்து ஆறுதல் அடைவர்.. இதில் பொலிஸ்காரராக நடித்த ஒருவருக்கு பிற்காலத்தில் பொலிஸ் என்பது பட்டப்பெயராகவே நிலைத்து விட்டது.

அடுத்து பள்ளுப்பாடுதலுக்காக ஊர்ப்புறத்தில் மேடையமைப்பர். இது வசைபாடும் நிகழ்ச்சியாக இருந்ததால் பெண்கள், பிள்ளைகளுக்கு கேட்காதவாறு அவ்வாறு செய்வர். ஒவ்வொரு ஊரிலும் இதற்கென குழுக்கள் இருப்பதாகச் சொல்லுவார்கள். ஒழுங்கு செய்பவர்கள் அக் குழுக்களுக்கு ஒரு நாளைக் குறித்து அழைப்பு விடுவர். அவர்களும் ஆர்வத்தோடு வருவார்கள். இரவு ஒன்பது பத்து மணிக்குப் பிறகுதான் நிகழ்ச்சி ஆரம்பமாகும். ஊரவர்களும் கூட்டம் கூட்டமாகச் சமூகமளிப்பர்.

ஆரம்பத்தில் இறைகாப்புக் கவிப் பாடல்களைத்தான் பாடுவர். பின்னர் வசைப் பாடல், கிண்டல் பாடல், எனப் பலவாறு அமையும். உதாரணமாக

“நாத்தக் குறட்டை தின்னி நானறியப் பன்றி தின்னி
சொறியன் தவள தின்னி சொல்லுமடா உன் கவியை
எனத் தொடங்குவார் ஒருவர்.

அடுத்த குழுவைச் சேர்ந்த மற்றொருவர்
“கத்தாதே” காகம் கதறாதே காகம்
எத்தாத காகம் எறிஞ்சிடுவன் பொல்லாலே. எனத் தொடர்வார்

அடுத்தடுத்து இருபக்கத்தாரும் பாட்டுக்குப் பாட்டு பாடும் போது, உணர்ச்சி வசப்படாமல் சமநிலைப் படுத்துவது மாதிரி சிற்றாண்டி உபசாரமும் நிகழும். இவ்வாறு மாறி மாறித் தொடரும் வசைப்பாடல்களால் கோபங்கொள்ளுவதோ குமுறிக் கொள்ளுவதோ கிடையாது. சகிப்புத் தன்மையும் பொறுமையும் மேலோங்கி நிற்பதை நினைத்து புளகாங்கிதம் அடையலாம். இவற்றை அவதானிப்பதற்கென இரு ஊரையும் சேர்ந்த மத்தியஸ்தர்கள் - மரைக்காயர்மார் மதிப்பீடு செய்து தீர்ப்பு வழங்குவர். அதனை இருசாராரும் ஏற்றுக்கொண்டு இனிதே கலைவர்.

மற்றொன்று, பஜனை செய்வதற்கும் மேடையமைத்து உரிய குழுவினரை வரவழைத்து பஜனை நடாத்திய சம்பவமும் உண்டு. இதற்காக இசைக் கருவிகள், மத்தளம், சல்லரி, சர்பினா போன்றவற்றோடு குழுவினர் வருவர். பாடகர்களும் அவர்களுள் இருப்பர். நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு அவர்களுடன் கலந்துரையாடி பாடப்படும் பாடல்களை தீர்மானித்துக்கொள்வர். பின்னர்

பொது மக்களுக்கு அறிவிக்கப்படும். பெரும்பாலும் இரவு ஒன்பது மணிக்குப் பின்பே இந்நிகழ்ச்சியும் ஆரம்பிக்கும்.

இந்நிகழ்ச்சியில் பாடுகின்ற பாடல்கள் பெரும்பாலும் சிற்றிலக்கியப் பாடல்களாகவே இருக்கும். கிஸ்ஸா, முனாஜாத், மசாலா, அம்மானை போன்றவைகளே அவை. இன்னும் பெண்புத்திமாலை, மரண விளக்கம் மனதைத்துலக்கும், மௌசூக்மாலை போன்ற புத்தகப் பாடல்களும் பாடப்படும். சிலவேலைகளில் சிறந்த சினிமாப்பாடல்களைப் படுபவர்களும் உண்டு. மேற்குறிப்பிட்ட இசைக்கருவிகளையும் இணக்கமாக உபயோகிப்பர். இவற்றின் இதமான ஓசை மேலே மேலே பாடல்களை பாடத்தூண்டும். நள்ளிரவில் நிகழ்ச்சி முடிந்ததும் மக்கள் மனநிறைவோடு கலைந்து செல்வர்.

திருமண சம்பிரதாயத்தில் சில நிகழ்வுகள்.

மணவயதுவந்த பெண்களை வைத்துக்கொண்டிருக்கும் பெற்றார் தனது பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளையைத் தேடி, அறிந்ததும் தூதுவர் மூலம் அவரது விருப்பத்தை அறிந்துகொள்வர். மாப்பிள்ளையின் பெற்றாரிடமும் குடும்ப சகிதம் சென்று கொடுக்கல் வாங்கலைப் பேசித் தீர்த்துக்கொள்வர். இதனைத் தொடர்ந்து தத்தம் தகுதிக்கேற்ப பெண்வீட்டார் மூன்று பெட்டி, ஏழு பெட்டி என குடும்பத்தினர் சகிதம் செப்புக் கொண்டு செல்வர். இந்தப் பெட்டிகளில் பழவர்க்கங்கள், பலகார வகைகள், கேக்வகைகள் இடம் பெறும். இதற்காக அலங்காரமாக இழைத்த பெட்டிகளையும், அவற்றிற்கேற்ற மூடிகளையும் தேடி எடுத்துக்கொள்வர். போதாக்குறைக்கு வெள்ளைத்துணியால் மூடிக்கட்டிக்கொண்டு கோலாகலமாக குரவையிட்டுச் செல்வர். மாப்பிள்ளை வீட்டாரும் மகிழ்ச்சியோடு வரவேற்று இருக்கச் செய்வர். ஏற்கனவே, முடிவுகட்டிய விடயத்தைப் பூடகமாக வெளிப்படுத்துவர்.

மாப்பிள்ளை வீட்டார் கேட்பார்கள் "என்ன விசேஷம் பெட்டி சட்டியோடு பெரிதாக வந்திருக்கிறீங்க" என்று. அதற்குப் பெண்வீட்டார் "உங்களது வீட்டில ஒரு மாப்பிள்ளை இருக்கிறாரு எங்கட பெண்ணுக்கு அவரைக் கேட்டு வந்தோம்" என்பர். மாப்பிள்ளை வீட்டார் "அதற்கென்ன நல்ல காரியம், செய்துவிடலாம் என்ன கொடுப்பீங்க" எனக்கேட்பர். அதற்குப் பெண்வீட்டார் "அவவுக்குரிய வீடு வளவும் காணியும் கல்யாணச் செலவும் தருகிறோம்" என்பார்கள். 'அல்ஹம்துலில்லாஹ்' கல்யாணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் எனக்கேட்டதும் கலண்டரை எடுத்துப் பார்த்துப் பிறையும் கிழமையும் பொருந்தத் தக்கதாக ஒரு நாளைக் குறிப்பிடுவர். பொருந்திக்கொண்டதும் துஆ ஓதி உபசாரத்துடன் உள்ளம் குளிர்ந்து செல்வர்.

இதனிடையே பெண்ணுக்கு மருதோன்றி போடும் நாளொன்றைத் தேர்ந்தெடுத்து மாப்பிள்ளை வீட்டு மதினி முறைப் பெண்ணுடன் மருதோன்றி மோதிரம் என்பன எடுத்துச் செல்வர். பெண்வீட்டார் அவர்கள் வரும் பாதை இடைவழிக்குச் சென்று வரவேற்பர். மாப்பிள்ளை வீட்டார் இன்னும் வருமாறு கேட்டு "டிமாண்ட்" பண்ணுவர். பெண்வீட்டாரும் 'பிகு' பண்ணுவர் இதனால் இழுபறிப்பட்டு நேரம் போய்க்கொண்டே இருக்கும். இடையில் இரு குடும்ப மத்தியஸ்தர்களும் தலையிட்டு கொஞ்சம் கொஞ்சமாக இருசாராரையும் நெருங்கச் செய்து இணங்கிக்கொண்டதும் பெண் வீட்டுக்குச் செல்வர். அங்கு சென்று பெண்ணுக்கு மருதோன்றி போட்டு, மோதிரம் அணிந்து பகிடி பண்ணி பால் பழம் உண்டு பரவசத்துடன் மீளுவர்.

இனி, திருமண நாள் வந்துவிட்டால் இருவீட்டிலும் தோரணம் கட்டுவதிலும் பந்தல் போடுவதிலும் வீட்டை அலங்கரிப்பதிலும் போட்டியும் நிகழும். பந்தல் போட்டு சேலைகளால் மேற் பகுதியை மூடி குருத்தோலைக் கூந்தல் வளைத்துக் கட்டி விடுவர். நடுப்பந்தற் காலை விஷேடமாக சேலை உடுத்திச் சுருக்கிக் கட்டிவிடுவது ஒரு சிறப்பம்சமாகும்.

திருமணநாள் குறிக்கப்பட்டபடி அலங்காரமான அழைப்பிதழ் அச்சடித்து இருவீட்டாரும் வேண்டியவர்களுக்கு வினியோகிப்பர். குறிப்பிட்ட நேரத்திற்கு பெண் வீட்டார் காவின் சோற்றுப் பெட்டியும் வட்டாவும் மாப்பிள்ளை வீடடிற்கு எடுத்து வருவர். பெண்ணின் தகப்பன் சகோதரர்கள்

குடும்பத்தவர்களும் கூடவே வருவர். அழைக்கப்பட்டவர்களும் சபையில் வந்து நிரம்பியிருப்பர். காவின் எழுதும் கதீப் அவர்களும் பதிவுசெய்யும் பதிவாளர் அவர்களும் வருவர்.

சபை முன்னால் போடப்பட்டிருக்கும் விசேட மேசையைச் சுற்றியுள்ள கதிரைகளில் இவர்கள் இருப்பர். பெண்வீட்டார் முன் வரிசையில் இருப்பார்கள். மாப்பிள்ளை அலங்கரிக்கப்பட்டு தோழர்களுடன் வந்து அமருவார். அவ்விடத்தில் எழுத்துமூலமான பதிவுகள் முடிந்ததும் கதீப் அவர்கள் மாப்பிள்ளையின் கையைப்பிடித்து பெண்ணை ஒப்படைக்கும் பொருத்தனையைச் சொல்லிக்கொடுக்க (வொலி) அவரும் மீளக்கூறி ஒப்புக்கொள்வார். அவ்விடத்தில் பெண்ணின் தகப்பனும் பொருந்திக்கொள்வார். அதன்பின் மாமனார் மாப்பிள்ளைக்கு மோதிரம் அணிந்து கையைப்பற்றி சலாம் சொல்லுவார். தொடர்ந்து சபையோருக்கும் சலாம் சொல்லி கைலாஹ் கொடுத்து முடிந்ததும் உபசாரம் நிகழும்.
மாப்பிளையை அழைத்து வரும்போது பட்டாஸ்வெடி கொழுத்துவது, குரவையிடுவது, கோலாட்டம் அடிப்பது, 'பைத்' இராகமாகச் பாடிக்கொண்டு வருவது என்பன நிகழும். மாப்பிளை வந்ததும் ஆராத்தி எடுத்து, கால் கழுவி, வாழ்த்துப்பாடியதும் மாப்பிள்ளை தனது மைத்துனனுக்கு மோதிரம் போட்டு மகிழ்வார். தொடாந்து வெள்ளை விரித்த கதிரையில் சற்று ஓய்வெடுக்கச் செய்வர்.

பின் மாப்பிளையை தாலி கட்டும் அறைக்குள் கூட்டிச் சென்று அவர் சகோதரி தாலியை எடுத்துக் கொடுத்துக் கட்டவைப்பார். பெண் தலை தாழ்ந்துகொண்டிருப்பார். மாமனார் தன் பிள்ளையின் கரத்தைப் பற்றி மாப்பிள்ளையின் கரத்துடன் இணைத்துவிடுவார். பாதிஹா ஓதியதும் நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவடையும். தொடர்ந்த சிற்றூண்டி வைபவம் அல்லது விருந்து வைபவம் நடை பெறும். இனி உபசாரம், உல்லாசம், வேடிக்கை, பிள்ளைகளின் விளையாட்டு என்பனவற்றால் வீடு கோலாகலமாக இருக்கும்.
வீட்டினுள் தம்பதிகள் இருப்பதற்காக அறையின் ஒருபகுதியை அலங்கார சீலையால் மறைத்துக் கட்டுவர் இருக்கையில் அடுக்கடுக்காக ஏழு 'ராட்டாப்' பாய்களை அடுக்கி போடுவர். பக்கத்தில் குத்து விளக்கும் ஏற்றிவைப்பர். நிறை குடமும் வைப்பர்.

நிறைகுடம் என்பது தென்னமரத்தின் இளம் பாளை எடுத்து வந்து வெட்டிப் பிளந்து செம்புக்குடத்துள் பூக்கொத்தை வைத்து விரித்து விடுவர். இப்பூக்கள் அன்புப் பரிமாற்றத்திற்கு உதவுமாம். இவ்வாறு வைப்பதனால் அறை மங்களமாக இருக்கும். இவ்வறையைத்தான் 'மறவணை' என்று அக்காலத்தில் அழைப்பர். நாளொன்றக்கு ஒவ்வொரு பாயை எடுத்து விடுவர். ஏழு நாளைக்குப்பிறகுதான் கால் மாறி மாப்பிளை வீட்டுக்கு கூட்டி செல்வர். மற்றவர்கள் கைலாகு கொடுத்து வழியனுப்புவர்.

கலாசாரமட்டத்து பல்வேறு நிகழ்ச்சிகள்.

முஸ்லிங்களுக்கு நோன்புகாலம் வந்துவிட்டால் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும்கூட பக்த சிரோண்மணிகளாக மாறிவிடுவர். இக்காலத்தில் முடிந்த அளவு நல்ல கருமங்களை மேற்கொண்டு அல்லாத விடயங்களிலிருந்து விலகி நடக்க விழைவர். பள்ளிவாசல்கள் பக்தர்களால் நிறைந்து வழியும். அதற்கேற்ற விதமாக பள்ளிவாசல்களிலும் சிலவேளை தனியார் வீடுகளிலும் ஹதீஸ் களரிகளை ஏப்பாடுசெய்வர். குறிப்பாக பள்ளிவாசல்களில் புதுப்புது ஆலிம்கள் மார்க்க போதனை செய்வதற்கு வருவர். ஆண்கள், பெண்கள் பிரத்தியேகமாக இருந்து கேட்பதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

மார்க்க போதனை செய்யும் ஆலிம் முகம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை, சஹாபாக்களின் நடைமுறை மார்க்க விதிகளான கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் ஆகியவற்றை மேற்கொள்ளும் ஒழுங்கு அனைத்தும் நாளாந்தம் போதிப்பர். இறைவன்மீது கொள்ளும் நம்பிக்கை - ஈமானுக்கேற்ப இறைவனது அருள் கிடைப்பது குறித்தும் அழுத்தமாகப் போதிப்பர். இடைக்கிடை களைப்பு நீங்குவதற்காக உருது மொழிப் பாடல்கள், சிலர் பதப் பாடல்கள்களையும் பாடுவர். இவ்வாறு முப்பது நாளும் தொடர்ந்து போதித்துக்கொண்டே இருப்பர்.

இறுதியாகத் திருக்கல்யாணம் என்றொரு நிகழ்ச்சி நிகழும். குறிப்பிட்ட ஆலிம் அவர்களை ஒரு மாபிள்ளையாக உருவகித்து, மாலைபோட்டு ஆராத்தி எடுத்து சிலவேளைகளில் ஊர்வலமாகவும் அழைத்துச் செல்வர். அவரை மீள பள்ளிவாசலுக்கு அழைத்து வந்ததும் மக்களின் மனதிற்கு ஏற்றவிதமாக பரிசுப்பொருள், நெல்லுபசாரம், காசு நன்கொடை அன்பளிப்புக்கள் கொடுப்பார்கள். இவை அவரது பெருநாளைப் பெருமையுடன் கொண்டாட உதவுமென்பதைக் கவனத்திற்கொள்ளலாம்.

மற்றொன்று, தனிப்பட்ட முறையில் வீடுகளில் ஓதப்படும் மௌலூதைக் குறிப்பிடலாம். 'மௌலூத்' என்பது முகம்மத் நபி (ஸல்) அவர்களையும், முகையதீன் ஆண்டகை அவர்களையும், பத்ர் சஹாபாக்களையும் புகழ்ந்து பாடுவதைக் குறிக்கும். இவை சுபுஹான மொலூது, முகைதீன் மௌலூது, பத்ர் சஹாபாக்கள் மௌலூது எனப் பெயர் குறிக்கப்படுகிறது. இவற்றை ஓதுபவர்கள் மார்க்க போதகர்களாகவும் மௌலூது ஒதத்தெரிந்தவர்களாகவும் இருப்பர். மௌலூது ஓதுவதற்கு ஏற்பாடு செய்யும் வீட்டுக்காரர் ஒரு நாளைக் குறித்து மௌலூது ஓதுபவர்களை ஒழுங்கு செய்ததும் அயல் வீட்டுக்காறர்களுக்கும் அபிமானிகளுக்கும் அழைப்புக்கொடுப்பார். அனைவரும் மகிழ்ச்சியோடு வந்து கூடி இரவு உணவு கொண்டபின் ஓதத் தொடங்குவர்.

முதலில் சூரதுல் பாதிஹா ஓதி குறிக்கப்படும் மௌலூதை ஓதத் தொடங்குவர். கேட்பவர் கரிசனையோடு கேட்டு கிரகித்துக்கொண்டிருப்பர்.

சுபுஹான மௌலூதின் ஆரம்பம்

யாநபி ஸலாம் அலைக்கும் யாறசூல் சலாம் அலைக்கும்
யாஹபீப் ஸலாம் அலைக்கும் சலவாத்துல்லாஹ் அலைக்கும்

முஹிதீன் மௌலூதின் ஆரம்பம்

மௌலாய சல்லி வசல்லிம் லிம்தாஹி மன்னபதா
ஆலாஹபீபிக கைரில்கல்கி குல்லிஹிமி எனத் தொடரும்.

இவ்வாறு குழுகுழுப்பாக இராகத்தோடு ஓதுவர். இடைக்கிடை இனிப்பு பண்டகளுடன் உபசாரங்களும், பதம்பாடுவது நிகழும். முடிந்ததும் சந்தோசமாய்க் கலைந்து செல்வர்.

அடுத்து 'றாதிபு' என்பதும் அத்தகையதொரு நிகழ்ச்சிதான். றாதிபு என்பது இறைவனை புகழ்ந்து திக்ர் செய்வதாகும். இதற்கென்று பல குழுக்கள் இருக்கின்றன. ஒரு குழுவின் தலைவரிடம் - கலீபாவிடம் வீட்டுக்காரர் குறித்த நாள் ஒன்றைக் குறிப்பிட்டு அந்நாளில் வந்துவிடுமாறு கூறிவிட்டு வருவார். குறித்த கலீபா அவர்களுக்கென்றுள்ள முஅத்தின் மூலம் அக்குழுவினரிடம் அறிவித்துவிடுவார். அனைவரும் ஆயத்தத்துடன் வந்து சேர்ந்து விடுவர். அடுத்த வீட்டுக்காறர்களும் அபிமானிகளும் வந்துவிடுவர். அனைவரும் சாப்பிட்டுவிட்டு யாசீன்/சலவாத் துஆ ஓதி ஆரம்பிப்பர்.

லாஇலாஹா இல்லல்லாஹ்	-100
இல்லல்லாஹ்	-100
அல்லாஹ்	-100
ஹ்ஹ்	-111

முறாதி அல்லாஹ் முறாதி, முறாதி அல்லாஹ் முறாதி, சேகுமுகைதீன் முறாதி, "யாறப்பு எங்கள் நாயனே, உன்னையன்றி யாருமில்லை, உன் கிருபை இல்லாவிட்டால் 'யாசல்ல தகமி' எனத் தொடரும். திக்ர் உச்சமடையும்போது எழுந்து நின்றும் திக்ர் செய்வர். கேட்டுக்கொண்டிருப்பவர்களும் உணர்ச்சிவசப்பட்டு ஒத்தோதுவர். ஒத்தோதுவர் என்றால் அதன் பரிமாணத்தை பார்த்துக்கொள்ளுங்களேன். இது இன்றும் இடைக்கிடையே நடைபெறுகின்றது.

இன்னொன்று 'பாவாமார்களின் பைத்தும் பாடல்களும்' கேட்பதற்கு உருக்கமாக இருக்கும். இவர்கள் அரபு வாத்தியக்கருவியின் பிரதியீடாக 'றபான்' எனும் வாத்தியக் கருவியை உபயோகித்துப்

பாடல்களைப் பாடுவர். இது ஒருபக்கம் தோலால் இறுக்கப்பட்ட வட்டவடிவமான நான்கு அங்குல அகலமான பலகையால் இணைக்கப்பட்டது. வட்டவடிவ சுற்றுப் பலகையில் இடையிடை சுமார் மூன்று அங்குல விட்டமுடைய வட்டத்தகடுகளை பொருத்தத்தக்கதாய் துளையிட்டுப் பொருத்திவிடுவர். இதனை அடித்தால் கலகலப்பாக ஓசை எழுப்புவதைக் கேட்கலாம்.

இவர்கள் சிற்றிலக்கியப் பாடல்களை மனனம்செய்திருப்பர் நபியவதார அம்மானை, பெண்புத்திமாலை, நூறுல் மசாலா, காசீம் படைப் போர், முனாஜாத், கிஸ்ஸா எனத்தொடரும். இவற்றைக்கேட்டு லயிக்க பெண்கள் ஆசைப்படுபவர் தம்வீட்டில் நடாத்துவதற்கு பாவாமாருக்கு அழைப்பு விடுப்பர். அடுத்த வீட்டுக்காறர்களும் அபிமானிகளும் இதை அறிந்து இஷாவுக்குப்பிறகு எல்லோரும் மொல்லெனக் கூடுவர். உணவு உபசாரங்களும் நிகழும்.

ஏதாவது கேட்கப்படும் பாடலை இறை காப்போடு தொடங்கிப் பாடுவார். பாடலுக்கேற்றவிதமாக வாத்தியத்தையும் இலாவகமாக அழுத்தி இழுத்து ஓசை எழுப்புவார். 'தகரா'வைக் குலுக்கி கலகலவென மற்றொரு ஓசையையும் எழுப்புவார். அதனைக் கேட்கும்போது இம்மென இதயம் கனக்கும். பாடலின் பொருளும் ஓசையும் பாலும் தேனும் கலந்து பருகுவது போன்று கேட்பவர்களுக்குப் பரவசம் பிறக்கும். போதாக்குறைக்கு தலைப்பாகையுடன் கம்பீரமாக வீற்றிருக்கும் 'பாவா' அவர்களைப் பார்த்தால் மலைப்பாக இருக்கும் என்பதையும் மறுதலிப்பதற்கில்லை. மட்டுமன்றி இவர்களிடம் ஆத்மீகக் கலைகளும் காணப்பட்டன. இவர்களிடம் உள்ள 'தவுஸ்' என்று சொல்லக்கூடிய கூரிய ஒரு வகை ஆயுதத்தினால் தங்களின் உடலின் பாகத்தை குற்றிக் குதறி மக்களை வியப்பூட்டுவர்.

மேலும் பெண்களிடையே பிரபல்யம்பெற்ற 'தலைப்பத்திஹா' ஓதும் சந்தர்ப்பத்தை சிலர் எதிர்பார்த்தவண்ணமே இருப்பர். தலைப்பாத்திஹா என்பது பாதிமதுஸ்ஸுஹறா ரலியல்லாஹு அன்ஹாவைக்கொண்டும், சாலிஹீன் சாலிஹாதுக்களைக் கொண்டும் ஓதப்படுவதாகும். ஒருபிள்ளை பிறந்து நாற்பதாம் நாளில்தான் தலைப்பாதிஹா ஓதுவர். இச்சந்தர்ப்பம் கிடைத்ததும் குறித்த பாதிஹா ஓதுபவர்களுக்கு அழைப்பு விடுப்பர். அவர்கள் தம் உதவியாளர்களுடன் வந்து கூடுவர். உணவுபசாரம் முடிந்ததும் அதற்குரிய 'துஆ'வை ஓதி ஆரம்பிப்பர்.

1. அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மது யாரப்பி ஸல்லி அலைஹி வசல்லிம்
2. பீfபுதுயிதலைபாதிஹதல் முனழ்ழம் பிஸ்மி அல்ஹம்து சலவாத்தைச் சொல்லுவோம் அல்லாஹ்.
3. பாவையர் திலகமதான பைங்கிளி பாதிமாவவைப் புகழ்ந்தே துதிப்போம்

எனத் தொடர்ந்து வெவ்வேறு வடிவங்களில் இராகத்தோடு ஓதி முடித்து மகிழ்ச்சியோடு கலைவர்.

அன்றியும் இடைக்கிடை சில வீடுகளில் நிகழும் 'கத்தம்','பாதிஹா' என்பவற்றையும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவர் மௌத்தாகி விட்டால் மார்க்கக்கடமைப்படி அவரை அடக்கம் செய்ததும் கபூறடியில் 'தல்கீன்' ஓதும் நிகழ்ச்சியும் நடக்கும். அத்துடன் மூன்றாம், ஏழாம், நாற்பதாம் நூறாம் நாட்களில் மௌத்தானவருக்காக, பள்ளிவாசல் கதீப், முஅத்தீன் ஆகியவர்களை அழைத்து 'கத்தம்' ஓதுவதும் வழக்கத்தில் உண்டு. கத்தம் ஓதுவது என்பது யாசீன் சூறாவையும் அதற்குரிய துஆக்களையும் ஓதி தமாம் செய்வதாகும். இத்துடன் ஏதாவது நேர்ச்சைகளுக்காக அல்லது தத்தம் தவறுகளில் இருந்து நீங்கிக் கொள்வதற்காக 'பாதிஹா' ஓதும் பழக்கமும் பலரிடம் உண்டு.

மேலும் ஒடுக்கத்துப் புதன் என்ற நிகழ்ச்சியும் நிகழுவதுண்டு அன்றைக்கு குறித்த ஹசரத் அவர்கள் அரிசை வறுத்து கரிக்கி பெறப்படும் மையை கலம் என்ற பேனையினால் எழுதுவர். நேர்சை வைத்தவர்கள் வெள்ளை பீங்கானை தேடி கழுவிக்கொண்டு வருவர். ஆளுக்கேற்றவிதமாக இசும் எழுதி விதிமுறைகளைகச் சொல்லிக் கொடுப்பார். அதனை மகிழ்வுடன் எடுத்துச் செல்வர்.

மேற்கூறப்பட்ட கலாசார மட்டத்து நிகழ்ச்சிகள் மார்க்க வழியில் சர்சைக்குரியதாகவுள்ளதால் அவை தற்போது தவிர்க்கப்பட்டுள்ளன. இதற்கு உறுதுணையாக தப்லீக் ஜமாஅத்தின் வழிகாட்டல்களும், தௌஹீத் ஜமாத் போதனைகளும், ஜமாதே இஸ்லாமியின் செயற்றிட்டங்களும் மக்களை நெறிப்படுத்தும் என நம்புவோம்.

கொடியேற்று விழாவும் குதூகலமும்

சில இறைநேசச் செல்வர்களின் கடாட்சத்தை பெறுவதைக் கருதுகோளாகக் கொண்டு கொடியேற்று விழா நடைபெறுவது இன்றும் இருக்கிறது. கிழக்கிலங்கையில் கல்முனைக் கடற்கரைப் பள்ளிவாசல் மைதானத்தில் ஆண்டுதோறும் மிக சிறப்பாக நடைபெறுகிறது. மக்கள் தரிசனத்திற்காக வருவதானால் வியாபாரிகளதும், வேடிக்கையாளர்களதும், கைவரிசை கச்சிதமாக நடைபெறுகின்றது.

அவ்விடத்தில் உயரமாகக் கட்டப்பட்ட மணறாவின் உச்சியில் மிகப்பெறுமதிமிக்கதாக கண்ணாடி வடிவங்களில் அடுக்கடுக்காக தைக்கப்பட்ட நீண்டதோர் கொடி ஏற்றப்படுகிறது. இக்கொடி பன்னிரண்டாவது நாளில் இறக்கப்படும் வரை பல்வேறு நிகழ்ச்சிகள், பள்ளிவாசலின் ஒதல்கள், உபன்னியசங்கள், பைத்துக்கள், துஆக்கள், நிகழ்ந்துகொண்டே இருக்கும். இவற்றை நத்தி வெளியூர்களிலிருந்து வரும் சனக்கூட்டத்திற்காக வியாபாரத்தலங்கள், வேடிக்கை நிகழ்ச்சிகளுக்கும், பஞ்சமில்லை இரவும் பகலும் இதமாக கழியும். போதாக்குறைக்கு கடற்கரை காட்சிகளையும் கண்டுகளிப்பர். கடலில் தூரத்தே செல்லும் கப்பல்கள், பக்கத்தே வரும் படகுகள், வீசிக்கொண்டிருக்கும் அலைகள் விளையாடிக்கொண்டிருக்கும் பிள்ளைகள் இன்னும் எத்தனையோ எத்தனையோ சொல்லி மாளாது.

இத்தகைய நிகழ்ச்சி ஒருகாலத்தில் சம்மாந்துறையிலும் நிகழ்ந்தது. ஐம்பதுகளில் தைக்காப்பள்ளிவாசலில் நிறுவப்பட்டிருந்த மணறாவில் கொடியேற்றினர். அண்டை அயலூர் மக்கள் வந்து கூடினர். வாள்வீச்சு, சீனடி, சிலம்படி, என்பனவும் நிகழ்ந்தன.சிற்சில வியபாரிகளும் சேர்வர். இதனை மறுதலித்த ஒரு கூட்டம் இரவோடு இரவாக கொடியை கழற்றியெடுத்து மடத்துக் குளத்தடி மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் பிறகு அந்த நிகழ்வு தொடரவே இல்லை. ஆயின், மறுதலையாக சிலகாலத்தின்பின் 'மஸ்தார்அப்பா' என்பவரின் கபுறடி மைதானத்திலும் நிகழ்ந்து மறைந்து போனது. இவ்விடத்தில் தற்பொது அல் மனார் பள்ளிவாசலும், அல-அஷ்ரப் வித்தியாலயமும் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

மேற்கூறப்பட்ட கலாசார மட்டத்து நிகழ்ச்சிகள் மார்க்க வழியில் சர்சைக்குரியதாகவுள்ளதால் அவை தற்போது தளர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு உறுதுணையாக தப்லீக் ஜமாஅத்தின் வழிகாட்டல்களும், தௌஹீத் ஜமாத் போதனைகளும், ஜமாதே இஸ்லாமியின் செயற்றிட்டங்களும் மக்களை நெறிப்படுத்தும் என நம்புவோம்.

மீலாத் விழாக்களும் இஸ்லாமிய கலைப்போட்டிகளும்.

காலமாற்றத்தால் பாரம்பரிய கலாச்சார வைபவங்கள் மறைந்து போகவே, அவ்விடத்தை மீலாத் விழா நிறைவு செய்தது. எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) பிறந்த தினத்தையொட்டி மீலாத் விழா பரிணாமம் பெற்றது. இதன் சார்பாக இஸ்லாமியக் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, புனித அல்- குர்ஆன் மனனப்போட்டி, இஸ்லாமியக்கீதப் போட்டி, என பல்வேறு வடிவங்களை நடாத்தி பரிசுகளும் வழங்கிக்கொண்டிருக்கின்றனர். இதற்காகப் பகிரங்கக் கூட்டம் ஒழுங்கு செய்து. அக்கூட்டத்தில் பேசுவதற்காக மார்க்க அறிஞர்கள் வரவழைக்கப்படுகின்றனர். மக்கள் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் மார்க்க விழிப்புணர்ச்சியை உருவாக்குகிறதென்றால். மிகையாகாது. இவ்வேற்பாடுகளை சில மன்றங்களும் பாடசாலைகளும் மதரசாக்களும் ஏற்பாடு செய்கின்றன. இது தற்போது நாடாளாவிய மட்டத்தில் தேசிய மீலாத் விழாவாக அரச அனுசரனையோடு நடை பெறுவது குறிப்பிடத்தக்கது.

பேதாக்குறைக்கு மத்ரசா நடாத்துபவர்களும் ஓதப்பள்ளி நடாத்துபவர்களும் இவ்விழாவை வேறு வடிவத்தில் நடாத்துகின்றனர். பிள்ளைகளின் மனோ நிலைக்கு ஏற்றவிதமாக தத்தம் நிலையத்தை அலங்கரித்து பிள்ளைகளுக்கு கைக்கொடிகளும் தயாரித்துக் கொடுத்து, ஊர்வலமும் நடாத்தி கூட்டமும் கூடி கிறாத் ஓதுதல், உரையாடல், பேச்சு, பாட்டு என பிள்ளைகளைக்கொண்டே செய்விக்கின்றனர். இவ்வேற்பாடுகளுக்குப் பெற்றாரும் பிரியமுள்ளவர்களும் ஒத்துழைப்பு வழங்குவதால் பெறுமதி மிக்கதாக உள்ளமையை உணரலாம்.

மனித நேய மாண்பு நிகழ்ச்சிகள்.

முஸ்லிம்களிடையே கந்தூரி என்றதொரு நிகழ்ச்சி அக்காலத்தில் நிகழ்ந்திருக்கின்றது. தனியார்கள் சிலர் தம் நேர்த்திக்கடன் சார்பாக வயல்களில், அல்லது தம் வீடுகளில் அண்டை அயலவர்களை அழைத்துக் கந்தூரிகொடுப்பர். கந்தூரி என்பது தனக்கடக்கமான அளவு பால் சோறு சமைத்துப் பங்கிட்டுக் கொடுப்பது. இது சகோதர இனத்தவர் மத்தியில் அன்னதானம் என அழைக்கப்படுகிறது.

இது சகல மக்களுக்கும் கிடைப்பது சாத்தியமில்லாமையை அறிந்துதான் போலும் பள்ளிப் பரிபாலனம் ஊர்சார்பாக நடாத்த முனைந்தது. பள்ளிவாசலில் புஹாரிசரிப் ஹதீஸ் கிரந்தத்தை ஓதி குறிப்பிட்ட நேரத்தில் மார்க்க அறிஞர்கள் விளக்கம் செய்தனர். சுமார் ஒரு மாதம் முடிந்ததும் பரிபாலன சபையினர் வேண்டுகோளுக்கிணங்க நன்கொடைகளும் நேர்ச்சைகளும் வந்து சேரும். இவற்றுடன் பள்ளிவாசல் பரிபாலனமும் ஒரு பங்கைக் கொடுத்து புஹாரி கந்தூரி நடத்தினர். இதனால் ஊர் மக்கள் அனைவரும் மனமும் வயிறும் நிறைவு பெற்று வாழ்ந்தனர். இதுவும் சிரமசாத்தியமாக இருந்ததால் போலும் நிறுத்தப்பட்டு விட்டது.

மற்றொன்று, 'புதிர்' உண்பது என ஒரு வைபவம் நிகழும். வயற் சொந்தக்காரர்கள் வயலை அறுவடை செய்து வீட்டுக்கு புதிய நெல்லைக்கொண்டு வந்ததும் அதனைக் குற்றிய அரிசியினால் பால் சோறு சமைத்து அல்லது 'புக்கை' எனக் கூறக்கூடிய பாலும் இனிப்பும் கலந்த நெகிழ்வுத்தன்மையுடைய உணவுப் பண்டம் சமைத்து, அயலவர்களையும் அபிமானிகளையும் அழைத்து வைபவ மட்டத்தில் நடாத்துவர். இச்சந்தர்பத்தில் சில வேளை பால், தயிர், பாணி, பழம் என்பனவும் பரிமாறப்படும். அதனை வயிராற உண்டு 'பாதிஹா' ஓதி இறைவனைப் பிரர்த்தித்து இனிதே கலைந்து செல்வர். இந்நிகழ்வு சகோதர தமிழ் இனத்தவர்களின் பொங்கலின் பிரதியீடாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மேலும் சிலர் தம் பிள்ளைகளுக்கு அல்லது பெரியவர்களுக்கு மேற்கொண்ட நேர்ச்சைளுக்காக 'நிய்யத்' கொடுப்பது வழக்கம். இதற்கும் கூட மேற்குறிப்பிட்ட உணவுப்பண்ட உபசாரம் நிகழ்வது நினைவு கூரத்தக்கது. மட்டுமன்றி பிள்ளைகளின் கெடு நீங்குவதற்கு என்று ஆபத்து றொட்டி சுட்டு அண்டை அயலில் உள்ள பிள்ளைகளுக்கு பகிர்வது பழக்கத்தில் இருந்தது.

இன்னும், பிள்ளைகளுக்குப் பல் முளைத்தால் பல் கொழுக்கட்டை சொரிவது இதமான சம்பவமாகும். அதற்காக, சுவையூட்டப்பட்டு அவிக்கப்பட்ட மாவுறுண்டைகளை (பல் கொழுக்கட்டை) வைத்துக்கொள்வர். இனி அடுத்த வீட்டுப்பிள்ளைகளை அழைத்து சுற்றியிருக்கச் செய்வர். அதன்பின் அக்கொழுக்கட்டைகளை பல் முளைத்த பிள்ளையின்மீது சொரிவர். அவை சிதறி கீழே விழும். சுற்றியிருக்கும் பிள்ளைகள் நான் முந்தி நீ முந்தி என்று பொறுக்கிச் சாப்பிடுவது பார்ப்பவர்களின் மனதை நெகிழவைக்கும். (வெவ்வேறு வகையான கொழுக்கட்டைகள் வெவ்வேறு மகிழ்ச்சியான சம்பவங்களுக்கு உண்ணக்கொடுப்பது உபயோகிக்கப்படுவது நினைவுகூரத்தக்கன)

தற்போது பிள்ளைகளின் பிறந்ததின நினைவைக் கொண்டாடும் முகமாக இத்தகைய வைபவங்கள் நிகழ்வதுண்டு. இவற்றுக்கெல்லாம் மேலாக இப்போது மார்க்க வழியில் வலிமா விருந்து, அகீகா விருந்து, என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

விளையாட்டுக்களும் வேடிக்கைகளும்.

மனிதனின் காத்திரமான உடலில்தான் நேத்திரமான சிந்தனைகளும் செயல்களும் பிறக்குமென்றால் மிகையாகாது. அதனாற்றான் அன்றைய மக்களும், பாமரர் முதல் படித்தவர் வரை விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இன்றைய விளையாட்டுக்களைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. ஊடகங்கள் நாளிலும் பொழுதிலும் அவற்றின் விவரணத்தை நவின்று கொண்டே இருக்கின்றன. சிறுவர் முதல் பெரியவர் வரை ஆண்கள் முதல் பெண்கள் வரை மதிப்பீடு செய்து மகிழ்ந்து கொண்டே இருக்கின்றனர். ஒரு 'கிரிக்கட்' போட்டி நடக்கிறதென்றால் பசி, தாகம், படிப்பு, ஒதல் அத்தனையும் ஓரம்கட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆயின் பாரம்பரிய விளையாட்டுக்களைப்பற்றி கூறும்போதும் அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதும் சுவாரஸ்யமான உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கத் தவறாது.

பாரம்பரிய விளையாட்டுக்களாக வார் விளையாட்டு, கண்கட்டி விளையாட்டு, பூ விளையாட்டு, இலந்தை விளையாட்டு, கட்டைப்பந்து, மட்டைப்பந்து, உத்துப்புள், கிட்டிப்புள், தெறிபுள், நொண்டியடித்தல், கிளித்தட்டு எனத் தொடர்கின்றன. இவற்றில் ஆண்கள் விளையாடக்கூடியவைகளும் பெண்கள் விளையாடக்கூடியவைகளும் இருக்கின்றன. இவற்றுள் வார் விளையாட்டு சாதூரியமாகவும் வேகமாகவும் விளையாடும் விளையாட்டு எனக் கொள்ளலாம்.

இதனை விளையாடுபவர்கள் சம அளவு எண்ணிக்கையுள்ள இரு குழுக்களாக பிரிந்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வோர் தலைவரை தேர்ந்தெடுத்துக்கொள்வர். இரு குழுவும் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் எதிரெதிராக ஒழுங்காக நிற்பர். விளையாட்டை ஆரம்பிக்குமுகமாக ஒரு குழுவின் தலைவர் அடுத்த குழு நிற்குமிடத்திற்குச் சென்று அதன் தலைவருடன் இருவரும் கை நீட்டி பிடித்து நிற்பர். சமிஞ்சை கிடைத்ததும் வந்தவர் ஓட நின்றவர் அவரை துரத்துவார். துரத்துபவரை துரத்த அடுத்த அணியிலிருந்து மற்றெருவர் வருவார். இவ்வாறு மாறி மாறி துரத்தி மெதுவாக அடிப்பர். அடிபட்டவர், அடுத்த அணியின் ஓரத்தில் ஒருபாகம் இடைவெளிவிட்டு மறியலில் வைக்கப்படுவார். திரும்பவும் அடுத்த அணி ஆளிடம் கை கோர்த்து மீண்டும் விளையாடத் தொடங்கி துரத்தி வரும்போது அடுத்த அணியினரால் அடிபடாமல் சாதூரியமாக மறியலில் நிற்பவரைத் தொட்டுவிட்டால் மறியலிலிருந்து விடுவிக்கப்படுவார்.

இவ்வாறு மீட்டு மீட்டு விளையாடிக்கொண்டிருக்கம்போது நேரம் போவதே தெரியாமலிருக்கும். எந்த அணியாவது கூடுதலாக மறியலுக்கச் சென்றால் அக்குழு தோற்றதாக கருதப்பதும். இவ்விளையாட்டை பெரியவர்களும் பிள்ளைகளும் இரவிலும் பகலிலும் விளையாடும் வழக்கமிருந்தது. இக்காலத்தில் கிறிக்கட் விளையாட்டிற்கு இருக்கும் மௌசுபோல் அன்று வார் விளையாட்டுக்கும் இருந்ததெனக் கொள்ளலாம். மட்டுமன்றி பெண்கள் விளையாடும் பூ விளையாட்டுக்கும் கூட இத்தகைய மௌசு இருந்தது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர வைபவ மட்டத்தில் விளையாடும் சில விளையாட்டுக்களும் இருந்தன. இவ்விளையாட்டுக்களில் குறிப்பட்ட சிலர் குழுவாகவும் தனியாகவும் பயிற்றப்பட்டிருந்தனர். இவை சீனடி, சிலம்படி, கூர்வாள் வீச்சு, சுருட்டு வாள் வீச்சு, புலி விளையாட்டு பொல்லடி (கோலாட்டம்), கும்மி, குரவை எனத் தொடரும். பின்னுள்ள இரண்டும் பெண்களுக்குரியவை. இவ்விளையாட்டுக்களை ஆரம்பிக்கும்போது. காவியம் பாடுபவர்கள் காப்புச் செய்யுள் பாடுவதைப் போல, சலாம் வரிசை போட்டுத்தான் ஆரம்பிப்பது இரசிக்கத்தக்கதொரு விடயமாகும். இவற்றை கல்யாண வைபவம், பிரமுகர் வரவேற்பு கேளிக்கை நிகழ்ச்சிகளின்போது இவர்களை வரவழைத்து வியாடுவிப்பர். இவற்றிற் சில தற்காப்பு விளையாட்டுக்களாக இருப்பதால் இவை தெரிந்தவர்களிடம் எதிரிகள் நெருங்கத் தயங்குவர். இவ்விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களாக மர்ஹும் சின்ன அகமது வைத்தியர், பக்கீர் முகைதீன், அப்துர்ரஹ்மான் ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

இவற்றுள், பொல்லடி சாதுரிமானதாகவும் சுவாரஸ்யமானதாகவும் அமையப்பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். குழுவினர் சுற்றிச் சுழன்று அடிக்கத்தக்கதாக ஓர் உரல்போன்றதொரு தடயப் பொருளை வைத்துக்கொள்வர். இவர்களை நெறிப்படுத்துவதற்கு ஓர் அண்ணாவியார் இருப்பார். (குழுவின் தலைவர்) நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு அடிநாதமாக அண்ணாவியார், 'தனதாந்த! தனதாந்த! தந்தனத்தான தனதான! தந்தனத்தான தனதான! எனும் 'தரு'வை பாடியதும் உரிய பாடலைப் தொடருவார். அதற்கேற்றவிதமாக தாளத்தோடு அசைந்து அசைந்து பொல்லடிக்கத் தொடங்குவர். தத்தம் பொல் இரண்டையும் தனக்குள் அடிக்கும் அதே வேளையில் அடுத்தவர் பொல்லுக்கும் பொல் கொடுப்பர். இவ்வாறு மாறி மாறி சுற்றிச்சுழன்று அடித்துக்கொண்டே இருப்பர், பொல்லில் பொருத்தப்பட்டிருக்கும் ஒரு வகைச் சல்ங்கை கணீர் கணீர் என ஒலித்துக்கொண்டே இருக்கும். இவர்கள் அடிக்கும்போது இலாவகமாகவும் இரசிக்கத்தக்கதாகவும் இருப்பதைக் காணலாம். இவர்கள் இவ்வாறு அடிக்கும்போது எவரதும் தலையிலும் அடிபடாமல் மிகவும் சாதுரியமாக அடிப்பது நயக்கத்தக்கது. இதன் முன்னோடியாக மர்ஹூம் மீராமுகைதீன் (தெள்ளுவெடிக்காறர்) இருந்திருக்கிறார்.

இறுதியாக, எமது பிள்ளைகள் வண்ணவண்ணமான வட்டங்களைக்கட்டி வயல்வெளிகளுக்குச் சென்று, அங்கு வீசும் காற்றின் வேகத்திற்கேற்ப போட்டி போட்டுக்கொண்டு வட்டம் விடுவர். இவற்றில் வால் வட்டம் வாலில்லாவட்டம் என இரு வகை உண்டு. வால்லில்லா வட்டம் கட்டுவது சற்றுச் சிரமமானது. இருப்பினும் சிறப்பானது. வட்டத்தின் பருமனைப்பொறுத்து உயர்ந்த மட்டத்திற்கு ஏறும். அவ்வாறு ஏறும் போது சிலர் வட்டத்தின் அடி நூலில் ஒரு மோதிரத்தில் குஞ்சம் கட்டி கொழுவிவிடுவர் அது மேலே ஏறிச்செல்லும் விரைவைப் பார்த்து பிள்ளைகள் கரகோசம் செய்வர். சிலவேளைகளில் அமுக்கம் தாங்காமல் நூல் அறுந்துவிடுவதுமுண்டு. அப்போது கூடவந்த பிள்ளைகள் ஹு ஹுவென கூக்கரலிடுவர். இவ்வாறு வட்டமிடும் நிகழ்ச்சிகள் தற்போதும் வயல்வெளிகளிலும் கடற்கரைகளிலும் நிகழ்வதை அவதானிக்கலாம். தலைநகரில் வட்டமிடுதல் போட்டி நிகழ்ச்சிகளாக வருடாந்தம் நடைபெறுகின்றன.

நன்றி

யு.எல்.எம்.முஸ்தபா JP
(ஓய்வு பெற்ற அதிபர்)

வெள்ளை மாளிகை பற்றி:-

உள்ளடக்கப்பரப்பு 55000 சதுர அடி, 132 அறைகள், 412 கதவுகள், 140 ஜன்னல்கள், 35 கழிவறைகள், 28 தீயணைப்புக்கருவிகள், 08 மாடிப்படிகள், 03 தானியங்கி மாடிப்படிகள், 140 பேர் உண்ணக்கூடிய சாப்பாட்டு அறை, டெனிஸ் அரங்கம், சினிமாத் தியேட்டர், நீச்சல் தடாகம், ஹெலி இறங்குமிடம் ஆகிய ஏற்பாடுகள் உள்ளன. ஆனால், ஒவ்வொரு ஜனாதிபதியும் அவர்களுக்கு ஏற்றவாறு திருத்தங்களும் செய்து கொள்வர்.

நிஜம் பாதி நிழல் பாதி



பூராம்புரி வட்டைஓரமும், ஆற்றங்கரையும்



நிதிக் குழு

1. ஜனாப் AL மஹ்றூப் - தலைவர்
2. ஜனாப் AM இல்யாஸ் – செயலாளர்
3. ஜனாப் KLA ஹமீட்
4. ஜனாப் MTM சரீம்
5. ஜனாப் MIM பசீர்
6. ஜனாப் MAC யூசுப்லெவ்வை
7. ஜனாப் MAC அன்வர்
8. ஜனாப் MPM ஹுசைன்
9. ஜனாப் KL அபூசாலி
10. ஜனாப் ML தாசீம்
11. ஜனாப் MM சலீம்
12. ஜனாப் AGP அஸ்ரப்

LANKA FILLING STATION

Prop: AL-HAj.S.M.Farook

AMPARAI ROAD,
SAMMANTHURAI
SRI LANKA
TEL: 067 2260736,
071 5323888



H.M.H. HAJ TRAVELS

ஹஜ் உம்ரா யாத்திரை

நேரடி விமான சேவை மக்காவிலும், மதீனாவிலும் புனித ஹறம் ஷரீபுக்கு மிக அண்மையில் தங்குமிடம், குளிரூட்டப்பட்ட பஸ் வசதிகள், ஊர் முறைப்படி 3 நேர உணவு, தேனீர், குடிபானம். இன்ஷா அல்லாஹ் ஹஜ், உம்ரா செய்ய நாட்டமுள்ளவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்

அல் ஹாபிழ், மௌலவி அல் ஹாஜ்
ஏ.எல்.ஹஜ்ஜி முஹம்மது.பலாஹி (ஹஜ்ஜாபிஸ்)
பணிப்பாளர்,
எச்.எம்.எச்.ஹஜ் ரவல்ஸ்
இல.01.மல்,8ம். வீதி சம்மாந்துறை.
தொ.பே.0777140951,0773817697- பெக்ஸ்-067 2260527

எச் எம் எச் ஹஜ் ரவல்ஸ்

சம்மாந்துறை

வெளிக்கள உத்தியோகத்தர்கள்



முன்வரிசை இடமிருந்து வலம்: ஏ.றஹீம் (F.I) எம்.எஸ்.ஏ.றஹீம் (T.O) எம்.சீ.ஏ.யூகப்லெவ்வை (R.D.O) ஜே.லியாக்கத் அலி (A.DS) ஏ.மன்சூர் (D.S) ஏ.எல்.ம.ஃறூப் (Accl.) ஏம்.ஐ.எம்.அஸ்றப் (C.O) எம்.எச்.எம்.பைசால் அமீன் (Y.S.O) எம்.ஐ.எம்.இஸ்மாயில் (T.O) கே.எல்.அல் அமீன் (T.O)

பின்வரிசை இடமிருந்து வலம்: ஐ.எல்.றாபீஹ் (D.C.O) யு.எம்.முஸம்மில் (S.T.O) எம்.எச்.எம்.அஸ்வத் (S.O) பி.எம்.றஸீன் (P.A) ஏ.எல்.ஜாபீர் (D.A) யு.எல்.எம்.பசீர் (T.O) கே.எம்.றிஸ்வி (H.R.D.A) எம்.ஏ.சக்கீனா (R.S) எம்.ஐ.எம்.அஸ்வத் (S.O)

ஏ.றகீபா உம்மா (D.A) எம்.ஏ.எம்.றாபி (L.O) ஏ.எச்.எச்.எம்.கீபாயதுல்லா (C.O) ஏ.எம்.இத்ரீஸ் (S.S.O) ஏ.எல்.ஜெமீல் (D.E.O) எம்.ஐ.எம்.சர்ஜூன் (C.O) வை.பீ.எம்.லாபீர் (P.A)



அன்று எனதூர்

சம்மாந்துறையின் வரைபடமன்று
செம்மண் பாதையால் செறிந்து இருந்தது
கறுப்பாய் இருந்த அம்பாறை வீதியில்
கனவுகளின் பின்னொரு பஸ் தலைகாட்டும்.

செம்மண்ணின் பூச்சொடு மண் சுவரமைத்து
சிகரத்துக் கிடுகு மேல் வைக்கோலை வேய்ந்து
குச்சுக் குடிசைகள் குளிருடன் திகழும்
இச்சை மலர் மரங்களால் வேலிகள் இலங்கும்.

மின்னொளி காணாத முன்னைய நாளில்
தன்னொளி பரப்பிடும் சந்தி விளக்குகள்
எண்ணெய்யும் ஏணியும் கங்காணி கொண்டு
ஏற்றுவார் விளக்கு மசண்டையில் தெருவில்

நீர் நிலை யெங்கணும் நெல்லுக் கோட்டைகள்
நிமிர் திசையெல்லாம் உழவு, விதைப்பு
அறுவடைக்காலம் சூடடிப்புக்கள்
அத்தனையும் மாடுகளின் இழுவைப் பலத்தால்.

ஆடவர் தோளில் தயிர்க்குடக் காவும்
அவனது வீட்டில் தயிரன் பளிப்பும்
வந்தரிசிச் சோற்றில் பப்பாசிக் கறியும்
வாகாய்த் தின்ற வயிற்றுப் புடைப்புக்களும்.

ஏற்றி வைத்த சூட்டை இழுத்துப் பரப்பி
எருமைகளால் மிதித்து நெல்லை வேறாக்கி
தூற்றியளந்ததைப் பட்டறையிலிட்டு
தொடர் வண்டி பலவற்றில் ஏற்றிப் பறித்து

வீட்டிலே கொட்டெனும் பட்டறையில் கொட்டி
வேண்டு மட்டும் விற்றதில் பொறுப்பைக் களைவர்.
பொரித்துக் கரித்தரிசிச் சாயம் எடுத்து
பலகையில் அறபெழுதிப் பாடம் படிப்பர்.

பக்கத்தில் வாழுகின்ற அன்னியர்களோடும்
பற்பலவாய்த் தொழில் புரியும் அன்னியர்களோடும்
சக்கற்ற சகவாசம் சகோதர வாஞ்சை
சாவிலும் வாழ்விலும் சௌஜன்ய உறவு

இத்தனை சிறப்புக்கள் கொண்டன்று எனதூர்
இனிதாக விளங்கியதை இன்று நினைத்தாலும்
சித்தம் குளிர்கிறது இனிவருங் காலம்
இதை விடப் பல மடங்கு இன்பமுற வேண்டும்.

வித்யாகீர்த்தி இறையருட் கவிஞர்,
ஏ.இப்றாஹீம்.

புவிகாக்கும் 4 தூண்கள் :-

1. அறிஞர்களின் வழிகாட்டல்கள்
2. இறைநேசர்களின் இறைஞ்சுதல்கள்
3. போர் வீரர்களின் அர்ப்பணிப்புக்கள்
4. புரவலர்கள் செய்கின்ற கொடைகள்

இவைகளாலேயே உலகம் இன்னும்
அழியாமல் இருக்கிறது.
எனவே இவை புவிகாக்கும் 4 தூண்களாகும்.

வசந்தங்கள் வரவேற்கின்றன.....

(சிறுகதை)

லத்தீப் காக்காவுக்கு இரவெல்லாம் தூக்கமே இல்லை "கடனுக்கு காசு எடுத்து மூத்தவனை வெளிநாடு அனுப்பினன், மூணு வருசமாகிட்டு இன்னும் எடுத்த கடனைக் கொடுக்க முடியல்ல. அவன் அங்கே வெளிநாட்டில நல்லா செலவழிச்சிட்டு சந்தோசமாக இருக்கானாம். மாசத்துக்கு அஞ்சாயிரம் அனுப்பு எங்கட பஞ்சம் பஞ்சாப்பறக்குமே. அவனவிடுவம். அவன் எனக்கி மகனே இல்ல. சின்னவன் நல்லா வருவான் போல இருக்கி பள்ளிக்கும் போய் படிக்கான், லீவு நாட்கள்ல சீமெந்தும்கொளைத்துக் கொடுக்கப்போய் கூலிய உம்மாக்கிட்டயும் கொடுத்திட்டு தேவையான பேன கொப்பியும் வாங்குறான். இப்பதான் அவன் பத்தாம் தரம் இன்னும் எத்தின வருசமிருக்கி. போதாக்குறைக்கு பொம்புளப்புள்ளயும் ரெண்டு. இதுகளுக்கு வீடு வாசல் கட்டி, சீதனம் குடுத்து மாப்பிள எடுக்கிறதெண்டா... "லத்திப் காக்காவின் தலையில வெட்டுக்காட்டு மலையே ஏறி இருக்கிற பாரம்". உதறிக் கொண்டு எழும்பினார். அதிகாலை சுப்ஹுத் தொழுகைக்கான அதான் அழகாக ஒலித்தது.

லத்தீப் காக்காவின் சின்ன மகன் சிறாஜுத்தீன் ஓடி வந்து வாப்பாவின் அருகே அமர்ந்தான். லத்தீப் காக்காவின் மார்பெலும்புக்கூடு சுருங்கி விரிய மூச்சு உர்ரென்று ஓசை எழுப்பியது. "வாப்பா ராவு மூச்சுக் குழுச போடல்லியா? கர் புர் ரென்று சத்தம் வருது" சிறாஜுத்தீன் கேட்டான்.
"அந்தக் குழுசை போட்டாலும்அப்படித்தான் போடாட்டியும் அப்படித்தான். எனக்கு குழுசையைப்பத்தி பிரச்சினை இல்ல. நம்மட ஊட்டுச் செலவுக்கு இந்த வருசம் என்ன செய்யிற என்டுதான் கவல... இந்த முறை சேனக்காட்டுப் பகுதியெல்லாம் தண்ணி இல்லாததால செய்யிற இல்லியாம். நம்மட போடியார்ர வயல் இந்த முறை செய்யிற இல்லியாம்... நாம என்ன செய்யிற. ஆருக்கிட்டப் போய் வெள்ளாம கேட்கிற.... என்னப் பார்த்துப் போட்டு ஆராச்சும் வெள்ளாம தருவானா? இந்த வருசமாப் பார்த்துப் பாழாப்போன மூச்சும் வந்திட்டுது"..... எனக் கவலைப்பட்டார்.

"வாப்பா கவலைப்படாம ஆருக்கிட்டயாலும் 3, 4 ஏக்கர் வெள்ளாம கேளுங்க. நான் செய்வன்". என்றான் அந்த விடலைப்பையன் சிறாஜ். லத்தீப் காக்கா மகனை நிமிர்ந்து பார்த்தார்.

மண்வெட்டி பிடி போல கால்களும், அரிவாள் கத்திப்புடி போல கைகளும் முட்டுக்காய் பருவத் தேங்காய் போல தலையுமாகத் தெரிந்தான் மகன். இவன் உருவத்தை விட அவனது மனத்தைரியம் பெரிதாகத் தெரிந்தது. "சிறு புள்ள செய்யும் வெள்ளாம" என்ற பழமொழியும் அவருக்கு நினைவுக்கு வந்தது.

"அப்ப நீ படிக்கப் போறல்லியா?" என்றார் லத்தீப் காக்கா.
"நான் படிப்ப விடாம லீவு நாள்ளையும் பின்னேரமாகவும் செய்வன். நாங்க 10ம் தரப்புள்ளயள் ஒரு சங்கம் சேர்ந்திருக்கம். அந்தப் புள்ளயள் ஒரு நாள் வந்தாலே வரம்பைக் கொத்திடுவன். மிசின் உழவும். போடியார் ஆள் தருவார் விதைக்க. அதுக்குப்பிறகு எண்ண தண்ணி, பசளைதானே அதெல்லாம் சிம்பிள் வாப்பா" என்றான் சிறாஜ்.

லத்தீப் காக்காவுக்குக்கும் எல்லாப் பாரமும் இறங்கிப் போன மாதிரி இருந்தது. இருந்தாலும் ஈழ நோயுடன் அடிக்கடி போராடும் எனக்கு "ஆர் வெள்ளாம தருவார்கள்" என்ற பீதியுமில்ல மெல்ல எட்டிப்பார்க்கத்தொடங்கியது, என்றாலும் நம்பிக்கையை கைவிடாமல் தனது முயற்சியில் இறங்கினார். ஒவ்வொரு போடிமாரும் ஒவ்வொரு கதை சொல்லி தட்டிக்கழித்தனர். லத்தீப் காக்காவின் மனம் சிறிது சிறிதாக சோர்வடையத்தொடங்கியது . மகன் சிறாஜும் விசாரித்துக் கொண்டே இருந்தான்.

அன்று லத்தீப் காக்கா பெரிய பள்ளிவாசலடியில் இருக்கும் தேனீர் கடையில் தேனீர் அருந்திக்கொண்டிருந்தார். பிள்ளைகள் எல்லாரும் பாடசாலைக்கு போய்க்கொண்டிருந்தார்கள் அப்போது ஒரு சிறுவனை கையில் பிடித்தபடி வந்த ஒருவர் கடையில் அச்சிறுவனுக்கு ஏதேதோவெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டு லத்தீப் காக்காவைப் பார்த்து "என்ன லத்தீப் பேசாம இருக்கிறாய் என்னக் கண்டும் காணாமல் இருக்கிறாய் " என்றார் வந்தவர்.

லத்தீப் காக்கா வந்தவரைப் பார்த்துவிட்டு ஓ..... சங்கரப்பிள்ளை உங்களுக்கென்ன? சொத்தும் சுகமுமாக இருக்கிறீங்க. நாங்க மட்டும் எதுவிமில்லாம மரவுரி தரிச்ச நிலையில இருக்கிறம் என்றார் லத்தீப் காக்கா.

“ஒண்ட கதையைக் கேட்டா நாம பள்ளிக்கூடத்தில படிச்ச நினைவுதான் வருகுது. இன்னும் பகடிப்பேச்சு மாறல்ல “என்ன பிரச்சினை சொல்லன் பார்ப்பம்” என்றார் சங்கரப்பிள்ளை “ சொன்னால் தீர்த்துவைப்பியோ?” இது லத்தீப் காக்கா

“முடிஞ்சால் செய்வேன். நீ என் பால்ய சிநேகிதன் உனக்கு உதவுவதெண்டால் எனக்கு இதைவிட சந்தோஷம் ஏது? “அப்படியா” ? உன் காணியில ஒரு நாலு ஏக்கர நான் கூலிக்கு செய்ய தாவன் பார்ப்பம். என்றார் லத்தீப்

சங்கரப்பிள்ள வாய்விட்டுச் சிரித்தார். உன்னால ஏலுமா ? நீ நோயாளியாகிவிட்டாய் என்றார். அந்தாப்பாரு கொஞ்சத்துக்கு முந்திதான் கெப்பர் கத கதைச்சாய் இப்ப நான் நோயாளி என்கிறாய் என்ட ஆம்பிள பிள்ளைகள் இருக்கானுகள். எனக்கென்ன இடைக்கிடைதானே மூச்சு வருது நான் செய்யமாட்டேனா?

யோசித்த சங்கரப்பிள்ளை “சரி நாளைக்கு வீட்ட வா நான் வயல் தாறன்.” என்றார் .
லத்தீப் காக்காவுக்கு சந்தோசமாக இருந்தது. வீட்டுக்கு ஓடிப்போய் மனைவியிடமும் மகனுடனும் சொல்லிச் சந்தோசப்பட்டார்.

சிறாஜின் நண்பர்கள் உதவியுடனும் லத்தீப் காக்காவின் வழிகாட்டலுடனும், போடியாரின் பொருட்களுடனும் பச்சைப்பசேல் என வேளாண்மை அலைவீசிக்கொண்டு நின்றது.

சங்கரப்பிள்ளை வயலைப் போய்ப்பார்த்துவிட்டு எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவு வயல் வளமாக இருந்தது ஆனால் அவர் விசாரித்த போதெல்லாம் லத்தீப் காக்கா வைத்தியசாலைக்கும் மாத்திரைப் பக்கட்டுகளுக்கும் அலைந்ததாகவே கேள்விப்பட்டார்.

வயல் அறுவடையை நெருங்கி கொண்டிருந்தது லத்தீப் காக்கா மகனைப்பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டார். அன்று ஞாயிற்றுக் கிழமை இருள் பிரிய முதலே சிறாஜுதீனை அவன் நண்பர்கள் சிலர் மண்வெட்டி சகிதம் அழைத்துக்கொண்டு நின்றனர். லத்தீப் காக்காவும் உசாராக எழும்பிக் கொண்டார்.

“என்ன மகன் வடிச்சலெடுக்கப்போறீங்களா? நானும் வாறன்” என்றபடி அவரும் வெளிக்கிட்டார். “உம்மா சாப்பாட்டு வாளியைத் தாங்க வாங்க போவோம்” என வெளிக்கிளம்பினான் சிறாஜுதீன்.

வயலில் வடிச்சலெடுக்கும் வேலை மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை போடியார் சங்கரப்பிள்ளை பள்சர் மோட்டார் சைக்கிளில் வந்திறங்கினார். வயலை நோட்டமிட்டார். சின்னப் பையன்கள் என்றாலும் செம்மையாக வேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. லத்தீப் காக்காவின் லாவகமான வழிகாட்டலுடன் சங்கரப் பிள்ளை அப்படியே மரமாக நின்றார். அவர் சிந்தனை அவரின் பிள்ளைகளை ஒப்புநோக்கி பார்த்துக்கொண்டிருந்தது. மூத்த பொடியன் ஏதோ இயக்கத்தில் சேர்ந்து எங்கே போனான் என்றோ இருக்கிறானோ? செத்தானோ? என்று தெரியாது ஏழு வருசமாச்சு.

மற்றப் பொடியன் படிக்கிறேன் படிக்கிறேன் என்று கூத்தும் கும்மாளமுமாக திரிஞ்சிட்டு அப்பன்ட ஆதனத்தை எத விக்கலாம் எந்த நாட்டுக்குப் போய் வெள்ளக்காரிய கலியாணம் பண்ணிக்கலாம்னு ஐடியாப் போறான். ஐஞ்சு சதம் உழைத்தும் திண்டிருப்பானா? தந்திருப்பானா நமக்கும் வந்து வாய்ச்சதே புள்ளைகள்?

ஆனால் இந்த லத்தீப்ட பொடியன் என்ன கெட்டிக்காரன். ஏனோ சிறாஜுதீனை பார்க்க சங்கரப்பிள்ளைக்கு கோபம் கோபமாக வந்தது. யார் மேலேயோ இருந்த கோபம் யார் மேலேயோ கனலாகத் தெறிக்க தன் கோபத்தையெல்லாம் ஒன்றுதிரட்டி உள்ளங்கைக்குள் எடுத்து “பளார்” என ஓங்கி ஒரு அறைவிட்டார் சிறாஜிதீனுக்கு. அவன் வெட்டிய வக்கடைக்குள் தவளையைப் போல் கால்களையும் கைகளையும் பரத்தி விழுந்துகிடந்தான் . “ஏன்டா கண்ட கண்ட இடத்து வரம்பையெல்லாம் வெட்டி வெட்டி தள்ளின யார்ரா வரம்புகட்டுறவன். வெள்ளாம செஞ்சிருக்காராம் வெள்ளாம” என முணுமுணுத்தபடி மோட்டார் பைக்கை ஸ்டாட் பணணிக்கொண்டு சங்கரப்பிள்ளை போய்விட்டார்.

சிறாஜின் நண்பர்களும் செய்வதறியாது திகைத்து நிற்க லத்தீப் காக்கா மகன் நீ கவலைப்படாதே நீ சரியாத்தான் வடிச்சல் போட்டிருக்காய். போடிமாரெல்லாம் இப்படித்தான் சண்டையில்லாததுக்கு சண்டையெடுப்பானுகள் நல்லதைக் கண்டாலும் கோவிப்பானுகள் . கெட்டதுக்கும் கோவிப்பானுகள்

இனி அறுவடைக் காலம்தானே. அப்பதானே கணக்கில அப்படி இப்படி பிடிக்கலாம். வாங்க எல்லாரும் ஊட்டுக்குப் போவோம். மத்தத நாளைக்குப் பார்ப்பம் என்று வயலைவிட்டு வெளியேறிவிட்டனர்.

அன்று இரவெல்லாம் லத்தீப் காக்காவும், சங்கரப்பிள்ளையும் உறங்கவேயில்லை. சங்கரப்பிள்ளை ஏன் இவ்வாறு நடந்துகொண்டான். மெசனரிப் பாடசாலையில்தானே அவனும் நானும் ஒரே வகுப்பிலேதான் படித்தோம். உண்மை, நேர்மைக்கு இலக்கணமானவன். சாதி , சமய வேறுபாடு என்பது அவனிடம் கிஞ்சித்தும் இல்லை. எத்தனையோ நாட்கள் என் வீட்டில் கல்யாணச் சாப்பாடு, சுன்னத்துச் சாப்பாடு என சகல சடங்குகளுக்கும் வந்து சாப்பிட்டுள்ளான். மற்றவர் மனம் நோகப் பேசாதவன் எப்படிக் கைநீட்டி அடித்தானோ தெரியல்ல" என யோசித்தார் லத்தீப் காக்கா.

அங்கே சங்கரப்பிள்ளையோ "ஏன் நான் அந்தப் பையனுக்கு அடிச்சன். என் பிள்ளைகள் மீது கொண்ட கோபத்தை இவன் மீது காட்டிவிட்டேனே. லத்தீப் என்ன நினைப்பானோ? அந்தப் பையனின் முயற்சி என் அடியால் தடைப்பட்டு விடுமோ? அந்தப் பாவத்திற்கும் நான் ஆளாகிவிடுவேனே. என் பிள்ளைகளை ஒழுங்கா வளர்க்கத்தெரியாத நான் நல்லா வளர்ந்து வாற பையனை வன்முறைக்கு ஆளாக்கிவிடுவேனோ?" எனச் சிந்தித்தவர் காலையிலேயே லத்தீபின் வீட்டை நோக்கிப் போய் சிராஜ்தீனை அழைத்துப் பக்கத்தில் இருக்கவைத்தவர் அவனைப் பார்த்து புன்முறுவல் பூத்தார். இதைக் கண்ட லத்தீப் காக்கா

"என்ன நேத்து கொஞ்சம் தண்ணி பாவிச்சாப்போல" என்றார் "சே...சே.... எனக்கு அந்தப் பழக்கம் எல்லாம் இல்ல. உனக்கு தெரியாதா?" என்றவர் சிராஜைப் பார்த்து
"என்ன வயலுக்க போகல்லியா? " என்றார்

"நான் ஸ்கூல் முடிந்த பிறகுதான் போவன்" என்றான்

"அப்ப படிச்சிட்டு இந்த வேலையும் செய்யிறாயா? உனக்கு படிப்புக்கு இது தடை இல்லியா? "என்றதுதான் தாமதம் சிராஜ்க்கு உற்சாகமாக பேசத் தொடங்கினான்.

"எனக்கு என் நண்பர்கள் நல்ல உதவி. ஒரு தரத்தில 03 மணித்தியாலத்தில 10 பேர் போனா ரெண்டு முழு நாள் வேலையைப் போல செஞ்சி முடிச்சிடுவம்." என்றான்.

"அப்படின்னா இந்தப் பிள்ளைகள் எந்த நேரமும் வருவாங்களா?

"அது நாங்க அஞ்சாம் ஆண்டிலேயே ஒரு சங்கம் சேர்ந்திருக்கிறம். தேவையானவங்களுக்கு தேவையான நேரத்தில போய் உதவி செய்கிறது. வருமானம் வாற வேலைகள் செய்தால் சங்கத்துக்கு ஒரு சிறு தொகை சேமிப்புக்கு கொடுப்பம். இப்பவே முப்பதாயிரம் சேமிப்பில் இருக்கு. சங்கத்திலே யாருக்காவது கஷ்டம் வந்தால் கடனும் கொடுப்பம் ".என்றான்.

சங்கரப்பிள்ளை அப்படியே மலைத்துப் போய்விட்டார். இவர்கள் யாரையும் அழிக்கிற சங்கமில்லை வளர்க்கிற சங்கம். அவருக்கு சந்தோசமாக இருந்தது. இப்படியான பிள்ளைகளை நாம் பாராட்டி வளர்த்துவிட வேண்டும். என நினைத்தவர்.

"சரி எனது சொந்தக்காரப் பிள்ளைகள் நாலு பேர் உங்கட வயசில இருக்காங்க. அவங்களையும் சேர்த்துவிடுவீங்களா?

"அதுக்கென்ன ஐயா எங்கட வயசுப் பிள்ளைகள் யாரும் வந்து சேரலாம். அதுக்கு தடையில்லை."

"சரி இந்த நாலு பேரின் பங்குப் பணம் 10,000/= வும் எடுத்துக்க பின்னேரம் நாலு பேரையும் அனுப்பிவைக்கிறன் என்றவர். இன்னும் உனக்கு ஒரு வெகுமதி என்றவர்..... அடுத்த முறை எட்டு ஏக்கர் வேளாண்மை செய்யத்தாறன். என்ன லத்தீப் உனக்கா இல்ல. உன் மகனுக்காக லத்தீப் காக்காவின் கண்களில் வசந்தகாலப் பூக்கள் வண்ண வண்ண இதழ்விரித்தன.

(கதையில் வந்த சம்பவங்கள் பெயர்கள் அனைத்தும் கற்பனையே)

சுபைதா அமீர்

மெட்டல் கிரசர்

Ampara Road, Sammanthurai

Tel:077 4686951



உரிமையாளர்: யு.எல். பளீல்

லொயிட்ஸ் சாரதி பாடசலை

இங்கு சகலவிதமான வாகனங்களையும் செலுத்த பழக்குவதுடன், அவைகளுக்காக சாரதி அனுமதிப்பத்திரங்களும் பெற்றுக் கொடுக்கப்படும்







Main Street, Sammanthurai .

சம்மாந்துறைப் பிரதேச சைவ ஆலயங்கள்.

ஈழத்திரு நாட்டின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு வாவியின் தென்புறத்தே முப்பது மைல் தொலைவிலுள்ள நீர் வளம், நில வளம் நிறைந்து செந்நெல் விளையும் சம்மாந்துறைப் பிரதேசத்தில், வாழ்கின்ற தமிழ் மக்களின் பாரம்பரியங்களைப் பறைசாற்றி நிற்கின்ற முக்கிய இடங்களாகத் திகழ்வது இந்து ஆலயங்களாகும். இவ் ஆலயங்கள் பற்றித் தமிழ் சாகித்திய விழா மலருக்குச் சம்மாந்துறைப் பிரதேசச் செயலகப் பிரிவில் வாழ்கின்ற வீரமுனை, சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு.மட்டக்களப்புத் தரவை, மல்வத்தை,மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி,பழவெளி ஆகிய இடங்களில் இருக்கின்ற இருபது சைவ ஆலயங்களை அவர்களது குடிமரபுகள் பற்றி இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

வீரமுனை

ஈழநாட்டரசன் வாலசிங்கனுக்கும், சோழ இளவரசி சீர்பாத தேவிக்கும் திருமணம் நடந்தேறியதன் பயனாகத் தனது கணவனின் ஆட்சிக்குட்பட்ட ஈழ நாட்டைப் பார்க்க விரும்பி அந்தணர்,வேளாளர்,செட்டி முதலியோருடன் சிந்தன், காங்கேயன், காலதேவன், பெண்பழச்சி (பெட்டைப் பழச்சிக்குடி) வெள்ளாயி, நரையாகி, முடவன், மூத்தவன் ஆகிய ஏழு அரச குலத்தவர்களையும் அழைத்துக்கொண்டு வரும் வேளையில் இவர்கள் வந்த கப்பலானது திருகோணமலைக் கடற்பரப்பில் தடைப்பட்டு நின்றது. இதனைக் கண்டு வியப்புற்ற சீர்பாத தேவி காரணத்தைக் கண்டறியுமாறு தன்னுடன் வந்தவர்களைப் பணித்தாள். கப்பலில் வந்தவர்கள் கடலில் இறங்கிப் பார்த்த வேளை விநாயகர் விக்கிரகம் ஒன்றைக் கண்டு அதனைக் கப்பலில் ஏற்றினார்கள். அப்போது தேவியானவள் அதை வணங்கி இக் கப்பல் எங்கு தங்கு தடையின்றி கரைதட்டுகின்றதோ அங்கே கோயில் அமைத்து வழிபடுவேன் என வேண்டிக் கொண்டதற்கிணங்க கப்பலானது மட்டக்களப்பு வாவியினூடாக வீரமுனையில் கரை தட்டியதும் அவ்விடத்தில் ஆலயமும் அமைக்கப்பட்டு சிந்து யாத்திரையால் நல்ல பயணம் கிடைக்கப் பெற்றமையால் சிந்தாயாத்திரைப்பிள்ளையார் என திருநாமம் சூட்டி கூட வந்த அரச குலத்தவர்களைத் தேவியின் பெயரால் ஒரு குலமாக 'சீர்பாதகுலம்' என வகுத்து கோயிலை பராமரிக்க மல்வத்தை வெளி, மல்வத்தைக்குளம், கிண்ணறையன்வெளி, தரவை முன்மாரி, கரங்காவட்டை, ஆகிய வயல் நிலங்களை மானியமாக வழங்கி சாசனமும் எழுதி வைத்தாள். இவர்களின் வழித் தோன்றல்களே துறை நீலாவணை, வீரச்சோலை, சேனைக்குடியிருப்பு, மல்வத்தை, தம்பலவத்தை, மண்டூர், குருமண்வெளி, கரையாக்கன் தீவு, கொக்கட்டிச்சோலை போன்ற பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

மேலும் காலத்தின் தேவைக்கேற்ப சீர்பாத குல மக்களால் வீரமுனையில் வழிப்பாட்டுப்பிள்ளையார் ஆலயம். கண்ணகி அம்மன் ஆலயம், மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயம் என 05 ஆலயங்கள் அமைக்கப்பட்டு நாளாந்தம் பூஜைகளும் வருடாந்த உற்சவங்களும் நடைபெறுகின்றன.

தமிழ்ப்பிரிவு சம்மாந்துறை

பத்தினி வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இக்குல மக்களும், ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலயத்தை அமைத்து வழிபட்டு வந்தனர். காலத்தால் அழியாத வேம்பு மரம் இவ்வாலயத்தின் பெருமையைப் பறைசாற்றி நிற்பதோடு வருடா வருடம் தீ மிதிப்பு வைபவமும் நடை பெறுகின்றது. இம்மக்கள் காலவோட்டத்தின் மத்தியில் மட்டக்களப்புத் தரவை என்கின்ற கோரக்கர் எனும்

இடத்தில் ஸ்ரீ அகோரமாரியம்மன் ஆலயத்தையும், பிள்ளையார் ஆலயத்தையும் அமைத்து வழிபடுகின்றதோடு நாளாந்த, பூசைகளும் வருடாந்த திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

மல்வத்தை

சீர்பாதகுலத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வயல்வெளிகள் நிறைந்த இப் பிரதேசத்தில் வாழ்கின்ற சீர்பாத குல மக்களால் சித்தி விநாயகர் ஆலயம், விளாவடி விநாயகர் ஆலயம்,ஸ்ரீ முருகன் ஆலயம் (கணபதிபுரம), குளத்துப் பிள்ளையார் (தம்பி நாயக புரம்), விஷ்ணு ஆலயம் (வள்ளுவர் புரம்) ஆகிய ஆலயங்களை அமைத்து வழிபடுகின்றனர்.

மல்லிகைத்தீவு

மல்லிகைத்தீவில் நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு ஆகிய பிரதேசங்களில் இருந்து குடியேறிய வைசிக குலமக்களால் அமையப்பெற்ற மாரியம்மன் ஆலயம் இலுப்பையடி பிள்ளையார் ஆலயம் என்பன மிகவும் பழையதொன்றாகும். இங்கும் வருடாந்த திருவிழா வைபவத்துடன் நிறைவு பெறும்.

வளத்தாபிட்டி

மல்லிகைத்தீவில் இருந்து குடியேறிய மக்களால் அமையப்பெற்ற ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயமும் செட்டி வேளாளகுல மக்களால் ஸ்தாபிக்கப்பட்ட மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும் மிகவும் சக்திவாய்ந்தவைகளாக குலதெய்வமாகக் கருதப்படுகின்றன. இங்கு ஆண்டுத்திருவிழா சடங்குகளுடன் நடைபெற்று இறுதியில் தீ மிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெறும். அத்துடன் பழவெளி பணிக்கனா குடி மக்களால் உருவாக்கப்பட்ட பழவெளி "சிவன் ஆலயமும்" இயற்கை நிறைந்த எழிலுடன் சிறந்து விளங்குகின்றது.

புதிய வளத்தாபிட்டி

ஆதிதிராவிட மக்களால் அம்பாரை மிகிந்து புரத்தில் வைத்து வழிபட்ட மாரியம்மன் ஆலயமும், நாகதம்பிரான் ஆலயமும் மீள் குடியேற்றத்தின் போது இக்கிராமத்தில் வைத்து வழிபடப்படுகின்றது. இவ்வாலயங்களில் தினந்தோறும் பூஜைகளும் வருட விழாக்களும் நடைபெறுகின்றதைக்காணலாம்.

மேற்கூறிய ஆலயங்கள் அனைத்தும் தழிழர்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்திருப்பதோடு மனிதனை வழிப்படுத்துகின்ற சக்தியாகவும், நீதமன்றமாகவும் வழக்காடல் மன்றம் களஞ்சியச் சாலையாகவும், காப்பகமாகவும், இயலிசை நாடகம் ஆகிய முத்தமிழ் வளர்க்கும் இடமாகவும் விளங்குவோதோடு அவரவர் அரச குலம், கோத்திரம், பரம்பரைக்கேற்ப குடிகளாக வகுக்கப்பட்டு இருந்தன. இருந்தாலும் இக்குடி மரபுகள் மமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சம்மாந்துறை முஸ்லீம் மக்கள் மத்தியிலும் கடைப்பிடிக்கப் படுகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆக்கம்: திரு எஸ். கோணேசமூர்த்தி (அதிபர்),
வீரமுனை.

சம்மாந்துறையின் பிரசவங்கள்



தனிப்படைப்பு

- **கலிகாலமும், கல்லோயாவும்.** காவியம் -1948
  காவியனார் - மீ.முகம்மது சரீப் (புளக் ஹ" சம்மாந்துறை)
- **நித்திய சுக வழி, வைத்தியம் -1963**
  வைத்திய சிகா, கி.அருணாசலம் (வீரமுனை சம்மாந்துறை)
- **பத்தியராக விதி, வைத்தியம் -1964**
  வைத்திய சிகா, கி.அருணாச்சலம் (விரமுனை-சம்மாந்துறை)
- **இஸ்லாமிய சிந்தனை.** கவிதைத் தொகுதி -1982
  சிந்தனையாளர் எம்.ஐ.மீராலெவ்வை(சின்னப்பள்ளி வீதி சம்மாந்துறை)
- **அல்-குர்ஆனியல்.** இஸ்லாமிய சமய நெறி -1982
  மௌவி எம்.ஏ.எம்.றூஹுல்லாஹ் (சின்னப்பள்ளி சம்மாந்துறை)
- **மழையும், துளியும்.** கவிதைத் தொகுதி -1983 மே 22
  ஈழமேகம் எம்.ஐ.எல்.பக்கீர்தம்பி (மத்திய வீதி சம்மாந்துறை)
- **இகம் சிந்தும் பனித் துளிகள்.** கவிதைத் தொகுதி -1991
  கவிஞர், ஏ.நௌபர் அலி (எம்,பி வீதி, சம்மாந்துறை)
- **ஈழத்தின் இன்னுமொரு மூலை.** சம்பவத்தொகுதி -1992 ஓகஸ்ட்
  வெளியீட்டுப் பணியகத்தார்கள்
- **கவிஞர், வீ.ஆனந்தன்.** தகவல் சுவடுகள் -1996
  றமீஸ் அப்துல்லாஹ் (கருவாட்டுக்கல், சம்மாந்துறை)
- **கிராமப்புறத்தில் தொடர்புசாதனங்களின் தாக்கம்**
  விளக்கக் கட்டுரைகள் 1998.03.21
  கவிஞர், ஈழக் குயில் இத்ரீஸ் (நூலக வீதி, மருதமுனை)
- **கவிக் குயில்.** கவிதைத் தொகுதி -2001
  கவிஞர், ஈழக்குயில் இத்ரீஸ் (நூலக வீதி, மருதமுனை)
- **சுகராகம்.** வைத்தியம் தொடர்பான விளக்கம் -2005
  டாக்டர், எஸ்.முகம்மது இத்ரீஸ் (நூலக வீதி, மருதமுனை)
- **றோசாச் செய்கை.** விவசாயம் - 2004
  சஞ்சீவி சிவகுமார், டி.ஐ.முஜிபுர் ரக்கீப் (பிரதான வீதி, சம்மாந்துறை)
- **சித்த வைத்தியம்.** வைத்தியம் தொடர்பான விளக்கம் - 2005
  டாக்டர், எஸ்.முகம்மது இத்ரீஸ் (நூலக வீதி, மருதமுனை)
- **ஜனாதிபதி முறைகளும், பிரதிநிதித்துவமும்** அரசியல் தொடர்பான கட்டுரைகள் - 2005எழுத்தாளர், எச்.எம்.அன்வர் அலி (பிரதேச சபை வீதி, சம்மாந்துறை)
- **அத்தனையும் முத்துக்கள்** - கவிதைத் தொகுதி -2006
  கலாபூஷணம், ஏ.சி.இஸ்மாலெவ்வை (1ம் குறுக்குத் தெரு, சம்மாந்துறை)
- **பதக்கடைச் சாக்கு.** கவிதைத் தொகுதி - 2006
  கவிஞர், துறையூரான் அஸாறுதீன்.
- **பாவலருடன் ஓர் இரசனைச் சந்திப்பு** . தங்கம்மா கவிதை தொடர்பான விளக்கம் -2004
  ஜலீல் ஜீ, அம்பாறை வீதி, வீரமுனை, சம்மாந்துறை.
- **புள்ளியைத் தேடும் புள்ளிமான்** -கவிதைத் தொகுதி -2007
  பெண் கவிஞர், எஸ். நுஹா (பைத்துஷ்சபா மனார் வீதி, சம்மாந்துறை)
- **ரமழான் மாதம், நோன்பும் அதன் சட்டமும்** - இஸ்லாமிய மார்க்கம் தொடர்பான விடயம் -2007
  அல்-ஹாஜ் அபூ முஜாஹித், -சம்மாந்துறை.
- **தங்கம்மா** - கவிதைத் தொகுதி - 1978-07-08
  பாவலர் பஸீல் காரியப்பர், மத்திய வீதி, சம்மாந்துறை.
- **சித்த வைத்தியத்தில் சுரரோகங்களும், மருந்துக்களும்,** -
  வைத்தியம் தொடர்பான குறிப்புக்கள்

டாக்டர், எஸ்.முகம்மது இத்ரீஸ் (கவித்தாரகை ஈழக்குயில் இத்ரீஸ்)

➢சீர்பாதர் சரித்திரம் - வரலாற்று ஆய்வும் சரித்திரமும் - 2008 ஜூலை
த.லோகிதாஸன் - BA (Hons) - வீரமுனை.

➢தடம் பதித்த ஈழமேகம் - நாவலர் ஈழமேகம் பக்கீர் தம்பி பற்றிய ஆளுமைக் குறிப்புகள்
கவிஞர் ஈழக் குயில் இத்ரீஸ்.

➢சர்வதேச முரன்பாடுகளும், பிணக்குகளும் - சர்வதேச விவகாரம், தொடர்பானவை -
2009 சட்டத்தரணி எச்.எம்.எம்.றைஹான்.

➢பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்கள்- சர்வதேச நிறுவனங்களின்
தோற்றுவாய்களும்-2009 சட்டத்தரணி எச்.எம்.எம்.றைஹான்.

➢அன்று அறபு நாட்டிலே - நபி (ஸல்) அவர்களின் பிறப்புக்கு முன் நிலைமைகள் -
1999-06-27 அல் ஹாஜ், மௌலவி, எம்.ஏ.எம்.றூஹுல்லாஹ் (பிஏ)

➢இரு நூற்றாண்டுகளில் இலங்கையிற் கல்வி - கல்வித்துறையுடனான கட்டுரைகள் - 2000.01.22
கலாபூஷணம் அல்ஹாஜ் யூ.எல்.அலியார் (எம்.ஏ)

➢கல்முனை கரையோர மாவட்டம் - புதிய கரையோர மாவட்ட புள்ளி விபரக் கட்டுரை -
2001.09.16 ஜ.எம்.இப்றாஹீம், முன்னாள் தவிசாளர் பிரதேசசபை,சம்மாந்துறை.

➢கொடிய குற்றங்கள் - இஸ்லாமிய மார்க்க நெறி விடயமாக - 2003 மே
மௌலவி,அல்-ஹாஜ்,அல்-ஹாபீஸ் ஜ.எல்.சி.மீரான்சாஹிபு, சம்மாந்துறை.

➢கற்கை வழிகாட்டி - கல்வியல் தொடர்பானவைகள் - 2003.04.05
எச்.எம்.அன்வர் அலி, ரி.சி, வீதி, சம்மாந்துறை.

➢அம்பாறை மாவட்டத்தின் குடித்தொகை - புவியியல் தொடர்பான ஆய்வுகள் -
2003.06.14முதுநிலை விரிவுரையாளர், எம்.ஜ.எம்.கலீல்.

➢இஸ்லாமும், வரலாறும் (தொகுதி-1) - இஸ்லாமிய சமயம் தொடர்பானவைகள் -
2007.11.20ஏ.ஆர்.எம்.அஷ்ர்.ப் (நளிமி) JP, 79/1, சின்னப்பள்ளி வீதி, சம்மாந்துறை.

➢நீரழிவு நோய் - கையேடு - சுகாதார விடயம் -
2008 ஆகஸ்ட் டாக்டர். எம்.எம்.நௌஸாட்.

➢காச நோய் கையேடு - சுகாதார விடயம் - 2009.03.29
டாக்டர்.எம்.எம்.நௌஷாத் (மாவட்ட காசநோய் தடுப்பு அதிகாரி)

➢கூன்நிமிர்கிறது - கவிதைத் தொகுதி - 2009 மே
யு.எல்.எம் இஸ்மாயில் (ஈழத்தொண்டன்- தினகரன் இஸ்மாயில்)

➢நான் எனும் நீ - கவிதைத் தொகுதி -1999 செப்டம்பர் 26
கவிஞர் திலகம் எம்.எச்.எம் அஷ்ர்.ப்.

➢வெள்ளக்காவியம் - 1957 இல் ஏற்பட்ட பெருவெள்ளம் தொடர்பான காவியம் - 1957
காவியனார் சுலைமாலெப்பை முகம்மது அலி.

➢பெண்மணி – பர்தாவின் கண்மணி - பர்தா அணிவதன் அவசியம் தொடர்பானது - 1995
மௌலவி எம்.பி அலியார், (ஹஸரத்) ஜே.பி (தேவ்பந்தி)

➢சஊதியில் தொழில் புரிவோருக்கு தமிழ் மூலம் அரபு - அரபு மொழி தொடர்பானது -
1991மௌலவி கே.எல் ஆதம்பாவா (மதனி)

➢NO MORE WORRIES –ON TENSE –BOOK -01 – ஆங்கில மொழியாற்றல்
தொடர்பானது -2004, ஏ.ஆப்தீன் (ஐ.எஸ்.ஏ – சம்மாந்துறை)

➢ஓர் ஆத்மாவின் பிரார்த்தனை - இஸ்லாமிய சமய ரீதியான பிரார்த்தனைகள் -
1995.01.30 கவிஞர், ஈழக்குயில் இத்ரீஸ் (நூலக வீதி, மருதமுனை)

➢உலமாக்களே ஒன்றுபடுவோம் - இஸ்லாமிய சமய நெறி தொடர்பான கருத்துக்கள் -
1998.06.13வரலாற்றில் ஓர் ஏடு மௌலவி ஏ.ஸி.ஏ.எம் புகாரி (கபூரி) சம்மாந்துறை.

➢ரமழானின் சிறப்பு - புனித ரமழான் மாதம் பற்றிய சிறப்புக் கட்டுரைகள்
மௌலவி எம்ஏஎம் றூஹுல்லாஹ் (பி.ஏ) சம்மமாந்துறை.

➢கல்வியியல் நோக்கு - கல்வி தொடர்பான கருத்துக்களும், கட்டுரைகளும் -
1995கலாபூஷணம் யு.எல். அலியார் (எம். ஏ)

➢இஸ்லாமிய அடிப்படைத் தத்துவங்கள் (தட்டச்சு நூல்) - மொழிபெயர்ப்பு நூல் -1974
மௌலவி எம்ஏஎம் றூஹுல்லாஹ் (பி.ஏ) சம்மமாந்துறை.

➢விழிகள் சுவாசிக்கும் இரவுகள் - கவிதைத் தொகுப்பு - 2008
கவிஞர் ஏ.எம்.எம். ஜாபீர் (Tr) TC வீதி சம்மாந்துறை.

➢ஈழக்குயிலின் நானறிந்த ஈழமேகம் - ஈழமேகம் அவர்கள் பற்றிய சிறப்புக்கள் - 1977.09.18 கவிஞர், ஈழக்குயில் இத்ரீஸ் (சம்மாந்தறை)

➢உடற்கல்வி கை நூல் (Physical Education – Hand Book)- 1999 ஜூன்
சீ. எம். தௌபீக்.

➢சிறு விளையாட்டுக்களும், குழு விளையாட்டுக்களும் - 2004 டிசம்பர்
சீ. எம். தௌபீக்.

➢ஒளிக்குப்பின் இருள் - இருளுக்குப் பின் ஒளி - ஈரானிய புரட்சியுடன் தொடர்பானவை - 1984 எஸ்.ரி.யூ

➢உணவும் போசணையும் -மனைப்பொருளியலுடன் தொடர்பான வினா விடைகள் - 2008 திருமதி யூ.எஸ் ஆப்தீன்.

➢கவின் கலைகளில் சித்திரம் - சித்திரக் கலை தொடர்பான பாடக் குறிப்புக்கள் - 1989ஐ.ஏ. றசூல்.

➢சிறுவர் வாசிப்பு மேம்பாடு - சிறுவர் கதைகள் அடங்கிய தொகுதி - 2006
சீ. எம். தௌபீக்.

➢கிழக்கிலங்கை கிராமியம் - சமூக, பண்பாட்டியல் ஆய்வு - 2001 மார்ச்சு
ரமீஸ் அப்துல்லாஹ்.

➢யார் முஸ்லீம்? - இஸ்லாமிய சமயம் சார்பானது - 1958
முகம்மது அபூபக்கர் பின் முகம்மது இப்றாஹீம் (புத்தளத்தாலிம்)

➢எஸ்- - ஜே - வி - யை என் இறக்கைகளில் காணுங்கள் -கவிதைப் படைப்பு - 1997.04.27
கவிஞர் திலகம் எம்.எச்.எம் அஷ்ரப் (சம்மாந்துறை)

➢நூல்தரீக்காவும் அதன் வளர்ச்சியும் - இஸ்லாமிய சமயம் சார்ந்தவை - 1980
அலி.எம். இப்றாஹீம். சம்மாந்துறை (மௌலவி மாணவன் காயல் பட்டணம்)

➢நபி வழியில் நாம் வாழ்வோம் -இஸ்லாமிய சமயம் சார்பான கருத்துக்கள் - 2000.04.07
மௌலவி எம்.பி அலியார், (ஹஸரத்) ஜே.பி (தேவ்பந்தி)

▷ கனிமம்
▷ சம்மாந்துறை பெயர் வரலாறு
▷ " அரசியல் "

தொகுப்புகள்

➢இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம்-I) - சங்கப்பாடல்களின் பொருள் விளக்கம் -1995
கவிஞர் மாறன் யூ.ஸெயின் (மகாவித்தியாலய வீதி, சம்மாந்துறை)

➢இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம்-II) - சங்க காலப்பாடல்களின் பொருள் விளக்கம் - 1996
கவிஞர் மாறன் யூ.ஸெயின் (தேசிய கல்லூரி வீதி, சம்மாந்துறை)

➢ஆத்மாவின் அலைகள் - (கவிதைத் தொகுப்பு) பாவலர் பஸீல் காரியப்பர் கவிதைகள் - 2001
றமீஸ் அப்துல்லாஹ் - மொழித்துறை தலைவர் - தெ.கி.ப.கழகம்.

➢காணிக்கை (றோணியோ தெகுப்பு) - பொது அறிவியல் விடயங்கள்
M.T.M.ஹனீபா (Tr)

➢TELE DIRECT – SAMMANTHURAI -பிரதேச தொலைபேசி இலக்கங்களின் விபரம்
N.M.நகீம் (Tr) , M.S.M.அன்சார் (L.O)

➢சர்வதேச நினைவு தினங்கள் - சர்வதேச ரீதியான தினங்கள் பற்றிய கட்டுரைகள் - 1986 ஜூன் கலாபூஷணம், யூ.எல்.அலியார் (எம்.ஏ)

➢நாவலர் ஈழமேகம் பக்கீர் தம்பி நினைவுச் சுவடுகள் - பக்கீர்த்தம்பி, நினைவு மலர் - 2005
கலாபூஷணம், யூ.எல்.அலியார் (எம்.ஏ)

➢ஸஹீஹுல் புகாரி - அத்தியாயம் 93, நீதியும், நிர்வாகமும் - 2008.02.01
தமிழில், உத்தமபாளையம், மௌலவி, எம்.எம்.அப்துல் காதிர் உமரி

➢சுகத்தை நோக்கி Towards Health, விதியை மதியால் வெல்வோம் - சுகாதாரம் - 2004
டாக்டர், கே.எம்.லத்தீப் (B.D.S) 14/3, கோட் றோட், சம்மாந்துறை-01.

➢சித்த, ஆயுள்வேத மருந்துகளின் சுத்தி முறைகளும், முறிப்பு முறைகளும் - 2004.11.21
வைத்தியர். எஸ்.எம்.இத்ரீஸ் (ஈழக் குயில்), வைத்தியர். க.இராசலிங்கம்.

➢உரை மலர் - வானொலியில் பேசப்பட்ட, பத்திரிகைகளில் எழுதப்பட்டவைகளைக்கொண்ட ஈழமேகத்தாரின் தொகுப்பு – 1961, நாவலர் எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி.

➢அறிவியல் உலகம் (றோனியோ தொகுப்பு) - விஞ்ஞான அறிவியல் விடயம் -1989
எ.எம் ந.்.பீஸ், எம். ஏ. எம். மிஸ்பாஹுல் ஹுதா.

➢நோய்தீர்க்கும் அல் - குர்ஆன் - நோய்களும் இஸ்லாமிய பார்வையில் நிவாரணமும் - 1999 இஸ்லாமிய சமூக நண்பர்கள் ஒன்றியக் குழு.

➢அன்ஸார்கள் இன்னும்.... - சுனாமி தஞ்சம் புகுந்த சம்மாந்துறைப் பதிவுகள் - 2005 மார்ச் எம்.ஐ.பௌஸ்தீன் (அபூ நஜாதி)

➢சிறகடிக்கும் புதிய வேர்கள் - எம்.எச்.எம்.அஷ்ர.்.ப், பாராளுமன்ற உரைத் தொகுப்பு 1999 மௌலவி ஏ.ஸீ.ஏ.எம் புஹாரி (கபூரி)

➢அறவழிக் கீதம் - கொலையுண்ட குமரன் - எம்-ஏ-அப்துல் றசீது, இரங்கற்பா - 2009.02.05 எம்.ஐ.எல் பக்கீர்த்தம்பி.

➢இலகு வழி - இஸ்லாமிய சமய விவகாரங்கள் - 2009.05.02
அல் - ஹாஜ் சரீப். அல் - ஹாஜ் ஹமீட்.

➢மாற்று மருத்துவம் - ஆயுள்வேத மருத்துவம் தொடர்பானவை - 2009.02.05
டாக்டர் எம்.ஸீ.எம் காலித் (சம்மாந்துறை)

➢அறிவியியல் துறையில் முஸ்லீம்கள் ஆற்றிய அரும்பணி
நாவலர் எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி "ஈழமேகம்" எனும் பட்டம் பெறுவதற்கு காரணமாகிய, காயல் பட்டணத்தில் பேசிய பேச்சுக்களின் தொகுப்பு - 1995.03.18
கவிஞர், ஈழக்குயில் இத்ரீஸ் (சம்மாந்தறை)

➢பூவை நுகரும் வண்டு (தட்டச்சுத் தொகுப்பு) - இளம் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு -1998 இளங்கவி வை.வை.எம்.றாபி

➢தொழுகை ஷாபி - இஸ்லாமிய சமயம் சார்பானவை - 1960
O.M. பாஸி ஆலீம் (பிரிவு -04, சம்மாந்துறை.)

➢ இஸ்லாமியக் கொள்கை (மொழிபெயர்ப்புத் தொகுப்பு) - இஸ்லாமிய சமயம் சார்பானவை - 1980 மௌலவி எம்ஏஎம் றூஹுல்லாஹ் (பி.ஏ) சம்மமாந்துறை.

➢17.05.1989 இல் சாம்பலாக்கப்பட்ட சம்மாந்துறை -தமிழ் முஸ்லீம் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையின் விளவுகள் - 1989
இஸ்லாமிய இளைஞர் முன்னணி குழுவினர்

➢அண்ணலாரின் அழகிய துஆக்கள் - இஸ்லாமிய சமயம் சார்பானவை - 1980 ஒக்டோபர் O.M. பாஸி ஆலீம் (பிரிவு -04, சம்மாந்துறை.)

➢தத்திரீஸுல் குர்ஆன் - குர் ஆனை ஓதுவது தொடர்பான விளக்கம் - 1960
O.M. பாஸி ஆலீம் (பிரிவு -04, சம்மாந்துறை.)

➢தப்சீர் ஸீறத்தல் அஸ்ர் - குர் ஆன் விளக்கம் (ஒரு சூறாவுக்குரியது) - 1960
முகம்மது அபுபக்கர் பின் முகம்மது இப்றாகீம். சம்மர்ந்துதறை. (புத்தளத்தாலிம்)

➢புனித ஹஜ்ஜின் வணக்க முறைகள். - இஸ்லாமிய சமயம் சார்பானவை - 1990.03.07
மௌலவி அல் - ஹாஜ் ஐ.எல் காதீர் மீரான் சாஹிப் (சம்மாந்தறை)

➢திருவூஞ்சலும், திருமுறைத் தொகுப்பும் - வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலய வரலாற்று விபரம் - 1981.07.01
பண்டிதர் சைவப்புலவர் திரு க. நல்லரத்தினம் பீ.ஏ. இலங்கை

➢பன்னுத் தர்த்தீப் - தஜ்வீத் சட்டம் சம்பந்தமான தொகுப்பு, மறு பிரசுரமும் - 2007
மௌலவி ஐ.எம். இப்றாஹீம், சம்மாந்துறை.

➢இஸ்லாத்தை விளங்கிக் கொள்ளல் - ஓர் அணுகு முறை (மொழி பெயர்ப்பு)இஸ்லாமிய சமயம் சார்பானவை - 1975
எம்.ஐ.பொளஸ்தீன் (மொழி பெயர்ப்பாளர்)

➢தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் முஸ்லீம்களின் நிலை) - அரசியல் துறை சார்பானது - 2002.04.25, உபவேந்தர் எம்.எல்.ஏ காதர், சம்மாந்துறை

➢ஐங்காலத் தொழுகையின் பின் ஓதும் துஆ - இஸ்லாமிய சமயம் சார்பானவை - 2006.01.01 ஜம்இயதுல் உலமா, சம்மாந்துறை.

சிறப்பு மலர்கள் (அச்சுப் பதிப்பு)

➢வெண் முத்து - அல்-மர்ஜான் வித்தியாலய வெள்ளி விழா சிறப்புமலர் - 1973.02.03
யூ.எல்.ஸெயின் (ஆசிரியர்) ஏ.எல்.எம்.யாஸீன் (ஆசிரியர்)

➢அறுவடை - முஸ்லிம் மகாவித்தியாலய வெள்ளிவிழா சிறப்பு மலர் - 1975.10.25
எம்.ஐ.கே.முகம்மட் (அதிபர்) யூ.எம்.முஸ்தபா (ஆசிரியர்)

➢அல் - முனீறா (கலை - இலக்கிய சஞ்சிகை) - அல்- முனீர் வித்தியாலய 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சிறப்பிதழ் - 1993.04.25
மாறன் - யூ.ஸெயின் (pr), எம்.ஏ.ஸீ.எம்.மக்கீன் (pr) - திருமதி கதிஜா உதுமாலெவ்வை (Tr), திருமதி, பீ.எம்.பதூர் (Tr)

➢சேவை நலன் பாராட்டு சிறப்பு மலர் - அட்டாளைசேனைச் தேசிய கல்வி கல்லூரி பீடாதிபதி ஏ.ஆர்.ஏ.அஸீஸ் அவர்களின் சேவை நலன் விடயம் - 1998.10.18
இஸட்.எம்.றிஸ்வி (Tr)

➢சுகாதாரம் சிறப்பு மலர் - பரம்பரை வைத்திய சங்க ஆண்டு மலர் -2002/ 2003.01.18
டாக்டர், எஸ்.எம்.இத்ரீஸ் (நூலக வீதி மருதமுனை)

➢அங்குரார்ப்பண மலர் - சம்மாந்துறை செந்நெல் கிராம, குடிநீர் விநியோகத்திட்டம் - 2004.01.31 கலைமணி, ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை (1ம்குறுக்குத் தெரு, சம்மாந்துறை.)

➢திறப்பு விழா சிறப்பு மலர் - ஹிஜ்றா நவீன பொதுச் சந்தை திறப்பு விழா மலர் -2005.07.09
அல்ஹாஜ், எஸ்.எல்.ஏ.சலாம் B.A (அம்பாரை வீதி, சம்மாந்துறை)

➢மீலாத் மலர் - வடகிழக்கு மாகாண முஸ்லிம், பண்பாட்டு, அலுவல்கள் திணைக்கள ஆண்டு மலர் - 2005.09.26, எம்.ஏ.முகம்மது றமீஸ், முதுநிலை விரிவுரையாளர்.

➢அரசியலுக்கு அப்பால், சேவையின் சிகரம் - அல்ஹாஜ், எம்.ஏ.அப்துல் மஜீட், நன்றி நவிலும் விழா மலர் - 2006.03.16
அல்ஹாஜ், எம்.எஸ்.எம்.அலியார் JP (Ret Pr) (கல்முனை பிரதான வீதி, சம்மாந்துறை)

➢செங்கதிர் - செந்நெல் சாஹிறா பாடசாலை கல்வி அபிவிருத்தி ஆண்டு சிறப்பு மலர்- 2007
எம்.ஏ.நூறுல் இனாபா.

➢அல் முனிறாவின் நாற்று - சது / அல் - முனீர் வித்தி, 4வது கல்வி ஆண்டு சிறப்பு மலர் 2007 திருமதி, சித்தி மசூறா சுஹுத்தீன் (Tr) (பிரதான வீதி,சம்மாந்துறை)

➢ஐந்தாண்டு சேவை நிறைவு விழா மலர் - வீரமுனை சீர்பாத தேவி சிறுவர் இல்லத்தின் வபிரமடங்கிய சிறப்பு மலர் - 2008.02.05
தா.வினாயாக மூர்த்தி (பொறியியலாளர்),
எஸ்.கிருபாகரன் (B.SC) எஸ்.மகேஸ்வரன் (BA)

➢மருத நில மைந்தன் - உச்ச நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மாயிலின் பாராட்டு மலர் - 1999
மலர்க் குழுவினர்.

➢கல்வி மானி - கல்வி மானிப்பட்ட கற்கை நெறி 2002/2004 சிறப்பு மலர் - 2004
ஏ.சீ. நியாஸ்.

➢ஆத்மீகச் சின்னம் - அலியார் ஹஸரத் -மௌலவி.எம்.பி.எம். அலியார் ஹஸரத்,

சிறப்பிதழ் -2008 ஏ.ஸீ.அப்துல் சக்கூர் பி.ஏ.

➢**237th Mahapola at Sammanthurai** - மஹாபொல நிகழ்ச்சி நிரல் சிறப்பு மலர் -2004.08.24 ஏற்பாட்டுக்குழு.

➢அத் தப்லீ.'. - அத்-தப்லீ.'. அரபுக்கல்லூரியின் வெள்ளிவிழா சிறப்பு மலர் -1999.06.20 அல்.ஹாஜ் ஏ.ஸீ.ஏ.எம். புஹாரி மௌலவி.

➢சம்மாந்துறை YMMA யின் சிறப்பு மலர் - சம்மாந்துறை YMMA யின் 1999 பரிசளிப்பு விழா சிறப்பு மலர் - 1999 எம்.வை மீராலெவ்வை.

➢நினைவு மலர் - பிரதேச மட்ட கூட்டுறவு தின விழா -1997.07.21 ஏ யெம் மே நிஸாம்

➢சரண்டிப் விளையாட்டுக் கழகம் - விளையாட்டுத்துறை சார்பானவை - 2004.01.18 எம். ஐ. எல். நளீம் (ஆசரியர்)

➢பாராட்டு விழா சிறப்பு மலர் - அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் பாராட்டு மலர் - 2007.05.18 அல்.ஹாஜ் ஏ.ஸீ.ஏ.எம். புஹாரி மௌலவி

➢ஆண்டுமலர் (ஒவ்வொரு வருடமும் வெளிவருகிறது) - A/L தின மாணவர்களின் சிறப்பிதழ் (தேசிய பாடசாலை) - 2006.04.20 சஞ்சிகைக் குழு

➢GCE A' Level Student Day 2007 (ஆண்டு தோறும் வெளிவரும்) உயர்தர மாணவர் தின சிறப்பு மலர் - 2007.04.26 சஞ்சிகைக் குழு.

➢வெண்முத்து (Venmuththu) - கேற் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் மண்டப திறப்புவிழா, சிறப்பு மலர் - 1994.01.22 இறையருட் கவிஞர் ஏ. இப்றாஹீம்.

➢TECH ENGLISH FORUM -1999 - ஆங்கில கற்கை நெறி மாணவர்களின் படைப்புக்கள் - 1999 ஏ.எச்.எம். றியாஸ்

➢Openinig Ceremony of work shop Complex - தொழிற் கூடத் தொகுதி திறப்பு விழா தொடர்பான மலர் - 1995.10.27 எம்.ரி.முகம்மட் சரீம் (சம்மாந்துறை)

➢AL Day 2004 (ஆண்டு தோறும் வெளிவரும்) சது/அல்மர்ஜான் மகளிர் கல்லூரி மாணவிகளின் சிறப்பு மலர் - 2004 ஆசிரியர் குழு.

➢திறப்பு விழா சிறப்பு மலர் - அமீரலி பொது நூலக திறப்பு விழா சிறப்பு மலர் - 19983.10.09 பாவலர் பஸீல் காரியப்பர்.

➢ஒளியைத் தேடும் நிழல்கள் 2007 - அதிபர், கே.எல். சுலைமாலெப்பையைப் பாராட்டும் சிறப்பு மலர் - 2007 மசூறா ஏ மஜீட்

➢OL Day 2008 (ஆண்டு தோறும் வெளிவரும்) சது/அல்மர்ஜான் மகளிர் கல்லூரி மாணவிகளின் சிறப்பு மலர் - 2008.11.05 சஞ்சிகைக் குழு.

➢பாராட்டு மலர் - அதிபர்மணி எம் .ஐ. கோஸ் முகம்மட் (JP) பாராட்டு சிறப்பு மலர் - 2009.05.24 விழா ஏற்பாட்டுக் குழுவினர்,ஓய்வூதியர் நலன்புரி ஒன்றியம்.

➢பட்டறை - சம்மாந்துறை பிரதேச செயலக கலை இலக்கிய பேரவையின் சாஹித்திய விழா மலர் - 2009 ஜுலை மலர்க் குழு.

பட்டறை - 11 2012

இலக்கியக் கலைத்துறைகளில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்திய சஞ்சிகைகள் பத்திரிகைகள்

கை எழுத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்.

➢கலைக்குரல் - 1958
பாவலர் பஸீல் காரியப்பர் , எழுத்தாளர் ஏ.எம்.ஏ.றசீது , கவிஞர் மாறன் யூ.ஸெயின்

➢முள் - 1960 கலைஞர் எஸ்.எச்.எம்.முஸ்தபா.

➢கலைமதி 1960-கலைத் தொண்டன் எம்.ஏ.எம்.அமானுல்லா.

➢நிலா - 1966 கவிஞர் மாறன் யூ.ஸெயின்.

➢உண்மை - 1970 எழுத்தாளர் எம்.ஐ.பௌஸ்தீன்.

➢களவெட்டி - 1971 கவிஞர் வீ.ஆனந்தன், கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ்,

கலைக்குரல் ஏ. அமீர்.

➢கொள்கை - 1973 கவிஞர் மாறன் யூ.ஸெயின், கலைஞர் ஏ.ஆதம்பாவா, கலைஞர் எம்.எம்.சம்சுதீன்.
➢ஹரேராமா ஹரே கிருஷ்ணா - 1973
கவிஞர்வீ.ஆனந்தன்,எழுத்தாளர்எம்.ஐ.பௌஸ்தீன், கலைஞர் எம்.ஏ.யூசூப்லெவ்வை
➢வசந்தம் - 1976 கவிஞர் சுலைமா எஸ்.இப்றாஹீம்.
➢கலைச்சுடர் - 1980 'டியூலக்' நிறுவனம் , சம்மாந்துறை.
➢ஊற்று - 1980 சம்மாந்துறை.
➢நிறைமதி - 1983 (இருபது பத்திரிகைகள் வெளிவந்துள்ளன)
பெண்கவிஞர் மசூறா ஏ.மஜீது ,பெண் கவிஞர் ராதா வேல்முருகு.
➢யௌவனம் - 1988
பெண்கவிஞர் மசூறா ஏ.மஜீது ,குழுவினர்.
➢ஏணி - 1987/1988 ஏ.எம்.நவாஸ்.
➢அலவாக்கரை - 1992 ஏ.எம் சித்தி மசூறா (Tr)
➢வாழ்த்துப் பா பாலை - 1972 ஈழமேகம் (கவிஞர் எம்.ஐ.எல். பக்கீர்தம்பி)
➢விதியை வென்றவள் - 2008 நவம்பர் மஸுறா A மஜீட் (Tr)
➢புதையல் - 1995 மஸுறா A மஜீட் (Tr)

அச்சுப்பதிப்புப் பத்திரிகை

➢கவிக் குயில் - 1960 கலைத்தொண்டன் எம்.ஏ.எம்.அமானுல்லா.
➢கலைமுரசு - 1961 கலைத்தொண்டன் எம்.ஏ.எம்.அமானுல்லா.
➢புதுப்பாதை - 1964 கலைத்தொண்டன் எம்.ஏ.எம்.அமானுல்லா.
➢புன்னகை - 1986.05.14 பெண் கவிஞர் மசூறா ஏ.மஜீது , பெண் கவிஞர் ராதா வேல்முருகு.
➢பிறைக்கவசம் - 1988 கலைத்தொண்டன் எம்.ஏ.எம்.அமானுல்லா.
➢குதூகலம் - 1988 பெண் கவிஞர் மசூறா ஏ.மஜீது , பெண் கவிஞர் ஏ.எஸ்.ஸுஹைறா.
➢நேசன் - 1992 எழுத்தாளர் எம்.ஐ.பௌஸ்தீன் (சம்மாந்துறை) (19 இதழுக்கு ஆசரியராகப் பணியாற்றியுள்ளார்)
➢வெளிச்சம் - 1990 எழுத்தாளர் எம்.ஐ.பௌஸ்தீன் (01ம்இதழுக்கு ஆசரியராகப் பணியாற்றியுள்ளார்)
➢அம்சம் - 1998 எழுத்தாளர் எம்.ஐ.பௌஸ்தீன் (03 இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்)
➢தேடல் வெளிச்சம் - 2002 எம்.ஐ.பௌஸ்தின், ஏ. ந.்.பர் அலி, ஊடகவியலாளர் ஐ.எல்.ஜலீல்.
➢குமுறல் - 2005 முஸ்லீம் தேசமன்றம் (M.N.A)
➢அசரா - 2006 எழுத்தாளர் ஐ.எல்.ஜலீல் (05 இதழுக்கு ஆசரியராகப் பணியாற்றியுள்ளார்)
➢இருட்டு - 2009
➢இலங்கையில் இருந்து ஒரே நாளில்.....திரைப்பட சினிமா சஞ்சிகை - 2008
திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குனருமான ARM றசீன் (சம்மாந்துறை)
➢ஞான ஒளி - கலை இலக்கிய ஆக்கங்களினைக் கொண்டது - 1988 ஏ. ந.்.பர் அலி

றோனியோ மலர்

- உலக ஆசிரியர் தின சிறப்பு மலர் - 1991
  எழுத்தாளர்-என்-ம.்.றுப் (ஆசிரியர்),பிரதான வீதி மாவடிப்பள்ளி.
- ATHLETIC MEET – 1991 சம்மாந்துறை தெற்கு கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுவிழா தொடர்பானது - 1999.சம்மாந்துறை தெற்கு கோட்ட பாடசாலைகள் ஒன்றியம்.
- மாணவர்களின் கவிதைகள் - 2000 ஏ.எம்.எஸ் மஸ்ஊா.
- ஈழக்குயிலின் இதயத்தில் நீ - நாவலர் ஈழமேகம் பக்கீர் தம்பி நினைவஞ்சலிக் கவிதைகள் -1994 மார்ச் ஈழக்குயில் இத்ரீஸ் சம்மாந்துறை.
- ஜனாதிபதி பதக்கம் சூட்டு விழா - 1992.02.29
  சாரணிய அணித்தலைவர் ஐ.எல் ஜலீல்.
- சிறப்பு மலர் - 1991/1993 பயிற்சி முடித்த தொலைக்கல்வி ஆசிரியர்கள் பற்றிய விடயங்கள். -1996.12.01 ஆசிரியர் குழு. ஏ.ஸி. இஸ்மாலெவ்வை,எம்.ஏ.தம்பிக்கண்டு,ஏ.எல்.எஸ்.ஏ.சத்தார்
- ஹஸனாத் - க.பொ.த (சா/த) கல்விக்கருத்தரங்கு நினைவு வெளியீடு - 1992.11.22
  ஏ.ந.்.பர் அலி.
- பிளம்பு - சம்மாந்துறையில் 1989 -05-17 இடம் பெற்ற பயங்கரவாத சம்பவ நினைவுகள் - 1989.06.18 எம்.எம்.நௌபாத், எம்.ரி அமீன்.
- அறுவடை (ஒவ்வொரு வருடமும் வெளிவருகிறது) - கல்வியல் தொடர்பானவை - 1995
  எம்.எம். வசீம் (13 வர்த்தகம்), எம். பௌமி மக்கீன் (13 கலை)
- இரத்த பாசத்தின் ? SINOC நாடகக்குழுவினருக்கு நடந்த கோரச்சம்பவம் - 1987
  ARM றசீன் (சம்மாந்துறை)
- என் இனிய வாழை மரமே -
  சது / அல் அமீர் வித்தியாலய மாணவர்களின் கவிதை தொகுப்பு - 2002
  ஏ.எம்.எஸ் மஸ்ஊா.
- சரித்திரம் சாகும் நாள் - குறு நாவல் - 1989.10.05.
  சதுறையூர் சரலியா (ஏ.ந.்.பர் அலி)
- தஸ்ஹீலுல் வுஸ்ல் இலாஹ், பஹ்மில் உஸ்ல் - இஸ்லாமிய சட்டக்கலை மூல அறிவு பற்றிய ஆராய்வு – 1983
  மௌலவி அலி எம் இப்றாஹீம் (விரிவுரையாளர் ஸர்க்கீய்யா)
- மாணவ முரசு - சமூக இலக்கிய,கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆக்கங்கள். - 1999
  வை.எம்.றாபி (சம்மாந்துறை) (தலைவர் -தென் கிழக்கு இஸ்லாமிய இளைஞர் காங்கிரஸ்)
- கடிதப் பத்திரிகை - சம்மாந்துறையின் "கல்விச் சூழல்" ஓர் பார்வைப் பதிவு - 1991.02.01
  எம்.ஏ.முஹம்து றமீஸ் - எம்.முஹம்து சரீம்.
- தேன் கூடு - மாணவர் விடயம் அடங்கிய சஞ்சிகை- 2001 எம்.ஆர்.பௌசான் அஹமட்
- அக்கினி - கவிதைகள் அடங்கிய சஞ்சிகை - 1985,பெப்ரவரி
  மஸ்ஊா- ஏ.மஜீட் (பிரதான வீதி, சம்மாந்துறை)

பிரசுரங்கள்.

- ஒரு பகிரங்கக் கடிதம் -நெசவுக் கைத்தொழில் கருத்திட்ட அமைச்சர் கௌரவ எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களுடனான அரசியல் சார்பான விடயம் - 1994.04.18
  ஏ.எம்.அலி – புளக் "ஜே" சம்மாந்துறை.
- இலங்கை முஸ்லிம் ஊடக வளர்ச்சியில் "புதுப்பாதை" - சம்மாந்துறையில் வெளியாகிய அமானுல்லாவின் புதுப்பாதை பத்திரிகை பற்றிய ஆய்வு - 2007/2008 – Dip in Journalist யூ.எல்.எம்.றியாஸ் - சம்மாந்துறை.

➢**Tamil Short Stories of Ampara District -** A Critical Evaluation - 1995/1996 M.Phil
முஹமட் அப்துல்லாஹ் முஹமட் றமீஸ்.

➢மஜ்லிஸ் அஷ்ஷூறா - இஸ்லாமிய திருமண நடைமுறைகள் - 2001.03.27.

➢இஸ்லாமிய திருமண நடைமுறைகள் - இஸ்லாமிய பொருளாதார வாழ்க்கை விடயம் - 2001.02.21.

➢பூனைக்கு மணி கட்டுவது யார்? - இஸ்லாமிய மார்க்க விடயம் - 2003.

➢நமக்கு நரகம் நிச்சயம் - இஸ்லாமிய மார்க்க விடயம் - 2004.

நினைவு மலர்கள்

➢இதயங்களில் வாழும் அல்-ஹாஜ் ஏ.எச்.எம். அப்துல்லாஹ் - ஓய்வு பெற்ற அதிபரும், மத்தியஸ்தர் சபைத் தலைவருமான அல்-ஹாஜ் ஏ.எச்..எம். அப்துல்லாஹ் நினைவுமலர். பாவலர் பஸீல் காரியப்பர் - 2003.

➢மர்ஹூம் ஏ.எம்.ஆர்,சிறாஸ் நினைவு மலர் - மாலைவட்ட மலர்க்குழு - 1991.

➢புறக்டர் எனும் புனிதர் மர்ஹூம் யூ.எல்.எம்.முஹைதீன் (சட்டத்தரணி) - நினைவுச் சுவடுகள்- 2009 -
அல்-ஹாஜ் எஸ்.எச்.எம். முஸ்தபா (அதிபர்).

➢பூத்த சுவடுகள் - மர்ஹூம் கவிஞர் ஈழக்குயில் இதிரீஸ் அவர்களின் நினைவுகளவிபரம்.
ஜலீல்.ஜி -ஏற்பாட்டுக்குழு செயலாளர் - 2007.03.17.

➢31 ம் நாள் வரலாற்று நினைவுமலர் - அமரர்.சிவநெறிச் செல்வர் சி.அருளம்பலம் அதிபர் அவர்களின் நினைவுச்சுவடுகள் - 2009.05.05
வீரமுனை கல்விச் சமூகம்.

➢அல் மர்ஜானின் ஸ்தாபகத் தின சிறப்பு மலர் -
அல் மர்ஜான் மகளிர் கல்லூரியின் ஸ்தாகர்களில் ஒருவரான மர்ஹூம் டாக்டர்.எம்.எம்.மீராலெவ்வை அவர்களின் நினைவுகள் அடங்கியது - 2001.10.02, அல்ஹாஜ் - ஏ.இப்றாஹிம்.

➢தென் கிழக்கு தவறவிட்ட திரவியம் -
தேசப் பந்து எம்.ஏ.எம்.ஹுசைன் (முன்னாள் மாவட்ட நீதிபதி) நினைவுகள் 1998.06.05, மௌலவி ஏ.ஸீ.ஏ.எம்.புகாரி (கபூர்).

➢41 ம் நாள் நினைவு மலர் - அமரர்.சுப்ரமணியம் சுகிர்தராஜன் - ஊடகவியலாளர் நினைவுச் சுவடுகள் - 2006.03.09, குடும்பத்தினர், வீரமுனை, சம்மாந்துறை.

➢31 ம் நாள் நினைவுப் பூக்கள் - அமரர்.ஜேம்ஸ். இராஜேந்திரா – அதிபர் - நினைவுச் சுவடுகள் 2002.09.30, குடும்பத்தினர், வீரமுனை, சம்மாந்துறை.



ஐ.எல். ஜலீல்

கல் வளம் கொண்ட உள்ளூர்க்குறிஞ்சி நிலம்



மைய வாடிக்குள்



Sabeer Traders

Dealers of Bicycle Spaer Parts, Water Pumbs,Water Supply items
Electrical Goods, Steel,Tractor Spare Parts and Hardware items





Hijra junction,Police Road,Sammanthurai
Tel:067-2260447, 060-2679447 Mob: 077-2658441

நாளைய நாகரீகத்தை இன்றே அறிமுகப்படுத்தும் நவ நாகரீக



ஆடையுலகின் அதிசய மாற்றம்



மின்ஹாஜ் ரெடிமேட்ஸ்





இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஆடவர் அழகுக்கேற்ற சேட்,டி-சேட்,டெனிம் றெளசர் கொட்டுன் றெளசர்,சாறம், அத்துடன் மங்கையர் மனம் விரும்பும் அழகிய சல்வார்,வண்ண வண்ணசாறிகள்,ஹபாயாக்கள் ஸ்காப் வகைகள்,கூறை சாறிகன்,பாதணிகள் சிறுவர்களுக்கான ஆடைகள்,அழகு சாதனப்பொருட்கள் அனைத்தையும் சிறந்த தரத்திலும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள

Minhaj Tex





Hijra junction,Ampara Road,Sammanthurai.

Tel:060-2690181,
Mob: 077-1104888

காலத்தால் அழியாத கலை நுணுக்கம் கொண்ட நகைகளுக்கு
இன்றே நாடுங்கள்.



SAFEENA GOLD HOUSE



சபீனா கோல்ட் ஹவுஸ்

மத்திய வீதி, சம்மாந்துறை தொ.பே 067-2260010





இளமைக்கு எழிலூட்டும் முகத்திற்கு பொலிவூட்டும் காலத்திற்கு ஏற்ற தங்க நகைகளை அழகிய டிசைன்களில் செய்து கொள்ள சிறந்த இடம்.....

பழய நகைகளை கூடிய விலைக்கு வாங்கப்படும்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் அசல் 22 கரட் தங்கத்தில் உத்தரவாத முத்திரை பொறித்துத் தரப்படும்

இலங்கையை நேசித்து இன்புறுவோம்

இந்நாட்டிலுள்ள எல்லாத் தரத்தாரையும்
இயன்றவரை நான் சென்று சந்திக்க வேண்டும்
தேயிலைத் தேசத்தின் மூலைகளில் செல்ல
சந்தர்ப்பம் ஆக்கி நான் சுற்றி வர வேண்டும்.

நேருக்கு நேர் சென்று பேரிய வேண்டும்
லயன்களில் தங்கியவர் மொழி பேச வேண்டும்
உணவிலே பொருந்தியதை உண்டறிய வேண்டும்
உடைகளையும் உடுத்தழகு பார்த்திட வேண்டும்

முட்கம்பி வேலிக்குள் முடங்கியோருடனே
முகம் காட்டி நினைவுப் படங்கள் எடுப்பேன்
உட் செல்லும் வெளி நாட்டுப் பிரமுகர்களுடனே
உரையாடி முடிவுகள் இவர்க்காயெடுப்பேன்.

என் வாழ்க்கைப் பயணம் முடிந்திடுமுன்னே
அயல் நாட்டு மக்களைச் சந்திக்கச் செல்வேன்
என் பயணம் மீண்டதும் அவர்களும் உங்கள்
இனிய நண்பராகலாம் அன்பின் உயர்வால்

நலன்புரி நிலையங்கள், முகாம்களில் சென்று
நான் பெற்ற உணர்வுகளை உங்களுடன் பகிர்ந்து
நீங்களும் சென்றங்கு இதயங் கனிந்து
நிச்சயம் உதவலாம் சொந்தங்களாகி

எல்லோரும் ஒரு நாட்டுச் சோதரர்களாகி
இலங்கையை நேசித்து இன்புறுவோம்.

– சம்மாந்துறை அஸீஸ் –

சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்தி வரலாறு ஓர் ஆய்வு

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நல்லம்யாம் எனும் நடுவு நிலைமையால் கல்வி யழகே யழகு" எனும் நாலடியார் பாடல் மூலம் கல்விச் செல்வத்தின் பொருமையும் , சிறப்பும் நன்கு விளங்குகின்றது. இத்தகைய பெருமையும், சிறப்பும் வாய்க்கப்பெற்ற கல்விச் செல்வம் இலங்கையின் ஏனைய பிரதேச மக்களுடன் ஒப்பிடுமிடத்து ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலத்தால் பிந்தியே எமது சம்மாந்துறை மக்களை வந்தடைந்துள்ளது. என்ற கசப்பான உண்மையைச் சொல்லாமல் இருக்கமுடியாது.

மேலும் சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்தி வரலாற்றை நோக்கும் போது , அதற்கும் நூறு வருடத்திற்கும் குறைவான வரலாற்றுத் தகவல்களையே எம்மால் காணக்கூடியதாக உள்ளது. பொதுவாக நோக்கும் போது சம்மாந்துறைத் தாயகத்தின் கல்வி அபிவிருத்தி மிக மெதுவாக ஏற்பட்டு வந்த போதிலும் , இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே துரித வளர்ச்சிபெறலாயிற்று என்பதே உண்மையாகும்.

சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்தி வரலாற்றை நோக்கும் போது அதனை இரண்டாகப் பிரித்து ஆராய்வது பொருத்தமானதாகும்.

ஐ. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கல்வி அபிவிருத்தி

ஐஐ. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட கல்வி அபிவிருத்தி

ஐ. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கல்வி அபிவிருத்தி :-

இலங்கையில் ஐரோப்பிய ஆட்சிக்காலத்தில் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் துளிர்விட ஆரம்பித்தது எனலாம் .

இலங்கையின் கரையோர மாகாணங்களைப் போத்துக்கேயரும் , ஒல்லாந்தரும் ஆட்சிசெய்யும் போது அவர்களின் கிறிஸ்தவ மிஷினரிகள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்ட போதிலும் அவர்களின் கல்விச் செயற்பாட்டில் வாசைனை கூட சம்மாந்துறைப் பக்கம் எட்டிப்பார்த்ததேயில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக 1815ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் அவர்களின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்படுத்திய காலத்திலிருந்து நாட்டின் நாலாபுறமும் ஆங்கிலக் கல்வியும், கிறிஸ்தவ மதமும் மிக வேகமாக பரவஆரம்பித்தன. அரசாங்கத்தின் நேசத்தைப் பெறுவதற்கும் அரச பதவிகளைப் பெறுவதற்கும் மற்றும் ஏனைய நலன்களை அனுபவிப்பதற்கும் ஆங்கிலக் கல்வியைக் கற்பதும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதும் பிரதான தகுதியாக அக்காலத்திலிருந்து இருந்தது. இவ்வரிய சந்தர்ப்பத்தை பௌத்த சிங்களவர்களும், இந்து சமய தமிழர்களும் நன்கு பயன்படுத்திக்கொண்டு பெருமளவில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவலாயினர். ஆனால் இலங்கை முஸ்லீம்கள் ஆங்கிலேயரின் பட்டம் பதவிகளுக்காகவோ அல்லது வேறு நலன்களுக்காகவோ தமது மத நம்பிக்கைகளை ஒருபோதும் கைவிடத் தயாராக இருக்கவில்லை. இதனால் பல தசாப்தங்களாக ஆங்கிலம் படிப்பதையோ , அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதையோ பெரும்பாலும் தவிர்க்கலாயினர்.

இவ்வாறான ஒரு நிலைமையையே சம்மாந்துறையிலும் காணக்கூடியதாக இருந்தது. கிழக்கிலங்கையில் கல்முனை, அம்பாரை உள்ளிட்ட அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தில் கிறிஸ்தவ மிஸனரிகள் பல பாடசாலைகளை நிறுவி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த வேளையில் சம்மாந்துறை மக்கள் அதைப்பற்றிய சிந்தனைகூட இல்லாதவர்களாகவே இருந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால தசாப்தங்களில் சம்மாந்துறையின் கல்வி நிலவரம் எவ்வாறு இருந்துள்ளது என்பதை பின்வரும் புள்ளிவிபரங்கள் மூலம் துலாம்பரமாக அறியக்கூடியதாக உள்ளது.

கல்முனை , அம்பாறை அடங்கலான மட்டக்களப்பு மாவட்டத்தில் 1918ம் ஆண்டு இயங்கிய பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு காணப்படுகின்றது.

பாடசாலைகள்	ஆண்	பெண்	கலவன்	மொத்தம்
உவெஸ்மிலியன் மிஷன்	03	09	70	82
உரோமன் கத்தோலிக்க மிஷன்	03	02	33	38
ஆங்கில திருச்சபை	01		07	08
இந்துப் பாடசாலை			10	10
அரசினர் பாடசாலை	06		02	08
மொத்தம்	13	11	122	146

இற்றைக்குச் சுமார் 90 வருடங்களுக்கு முன்பு எமது பிரதேசத்தில் இருந்த பாடசாலைகளின் விபரமே மேற்கூறிய பட்டியலாம். இதன்படி பின்வரும் விடயங்களை நாம் பகுப்பாய்வு செய்யலாம் முழு மட்டக்களப்பு மாவட்டத்திலும் 1918ஆம் ஆண்டு 146 பாடசாலைகள் இருந்துள்ளன. இவற்றில் இரண்டு ஆரம்பப் பாடசாலைகள் மாத்திரமே சம்மாந்துறையில் ஆரமபிக்கப்பட்டிருந்தன.

1860ஆம் ஆண்டு தமிழ் மக்கள் வாழ்ந்த வீரமுனையில் மெதடிஸ்த திருச்சபையால் ஒரு கிறிஸ்தவ ஆரம்பப் பாடசாலையும், 1908ஆம் ஆண்டு முஸ்லீம்கள் செறிந்து வாழும் பகுதியில் அரசினால் ஒரு ஆரம்ப பாடசாலையும் இக் காலத்தில் நிறுவப்பட்டிருந்தன.

வீரமுனையில் நிறுவப்பட்டிருந்த கிரிஸ்தவப் பாடசாலையில் முஸ்லிம்கள் சேர்ந்து படிப்பதற்கு மதப்பெரியார்களும், ஊர்த்தலைவர்களும் பெருந்தடையாகவே இருந்தனர். இப்பாடசாலையில் சேர்ந்து படித்தால் பிள்ளைகள் மதம் மாறி விடுவார்கள் என்ற பயமே பிரதான காரணமாக இருந்தது. ஆனால் பிற்காலத்தில் இக்கட்டுப்பாட்டையும் மீறி விரல் விட்டு எண்ணக்கூடிய பிள்ளைகள் இப்பாடசாலையில் சேர்ந்து ஆரம்பக் கல்வியைப் படித்து வரலாயினர்.

மேலும் இங்கு நிறுவப்பட்டிருந்த அரசினர் பாடசாலையிலும் மாணவர் சேர்ந்து படிப்பதற்கு பெற்றோர் பெருந்தடையாகவே இருந்தனர். அங்கும் மாணவர்கள் விரும்பிப் பாடசாலையில் சேரவில்லை. கட்டாயத்தின் பேரில் சேர்ந்தவர்களும் ஓரிரு வருடங்களில் பாடசாலையை விட்டும் ஓடி ஒழிந்து கொள்வோராக இருந்தனர். இக்காலத்தில் முஸ்லிம்களின் பெண் கல்வியைப்பற்றிக் கூற வேண்டியதேயில்லை. அது பூச்சியமாகவே இருந்தது.

இக்காலத்தில் இருந்த 146 பாடசாலைகளில் 128 பாடசாலைகள் கிறிஸ்தவர்களுக்கு உரியதாகவும் 10 பாடசாலைகள் இந்துக்களுக்குரியதாவுமிருந்தது. இதேவேளை ஒரு முஸ்லிம் பாடசாலையேனும் நிறுவப்படாமை இவ்வூர் மக்கள் கல்வியில் ஏனைய சமூகங்களை விடவும் ஒரு நூற்றாண்டு காலம் பின்தங்கியிருந்தனர் என்பது புலனாகின்றது.

அத்துடன் இங்கு நிறுவப்பட்டிருந்த 8 அரசினர் பாடசாலைகளில் இரண்டு கலவன் பாடசாலைகளாகும். ஏனைய 6 அரசினர் பாடசாலைகளும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த ஓட்டமாவடி , ஏறாவூர் , காத்தான்குடி , மருதமுனை , சாய்ந்தமருது , அட்டாளைச்சேனை , இறக்காமம் , சம்மாந்துறை போன்ற பகுதிகளில் நிறுவப்பட்டிருந்தன.

முஸ்லிம் பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த அரசினர் பாடசாலைகள் அனைத்தும் தமிழ் மொழிப் பாடசாலைகளாகவே இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலத்தில் இலங்கையில் மூன்று வகையான பாடசாலைகள் இயங்கியுள்ளன.

1. ஆங்கிலப் பாடசாலை
2. ஆங்கில சுய பாஷைப் பாடசாலை (இரு மொழிப் பாடசாலை)

3. சுய பாஷைப் பாடசாலை.

இவற்றில் சுய பாஷைப் பாடசாலைகளான அரசினர் பாடசாலைகள் முஸ்லிம் கிராமங்களில் அமைந்திருப்பதையும் ஆங்கிலப் பாடசாலைகளும் , இரு மொழிப் பாடசாலைகளும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த கிராமங்களில் நிறுவப்பட்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதனால் ஆங்கிலக் கல்வியைக் கற்க விரும்பும் முஸ்லிம்கள் மேற்படி பாடசாலைகள் அமைந்திருந்த கிராமங்களுக்கு அல்லது நகரங்களுக்குச் சென்று கற்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. இதனால் சம்மாந்துறையிலிருந்து விரல்விட்டு எண்ணக்கூடிய நிலச்சுவாந்தர்களின் பிள்ளைகள் கல்முனை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று கஸ்டத்தின் மத்தியில் ஆங்கிலக் கல்வியைக் கற்கலாயினர். பெரும்பாலானோருக்கு ஆங்கிலக் கல்வி எட்டாக்கனியாகவே இருந்தது.

போக்குவரத்துச் சிரமம் , சமூகத்தில் ஆங்கிலக்கல்வி கற்பதற்கெதிரான வெறுப்பும் ஏளனமும் சேர்ந்து இவர்கள் சம்மாந்துறையிலேயே ஆரம்பக் கல்வியோடு தமது படிப்பை முடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகினர்.

மேலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் 1910ஆம் ஆண்டளவில் அரசினர் பாடசாலையும் உதவி நன்கொடை பெறும் பாடசாலையுமாக 2669 பாடசாலைகள் இருந்துள்ளன. இக்காலத்தில் சம்மாந்துறையில் இரண்டு தமிழ்மொழி மூல ஆரம்பப் பாடசாலைகள் மாத்திரமே இருந்துள்ளன.

1939ஆம் ஆண்டளவில் இலங்கையில் மொத்தம் 4135 பாடசாலைகள் இருந்துள்ளன. இதே வேளை சம்மாந்துறையில் 1938ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சம்மாந்துறை மேற்கு அரசினர் தமிழ் பாடசாலையுடன் மொத்தம் மூன்று பாடசாலைகள் மாத்திரம் இங்கு ஆரம்பக் கல்வியை அளித்துக் கொண்டிருந்தன. 1948ம் ஆண்டு மலரும் போது இலங்கையில் ஏறக்குறைய 4750 பாபடசாலைகள் இருக்கும்போது சம்மாந்துறையில் 1946ம் ஆண்டு மலுக்கன்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அரசினர் தமிழ் பாடசாலையுடன் சேர்த்து மொத்தம் நான்கு ஆரம்பப் பாடசாலைகள் மாத்திரம் இங்கிருந்துள்ளன.

இதேவேளை கல்முனை, அம்பாறை உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி நிலை உயர்ந்ததாக இருந்து வந்துள்ளது. மட்டக்களப்பு புளியந்தீவில் 1814 ஆம் ஆண்டு மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையும் 1820 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலையும், 1873ம் ஆண்டு மட்/அர்ச் மைக்கில் கல்லூரியும், 1876ஆம் ஆண்டு மட்/அசர்ச் சிசிலியா கன்னியர்மடப் பாடசாலையும், 1883ல் கல்முனையில் பெண்கள் விடுதிப் பாடசாலையும், 1901இல் கல்முனை லீஸ் உயர்தரப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டு ஆங்கிலக்கல்வியுடன் உயர்தரக் கல்வியும் அளிக்கப்பட்டு வரலாயிற்று. இப்பாடசாலைகளில் ஒன்றுதானும் இப்பிரதேச முஸ்லிம் பகுதிகளில் நிறுவப்படாமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலப்பகுதியில் இப்பிரதேச மக்கள் கல்வி நிலையில் உச்சியில் இருக்கும்போது எமதூர் மக்கள் இதைப்பற்றிய எதுவித சிந்தனையுமில்லாமல் , அக்கறையுமில்லாமல் தமது பாரம்பரியத் தொழிலான விவசாய நடவடிக்கையில் தம்மையும் தமது மக்களையும் ஈடு படுத்திக் கொண்டு படுபிற்போக்குத்தனமான கொள்கைகளில் மூழ்கியவர்களாக இருந்து வந்துள்ளனர்.

பொதுவாக நோக்கும்போது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் ஏனைய சமூகத்தவர்களும் கல்வியில் முன்னேறி உயர் பதவிகளிலும் , ஆட்சியதிகாரங்களிலும் வீற்றிருக்கும்போது முஸ்லிம்கள் குறிப்பாக சம்மாந்துறை மக்கள் சகல துறைகளிலும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்துள்ளனர்.

ஆயினும் ஆங்கிலேயராட்சியின் இறுதிக்கால தசாப்தங்களில் சம்மாந்துறையில் ஆரம்பக்கல்வியைக் கற்றுவிட்டு வெளியூர்களிலுள்ள பிரபலமான பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியைக்கற்று வெளிவந்த மத்திய வகுப்பொன்று உருவாகி வந்ததையும் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு கல்வி கற்று வந்த விரல்விட்டு எண்ணக்கூடியவர்களில் சிலர் மருத்துவர்களாகவும் , பொறியிலாளர்களாகவும் , ஆசிரியர்களாகவும் , தபால் அதிபர்களாகவும் , கிராம விதானைகளாகவும் மற்றும் சிலர் அரசாங்க உத்தியோகத்தவர்களாகவும் இருந்து சமூகத்திற்குச் சிறப்பான கடமை புரிந்தவர்களை இன்று நாம் இனங்காணக்கூடியதாக உள்ளது.

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்த 150 வருட காலத்திலும் மொத்தமாக 40 பேருக்கும் குறைவானவர்களே இங்கு அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்துள்ளார்கள் என்ற உண்மையை அறியும்போது சம்மாந்துறை மக்கள் எவ்வளவு தூரம் கல்வியில் பின்தங்கியிருந்துள்ளார்கள் என்பதை எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

சுதந்நிரத்திற்குப் பின்னரான சம்மாந்துறையின் கல்வி , கலாச்சார , அரசியல் , பொருளாதார மேம்பாட்டிற்கு இக்கல்வி கற்ற சமூகம் பாரிய பங்களிப்பினை வழங்கி சமூக மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்ததை எவரும் மறுக்கமுடியாது.

கல்வி அபிவிருத்தியில் சம்மாந்துறை பின்தங்கியதற்கான காரணங்கள் :-

கல்வி அபிவிருத்தியில் சம்மாந்துறை மக்கள் இவ்வளவு தூரம் பிற்போக்குத்தனமாக இருந்தமைக்குப் பல காரணங்களைக் கூறலாம்.

1. கல்வி கற்பதற்கான போதிய பாடசாலை வசதிகள் இல்லாமையும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாமையும்.
2. கல்வி கற்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இங்கு இல்லாமை.
3. மக்களில் 90% த்திற்கும் அதிகமானோர் ஏழைகளாக , வறுமையில் உழல , 10% மான நிலச்சுவாந்தர்கள் மாத்திரம் தமது பிள்ளைகளை வெளியூர்களுக்கு அனுப்பிக் கல்வி கற்றமையால் பெரும்பாலான பிள்ளைகளுக்கு உயர் கல்வி பெற முடியாத நிலைமை .
4. மக்கள் கல்வியின் மீது அக்கறையில்லாமல் இருந்தனர்.
5. உலகாதயக் கல்வி, மார்க்கத்திற்கு விரோதமானது என்ற அப்போதைய மார்க்க அறிஞர்களின் வலியுத்தல்கள்.
6. ஆங்கில மொழி “நரகத்து மொழி” என்ற தப்பபிப்பிராயம்.
7. மாற்று மதப்பாடசாலைகளில் கல்வி கற்றால் தமது மதத்தில் பற்றின்மையும் கிறிஸ்தவ மதத்திற்கு பிள்ளைகள் கவரப்பட்டு மதமாற்றம் ஏற்பட்டுவிடும் என்ற பயம்.
8. கீழ் மட்டத்தில் உள்ளோர் கல்வி கற்பதற்கு மேல்மட்டத்தில் உள்ளோர் தடைக்கல்லாய் இருந்தமை.
9. போக்கு வரத்து வசதிகள் இல்லாமை.
10. பெண்கள் கல்வி கற்பது மானக்கேடான ஒரு விடயமாகக் கருதப்பட்டமை.

இவ்வாறான கல்வியில் பின்தங்கிய நிலை சம்மாந்துறையில் மட்டும்தான் என்ற எண்ணத்திற்கு வந்துவிடக்கூடாது. கிழக்கிலுள்ள எல்லா முஸ்லிம் கிராமங்களிலும் இவ்வாறான ஒரு அவல நிலையே காணப்பட்டது உண்மையாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட கல்வி அபிவிருத்தி :-

இலங்கை சுதந்திரமடையும்போது சம்மாந்துறையில் மூன்று அரசினர் ஆரம்பப் பாடசாலைகளும் , ஒரு மெதடிஸ்த மெஷனறி பாடசாலையுமே இருந்தன. இந்த நான்கு பாடசாலைகளும் தமிழ்மொழி

மூல ஆரம்பப் பாடசாலைகளாகும். இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்னரும் ஒரு தசாப்தகாலத்திற்கு மேலாக கல்வி அபிவிருத்தி மந்தகதியிலேயே இருந்து வந்துள்ளது. ஆயினும் சம்மாந்துறையில் கல்வி அபிவிருத்தி வரலாற்றில் 1950ம் ஆண்டு ஒரு திருப்புமுனை என்றால் அது மிகையல்ல. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இங்கு கல்வி அபிவிருத்தி ஏற்படவில்லை என்பது உண்மைதான். ஆயினும் அப்போது கல்வி கற்ற புத்திஜீவிகள் சிலர் தம் சமூகத்தில் கல்வி நிலை பற்றியும் பின்தங்கிய சமூகத்தை முன்னேற்றுவதற்கு பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவது அவசியம் என்பது பற்றியும் சிந்தித்து செயலாற்றியதன் விளைவாக இவ்வூரில் பல மாற்றங்கள் படிப்படியாக நிகழத் தொடங்கின.

சும்மாந்துறையின் நீண்ட கால கனவான ஆங்கிலப் பாடசாலையொன்று சம்மாந்துறை கனிஸ்ட வித்தியாலயம் என்ற பெயருடன் 1950.03.03ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இது இவ்வூரின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனையாகும்.

இதனைத் தொடர்ந்து சம்மாந்துறையில் கிராமப்பகுதியான கருவாட்டுக்கல்லில் 1950.09.01ம் திகதி "மட்/கருவாட்டுக்கல் அரசினர் கலவன் பாடசாலை" என்ற பெயருடன் ஓர் ஆரம்பப் பாடசாலை ஆரப்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை சுதந்'திரமடைந்த பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இவ்விரு பாடசாலைகளும் இன்று சம்மாந்துறையின் இரு கண்களாக உயர்கல்விச் செயற்பாட்டில் மத்திய நிலையங்களாக திகழ்கின்றன.

இதற்குப் பின்னர் 1960ம் ஆண்டு வரை இங்கு எந்தவொரு பாடசாலையும் ஆரம்பிக்கப்படவேயில்லை. பெரும்பாலான பாடசாலைகள் 1960ம் ஆண்டிற்குப் பின்னரே ஒன்றன்பின் ஒன்றாக துரித கதியில் ஆரம்பிக்கப்படலாயிற்று.

இன்று சம்மாந்துறை கல்விக்கோட்டத்தில் 36 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 30 பாடசாலைகள் 1960ஆம் ஆண்டின் பின்னரே ஆரம்பிக்கப்பட்டவையாகும். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இங்கிருந்த பாடசாலைகளில் 100க்கும் குறைவான மாணவரும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆசிரியர் களுமேயிருந்தனர். ஆனால் இன்று 15000க்கும் மேற்பட்ட மாணவர்களும் , 800க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் நிறைந்து கல்விச் செயற்பாட்டில் உயர்ந்த நிலையில் சம்மாந்துறை திகழ்வதையிட்டு புளகாங்கிதமடையாமல் இருக்கமுடியாது.

சம்மாந்துறைத் கல்வி அபிவிருத்தி வரலாற்றில் சம்மாந்துறைத் தொழில் நுட்பக்கல்லூரி, சம்மாந்துறை இணைந்த பல்கலைக்கழக கல்லூரி , தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறை பௌதீக விஞ்ஞான பீடம், இலங்கை தொழில் நுட்ப நிறுவகம், தொழிற்பயிற்சி நிலையம் என்பனவும் கூடிய பங்களிப்பைச் செய்து கொண்டிருப்பதன் காரணமாக கல்வி உலகில் பல்வேறு துறை சார்ந்த விற்பன்னர்கள் உருவாக்கப்பட்டுக்கொண்டிருப்பது நாம் பெருமையடையக்கூடிய விடயமே.

மேற்கூறிய கல்வி நிறுவனங்களின் வரலாற்றினைப் பற்றி மிகச் சுருக்கமாக ஆராய்தல் பொருத்தமுடையதாகும். சம்மாந்துறையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் வரலாற்றைத் தவிர்த்து , ஆரம்ப காலமான அதாவது 1950ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த ஆறு பாடசாலைகளின் வரலாற்றையும் , பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஏனைய கல்வி நிறுவனங்களின் வரலாற்றையும் சிறிது ஆராய்தல் இங்கு பொருத்தமுடையதாகும்.

சம்மாந்துறையில் 1950ஆம் ஆண்டுவரை ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் :-

1. **வீரமுனை மெதடிஸ்த மிஷன் பாடசாலை :-**

சம்மாந்துறையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை இதுவாகும். பிரித்தானிய மெதடிஸ்த மிஷன் சபையினரால் 1860ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இப் பாடசாலை பற்றிய பூரண தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. முஸ்லீம்களும் , தமிழர்களும் வாழ்ந்த எல்லைப் பகுதியில் இப்பாடசாலை நிறுவப்பட்டிருந்தது. ஆயினும் இப் பாடசாலையில் முஸ்லீம் மாணவர்கள் சேர்ந்து படிப்பதை தவிர்க்கலாயினர். பெற்றோரும் தமது பிள்ளைகளை இங்கு கல்வி கற்க அனுப்புவதற்கும் தயக்கம் காட்டியே வந்துள்ளனர். இப்பாடசாலை ஒரு கிறிஸ்தவ பாடசாலையாக இருந்ததே இதற்குக் காரணமாகும். ஆயினும் 1900ஆம் ஆண்டிற்குப் பின்னர் சமூகத்தின் எதிர்ப்புக்கும் மத்தியில் முஸ்லிம் மாணவர் சிலர் இங்கு சேர்ந்து கல்வி கற்க ஆரம்பித்தனர்.

இப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற வசதிபடைத்த மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காக கல்முனை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்குச் சென்று படிப்பைத் தொடரலாயினர். இப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற மகுமூதுலெப்பை வாத்தியார், கலந்தர்லெவ்வை வாத்தியார், ஹக்கு வாத்தியார் ஆகியோர் "சட்டாம்பியாக" நியமனம் பெற்று இப்பாடசாலையிலேயே ஆசிரியர்களாகக் கடமைபுரிந்துள்ளனர்.

இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பேணும் வகையில் இங்கு ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் சாறம், சேட், சால்வை, தொப்பி அணிந்து பாடசாலைக்குச் சென்றனர். கலந்தர்லெவ்வை வாத்தியார் இங்கு இரண்டாம் வகுப்பு ஆசிரியராகவே தொடர்ந்து கடமை புரிந்து ஓய்வு பெற்றார். இவர்களின் நியமனத்திற்குப் பின்னர் இப்பாடசாலையில் முஸ்லிமானவர் பெருமளவில் சேர்ந்து படிக்கலாயினர். இப் பாடசாலையே இன்று சம்/ தாறுல் உலூம் வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்குகின்றது.

2. சம்மாந்துறை அரசினர் தமிழ் ஆண்கள் பாடசாலை:-

சம்மாந்துறையில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது பாடசாலை இதுவாகும். இது ஓர் அரசினர் ஆரம்பப் பாடசாலையாகும். 1908ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையின் ஆரம்ப காலத் தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. அக்காலத்தில் இப் பாடசாலை "தர்மப்பள்ளிக்கூடம்" என்றும் "வாடியடிப் பள்ளிக்கூடம்" என்றும் மக்களால் அழைக்கப்பட்டது. இங்கு ஆரம்பக் கல்வியைக் கற்றவர்கள் உயர்படிப்புக்காக கல்முனை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று படிக்கலாயினர்.

வெளியூர் சென்று எஸ்.எஸ்.சி.(SSC) பரீட்சை எழுதிச் சித்தி பெறத் தவறிய மாணவரின் நன்மை கருதித் தலைமை ஆசிரியராக இருந்த திரு.பீ.இராசையா அவர்கள் 1945ஆம் ஆண்டு 10ம்வகுப்பை ஆரம்பித்தார். 1946ஆம் அண்டு முதன் முதலாக இப் பாடசாலையிலிருந்து மாணவர் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு (SSC) தோற்றலாயினர். இப் பரீட்சைக்கு ஜனாப் எம்.ஐ.கோஸ் முகம்மது, ஐ.சுலையுமாலெவ்வை , ஏ.எல்.முகையதீன் பாவா, ஜே.எம்.எம்.அபூபக்கர் , எம்.அப்துல் சலாம்(றவூப் ஹக்கீம் MP-அவர்களின் சாச்சா) , திரு இராச நாயகம் ஆகியோர் முதன் முதலாகத் தோற்றிய மாணவர். இப்பாடசாலையில் 1952ஆம் ஆண்டு வரை எஸ்.எஸ்.சி.(SSC) வகுப்பு நடைபெற்றுவந்துள்ளது.

இப்பாடசாலையில் முஸ்லிம் மாணவர் தொகை அதிகரித்ததனால் ஒரு முஸ்லிம் தலைமையாசிரியரின் தேவை உணரப்பட்டது. 1941ஆம் ஆண்டு சம்மாந்துறையில் ஆரம்பிக்கப்பட்ட "முஸ்லிம் சபா" என்ற அமைப்பு இவ்விடயத்தில் கவனஞ் தெலுத்தியது. இதன் தலைவர் ஜனாப்.ஏ.யூமுகம்மதலி போஸ்ட் மாஸ்டர், உறுப்பினர் ஜனாப்.எம்.இப்றாலெவ்வை (கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக அல்-ஹாஜ் ஆ.மு.சரிபுதீன் அவர்களின் ஆலோசனையின் பேரில் மருதமுனையைச் சேர்ந்த ஜனாப் ஜே.எம்.எம்.அபதுல் காதர் அவர்கள் 1946 ஆம் ஆண்டு இவ் வித்தியாலயத்தின் முதாலவது முஸ்லிம் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவரின் வருகையின் பின்னர் இப் பாடசாலை வேகமாக முன்னேற ஆரம்பித்தது. மாணவர்

தொகையும் அதிகரிக்கலாயிற்று . சம்மாந்துறையைச் சேர்ந்த ஆசிரியர் பலரும் இப் பாடசாலையில் கற்பிக்கலாயினர். இப்பாடசாலையின் பெயரும் சம்மாந்துறை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயருடன் அழைக்கப்படலாயிற்று 1961-06-01ம் திகதி சம்மாந்துறை சிரேஷ்ட பாடசாலையுடன் இப் பாடசாலை இணைப்புச் செய்யப்பட்டதுடன் இதன் வரலாறு முடிவடைகின்றது.

3. சம்மாந்துறை (மேற்கு) அரசினர் பெண்கள் பாடசாலை:-

சம்மாந்துறையில் நிறுவப்பட்ட மூன்றாவத அரசினர் ஆரம்பப் பாடசாலை இதுவாகும். இன்று இப்பாடசாலை சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் விதியாலயம் என்ற பெயருடன் அழைக்கப்படுகின்றது. இங்கு ஏற்கனவே இரண்டு பாடசாலைகள் இருந்த போதிலும் பெண்களுக்குகென ஒரு பாடசாலை இல்லாமல் இருந்தது. இங்கு ஒரு பெண் பாடசாலை தேவை என்ற சிந்தனை ஏற்பட்டபோது சமயத்தலைவர்களும், முக்கிய பெரியார்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாயினர். ஆயினும் சமூக சிந்தனையுள்ள சிலரின் பெரு முயற்சியினால் ஒரு பெண் பாடசாலை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின. 1935ஆம் ஆண்டு சம்மாந்துறை வேவகம்பற்று வன்னிமையாக இருந்த ஜனாப் எம்.எம்.முகம்மதலி (அலிவன்னியார்) அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக , அப்போதைய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு.குமாரசாமி அவர்களின் அனுசரணையுடன் ஊரின் அப்போதைய மத்திய பகுதியாகக் காணப்பட்ட மூன்றாம் குறிச்சியில் நான்கு பேரின் குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்பட்டு பாடசாலைக் கட்டிடம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின.

இச் சந்தர்ப்பத்தில் அலிவன்னியார் காலமாகிவிடவே பெண் பாடசாலை அமைக்கும் முயற்சியில் தாமதமேற்பட்டது. இதனை அறிந்த புதிதாக நியமனம் பெற்ற அப்துல் மஜீது வன்னியனார் அவர்கள் பாடசாலைக் கட்டிட வேலையைத் தொடர்ந்து மேற்கொண்டார். இப் பாடசாலை 1938ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 12ம் திகதி சம்மாந்துறை வேவகம் பற்று வன்னியனார் அப்துல் மஜீது அவர்களால் சம்மாந்துறை மேற்கு அரசினர் பெண்கள் பாடசாலை என்ற பெயருடன் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இப் பாடசாலையின் தலைமை ஆசிரியையாக சம்மாந்துறை தமிழ் குறிச்சியைச் சேர்ந்த செல்வி என்.செல்வரத்தினம் அவர்கள் நியமிக்கப்பட்டார். பின்னர் இப் பாடசாலை 1965.05.17ம் திகதி முதல் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயமாக மாறியது. சம்மாந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயத்திலிருந்து உயர் வகுப்பு மாணவிகள் இவ் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். மகளிர் மகா வித்தியாலயமாகச் சில காலம் இயங்கிய இப் பாடசாலை பல்வேறு காரணங்களால் உயர் வகுப்பை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது இப்பாடசாலை தரம் 1-9 வரையுள்ள இரண்டாம் தரப்பாடசாலையாக சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்" என்ற பெயருடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

4. மலுக்கன்பிட்டி அரசினர் தமிழ் வித்தியாலயம்:-

சம்மாந்துறையின் நான்காவது பாடசாலை1946ஆம் அண்டு மலுக்கம்பிட்டியில் அமைக்கப்பட்டது. இது ஓர் அரசாங்கப் பாடசாலையாகும். மலுக்கம்பிட்டி சம்மாந்துறைக்கு தெற்கே அமைந்துள்ள ஒரு சிறு கிராமமாகும் சம்மாந்துறைப் பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்களின் நிருவாக மத்திய நிலையமாகவும் இவ்வூர் திகழ்ந்துள்ளது. இக் கிராமத்தில் கலந்தர், சிக்கந்தர் ஆகிய இறைநேசர்கள் புனித அடக்கஸ்தலங்களும் இருக் கின்றன . இதையொட்டி இங்கு வாழ்ந்த மக்களின் கல்வி வசதிக்காக அக்காலத்தில் ஒரு, ஆரம்பப்பாடசாலை நிறுவப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் ஏற்பட்ட வன்செயலின் காரணமாக முழுக்கிராமமும் இடம் பெயர்ந்ததால் இப்பாடசாலையும் இடம் பெயர்ந்து தற்போது சம்மாந்துறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

5. சம்மாந்துறைக் கனிஷ்ட வித்தியாலயம் :-

ஆங்கிலம் அரச கரும மொழியாக இருந்த அக் காலப்பகுதியில் ஆரம்பக் கல்வியை வழங்கக் கூடிய தமிழ் மொழிப் பாடசாலைகளே இங்கு இருந்தன. ஆங்கிலம் படிப்பவர்களுக்கே உத்தியோகம் என்றிருந்த அக்காலத்தில் தூரஇடம் சென்று படிக்கமுடியாமல் பலர் அரச உத்தியோகம் பார்க்க முடியாத சூழ்நிலை இருந்தது ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிச் சிந்தித்த " சம்மாந்துறை முஸ்லிம் சபா"வின் தலைவர் ஜனாப் ஏ.யூ.முகம்மதலி போஸ்ட் மாஸ்டர், ஜனாப் எம்.இப்றாலெப்பை-கூட்டுறவுப் பரிசோதகர் ஆகியோர் 1948ம் ஆண்டு முஸ்லிம் தலைவர்களான கலாநிதி டி.பி.ஜாயா , சேர்-றாசிக் பரீத், கல்முனை பாராளுமன்ற உறுப்பினர், கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் ஆகியோரிடம் ஓர் ஆங்கிலப் பாடசாலை தாபித்துத்தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

பாடசாலை அமைப்பதற்குச் சொந்தக் காணி இல்லாததால் ஆங்கிலப் பாடசாலை அமைக்கும் திட்டம் கை நழுவிப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எம்.இப்றாலெப்பை , உறுப்பினர்களான ஜனாப்கள் எஸ்.ஏ.முகம்மதலி, ஏ.யூ.உதுமாலெப்பை உடையார், மீராலெப்பை ஹாஜி, எஸ்.முகம்மதுத்தம்பி ஹாஜி ஆகியோரின் அனுசரணையுடனும் ஒத்துழைப்புடனும் பள்ளிவாசலுக்குச் சொந்தமான " கேசவன் காலை" என்று அழைக்கப்பட்ட நாலு ஏக்கர் நிலத்தை ஒரு ஆங்கிலப் பாடசாலை அமைக்கவேண்டும் என்பதற்காக வழங்கினர். அத்துடன் பள்ளிவாசல் பணத்தில் 50"X 25" அளவுகொண்ட தற்காலிகக் கட்டிடமொன்றையும் கல்வி இலாகாவிடம் ஒப்படைத்தனர்.

தற்காலிகக் கட்டிடத்தைப் பொறுப்பேற்ற கிழக்குப் பிராந்திய கல்வி அதிகாரி திரு.கிருஷ்ணபிள்ளை அவர்கள் 1950ம் ஆண்டு பங்குனித் திங்கள் 03ம் நாள் (1950.03.03) சம்பிரதாயபூர்வமாகக் கனிஷ்ட வித்தியாலயத்தை (யூனியர் ஸ்கூல்) ஆரம்பித்துவைத்தார். இவ்வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக திரு.டி.மயில்வாகனம் நியமிக்கப்பட்டார். இவ்வித்தியாலயத்தின் ஆரம்பம் நம் தாயகத்தின் கல்வி அபிவிருத்தியில் ஒரு மைல்கல் என்றே கூறவேண்டும்.

வடக்கே மடத்துக்குளமும் , சுற்றிவர பற்றைக் காடுகளும் நிறைந்திருந்த அங்கு "பின்னமரத்தடியில்" சீட்டின் பலகையால் அடைக்கப்பட்ட ஒரு ஓலைக்கொட்டிலில் இப்பாடசாலை திறந்துவைக்கப்பட்டது.

இப் பாடசாலைக்குத் தேவையான மாணவர்களாக அருகிலிருந்த அரசினர் ஆண்கள் பாடசாலையிலிருந்து 6ம்,7ம்,8ம் வகுப்புகளுக்குரிய 33பேர் பெற்றுக்கொள்ளப்பட்டனர். 03வகுப்புக்கள் மாத்திரம் இருந்ததாலும் , மாணவர் தொகை குறைவாக இருந்ததாலும் ஒரே ஒரு ஆசிரியர் படிப்பிக்கும் பாடசாலையாகவே இது இருந்தது. அதனால் இப் பாடசாலையில் எந்தவித வளர்ச்சியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அத்துடன் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு அதிபர்கள் மாறிச் செல்ல பாடசாலைக் கல்வியில் தேக்க நிலை ஏற்பட்டது. நம்பிக்கையாளர் சபை மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக 1950.05.23ம் திகதி திரு.டபிள்யூ.கன்னங்கரா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரத அயராத முயற்சியால் பாடசாலையில் வளர்ச்சி காணப்படலாயிற்று ஆயினும் கால கதியில் இவ் அதிபரின் கட்டுப்பாட்டிற்கும் , கடின உழைப்புக்கும் ஈடுகொடுக்கமுடியாமல் மாணவர்கள் பாடசாலையை விட்டும் விலகிய காரணத்தினால் இறுதியில் 08மாணவர்களே மிஞ்சும் நிலமை ஏற்பட்டது. 1920.03.17ந் திகதி திரு.யோகம் வேலுப்பிள்ளை அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் மாணவர் தொகையை கூட்டும் நோக்குடன் அருகிலிருந்த அரசினர் ஆண்கள் பாடசாலையிலிருந்து 1953ம் ஆண்டு 04ம்,05ம் வகுப்புகளும் இப் பாடசாலைக்கு மாற்றப்பட்டன. அத்தோடு இவ் ஊரைச்சேர்ந்த ஆசிரியர்களான ஜனாப் எம்.ஐ.எல்.பக்கீர் தம்பி, ஜனாப்.எம்.ஐ.கோஸ்முகம்மது ஆகியோரும் இங்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதிலிருந்து இப் பாடசாலை படிப்படியாக அபிவிருத்தியடைந்து வந்துள்ளமையை வரலாற்றில் காண்கிறோம். மேலும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட "கலா அபிவிருத்திக் கழகம்" பல உதவிகளைச் செய்துள்ளது. மாணவரின் விளையாட்டுத் திறனை ஏற்படுத்த விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்தது. குண்டும் குழியுமாக தூசி நிலமாக இருந்தத் இடத்தை துப்புரவுசெய்து சிறந்ததொரு மைதானம் அமைக்க கலா பிவிருத்திக் கழகம் உதவிபுரிந்துள்ளது.

இப் பாடசாலை பல்வேறு கால கட்டங்களில் தரமுயர்த்தப்பட்டுவந்தது. 1954ம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலையாகவும் 1961ம் ஆண்டு மகாவித்தியாலயமாகவும் 1977ம் ஆண்டு மத்திய மகாவித்தியாலயமாகவும் 1986ம் ஆண்டு சம்மாந்துறை மத்திய கொத்தணி மூலப் பாடசாலையாகவும் 1994ம் ஆண்டு தேசிய பாடசாலையாகவும் வளர்ச்சிப்படிகளைக் கடந்து இன்று இப் பிராந்தியத்தில் தலைசிறந்தவொரு கல்விக்கூடகமாகத் திகழ்வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

இதே வேளை 1961ம் ஆண்டு இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்புமுனை ஏற்படுகிறது. சும்மாந்துறையின் முதலாவது அரசினர் பாடசாலையாக நிறுவப்பட்ட சம்மாந்துறை கிழக்கு அரசினர் ஆண்கள் பாடசாலை கணிஷ்ட பாடசாலையுடன் இணைக்கப்பட்டு மகா வித்தியலயமாகத் தரமுயாத்தப்பட்டது. இப் பாடசாலை வளர்ச்சியில் இங்கு 1958ம் ஆண்டு அதிபராக நியமிக்கப்பட்ட ஜனாப் சீ.ஒ.லெஸ்தகீர் அவர்களைச் சம்மாந்துறைச் சமூகம் என்றென்றும் மறக்கமுடியாது. இவ் வித்தியாலயம் சகல துறைகளிலும் பிரகாசிப்பதற்கு ஜனாப் லெஸ்தகீர் அவர்கள் அரும்பணியாற்றிய மேதையாகும் .

இப் பாடசாலையில் 1950ல் 33மாணவரும், 1958ல் 133மாணவர்களும், 1961ல் (இணைப்பின் பின்னர்) 627மாணவர்களும், 1973ல் 1300 மாணவர்களும் கல்வி கற்றுள்ளனர். இன்று ஏறக்குறைய 2000 மாணவர்கள் கல்விகற்றுவருகின்றனர். இது இப்பாடசாலையின் துரித வளர்ச்சியினைக் காட்டுகின்றது. ஓர் ஆசிரியருடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு காணப்படுகின்றது. சம்மாந்துறை கணிஷ்ட வித்தியாலயத்தில் 1952ம் ஆண்டு முதன் முதலாக சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு (SSC) மாணவர் தோற்றியுள்ளனர் 1969ம் ஆண்டு அதிபராக இருந்த ஜனாப் எம்.எஸ்.மரைக்கார்த்தம்பி , ஜனாப் எஸ்.எல்.அப்துல்கலாம் ஆசிரியர் ஆகியோரின் பெருமுயற்சியினால் G.C.E.(உயர்தர) வகுப்புக்கள் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டன.

6. சம்மாந்துறை கருவாட்டுக்கல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை :-

சம்மாந்துறையில் ஆரம்பிக்கப்பட்ட 06வது பாடசாலை இதுவாகும் சம்மாந்துறையில் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருந்த கருவாட்டுக்கல் என்று அழைக்கப்பட்ட பகுதியில் ஒரு பாடசாலை அமைக்கப்படல் வேண்டும் என்ற சிந்தனை ஒருசில பெரியார்களின் மனதில் ஏற்பட்டது. குறிப்பாக மர்ஹூம்களான மீராலெப்பை டொக்டர், எஸ.வி.வி.அலிலெப்பை போடியார், எம்.ஐ.எல்.பக்கீர்தம்பி-(ஈழமேகம்) ஏ.எம்.மீராலெப்பை (அதிபர்) , எம்.ஐ.கோஸ் முகம்மது (அதிபர்) ஆகிய சேவையுணர்வு மிக்க சிலரின் தூரநோக்கின் காரணமாகவே இப் பாடசாலை உருவானது.

இப்பாடசாலை இங்கு ஆரம்பிப்பதற்குச் சில சுயநலமிகளின் எதிர்ப்பும் , இடைஞ்சலும் ஏற்படவேசெய்தன இவற்றையும் தாண்டி அப்போதைய கல்முனைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி கேட் முதலியார் , எம்.எஸ்.காரியப்பர் அவர்களின் உதவியுடன் மேற்கூறிய பெருந்தகைகள் பிரதேச மக்களின் உதவியுடன் 50'x20' அளவான ஒரு தற்காலிக

கொட்டிலை அமைத்துக் கொடுத்தனர் இப் பாடசாலை 1950.07.29ந் திகதி பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.எஸ்.காரியப்பர் , கிழக்கு மாகாண அரச அதிபர் திரு.வி.எஸ்.எம். டீமெல் , சம்மாந்துறைப் பற்று டீ.ஆர்.ஓ.ஜனாப் எம்.ஏ.எம்.யூசுப், கிழக்கு மாகாண வித்தியா அதிகாரி திரு.கே.கிருஷ்ணப்பிள்ளை , கல்முனை வட்டார வித்தியாதரிசி எஸ்.விஸ்வலிங்கம் ஆகியோர் சகிதம் மிகச் சிறப்பாக திறந்துவைக்கப்பட்டது. எனினும் 1950.09.01ந் திகதியே "கருவாட்டுக்கல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்ற பெயரில் சட்டரீதியாக செயற்படத்தொடங்கியது.

இப்பாடசாலை முதன் முதலாக 98மாணவருடன் தற்காலிக தலைமை ஆசிரியர் ஜனாப் மரஹூம் ஏ.எம்.மீராலெப்பை அவர்கள் தலைமையில் இயங்கத்தொடங்கியது.

1959.03.01ந் திகதி இப் பாடசாலையின் அதிபராக பதவிஏற்ற ஜனாப் எம்.ஐ.கோஸ்முகம்மது அவர்கள் காலத்தில் சம்மாந்துறை மகா வித்தியாலயத்தை தரமுயர்த்துவதற்காக அங்கு மாணவர் பற்றாக்குறை நிலவியபோது இங்கிருந்து 6ம்,7ம் ,8ம் வகுப்பு மாணவர்கள் மகாவித்தியாலயத்திற்கு அனுப்பப்பட்டனர். இதனால் இப் பாடசாலை தரம் 1தொடக்கம்5 வரையிலுள்ள பாடசாலையாக இயங்கவேண்டிய நிலைமைஏற்பட்டது.

கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயருடன் இயங்கிய இப் பாடசாலை 1965.11.17ந் திகதி தொடக்கம் அல்-மர்ஜான் வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கத்தொடங்கியது. ஜனாப் யூ.எம்.முகையதீன் அவர்கள் அதிபராக இருக்கும் போது 1987.02.27ந் திகதி இப் பாடசாலை மகா வித்தியாலயமாக தரமுயற்தப்பட்டது. அன்று முதல் இங்கு கா.பொ.த.உயர்தர வகுப்புகளும் ஆரம்பிக்கப்படலாயின.

இக்காலக் கட்டத்தில் சம்மாந்துறையில் ஏற்கனவே பெண் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அது தொடர்ந்து பெண் பாடசாலையாக இயங்காமல் தளர்சியடைந்திருந்தது. இக் குறைபாட்டை நீக்குவதற்கும் தனியானதொரு பெண் பாடசாலை அமைக்கப்படல்வேண்டும் என்றும் சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்-ஷூரா மும்முரமாகச் செயற்பட்டது. இதற்கு அப்போதைய சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் தனது பூரண ஒத்துழைப்பையும் நல்கினார். இதன் பயனாக இப் பாடசாலை 1990ம் ஆண்டு முதல் சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளீர் மகா வித்தியாலயமாக மிளிரத்தொடங்கியது.

மேலும் இங்கு 1998ம் ஆண்டு க.பொ.த.உயர்தர விஞ்ஞானப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. 1989ம் ஆண்டு முதல் இவ் வித்தியாலயத்திலிருந்து மாணவிகள் பலர் பல்கலைக்கழகம் செல்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

கடந்த 50வருடங்களுக்கும் மேலாக ஆங்கில மொழியின் முக்கியத்துவம் உணரப்பட்டபோதிலும் அது பூரணத்துவம் அடையவில்லையென்றே கூறவேண்டும். அக் குறைபாட்டை இவ் வித்தியாலயம் இன்று தீர்த்துவைக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது.

2005ம் ஆண்டு தரம் 6ம் வகுப்பில் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2009ல் அம் மாணவிகள் 13பேர் 10ம் வகுப்பை அடைந்துள்ளனர். இவர்கள் 2010ம் ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு ஆங்கில மொழி மூலம் தோற்றவுள்ளனர் என்ற மகிழ்ச்சியான செய்தி நம் அனைவருக்கும் ஆறுதலளிக்கின்றது. ஆங்கில மொழி மூலம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குப் பாடசாலை மாணவர் அனுப்பப்படும் முதலாவது சந்தர்ப்பமும் இதுவாகும்.

1950ற்கும் 1960ற்குமிடைப்பட்ட காலத்தில் கல்வி நிலை:-

1950ம் ஆண்டில் இவ்வூரின் இரண்டு முக்கிய பாடசாலைகள் திறக்கப்பட்டதன் பின்னர் 1960ம் ஆண்டு வரை வேறு எந்த பாடசாலையும் இங்கு திறக்கப்படவில்லை மாணவரை சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர பரீட்சைக்கு (SSC) ஆயத்தப்படுத்தும் ஒரே பாடசாலையாக மகாவித்தியாலயம் மாத்திரம் இருந்தது. இங்கு 1952 டிசம்பர் தொடக்கம் மேற்படி பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிக்கொண்டிருந்தனர். இக் காலக் கட்டத்தில் சம்மாந்துறை மக்களும் அரசியலில் அநாதைகளாகவே இருந்தனர். ஆயினும் 1956ம் ஆண்டு பதவிக்கு வந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கருணையினால் இங்குள்ள பலருக்கு ஆசிரிய நியமனங்கள் கிடைத்தன.

அப்போது கல்வியமைச்சராக இருந்த டாக்டர் W.தஹாநாயக்க அவர்கள் SSC சித்தியடைந்த அனைவருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கலாயினார். இதனால் ஆசிரியர் சமூகமொன்று இங்கு உருவாகி ஆசிரியர் தட்டுப்பாடின்றி இருப்பதற்கான ஒரு சூழ்நிலை உருவாகியது. கல்விச் செயற்பாடுகளும் பாடசாலைகளில் தீவிரமடைந்தன. கல்வி கற்கும் மாணவர் தொகையும் படிப்படியாக கூடிவரலாயின.

இக்காலத்தில் வெளியூர்களுக்குச் சென்று உயர்கல்வி பெற்ற பலர் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும் வெளியாயினர். இதனால் ஆங்கிலக் கல்வி கற்ற ஒரு மத்திய வகுப்பாரின் தோற்றமும் இங்கு உருவாகி வளர்ச்சியடைந்ததையும் அரசியல் விழிப்பு ஏற்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

1960ம் ஆண்டிற்குப் பின்னர் கல்வி அபிவிருத்தி:-

சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்தி வரலாற்றில் 1960ம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தை "பொற்காலம்" என வர்ணிக்கலாம் . முன்னர் அரச உத்தியோகம் ஒரு 100பேரையும் தாண்டியிருக்காது. ஆனால் 1960ம் ஆண்டின் பின்னர் ஊரில் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகள் , கல்வி நிறுவனங்களின் அபார வளர்ச்சியின் காரணமாக ஆயிரக்கணக்கான படித்தவர்கள் நிறைந்த சமூகமாக சம்மாந்துறை திகழ்கின்றது என்றால் அது மிகையான கருத்தல்ல.

1960ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரை சுமார் 34வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்த அல்-ஹாஜ். ஏம்.ஏ.அப்துல் மஜீட் B.A அவர்களின் முயற்சியினால் சம்மாந்துறையின் மூலைமுடுக்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பல பாடசாலைகள் உருவாகின .

சம்மாந்துறைக் கல்விக் கோட்டத்தில் இன்று 36பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 05 பாடசாலைகள் 1950ம் ஆண்டிற்கு முன்னர் திறக்கப்பட்டன. 06பாடசாலைகள் 1994ம் ஆண்டிற்குப் பின்னர் திறக்கப்பட்டன. ஜனாப்.எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களின் காலத்தில் சுமார் 25பாடசாலைகள் திறக்கப்பட்டதுமல்லாமல் ஏற்கனவே இருந்த பாடசாலைகளை தரமுயர்த்தவும், தேவைகளை நிறைவேற்றவும் உதவிகள் கிடைக்கலாயின. இக்கால இடைவெளியில் 1972ஆம் ஆண்டு ஈழமேகம் ஜனாப் MIL.பக்கீர்த்தம்பி அவர்களைத் தலைவராயும், ஜனாப் SLA.றசீது அவர்களைச் செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சம்மாந்துறை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் முயற்சியினால் அமைச்சரைக்கொண்டு

1. கல்லரிச்சல் முஸ்லிம் வித்தியாலயம் (கஸ்ஸாலி வித்தியாலயம்)
2. செந்நெல்புரம் அல் ஹம்றா வித்தியாலயம்
3. கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் வித்தியாலயம் (அறபா வித்தியாலயம்)
4. உடையார்குளம் முஸ்லிம் வித்தியாலயம் (அஸ் ஸமா வித்தியாலயம்)
5. அலவாக்கரை முஸ்லிம் வித்தியாலயம் (அல் அமீர் முஸ்லிம் வித்தியாலயம்)

6. ஏத்தாலக்குளம் முஸ்லிம் வித்தியாலயம் (அப்துல் லத்தீப் முஸ்லிம் வித்.)

எனப் பல பாடசாலைகள் திறக்கப்பட்டன. மேலும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து

- கைகாட்டியடி முஸ்லிம் வித்தியாலயம் (அல்-கஸ்ஸாலி வித்தியாலம்)
- கொட்டக்கட்டையடி முஸ்லிம் வித்தியாலயம்(ஹிஜ்றா முஸ்லிம் வித்தியாலயம்)
- ஸபூர் வித்தியாலயம்
- ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம் என்பன தீவிரமாகத் திறக்கப்பட்டன.

இப் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் நிறைய வரலாறுகள் உள்ளன. அவை அனைத்தையும் இங்கு குறிப்பிடல் சிரமமானது என்ற காரணத்தால் பொதுவான விடயங்கள் சில இங்கு முன்வைக்கப்படுகின்றன.

சம்மாந்துறையின் கல்வி நிருவாகம் நீண்ட காலமாக மட்டக்களப்புக் கல்விக் காரியாலயத்தின் மேற்பார்வையிலேயே நடைபெற்று வந்துள்ளது. இதனால் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் மந்தகதியிலேயே நடைபெறலாயிற்று பின்னர் கல்வி நிருவாகப் பணிமனைகள் கல்முனை, அக்கரைப்பற்று போன்ற இடங்களில் இயங்கலாயின.

முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் , பிரதி அமைச்சருமான ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களின் முயற்சியினால் 1990.08.20ம் திகதி சம்மாந்துறைக்கெனத் தனியான ஒரு கல்விக் கோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் , பிரதி அமைச்சருமான ஜனாப் யூ.எல்.எம்.முகையதீன் அவர்களின் முயற்சியினால் பெரும் போராட்டத்திற்கு மத்தியில் சம்மாந்துறைக்கெனத் தனியான ஒரு கல்வி வலயம் 1998.10.01ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இச்செயற்பாடுகள் அனைத்தும் சம்மாந்துறையின் கல்வி அபிவிருத்திக்குப் பெரும் துணையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக அனுமதியில் சம்மாந்துறைப் பாடசாலைகளின் பங்களிப்பு :-

பல்கலைக்கழக அனுமதியில் இப பிரதேசத்தில் மட்டுமல்ல அகில இலங்கை மட்டத்திலும் முஸ்லிம் பாடசாலைகள் மத்தியில் சம்மாந்துறைப் பாடசாலைகள் முன்னணி வகித்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மாகாணத்தில் முதல் முஸ்லிம் பட்டதாரியைப் பெற்ற பெருமை சம்மாந்துறைக்கேயுரியதாகும். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜீது அவர்கள் 1949ஆம் ஆண்டு முதலாவது முஸ்லிம் பட்டதாரியாக எமதூருக்குப் பெருமையைத் தேடிக்கொடுத்தார். இதனால் தொடர்ந்து பட்டதாரிகள் பலர் இங்கு உருவாகத தொடங்கினர்.

சம்மாந்துறையிலுள்ள பாடசாலைகளும் இவ்விடயத்தில் தமது பங்களிப்பைச் செய்துவரலாயின. கல்முனைக் கல்வி மாவட்டத்தில் பல்கலைக்கழக அனுமதியில் இரண்டாம் இடத்தைச் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை) பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. சம்மாந்துறைத் தேசிய பாடசாலை 1973ம் ஆண்டு முதன்முதலாக இரு மாணவிகளைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைத்தது. முதலாவது ஆதம்பாவா அசானியும்மா என்பவர் கலைத்துறைக்கும், ஜென்னத் மேர்ஸா என்பவர் விஞ்ஞானத்துறைக்கும் தெரிவாகினர். இவர்களைத் தொடர்ந்து இப்பாடசாலை வருடா வருடம் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய சகல துறைகளுக்கும் மாணவர் பலரைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி பெரும்பணியாற்றி வருகின்றது. 1973 ஆண்டு

தொடக்கம் 2008ம் ஆண்டுவரை ஏறக்குறைய 850 மாணவருக்கும் அதிகமானோர் இப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குச் சென்று உயர்கல்வி கற்று வெளியாகியுள்ளனர்.

சம்மாந்துறை அல்மர்ஜான் மகளிர் கல்லூரி 1989ம் ஆண்டு முதல் 2008 வரை 90 மாணவிகளையும் , சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலயம் 2001ம் ஆண்டு முதல் இன்று வரை 20 மாணவர்களையும் , சம்மாந்துறை அல் - அர்ஷத் மகா வித்தியாலயம் 2001ம் ஆண்டு முதல் இன்று வரை 15 மாணவர்களையும் , வீரமுனை ஆர்.கே.எம்.மகா வித்தியாலயம் 2001ம் ஆண்டு முதல் இன்று வரை 08 மாணவர்களையும் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளன.

இதன் காரணமாக இன்று சம்மாந்துறையில் வைத்தியர்கள் , பொறியியலாளர்கள் , சட்டத்தரணிகள் , கணக்காளர்கள் , நிருவாக உத்தியோகத்தர்கள் என்று பல்வேறு துறை சார்ந்தவர்கள் நிறைந்து காணப்படுவது சிறப்பம்சமாகும். அத்துடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் , பதிவாளர்கள் , கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் ,கல்விமாணி , முதுமாணிப்பட்டம் பெற்றவர்கள் என்று பலர் இவ்வூரைக் கலக்கியிருக்கின்றனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் , அமைச்சருமான ஜனாப் அன்வர் இஸ்மாயில் அவர்கள் சம்மாந்துறை மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்று சட்டத்தரிணியாக வெளிவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வூரைச் சேர்ந்த பலர் தேசிய பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவராகவும், தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம் என்பவற்றிலிருந்தும் பட்டதாரிகளாக வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி வரலாறு :-

இதுவரை சம்மாந்துறையின் பாடசாலைக்கல்வி அபிவிருத்தி வரலாற்றை ஓரளவு அறிந்தோம். இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானதும் , நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமானதுமான தொழில்நுட்பக்கல்வி இவ்வூரில் வளர்ச்சியடைந்த வரலாற்றை நோக்குதல் பொருத்தமானதாகும்.

இலங்கை தொழில் நுட்பக்கல்வி வரலாறு நிறுவனமயப்படுத்தப்பட்டு ஏறக்குறைய 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. 1893ம் ஆண்டு கொழும்பு மருதானையில் 25 மாணவருடன் முதன் முதலாக இக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டவர்களும் , தொழில் சார் துறைகளில் நுட்ப ரீதியிலான அறிவினை பெறுபவர்களும் ஏனைய உயர் கல்வி வாய்ப்புகளை தேடுவோர்களுக்குமாக அமையும் நோக்கில் இக் கல்வி இந் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தகைய உயர் நோக்குடன் தமிழ் மொழி மூலம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழில் நுட்பக் கல்லூரி 1959ம் ஆண்டு யாழ்ப்பாணம் கொக்குவில்லில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் தமிழ் மொழி மூலமான இரண்டாவது தொழில் நுட்பக் கல்லூரி எம் தாயகம் சம்மாந்துறையில் அமையப்பெற்றது நாம் பெற்ற பாக்கியமாகும்.

1974 ஏப்ரல் 25ம் நாள் அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்த அல்-ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களால் அப்போதைய சம்மாந்துறைத் தொகுதி சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக இருந்த மர்ஹூம் யூ.எல்.எம்.முகையதீன் அவர்களின் அனுசரணையுடனும்,

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாப் அல்-ஹாஜ்.எம்.ஏ.அப்துல் மஜீது அவர்களின் உதவியுடனும் இக் கல்லூரி திறந்துவைக்கப்பட்டது.

1974ம் ஆண்டு சம்மாந்துறை விவசாயப் போதனா பாடசாலையாக இருந்த கட்டிடத் தொகுதியிலேயே முதன் முதலாக இக்கல்லூரி திறக்கப்பட்டது . அன்று இரண்டு பயிற்சி நெறிகளுடன் ஆரம்பமான இக் கல்லூரி இன்று 16 பயிற்சி நெறிகளுடன் வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்லப்படுகின்றது.

இக் கல்லூரி 1989 நவம்பர் மாதம் 1ம் தரத் தொழில் நுட்பக் கல்லூரியாகத் தரமுயற்தப்பட்டது. தற்போது இக் கல்லூரி தொழில், தொழிற் பயிற்சி அமைச்சினால் நிருவகிக்கப்படுகின்றது.

தொழில் கற்கைகள் , சான்றிதழ்கள், டிப்ளோமா நெறிகள் என மூன்றாக இங்கு பயிற்சிகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. தொழில் துறைகளில் சம்பந்தப்பட்டோருக்கும், தொழிலற்றவர்களுக்கும் வசதியாக முழுநேரப்பாடநெறிகளும், பகுதி நேரப்பாட நெறிகளும் இங்கு நடாத்தப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியிலிருந்து வருடாந்தம் சராசரியாக 500 மாணவர்கள் பயிற்சியை முடித்து வெளியேறி வருகின்றார்கள். இன்றுவரை ஏறக்குறைய 11000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி முடித்துள்ளனர். இங்கு பயிற்சியை முடித்து வெளியேறிய பலர் அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல சம்பளத்துடன் வேலைவாய்ப்புப் பெற்றுச் சிறந்த வாழ்கை வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும் இங்கு பயிற்சி பெற்று வரும் மாணவருக்கு அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு உதவிகளையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இங்கு பயிற்சி பெறும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவருக்குத் தொழிற் பயிற்சி அமைச்சு சகாயப் பணமும் வழங்கி வருகின்றது.

இக் கல்லூரியில் அமைச்சினால் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள் தவிர வேறு ஸ்தாபனங்களினாலும் சில பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

நிறுமானப்பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவகம்:- (இக்டாட்)

இக்டாட் நிறுவகம் சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் பல குறுங்கால ஆரம்பப் பயிற்சி நெறிகளையும் , விசேட குறுங்காலப் பயிற்சி நெறிகளையும் நடாத்துகின்றது. புள்ளி விபர அறிக்கைகளின் படி இக் கல்லூரியிலேயே இந் நிறுவகத்தின் அதிகளவு பயிற்சி நெறிகள் நடாத்தப்படுவதாக கூறப்படுவது நமக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும்.

கனேடிய உலகப் பல்கலைக்கழகம்:-(WUSC)

"வூஸ்க்" என அழைக்கப்படும் இது கனரக வாகனச் சாரதி , குழாய் நீர் பொருத்துதல், மின் இணைப்பு பயிற்சி நெறிகளை இங்கு நடாத்தி வருகின்றது. அத்தோடு இங்கு பயிற்சி பெறுபவர்களுக்குச் சகாயப் பணக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மேலும் இங்கு பயிற்சி பெற்றவர்களுக்கு வெளிக்களப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும் .

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமும் , போதனை நிலையமும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் போதனா நிலையமாகவும் இக் கல்லூரி செயற்பட்டுவருகின்றது. இங்கு தற்போது தொழில்கள், ஆங்கிலக் கற்கைநெறிகளாக நடாத்தப்பட்டு வருகின்றது. இப் பயிற்சி நெறியில் பிரதேச மூவின மக்களும் கல்வி

கற்பது சிறப்பம்சமாகும். இன்னும் பல பயிற்சி நெறிகள் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 35வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் சம்மாந்துறைத் தொழில் நுட்பக் கல்லூரியின் முதலாவது அதிபர் ஜனாப் எம்.எஸ்.மரைக்கார் தம்பி அவர்களாவார். இக் கல்லூரியின் பதிவாளராக சம்மாந்துறையின் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் ஜனாப் பீ.மீராலெப்பை அவர்கள் இன்றுவரை தொடர்ந்து பணியாற்றிவருகின்றார். இன்று ஜனாப் எம்.ஏ.கே.ஹமீட் அவர்கள் இக் கல்லூரியின் அதிபராக வீற்றிருக்கின்றார். இவரும் சம்மாந்துறை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகம்:- (SLIATE)

1996ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகத்தின் 13பிரிவுகளில் ஒன்றாகச் சம்மாந்துறை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகம் விளங்குகின்றது. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்பட்டு வந்த உயர் தேசிய டிப்ளோமா பாட நெறிகள் 1996ம் ஆண்டிலிருந்து உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு (SLIATE) மாற்றப்பட்டது.

இதனடிப்படையில் சம்மாந்துறையில் நிறுவப்பட்ட சிலியேட்டில்" உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (HNDE) ஆகிய பாட நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இங்கு நடாத்தப்படும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பாட நெறியானது பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் வர்த்தக பாட்டத்திற்குச் சமமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது இந் நிறுவனத்தில் 350 மாணவர் கல்வி கற்கின்றனர். நூற்றுக்கணக்கானோர் இங்கு கல்வி கற்று வெளியேறியும் உள்ளனர். இக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இப் பிரதேசத்தில் குறிப்பாகச் சம்மாந்துறை மாணவர் பலர் நன்மை பெற்றுள்ளார்கள் என்பதும் இங்கு கல்வி கற்ற பலர் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். என்பதும் முக்கிய விடயமாகும்.

இந் நிறுவனத்தின் இணைப்பாளராக ஜனாப் ஏ.பாறூன் என்பவர் கடமைபுரிந்து வருகின்றார்.

தொழிற் பயிற்சி நிலையம் :-

சம்மாந்துறையில் அதி நவீன தொழில் நுட்ப தொழிற்பயிற்சி நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இது சம்மாந்துறைக் கல்வி அபிவிருத்தி வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அமெரிக்க அபிவிருத்தி உதவி நிதியத்தின் உதவியுடன் (USAID) சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் நலன் கருதி 350மில்லியன் ரூபா செலவில் இந் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. விசேடமாக தைத்த ஆடை ஏற்றுமதி சம்பந்தமான பயிற்சி நெறி இங்கு கற்பிக்கப்படுகிறது. இப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்கள், இதற்குப் பொருத்தமான காணியைப் பெற்றுக்கொடுத்தார் . இலங்கையில் அமைக்கப்பட்ட மேற்படி நவீன இரு பயிற்சி நிலையங்களில் ஒன்று சம்மாந்துறையில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இப் பயிற்சி நிலையம் இங்கு அமைக்கப்படுவதற்கு தொழில் பயிற்சி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜனாப் எம்.ரீ.எம்.சஹீட் அவர்கள் கூடிய பங்களிப்புச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட பொரும்பாலான பெண் பிள்ளைகள் இங்கு தற்போது பயிற்சி பெற்று வருகின்றார்கள். இப் பயிற்சி நிலையத்தில் ஏற்றுமதி ஆடை உற்பத்திப் பயிற்சி நெறி நவீன தகவல் தொழில் நுட்ப பயிற்சி நெறி ,

இயந்திரவியல் தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சி நெறி, யுவதிகளின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதறகான திறன் வலுவூட்டல் பயிற்சி நெறிகள் என்பன அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியும் தென் கிழக்குப் பல்கலைக்கழக பௌதீக பீடமும்.

சம்மாந்துறையில் நெல் சந்ததைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான கட்டிடத் தொகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இணைப்புப் பல்கலைகழகக் கல்லூரி 1993.06.07ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜீது அவர்களின் பெரு முயற்சியனால் இக் கல்லூரி சம்மாந்துறையில் நிறுவப்பட்டமை கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இக்கல்லூரியை இங்கிருந்து மாற்றுவதற்கும் வெளிச் சக்திகள் சில முயற்சியெடுத்தபோது சம்மாந்துறையூர் புத்திஜீவிகள் தமது எதிர்ப்பைக்காட்டியதன் பேரில் அம் முயற்சி கைவிடப்பட்டது.

முன்னாள் அமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அல்-ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் MP அவர்களின் தீவிர முயற்சியின் காரணமாக தென் கிழக்குப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது அதன் தௌதீக விஞ்ஞான பீடத்தை சம்மாந்துறையில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இயங்கிய இடத்தில் இயங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இச் செயற்பாட்டிற்குச் சம்மாந்துறை மக்களும் தமது பூரண ஆதரவினைத் தெரிவித்தனர்.

இன்று இப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான விஞ்ஞானப் பட்டதாரி மாணவர்கள் இங்கு தமது பட்டக் கல்வியை மேற்கொண்டு வருகின்றார்கள். பல்கலைக்கழக விஞ்ஞான பட்டக் கல்வியைத் தமது காலடியில் படிக்கக் கிடைத்தமை எமது மாணவர் பெற்ற பாக்கியமாகும். வசதி குறைந்த ஏழை மாணவருக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம்.

மார்க்கக் கல்வியின் வளர்ச்சி:-

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இற்றைவரை சம்மாந்துறையிலேற்பட்ட கல்வி அபிவிருத்தி வரலாற்றின் முக்கிய விடயங்களை இதுவரை பார்த்தோம். இதற்கும் அப்பால் இஸ்லாம் மார்க்கக் கல்வியும், அரபுத்தமிழ் என்ற ஒரு புதுமொழி வழக்கும் இங்கு புளக்கத்திற்கு வரலாயிற்று.

இலங்கையில் இஸ்லாம் பரவத் தொடங்கிய காலத்தில் இருந்தே சம்மாந்துறையிலும் இஸ்லாம் பரவத்தொடங்கியுள்ளது. அரேபிய, தென்னிந்திய வர்த்தகர்கள் இதற்குத் துணையாக இருந்துள்ளனர். அக்காலத்திலிருந்து தென்னிந்திய ஒஸ்தாதுகள், ஆலிம்கள், லெப்பைகள், மூலம் குர்ஆன் பாடசாலைகளும், மார்க்க பாடசாலைகளும் நடைபெற்று வந்துள்ளன. மேலும் சூபியாக்கள், மௌலானாக்கள், சுதேச வைத்தியர்கள் மூலம் கல்விச் செயற்பாடுகள் நடைபெறலாயின.

இங்குள்ள மக்களை இஸ்லாத்தின்பால் இணைத்துக்கொள்வதற்கும், அவர்களுக்கு ஈமான் இஸ்லாத்தைக் கற்பிப்பதற்கும், பொருமானார் வாழ்க்கை, சஹாபாக்கள் வாழ்க்கை மற்றும் மார்க்க விடயங்களைக் கற்பிப்பதற்கும் அரும்பாடுபடலாயினர். குர்ஆன் ஓதுதல் பிரதான இடத்தை வகித்தது. குர்ஆன் ஓதிப்படிப்பதற்கு "ஓதும் பலகைகைள்" பயன்படலாயின.

தமிழ் மொழி தெரிந்திருந்த இம்மக்களுக்கு தமிழ் எழுதப் படிக்கத்தெரியாமலிருந்தது. இதனால் இவர்கள் மத்தியில் "அரபுத் தமிழ்" என்ற ஒரு புதுமொழி வழக்கத்திற்கு

வந்தது. தென்னிந்திய ஆலிம்களே இம் மொழியை அறிமுகப்படுத்தலாயினர். இதனால் மார்க்கக் கல்வி கற்பதற்கு அரபு மொழி எழுத்துக்களைத் தமிழ் ஒலிக்கு ஏற்ற விதமாக எழுதி வாசிக்கும் பழக்கம் இங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்படலாயிற்று.

குர்ஆன் ஓதத்தெரிந்த அனைவரும் இந்த "அரபுத்தமிழ்" மொழியை நன்கு எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருந்த பாடியால் தமது அன்றாட நடவடிக்கைகளையும் இதன் மூலம் செய்து வரலாயினர்.

அரபுத் தமிழ் ஆரம்ப ஏடுகள் பெரும்பாலும் மார்க்கம் சம்பந்தப்பட்டதாகவும் , யூனானி வைத்தியம் சம்பந்தப்பட்டதாகவும் இருந்தன. இன்று கூட எமது யூனானி வைத்தியர்களிடம் அரபுத் தமிழில் எழுதப்பட்ட ஏடுகள் இருப்பதைக் காணலாம்,

தென்னிந்திய ஆலிம்கள், ஒஸ்தாதுகள், லெப்பைகளின் மூலம் மார்க்கக் கல்வி கற்ற பலர் உருவாயினர். இவர்களின் உதவியால் பலர் இந்தியா சென்று ஓதிப் படித்து உலமாக்களாக வெளிவந்தனர். இவர்கள் மூலமும் இவ்வூரில் மார்க்கக் கல்வி பரவலாயிற்று. 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் கூட இவ்வாறான நிலைமை தொடர்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

இத்தகைய கல்விச் செயற்பாடுகள் பெரும்பாலும் வீடுகளில், திண்ணைப் பள்ளிக் கூடங்களில் நடைபெறலாயின . இதனை இம் மக்கள் "ஓதப்பள்ளி" என்ற பெயர் கொண்டு அழைக்கலாயினர்.

20ம் நூற்றாண்டு ஆரம்பகாலத்தில் இந்தியா சென்று மார்க்கக் கல்வி கற்று வந்த இவ் வூரைச் சேர்ந்த ஆலிம்கள் பலர் இவ்வூரின் மார்க்கக் கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளனர். சுலைமாலெப்பை ஆலிம் , சின்ன ஆலிம் என அழைக்கப்பட்ட அப்துல் காதர் ஆலிம், புத்தளத்து ஆலிம் , கப்பல் ஆலிம், அப்துல் ஹமீட் ஆலிம் ஆகியோர் ஆரம்ப கால ஆலிம்களில் சிலராகும்.

இதுவரை சம்மாந்துறைத் தாயகத்தின் கல்வி அபிவிருத்தி வரலாற்றையும் , அதன் முக்கியத்துவத்தையும் பார்த்தோம். கல்வியில் மிகவும் பின்தங்கியிருந்த இச் சமூகம் மிகவும் குறுகிய 50வருட காலத்திற்குள் ஈட்டிய சாதனை மிகப் பெரியது. இன்று இவ்வூரில் சகல துறைகளையும் சேர்ந்த 3000ற்கும் மேற்பட்டோர் கல்வியின் மூலம் உயர்வுபெற்று அரச, அரச சார்பற்ற கூட்டுத்தாபனங்களில் பணிபுரிவதைக் கணிப்பீடொன்று எடுத்துக்காட்டுகின்றது.

இத்தனைக்கும் அன்று முதல் இன்று வரை கல்விச் சிந்தனையுடன் செயற்பட்ட அத்தனை புத்திஜீவிகளுக்கும் இச் சமூகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. பாடசாலைகள் , கல்வி நிலையங்கள், அதன் அதிபர்கள் ஆசிரியர்கள் உத்தியோகத்தரகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

எனினும் ஏற்கனவே கூறியதுபோல் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுமிடத்து இன்னும் நாம் பல தசாப்தங்கள் பின்தங்கியே இருக்கின்றோம் என்பதையும் கூறாமல் இருக்கமுடியாது. அரச உயர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப முடியாதவர்களாகவே இன்னும் இருந்துகொண்டிருக்கின்றோம்.

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்கேற்ப கணனிக் கல்வியையும் , ஆங்கிலக் கல்வியையம் எமது எதிர்கால இளம் சமுதாயம் தட்டிக் கழித்துவிட முடியாது. அதில் கூடிய கவனம் செலுத்தவேண்டியது அவர்களின் பொறுப்பாகும் .

இறுதியாகச் சம்மாந்துறைத் தாயானவள் கல்விச் செல்வத்தின் மூலம் உயர்வுபெற்ற உத்தம புத்திரர்கள் பலரை பெற்றுள்ளாள். அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் இங்கு குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆனால் வேறு பல தகவல்கள் மூலம் இந்த ஆவணத்தில் வரும் என்பதால் தவிர்க்கப்பட்டுள்ளது.

தகவல் சார்ந்த பொக்கிசங்கள் :-

01. அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்
முஸ்லீம் சமய கலாச்சார திணைக்கள வெளியீடு-1997
02. கௌரவ எம்.ஏ.அப்துல் மஜீது எம்.பி. அவர்களின் பாராட்டுவிழா
சிறப்பு மலர் - 1992
03. மீலாந் மலர் - 2005
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விளையாட்டு அமைச்சு – வ/கி மாகாணம்
04. "விருட்சம்" கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை
125ஆவது ஆண்டுவிழா மலர்
05. மர்ஹும் யூ.எல்.எம் . முகையதீன் எம்.பி.அவர்களின் நினைவுமலர்
06. "இரு நூற்றாண்டுகளில் இலங்கையிற் கல்வி"
யூ.எல்.அலியார் , MA(ED)
07. தொழிற்கூடத் தொகுதி திறப்புவிழா மலர் - 1995
தொழில் நுட்பக் கல்லூரி – சம்மாந்துறை
08. அல்-ஹாஜ்.எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் (அமைச்சர்) அவர்களுக்கான பாராட்டுவிழா சிறப்பு மலர் 2007
09. "அத் தப்லீக்" தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி
25ஆவது ஆண்டு நிறைவுமலர் - 1999
10. "அறுவடை" வெள்ளி விழா மலர் - 1975
சம்மாந்துறை மகா வித்தியாலயம்
11. "வெண்முத்து" வெள்ளிவிழா மலர் - 1975
சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லீம் மகளிர் கல்லூரி

எஸ்எல்.ஏ. சலாம்,
ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி.

வரவேற்புக்குழு

1. ஜனாப் ALM.இஸ்மாயில் - தலைவர்
2. ஜனாப் MIM.தௌபீக் - செயலாளர்
3. ஜனாப் ALM.இஸ்மாயில்
4. ஜனாபா பரீதா இஸ்மாயில்
5. ஜனாபா மசூறா சுஹூறுதீன்
6. ஜனாப் S.கோணேசமூர்த்தி
7. திரு K.பிரகாஸ்
8. திரு A.பிரதீபன்
9. திரு T.ரவி
10. ஜனாப் MM.சல்மான்
11. ஜனாப் MAM மிஸ்பாஹூல் ஹூதா

அல்பா பாம் ஹவுஸ்



விளினையடி சந்தி,
சம்மாந்துறை
067 2260550

ALFA FARM HOUSE
VILINAYADY JUNCTION, SAMMANTHURAI

பாடறிந்து ஒழுகல்

வி.எஸ்.வேலாயுதன்
வீரமுனை

சங்ககாலப் புலவர்கள் தமிழ்ப் பெருங் குடி மக்களின் வாழ்வியலை அகம் புறம் என இரு பெரும் பிரிவுகளாக வகுத்தமைத்துள்ளனர். இவ்வுண்மையைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். அகம், வீடு, இல்லம் என்றெல்லாம் பொருள்படும், வீட்டிற்குப் புறத்தே நடைபெறும் சமுதாய வாழ்வுதான் புறம் என்பதாம். தலைவன், தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்லும் புறவுலக வாழ்வே புறம் எனக் கூறினும் பொருந்தும். அகவாழ்வு என்னுமிடத்து, இல்லின் கண்ணே இல்லக்கிளத்தியோடு கூடி வாழ்வாங்கு வாழ்தல் எனப் பொருள் கொள்ளலாம். தெய்வப் புலவர் திருவள்ளுவர் "அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை" என்றியம்புகிறார். "இல்லற மல்லது நல்லற மன்று" என்ற ஆன்றோர் கூற்றும் அறத்தின் பெற்றியை - பெருமையை வலியுறுத்துவதாம். ஆதலால் அகம் இன்றேல் அறம் இல்லை என்பதும், அகத்தோடு அறம் பின்னிப் பிணைந்தது என்பதும் மறுக்கொணா உண்மையாம்.

ஒத்த அன்பினால் பிணைந்த ஆண் பெண் இருவரும் இயைந்து நடாத்தும் வாழ்க்கை முறைதான் இல்லறம் என்பதாம். இந்தத் தூய வாழ்வில்தான் நல்லற மாகிய விருந்தோம்பல் பிறர்க்குதவுதல், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் ஆகிய உயரிய பண்புகளை எல்லாம் காணலாம். திருக்குறள் இல்லறவியலில்

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது",

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்..",

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"

என்றெல்லாம் கூறப்படுவதிலிரிந்து அறத்தின் பாற்பட்டதே இல்வாழ்க்கை என்பது தெற்றெனப் புலனாகும். இதை இன்னும் விளக்கமாகக் கூறுமிடத்து இல்வாழ்க்கையானது வீணில் உண்டுகளித்து இன்புறுவதென்றில்லாது அறவழிச்சென்று பகுத்துண்டு பல்லுயிரோம்பி வாழும் பண்புடையதாம் என்பது பெறப்படும்.

இனி இங்கு நாம் எடுத்துக் கொண்ட பண்பு என்னும் அருங்குணம் உணர்த்தும் பொருள் தான் என்ன? அது எதைச் சுட்டி நிற்கின்றது? என்பன பற்றி நோக்குவாம். நம்மில் பலரும் பண்பு என்னும் இச்சொல்லை அடிக்கடி பேச்சு வழக்கில் பிரயோகிப்பதைக் காணலாம். ஒருவரின் நற்குண நல்லியல்புகளை மிகைப்படுத்திக் கூறுமிடத்து "நல்ல பண்பு உள்ளவர்" அதற்கு எதிரிடையாகப் "பண்பு இல்லாதவன்" "பண்பாடு தெரியாதவன்" என்றெல்லாம் இகழ்ந்தும் கூறுவர். உண்மையில் பண்பு என்னும் இப்பதம் ஒருவரின் இயல்பான குணத்தையே உணர்த்தும் எனத் துணியலாம். பிற உயிர்கள் மீது அன்பு உடையனாதலும் உலகத்தோடு அமைந்த ஒத்த குடியின் கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டுமே பண்பு உடைமையாம் என்கிறார் திருவள்ளுவர்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்பு உடைமை என்னும் வழக்கு"

என்பது திருக்குறள்.

திருக்குறள் அதிகார வைப்பு முறையில் பெருமை, சான்றாண்மை என்னும் இரு அதிகாரங்களையும் தொடர்ந்தே பண்பு உடைமை என்னும் அதிகாரம் வைக்கப் பட்டுள்ளது. பெருமை, பெரியாரது

தன்மை, சான்றாண்மை – பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆழ்தல் தன்மை ஆகியவற்றில் வழுவாது நின்ற ஒருவனே பண்புடையவனாகிறான். அவனே எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுபவன் ஆவன். இதற்கு ஆதாரமாகப் "பண் பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்ற கலித் தொகை நெய்தற் கலி வரியை நினைவு கூருகின்றார் உரையாசிரியர் பரிமேலழகர்.

இங்கே நமது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 'பாடறிந்து ஒழுகல்' என்னும் இத் தொடர்க்கு அறிஞர் பலரும் பல்வேறு பட்ட கருத்துக்களைக் கூறுவர். "உலகியல் அறிந்து நடந்து கொள்ளுதல்". "ஒருவர் துன்பத்தில் பங்கு கொள்ளுதல்" என்றெல்லாம் பொருள் காண்பர். ஆனால் பேரறிஞர் கி.வா.ஜகந்நாதன் அவர்களோ இந்த இருவேறு கருத்துக்களுக்கும் விளக்கமளிப்பது வியாக்கியானம் செய்வது நுணுகி நோக்கற்பாலதாம். "ஓர் உயிர் எத்தகைய பற்றுக் கோடுமின்றித் துன்புறுங்காலை அப்பொழுதே அக்கணமே தம்மால் இயன்றதைச் செய்து அதற்கு உதவுதல் என்பதாம். துன்புறும் ஓர் உயிரின் துயர் துடைக்க விரைந்து செயற்படுதல் உலகியலன்றோ?

'உற்றுழி உதவியும்'...,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண்களைவது நட்பு"

என்ற ஆன்றோர் கூற்றுக்களும் ஈண்டு நோக்கற் பாலதாம். இங்ஙனம் தமிழ் இலக்கியங்களிலும் புராண இதிகாசங்களிலும் காணும் பாடறிந்து ஒழுகல் பற்றிய வரலாறுகளை நோக்குவாம்.

மாவண் பாரி:-

வள்ளல் பாரி குறுநில மன்னர்களில் ஒருவன். அவன் பாண்டி நாட்டிலுள்ள பறம்பு மலைப் பிரதேசத்தையும் அதனை அடுத்துள்ள முந்நூறு, ஊர்களையும் ஆண்டு வந்தான். கொடையும் தயையும் பாரியின் பிறவிக் குணங்களாம். மன்னுயிரையும் தன் இன்னுயிரென மதித்தவன். 'இல்லை' என்றிரப் போர்க்கு இல்லை என்றுரையாத ஈகையாளனாகத் திகழ்ந்தான். தனது ஆட்சி அதிகாரத்திலிருந்த முந்நூறு ஊர்களையும் துச்சமாகக் கருதி அவற்றைப் பரிசிலர்க்கும் ஏதிலார்க்கும் பகிர்ந்தளித்தான் என்றால் மாவண் பாரியின் கொடைத்திறனைப் பற்றிக் கூற வார்த்தைகளே இல்லை எனலாம்.

இனிய கார்காலத்தில் ஒருநாள்! மாலைப் பொழுதில்! பாரி மன்னன் பறம்பு நாட்டின் இயற்கை வனப்பையும் அதன் எழில் மிகு தோற்றத்தையும் கண்டு களித்திடுவான் வேண்டித் தனது அழகிய கறங்கு மணி நெடுந்தேரில் பவனி வரலானான். இயற்கை அன்னையின் இணையற்ற கோலங்கள் அவனை வெகுவாகக் கவரலாயின. அதனால் அழகிய காட்சிகனைக் கண்டின்புற்றிட வேண்டுமென்னும் வேட்கை மிக்கூர வழிமேற் கொண்டான்.

மனோகரமான அந்த வழியின் மருங்கில் மெல்லிய முல்லைக் கொடி, ஒன்று பற்றிப் படர்வதற்குக் கொழு கொம் பின்றித் தத்தளித்து நின்றதைக் கண்டான். அந்தச் சிறு முல்லைக் கொடியின் அநாதரவான நிலையைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து உருகினான். குழைந்து குறுகி வாடிக்கிடந்த அந்த முல்லைக் கொடியின் பாடறிந்து ஒழுகுவான் வேண்டித் தேரினின்றும் கீழே இறங்கி அந்த அழகிய கறங்கு மணி நெடுந்தேரை அம்முல்லைக் கொடிக்கு அருகில் நிறுத்திவிட்டுக் கால் நடையாகத் தன் அரண் மனையை அடைந்தான். வேள்பாரியின் இத்துணைச் சிறந்த வண்மைத் திறனைக் கபிலர் என்னும் தண்டமிழ்ப் புலவர் நயம்பட உரைக்கின்றார்.

"பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தமும் பிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள் கெனக் கொடுத்த
மரந்தோங்கு சிறப்பிற் பாரி....."

(புறம்: 107)

பாவலர்க்கும், பரிசிலர்க்கும் மட்டுமல்லாது, வாய்விட்டுச் சொல்ல வகையறியாப் படர்கொடிக்கும் பாடறிந்து ஒழுகிய பாரியின் பண்புடமையைத் தமிழ்கூறும் நல்லுலகம் வியந்து பாராட்டிற்று.

இளையான் குடி மாற நாயனார்:

தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாது புராண இதிகாசங்களிலும் பாடறிந்தொழுகிய வரலாறுகளைக் காணலாம். புராணங்கள் பழையதும் பூர்வீகமானதுமான உண்மைகளைக் கூறுவனவாம். ஆனால், அவற்றில் காணப்படும் கருத்துக்கள் பழைமைக்குப் பழையன வாகவும், புதுமைக்குப் புதியனவாகவும் அமைந்துள்ளன. திருத்தொண்ட பெரிய புராணம் தமிழ் மக்களின் வாழ்வியல் வரலாறுகளையும் பாரம்பரிய பண்பாடு கலாச்சார விழுமியங்களையும் எடுத்தியம்பும் அருந்தமிழ்க் களஞ்சியமாகும். இத்துணைச் சிறப்புமிக்க பெரிய புராணத்தில் வரும் அறுபத்து மூன்று நாயன்மார்களுன் ஒருவராகிய இளையான் குடி மாறநாயனார் பாடறிந்து ஒழுகிய வரலாற்றை இவண் நோக்குவாம்.

இவர் வேளாளர் மரபினர், 'வேளாளர் என்போர் விருந்திருக்க உண்ணார்' என்பதற் கேற்ப நாயனாரும் அவர்தம் மனைவியாரும் விருந்தோம்பும் பண்புடையவர்கள். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பர். நாடோறும் சிவனடியார் ஒருவர்க்காயினும் தவறாது திருவமுது அளித்திடுவர். இந்நிலையில் முழு முதற்கடவுளாம் சிவபெருமான் இளையான்குடிமாற நாயனாரின் பாடறிந் தொழுகும் பண்புடைமையை உலகறியச் செய்வான் வேண்டி சிவனடியார் வேடம் பூண்டு அவரது இல்லத்திற்கு எழுந்தருளினார்.

அது ஒரு மழைக்கால இரவு: நாயனாரும் மனைவியாரும் பகல் முழுவதும் உணவின்றிப் பசியோடு இருந்த வேளை, சிவனடியாரை நாயனார் இன்முகம் கொண்டு வாவேற்று ஆசனத்தில் அமரச் செய்தார். பசியோடு தம் இல்லத்திற்கு எழுந்தருளியுள்ள— அடியவர்க்கு எவ்வாறாயினும் திருவமுதளித்திட வேண்டு மெனத்துணிந்தார். வயலில் மழை நீரில் மிதந்து நின்ற முளைகளை எடுத்து வந்து மனைவியாரிடம் கொடுத்தார். அம்மையார் அடுப்பில் எரிப்பதற்கு விறகு இல்லையே என்று சொல்லவும் வீட்டுக் கூரையில் இருந்த வரிச்சுக்களை அறுத்துக் கொடுத்தார். அவர் அந்த நெல் முளைகளை வறுத்துக் குற்றி அரிசியாக்கினார். தோட்டத்தில் சிறு பயிர்களாள இருந்த கீரைகளைப் பிடுங்கி வந்து கொடுக்கவும் அவர் தமது சாமர்த்தியத்தினால் சிறிது நேரத்திலேயே சமையலை முடித்து விட்டார். இருவரும் அடியவரைத் திருவமுது செய்ய அழைத்திடவும், அவர்கள் முன்னிலையில் எம் பெருமான் சோதிவடிவமாகத்திகழ்ந்தார். இளையான் குடி மாறநாயனார் சிவனடியாரின் பசிப்பிணி தீர்க்கப் பாடறிந்து ஒழுகிய பண்புடைமை தமிழ் நெஞ்சங்களில் யாண்டும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இராமபிரான்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும் பாடறிந்து ஒழுகிய வரலாறுகளைக் காணலாம். இராம இராவண யுத்தம் ஆரம்பமான முதல் நாள் போரிலேயே இராவணன் தனது படை, படைக்கலங்கள் அனைத்தையும் இழந்து தன்னந் தனியாக நின்றான். இங்ஙனம் நிராயுத பாணியாக நின்ற பகைவன் மீது போர் மேற் செல்ல விரும்பாது கருணையும் கழிவிரக்கமுங் கொண்டு பாடறிந்து ஒழுகலானான் வள்ளல் இராகவன்.

"ஆளை யாஉனக் கமைந்தன மாருதமறைந்த
பூளை யாயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங்கமுகில்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

(இராமாயணம்)

"இன்று போய்ப் போர்க்கு நாளைவாவென நல்கிய" இராமபிரானின் உயரிய உதாரகுணந்தான் இங்கு நாம்காணும் பாடறிந்து ஒழுகல் என்னும் பண்புடமையாம். இவ்வுண்மை திருக்குறளில் ஊராண்மை என்று உயர்வு நவிற்சியோடு கூறப்பட்டுள்ளது. பகைவர்மேல் கண்ணோடாது கழிவிரக்கங் கொள்ளாது பொருதும் வீரமறத்தைப் பேராண்மை என்றும், அந்தப் பகைவனுக்கு ஒரு துன்பம் ஓர் இடுக்கண் ஏற்பட்ட காலை அவன் மேல் பச்சாத்தாயங் கொண்டு அத்துயர் துடைப்பான் வேண்டி ஊராண்மை செய்தல் - உபகாரியாய் நின்று உதவுதல் அந்த மறப்போரின் கூர்மை மிக்க தீரச் செயலாம்.

"பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்ற அதன் எ.ஃ.கு"

(திருக்குறள் 773)

அருச்சுனன்:

இங்ஙனம் மற்றொரு இதிகாசமாகிய வில்லி பாரதத்திலும் பாடறிந்து ஒழுகும் இவ்வுயரிய பண்பு உடைமை பேசப்படுகின்றது. வில்வித்தையில் ஒப்பாரும் மிக்காரு மின்றி விளங்கிய விசயனோடு பொருதிய கர்ணன், தனது துணை, படை, படைக்கலம் அனைத்தையும் இழந்து தன்னந் தனியனாய் நின்றான். கர்ணனின் பரிதாப நிலை கண்டு அரிச்சுனன் அவன் மீது கழிவிரக்கங் கொண்டு, அம்பெய்தலைத்தவிர்த்து அருள் பாலிக்கின்றான். பார்த்தனின் பாடறிந்து ஒழுகிய பண்பு உடைமையானது இராகவன், இராவணன் மீது காட்டிய காருண்யத்தை நிகர்ப்பதாகும் என்கிறார் வில்லிபுத்தூராழ்வார்.

"அன்று போர்புரி சேனையின்பதி
யான வீரனை நீ
இன்று போய் இனி நாளை வாஎன
இனி தியம்பின னால்
வென்றி கூர்வரி வின்மை யான் அடல்
வெவ் வரக்கரை முன்
கொன்ற காளையை ஒத்த பேரிசை
கொண்ட ஆண்மையினான்"

(வில்லிபாரதம்)

ஊசாத்துணை நூல்கள்:

1- இலக்கிய வரலாறு - பேராசிரியர் வி.செல்வநாயகம்
2- திருக்குறள்
3- அகமும் புறமும் - பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்
4- வள்ளல் பாரி - கு.ராஜவேலு
5- திருத்தொண்டர் பெரிய புராணம்

4 வீடயங்களைத்தவிர்த்து
நரக வீடுதலை பெறுவோம்.

1. பொய் பேசல்
2. மோசடி செய்தல்
3. பகைமை ஏற்படுத்தல்
4. உலோபத்தனமாக இருத்தல்



GRAND EASTEND Hotel & Bakery

உங்களுக்கு தேவையான இனிப்புப் பண்டங்கள், பேக்கரி
உணவுப்ப ண்டங்கள், சோட்டீஸ் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்







Ampara Road, Sammanthurai Tel:067 2261182

நேர்த்தியான டிசைன்களில் பளிச்சிடும் நகைகளை எண்ணம்
போல் தெரிவு செய்ய நம்பிக்கையுடன் நாடுங்கள்



NAEEMA GOLD HOUSE

நயிமா கோல்ட் ஹவுஸ்

வளனையடி சந்தி, பௌஸி மாவத்தை, சம்மாந்துறை
067 2260245, 060 2672527, 0773409242

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் அசல் தங்கத்தில் உத்தரவாத முத்திரை பொறித்துத் தரப்படும்



மருத நிலத்தின் முழுப்பொலிவு



பெரிய வெளி வட்டை

சொற் பட்டறை (தேடல்)

கருத்துப் பரிமாறிக்கொள்ளும் ஊடகம் மொழியாகும். உலகில் பல்வேறு மொழிகள் இருக்கின்றன. இவற்றில் இலக்கண வரம்பு கொண்டு , இலக்கிய அழகிய ஆக்கங்களை கொண்டு , பேச்சு, எழுத்து வழக்குகள் சிறப்பாகக் கொண்டு விளங்கும் சொற்ப மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழை உயர் வழக்கில் எழுத்துருவில் உபயோகிப்பது கற்றார் மரபாயினும் பேச்சு வழக்கு இடத்துக்கிடம் மாறுபட்டுக்காணப்படுகிறது. "ஓரூரின் பேச்சு இன்னோர் ஊருக்கு ஏச்சாக இருக்கும்" அளவுக்கு பிரதேசச் செல்வாக்கு பேச்சு மொழியில் காணப்படுகிறது. பிள்ளைகளைச் செல்லமாக "கிளி" யென்றும்"மைனா" என்றும் , "அழகு" என்றும் அழைக்கும் மூன்று ஊர்கள் ஒன்றுக்கொன்று மிகவும் நெருக்கமாக உள்ளவைகளாகும். இவ்வாறு பேச்சு மொழியில் பெரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

இந்த அடிப்படையில் சம்மாந்துறைக்கென்று விசேடமாகவும், பக்கத்து ஊர்களில் பட்டும் படாமலுமாகப் பேசப்பட்டு வந்த சில சொற்களை : சம்மாந்துறைச் சாகித்திய விழவின் பட்டறை மலரின் சொற் பட்டறையில் சேர்த்துக்கொள்வதில் பெருந்திருப்தி கொள்கின்றேன்.

சொல்லும்	பொருளும்
அக்காளிபக்காளி	பம்மாத்து
அக்குளிமுக்குளி	பெருமகிழ்ச்சி
அச்சட்டபிச்சட்ட	தொந்தரவு
அச்சாமறுக்கை	எச்சரிக்கை
அசிலதவு	பழக்கவழக்கம்
அசவு	பாய்வைக்கும் இடம்
அசலாட்டம்	தனகுதல், சுரண்டுதல்
அசுப்பு	இரகசியம்,அடையாளம்
அஞ்சாமருங்கை	பெற்ற சின்னக் கைப்பிள்ளை
அட்டாதுட்டி	விஷமத்தனம்
அட்டுக்குட்டணி	ஊத்தை
அட்டுவம்	அடுக்கு
அட்டாளை	ஏணிவைத்த உயர்ந்த பரண்
அடப்பன்	கொழுக்கட்டை, பெட்றிஸ் இவைகளுக்குள் வைக்கும் சுவைப் பொருள்
அடப்பன் காரன்	அவசியமான பேச்சைக்கூட பேசாதவன்
அடப்பன் சுருட்டு	கஞ்சாச் சுருட்டு அடப்பன் வீடி கஞ்சா வீடி
அடாத்து	தவறு
அடிப்பதனம்	அடிப்படை
அடுக்களை	முட்டி,பானைகள் வைக்குமிடம்
அடலபொடல	விஷமத்தனம்
அண்டினான்	அடித்தான்
அத்தநசல்	அடிக்கடி பற்றும் சின்ன நோய்கள்
அத்தக்கூலி	வேலைக்கு வேலையைக் கூலியாகச் கொள்ளல்
அத்தப்பிளைப்பு	நாட்கூலிக்கு என்னவேலையானாலும் செய்தல்
அத்தலைதல்	வழிகெட்டுத்திரிதல்
அத்துமலாய்	உண்கலமாகப் பாவித்த மண்பாத்திரம்
அதளை	சேற்றுமடு,துன்பம்

அதப்பியன் — ஒன்றுக்கும் விடாதவன்
ஆளுக்காப்புள்ள — வயற் செய்கைக்காரனோடு அரைக் கூலியில் வேலைசெய்யும் பிள்ளை

அந்தசந்தம் கெட்டவன் — நேர்த்தியான அமைப்பில் இல்லாதவன்
அந்துல சிந்துல — சிதறியதாக, வீணாக
அம்பாறலாக — ஐதாக
அமுக்கினான் — புதைத்து விட்டான், மறைத்து விட்டான், விழுங்கி விட்டான்.

அயின அங்கே
அரிமான் — கலவன் I. மரக்கறிக்குள் போடும் பிலால்
II. நாட்டுக்குளிசைகளைக் கரைக்கும் துணை மருந்துகள்

அரிப்பான் கயிறு — தூண்டிலைக் கட்டியுள்ள நூற்பகுதி
அரைக்கான் — பிரயாணத்தின் போது பணத்தைப் பாதுகாப்பாக இடுப்பில் கட்டிக்கொள்ளும் வலைப்பை

அரமணித்தல் — அமைதியாக்கல், அழும்பிள்ளையை அரவணித்தல்
அரகுவரகு — ஒழுக்கம்
அல்லசவட்டை — அக்கம் பக்கம்
அலசோலி — கரைச்சல்
அவத்தாயம் — அவதி, அவசரம்
அழிச்சாட்டியம் — குழப்பம்,அநியாயம்,அழிவு
அள்ளாகொள்ளை — அதிகம்
அறமசறம — முடிவாக,அறவே
அறும்பாக — ஒறுப்பாக, நட்டமாக
அன்னசிங்கப்படுத்தல் — அங்குமிங்குமாக்குதல்,பங்கப்படுத்தல்

ஆசறுதி — ஆகக்கடைசி
ஆவதேவை — அவசரத்தேவை (அவசர)

இடும்பு
இடுவம்பு } பிடிவாதம்
இணுங்கு — பிடுங்கு
இரக்கடஞ்சவன் — கேடுகெட்டவன்
இலந்தை — இடம்.எல்லவிளையாட்டில் இலந்தைகளுக்கிடையில் எறி வாங்கினால் கழிக்கப்படுவார் (ஒளட்டாகுவார்)

இலவிசம் — தட்டுமாறி செய்கை பண்ணும் பூமிகளில் சூக்கான பூமிகளுக்காக அடைக்கட்டடிக் கொடுத்த பூமி.

இம்முணியான் — சின்னப்பிள்ளை
இம்முணியான்போல — கொஞ்சம் போல
இறப்பு — கூரையிடுக்கு (இறப்பில் சொருகி இருக்கிறது கம்பு)
இடவன் — துணை (பழக்கமில்லாத அந்த மாட்டுடன் இடவனாக இந்தமாட்டை பிணைத்துக்கொண்டு போ)

ஈப்புவைத்த — புழுத்த (காயாத இறைச்சி ஈப்பு வைத்து விட்டது)
ஈன — இங்கே
ஈயாம்போல — கொஞ்சம்
ஈரகாசம் — இரக்கம்
ஈனசாதி — இரக்கமற்றவன்
ஈச்சுக்கொட்டுதல் — பழித்து வெறுத்தல்

உச்சாரம்	உச்சி
உத்தரித்தல்	அவதிப்படல், அனுபவித்தல்
உலவியம்	தூஷணம்
ஒலவியம்	தூஷணம்
உக்காறு	எச்சரிக்கை, சண்டித்தனம்
உட்டுப்போதல்	உடைதல், வெடித்தல் (பாத்திரம் அடியில் உட்டுப்போய் விட்டது)
உடுமானம்	உடுப்பு
உலக்கடை	உரல் வைத்து நெல் குற்றிய இடம்.
உலம்புதல்	வாயடித்தல்
உவகதை	பாட்டிக்கதை
உழலை	தடை(மாடு வராமல் உழலை போடு)
ஊம்பித்திரிதல்	(யாருக்கும்) பின்னால் திரிதல்
ஊசாட்டம்	நடமாட்டம்
எடுப்பு	பெருமை
எயின	எங்கே
எச்சாமம்	நடுஇரவு
எசம்புதல்	அசைதல் (காற்று எசம்பினால் பொலிதூற்று)
எசவு	சுவை (எசவான கறியென்றால்,கூடச்சாப்பிடுவார்)
எக்கு	இடுப்பு (எக்குல கத்தி)
ஏத்து	இறைக்கும் கருவி
ஏனம்	பாத்திரம்
ஏறாமடை	ஒன்றும் விளங்காதவன்
ஏவல் பிசாசி	கையாள்
ஏருவைக்காரன்	போடிமார்களின் வண்டிக்காரன்
ஐத்தவர்	தெரிந்தவர் (உனக்கு ஐத்தவருக்கும் எனக்கு ஐத்தவருக்கும் கொடுப்போம்)
ஒசில்	அழகு (இளிவரல்) (அவரின் ஒசிலைக்கண்டால் ஓடுவாள்)
ஒலக்கடியன் நோவு	உடனேயே பிள்ளை பிறக்க வைக்கும் வயிற்று நோ
ஒட்டுச்சுரண்டி	ஒளி களவெட்டிகளில் சிந்தியசிதறிய நெல்லைச் சுரண்டி எடுப்பவர்கள்
ஒடுவிழுந்த	புரையோடிய
ஒழுப்பம்	கொஞ்சம்
ஒழுப்பிலம்	கொஞ்சம்
ஒத்துக்குடியாட்டம்	சொந்தமற்ற வீட்டில் சும்மா இருப்பவர்கள்
ஓசரி	புதினம் (அவர்ர ஓசரிபாக்க ஆயிரம் பொம்புள வேணும்)
ஓசிவாசி இல்லாமல்	இரக்கமில்லாமல் (அந்தப்பூனையை ஓசி வாசி இல்லாமல் அடித்தான்
ஓனியம்	அறும்பு,குறைய
ஓவாளயன்	எதிலும் கவனமற்ற அடக்கமற்றவன்
ஓச்சமொடுங்கல்	சந்தடியடங்குதல் (அவரின் மறைவுடன் அவ்விடத்து ஓச்சம் ஒடுங்கிற்று)
கக்கக்கலிய	தாரளமாக
கக்கத்துல	இடுப்பில
கசடு	அழுக்காறு
கட்டாவாச்சினை	கடமைப்படுத்தல்(அந்த மாப்பிளையை கல்யாணம் முடிக்கச்சொல்லி கட்டாவாச்சினைப்படுத்தியதால் மாமிமகனிடத்தில் சென்றாள்.)
கடப்புலி	கெட்டவன்
கண்ணி	பொறி(அங்கே,சும்மா சும்மாவென்று போய் வருகிறார். ஒரு நளைக்கு கண்ணியில் இறுகுவார்!)

கணகாட்டு	கஸ்டம்
கத்தறை	குடும்பம், சுற்றம் (அவளின் கத்தறையில் பெண் எடுத்தவனெல்லாம் ஓட்டாண்டிதான்)
கத்தர குடி	(அந்தக் கத்தரையில் கல்யாணம் பண்ணமாட்டேன்)
கத்திராளி	உரிமைக்ககாரன் (இந்த விருந்தை அந்த ஏழைகள்தான் தின்னக் கத்திராளிகள்)
கதியால்	சரக்கு வேலிக்கம்பு, கம்பு வேலிக்கம்பு
கம்மிணி	சிறிய அளவு (இந்தப் போயிலையைக் கம்மிணி அளவு கிள்ளிப்போட்டாலும் உசாராகவிருக்கும்)
கறுவிச்ச	வஞ்சம் கொண்ட
கருமுருகி	கொடியவன்
கலட்டியன்	இளந்தாரி. (15,16 வயதுப் பருவத்தில் உள்ள இளைஞன்)
கசவராப்படுத்தி	கேவலப்படுத்தி
கப்பியறுத்தல்	முடித்தல், கெடுத்தல்
கசகறணம்	தொந்தரவு
கழிசறை	விலக்கப்பட்டவன் (கழித்தமுடி)
கலசமற	கவலையற்று (கல்யாண வேலைகள் முடிஞ்சி கலசமற இன்றைக்குத்தான் தூங்குகிறார்
கன்னட்டி	சிறிய வரவை
காப்புக் கலப்பு	சந்தேகம், இருள், I. என் உள்ளத்தில் காப்புக் கலப்ப இல்லை. II. வானம் காப்புக்கலப்பற்றுத் தெளிவாக இருக்கிறது.
காட்டுப்பீ...	பிறந்த பிள்ளை முதன் முதலில் கழிக்கும் கருமலம்
காண்டை	கூட்டம், தோழர்கள் (அந்தக் காண்டையோடு சேர்ந்து திரிந்தால் உனக்குக் கல்யாணமும் வராது.)
காராகோட்டி	கோளாறு (அவரின் காராகோட்டி பொறுக்க முடியாமல் விரட்டி விட்டுட்டாள்)
காவணம்	ஊத்தை, பழைய
காந்துதல்	பசித்தல்
காகக்கூடு	வயற் பரண்களில் காகப்பாது காப்புக்காகக் கட்டப்படும் கூடு.
காதலித்தல்	காத்துக்கொண்டிருத்தல் (ஒருமணித்தியாலயமாக ஆற்றடியில் உங்களை காதலித்தேன். நீங்கள் வரவில்லை.
காரநோவு	பிள்ளைபேற்று வயிற்று நோவுகளில் ஒருவகை
கிசுக்கென	கெதியாக
கிட்டு	கேலி செய் (சிறுவர்கள், அப்பாமாரைக் கிட்டுவர்.)
கிட்டி	நெருக்கி கட்டும் கம்புகள்.
கிடாவிற்றாள்	வழுக்கி, வாங்கி விட்டாள்
கிண்ணறம்	சந்தோசப்பாட்டு (நான் எந்த வேலையையும் கிண்ணறம் பாடிக்கொண்டே செய்வேன்)
கிறுகு	திரும்பு
கிள்ளவெட்டு	கரண்டகம், சுண்ணாம்புச் சிமிழ்
கிறுதா	பெருமை,முடிவெட்டுக்களில் ஒருவகை
கீத்துலகினாவுல	அறவே (அவள் இப்படிசெய்வாள் என்று கீத்துலகினாவுல நினைக்கவுமில்லை)
குணக்கு	கோபம், குறைஎடுத்தல்
குண்டாமாத்து	மாப்பிள்ளை, பெண்களில் ஒன்று கொடுத்து ஒன்று பெறல்

குவாடம் மனக்குறை, கோபம்
குப்பச்சி ஊத்தைச்சி
கும்பி நரகல்திரவம்
கெழுமதி பெருமை, புறதானம்
கெலியன் பெருவிருப்பம் (சாப்பட்டுக் கெலியன், பறித்துத் தின்றான்)
கெப்பறு பெருமை (புது மோட்டார் சைக்கிளில் கெப்பறாக ஓடி விழுந்து விட்டான்)
கொடுப்புலி எந்த நேரமும் வாய் நிறையத்தின்று கொண்டிருப்பவன்
கொடுப்பால் வளிதல் நிதானமற்று அதிகம் பேசுதல்
கொசமசக்காக்குதல் குழப்புதல்
கோதாரி கெள்ளை நோய்(போன வரிசத்து கோதாரியில் என் கோழிகள் எல்லாம் செத்து விட்டன.)
கோதரிசா அலங்கோலமான (வன்,வள்)
கோக்கணியவ்வா மூட்டித்திரிபவள், எல்லைகெட்டவள்
கோடி புதிய. I. பெருநளைக்கு கோடி உடுப்பர்.
II. கோடி மாடு கொம்பை ஆட்டும்.
சவ்வு உடன்படாதவன்,இழுத்துப்பிடிப்பவன்
சவட்டி மடக்கி (நீட்டிக்கொண்டிருந்த மரக்கந்தைச் சவட்டி முறித்தான்)
சவுடாராக ஆறுதலாக, சொளகரிகமாக
சணக்கிடா பெரிய உடம்புச் சோம்பேறி
சக்கப்பணிய சம்மாணம்கோரி, வெறுந்தரையில்
சங்கைக்குறைச்சல் அவமரியாதை (அவனுடைய கெட்ட செயல்களால் சங்கைக்குறைச்சலாக இருக்கிறது)
சகலப்பிள்ளை பால்குடிக்கும் பிள்ளை (முலைக்குத்து அறியுமா சகலப்பிள்ளை)
சக்கு சந்தேகம்
சவுக்கடித்தான் வேலைவாங்கினான்
சவுத்தல் பலவீனமாதல்
சல்லி ஒரு சதத்தின் அரைவாசி (நாணயம் உண்டு)
சகபாடி கூட்டாளி
சறுக்கால் ஓரம் (சறுக்காலில் வைத்தால் சறுகி விழுந்து உடைந்து விடும்)
சபைக்கட்டுக்கு இருப்போருக்குக் காட்டுவதற்காக
சமாறு பிடித்தல் சமாதானம் ஆக்குதல்
சள்ளு குழப்பம்
சாம்பினான் அடித்தான்
சாளை மனிதவிலாளிநீர், வாய்வீணி
சாப்பை நாணயத்தின் தலைப்பகுதி
சாச்சாப்பா மனைவியின் தாய்மாமா
சாத்தினான் அடித்தான்
சாலாப்பீலாக்காட்டுதல் அதையும்,இதையும் சொல்லி, காட்டி ஏமாற்றுதல்
சாவட்டை சாவு நிலையிலுள்ள (மிளகாயிலுள்ள, சோளகக் கொட்டையில் உள்ள சாவட்டைகளை நீக்கு)
சிமிள் சிறிய அழகிய பேழை
சிக்குச்சிணுக்கு பொறுப்புணர்வு
சிறுவால் விவசாயியின் வேலை நேரக் கீழாடை
சிறுமானியம் கஸ்டம் (பிள்ளையின் சுகவீனத்தால் பல நாள் சிறுமானியப்பட்டு விட்டேன்.)
சிறாம்பி ஏணியற்ற சிறு பரண்
சீருமைவினைத்திறன் (அவள் ஒரு, சீருமைக்காறி)

சீந்தாரி	மெல்லிய,அழகிய
சீக்கு	நோய்,குறை (இந்த வேலையைச் சீக்கில்லாமல் முடி) (சீக்குள்ளவன் மருந்து செய்வான்)
சீத்துவம்	அழகு, ஒழுங்கு
சீராட்டு	காலதாமதம் (உத்திகோகத்தர்களின் சீராட்டினாலேயே அந்த வேலை இன்னும் இழுபடுகிறது.)
சுடுவான்	கம்புத்தட்டுப் போடப்பட்ட பரணில் அமைக்கப்பட்ட அடுப்பு
சுண்டங்காய்	(முகறன், முகறி)கோபக்காரன்,கோபக்காரி
சுடுது மடியைப்புடி	அவசரப்படுத்தல் (விழாவின் திகதியைத்தீர்மானித்த தலைவர் சுடுகுது மடியைப்பிடி என்று பதறினார்
சுளையமாறல்	செய்பவன்போல பாசாங்கு காட்டித்திரிதல்
சுறுக்கா	விரைவாக
சூக்கு	குறைவு,கடைசி (என் குடும்பத்திலுள்ளவர்களில் ஆகச் சூக்கு நான்தான்)
செப்பு	மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் பல் வகை தின்பண்டங்கள்)
செடி	மாதவிடாய் இரத்தம்
செத்தை	கிடுகு வேலி, மறைப்பு
செவ்வையாகப்போ	நேராகப் போ
சேட்டம்	பலம்(காய்ச்சலால் உடம்பில் சேட்டம் குன்றிவிட்டது)
சேத்திமருந்து	வசிய மருந்து
சேவரக்கால்	செம்பாலான இருக்கை சட்டங்கள் அற்றது
சேறுபடாச்செல்வன்	உழைக்காமல் உண்பவன்
சொட்டாம்பு கூறல்	குறை கூறல் (என் வேலையில் சொட்டாம்பு கூறுபவர்கள் இருந்தால் இவ்விடத்தில் வேலை செய்யமாட்டேன்)
சொத்தை	முகம் (அவனுடைய சொத்தையில் எறி)
சொக்கு	கன்னச்சதை
சோத்துப்பட்டை	சோறுகட்டப் பயன்படுத்தும் கமுகம்பாளை
தங்கனுக்குத்தங்கன்	இடைக்கிடை (காட்டுப்பாதையில் தங்கனுக்குத் தங்கன் நீர்பந்தல் வைக்கப்பட்டிருக்கும்)
தன்னலக்காரன்	இயற்கையிலேயே சூம்பிய விதைகளையுடைய கால் நடை (நலம் போடுதல் என்ற சொல்லைக்கவனிக்கவும்)
தனகுவாரம்	பிரச்சினை(கூட்டத்தில் தனகுவாரம் எழும்பி ஆளுக்காள் கைவைத்துக் கொண்டார்கள்)
தனுப்போடல்	பசுவின் பின்னால் மறியில் திரியும் காளையின் நடவடிக்கைகள்.
தம்	மூச்சு, புகையிழுப்பு I. நீருக்குள் தம் அடக்கி ஐந்து நிமிசங்கள் இருந்தான் II கஞ்சா சுருட்டில் எனக்கும் ஒரு தம் தாவேன்
தமரித்தல்	பொறுத்தல், பிந்துதல்
தப்பல்	வாப்பா யாரென்று தெரியாத பிள்ளை
தலைக்கடியன்	கரைச்சற்காரன்.
தந்திமிப்படல் (தந்திமிரிப்படல்)	அமைதியாதல் (இரண்டு மாதமாக விழாவுக்காக ஆடித்திரிந்து இப்போதுதான் தந்திமிப்பட்டுள்ளான்)
தடாரிக்கமான	பெரிய, கொழுத்த
தண்டி	ஒரே வயதுள்ள (உன் தண்டிப்பிள்ளைகளோடதான் நீ விளையாட வேண்டும்)
தலவாரம்	சொல்லல் குறைசொல்லல்
தலவாந்திரம்(கூறல்)	குறை(கூறல்)

தாக்காட்டல்	சமாளித்தல், பராக்காக்கல் (நான் வரும் வரையில் பிள்ளையைத் தாக்காட்டிக்கொண்டு இருங்கள்)
தாவாரம்	வாசல்
திரணை	உருண்டை (இஞ்சி சாமன்களை அரைத்துத் திரணையாக எடுத்தாள்)
திருவன்	தெத்தன்
தில்தில்	முடவன்
துள்ளுமா	மாவிடிக்கும்போது சிந்தியவற்றைக்கொண்டு செய்யப்படும் உடனடிப் பச்சைத் தின்பண்டம்
துவாளிப்பு-நிலம்	உள்தாண்ட – பூமி
தூ தூப்பிடித்தல்	பிடித்தல் Catch (அடித்த பந்தைத் தூப்பிடித்தான்)
தூமைச்சீலை	மாதவிடயாய் இரத்தம் ஊறிய சீலை
தூர்வை	மட்பாண்டம் செய்வதற்குக் களியுடன் சேர்க்கும் மணற் கலவை
தூர்ந்து போதல்	மறைந்து விடல் (காதில் போட்ட துளை, நீண்ட காலம் நகைபோடாததால் தூர்ந்து விட்டது)
தெள்ளு	புடை (தவிடு, மா(வு) இவற்றை வேறாக்கி எடுப்பதற்கு முறத்தால் தெள்ளுவார்கள்)
தெப்பிராட்டியம்	இணக்கமின்மை, மாறாட்டம்
தெறிகாய் பருவம்	சொற்கேளாப் பருவம்
தெறிப்பான்	அடங்காதவன்
தெகரம்	கஸ்டம்
தேயாமாயாக்கட்டுதல்	ஏமாற்றுதல்
தொஞ்சி	மலினமாகி,பெலவீனமாகி
தொழும்பு	பழக்கம், தொழில் (ஒவ்வோரிரவும் அங்கே போய் வருவதே அவருடைய தொழும்பாகும்)
தொட்டிற் சாக்கு	மாட்டுவண்டிகளின் கீழ் சாமான்கள் வைக்க கட்டும் தாங்கி (மேல், கீழ்க் கச்சைகளையும் சொல்வார்கள்)
தொழுப்புறி	வேசி
தோறை	வேசி
நக்குவாரம்	பிச்சைத்தனம், அத்தலைதல் (அவளை விட்டுப் பிரிந்ததும் இப்போது நக்குவாரப்பட்டுத் திரிகிறார்.
நட்டுமை	வரம்போட்டை
நட்டாமுட்டி	கட்டுக்கடங்காதவன், காடையன்
நலம் போடுதல்	கடுமையாக, பெண் கால் நடைகளின் பின்னால் கலவிக்காக அலையும் காளைகளின் விதைகளை நசித்துச் சூம்ப வைத்தலை நலம்போடுதல் எனப்படும். இதன் பின் அலைச்சல் நின்று விடும்.
நன்னருங்கல்	பழுது (நன்னருங்கல் பழங்களைத் தின்று வயிற்றைக் குழப்பிக் கொள்ளாதே)
நண்டு	நத்தை பலதரத்திலுள்ள சின்னப்பிள்ளைகள்
நறுவிசாக	முழுசாக (தானியம் அவ்வளவையும் ஒன்றும் விடாமல நறுவிசாக அள்ளிவிட வேண்டும்)
நாக்கில் வைத்தேன்	கௌரவப் படுத்தினேன்
நாவி	நாத்தம் குடி குடும்பம்
நாட்டுக்குட்டல்	கிராமத்தான், நாட்டான்

நாக்கு வழிக்காதே	விரும்பாதே, வாயூறித்திரியாதே(அவளுக்காக நாக்கு வழிக்காதே)
நிசான்	கஞ்சா வெறி
நொகச்சி	தளர்த்தி (சாக்கை நொகச்சிக் கட்டினான்)
நொறுநாட்டியம்	பெருமை
பட்டையடித்தல்	நீண்டநாள் உடுப்பைப் பாவித்தல். (பட்டையடித்தது போதும் . புதுஉடுப்பை உடு)
படங்கு பெரிய	சாக்கு விரிப்பு
பப்பரத்தி	அடக்கமில்லாதவள்
பம்மாத்து	பகட்டு
பச்சநாவியன்	வெறுவாயன், கஞ்சன்
பச்சவடம்	சிவப்பு
பவுறு	பெருமை
பாந்தம்	நேசம், தொடர்பு
பாண்டுறுமம்	பழைய, பாசி பிடித்த (உன் பாண்டுறுமம் பிடித்த உடுப்பைக் கழுவு அல்லது எரித்து விடு)
பாவங்கை	சேற்று நிலத்தில் எருமைகள் ஆக்கிக்கொண்ட நடை பாதை (மணலாக இருக்கும்)
பறகந்தை	நாணமற்றவள்
பீச்சக்கோழி	தொடர்ந்த வருத்தக்காறன்
பீத்தல்கடகம்	எந்தநேரமும் வளவளப்பவன்
பீக்கிறு	மாறுகண்ணன்
பீக்கறு	செவிடன்
புள்ளக் கொழுக்கட்டை	பிள்ளைத்தாய்ச்சிகளுக்குக் கொண்டு செல்லும் கொழுக்கட்டை (பெரிய கொழுக்கட்டைக்குள் இன்னுமொரு சின்னக் கொழுக்கட்டை)
பொளி	கனு, முளை (நிலத்தை அளந்து எல்லைக்குப் பொளியடித்தான்)
போக்கணம் கெட்டவன்	போக்கற்றவன்
புழுக்கை	அடிமை
புழக்கடை	அடைக்கப்பட்ட, மலங்கழிக்கும் நிலம்
புறதானம்	பெருமை,புறக்கணிப்பு
புரை	மண்தட்டுப்போட்ட வயல் வீடு
புணாடன்	ஊத்தையன்
பூங்கறை	பூஷணம்
பூணாரம்	நகை
பெசலெழுப்புதல்	குழப்பம் உண்டாக்குதல்
பேமெலாக்கு	பேதலிப்பு
மறுகா	பிறகு
மந்துவைத்தல்	தேடுதல்(ஒரு தேவைக்காக எத்தனையோ இடத்தில் மந்துவைத்துத்தான் அவரைக் கண்டுபிடித்தேன்)
மகடியெடுத்தல்	சாலம்செய்தல்
மகுறம்	சண்டை,குழப்பம்
மசண்டை	மாலைக் கருக்கல் வேளை (மசண்டையில் வலை வீச்சுக்கு மீன் அதிகம் படும்)
மழுகொள்ளை	மடயன்(அவன் ஒன்றும் ஏறாத மழுகொள்ளை)

மாத்து	சீலை வெழுப்பவன், வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமல்லாத சில உடுப்புக்களைத் தற்காலிகமாக வாடகைக்குக் கொடுப்பது மாத்து எனப்படும்.
மாந்திவிடுதல்	மாறிவிடுதல் (அந்த வயற்பரப்பில் கரும்புச்செய்கை மாந்தி இப்போது நெற் செய்கை நடைபெறுகிறது)
மாவரை	கிடுகு வேலிக்குப் பயன்படும் வரிச்சி
மாசாலை	ஜாலம்
மொச்சை	வெடுக்கு (பால் மொச்சை)
மோடி	ஜாலம்
முக்கிசம்	பாக்கியம், செல்வம்
முழுத்தம்	அதிர்ஷ்டம்
முக்குளித்தல்	மூழ்குதல் (அவள் செல்வத்தில் முக்குளிக்கிறாள்)
மூசாப்பன்	சந்தேசமற்றவன், விடியாமூஞ்சி
லொடு	கிழடு
வக்கணம்	மற்றவர்களைக் குறைகூறல்
வண்ட்றாளயன்	தன்னுடலைத்தானே சுமக்கமுடியாது அவதிப்படுபவன்
வரிச்சி	பரவுகம்பு
வள்ளியன்	உதவாதவன்
வழங்காதவன்	உதவாதவன்
வளிசறாக	அறவே (எங்களின் தமிழ் ஆசழரியருக்குக் கணிதம் வளிசறாத் தெரியாது)
வட்டுக்கொட்டை	தோற்றத்தில் சிறிய முத்தல்கள்
வம்புக்குட்டி	முறைதவறிப் பிறந்த பிள்ளை
வளிசல்	கெட்டவன்
வல்லுகம்	சீலையால் தைத்த பணப்பை (Purse)
வட்டுவா	தாம்பூலச் சாமான் பை
வறகானாய்	உரியானாய்
வறுகை	பரம்பரை, குடும்பம் (அந்த வறுகையில் உள்ள எல்லோரும் பணக்காரர்கள்)
வாலாம்புழு	சின்னப்பிள்ளை
வாயோய்தல்	புகழ்தல், பாராட்டுதல்
வாறுவைத்தல்	சத்தமிட்டு அழுதல்
வாய்ச்சப்பு	தாம்பூலம்
றோக்கை	புகையிலைப் பொருட்களைத் தாளில் வைத்துச்சுருட்டிப் புகைப்பது.
வெறுவாக்கிலகேடு	மூதேவித்தனம்
வெட்டக்கிருத்தல்	மலங்கழித்தல்
வெளிக்குப்போதல்	மல்ங்கழித்தல்
வெந்திப்பு	பொறாமை
வெளிசாக்கி	துப்பரவாக்கி
வெள்ளிகும்பம்	செல்வச்செளிப்பு (வெள்ளிகும்பத்துல இருக்கிற அவர், மற்றவரோடு பேசுவதும் குறைந்துவிட்டது)
வெள்வரிக்கொள்ளல்	பொழுது பலருவதற்குரிய அறிகுறி தென்படல்
வேருவிலாய்	சொந்தபந்தம் (திருமண அழைப்பு, வேருவிலாய் பார்த்துக் கொடுப்பர்)
விட்டடி	சோடியற்ற,தனி

விக்கவிடஞ்சல்	துக்கதுயரம் (என் விக்கவிடஞ்சல்களை எனது நண்பனிடம் மட்டுமே சொல்லுவேன்)
விசிக்கினான்	எறிந்தான்

இங்கு காணப்படுகின்ற சொற்கள், நெடுங்காலமாகப் பேசப்பட்டுவந்தவைகளும், தற்போது பேசிக்கொண்டிருப்பவைகளுமாகும். என்றாலும் இச்சொற்கள் பாவனை குறைந்துகொண்டு வருகிறது. இளையோர் மனங்களில் இவற்றின் பதிவு குறைந்தும், பேச்சில் தவிர்ந்தும் காலக்கிரமத்தில் இச்சொற்கள் அருகியும் விடுமோ என்ற அச்சமும் காணப்படுகிறது. இதன் தூர்வுக்கு மாறாக அவ்வப்போது வெளிவரும் பெருந் திரைகளிலும், சின்னத்திரைகளிலும் ஏராளமான சொற்கள் கிரகிக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. இவைகூட அந்தந்த "சீசனில்" உச்சநிலையடைந்து பின்னர் உபயோகமற்றுவிடுகின்றன. எனவே, இப்பட்டறை மலரின் சொற் பட்டறையில் கொட்டப்பட்டுள்ள பல்வேறு சொற்களையும் முடியுமானவரை அறிந்து வைத்துக்கொண்டால் எமது மொழியில் வளர்ச்சியும், எம்மில் மொழி வளர்ச்சியும் ஏற்படும் என்பது திண்ணம்.

மறு பக்கம் தொடரும்.....

மனிதனைத் தீய வழியில் இட்டுச்செல்வதற்குச் சாத்தானால் ஏற்படுத்தப்படும்

10 வகையான தீய உணர்வுகள்

1 தீய எண்ணங்களை உருவாக்குதல்
2 உலகின் மீது அதிகப்பற்று ஏற்படுத்துதல்
3 செல்வச்சுகத்தில் மூழ்குதல்
4 தற்பெருமை கொள்ளல்
5 உலோபித்தனம் ஏற்படுத்தல்
6 முகஸ்துதி உருவாக்குதல்
7 பொறாமை கொள்ளல்
8 பேராசை ஏற்படுத்தல்
9 பெருமை கொள்ளல்
10 அடுத்தவரை அலட்சியம் செய்வ

பழமொழிகளுடன் சில மொழிகள் (ஆக்கம்)

பெரிய எழுத்தில் இருப்பகைவள் பழமொழிகளாகும்.
சிறிய எழுத்தில் இருப்பவை அவற்றிற்கான சில மொழிகழாகும்

* **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**
என்ற இவ்வுண்மையை
தேர்தல் வேட்பாளர்களின்
திருமுகச் சுவரொட்டிகளில்
அறிய முடியாமல் ஏமாந்து
விடுகிறான் எமது வாக்காளன்.

* **உப்பிட்டவரை உள்ளளவும் நினை**
என்பது, அந்த உப்புச்சுவை,
நாக்கில் இருக்கு மட்டும்தான் என
நாம் விளங்கியுள்ளோம் என்பதனை
நமது நன்றி கெட்ட செயல்கள்
காட்டிக்கொடுக்கின்றன.

* **ஆழமறியாமல் காலை விடாதே.**
என்ற எச்சரிக்கை,
சடுதியாக ஏற்பட்ட விபத்தினால்
சாகக் கிடக்கும் ஒருவனுக்கு
முதலுதவி செய்வதற்குக் கூட
முன்னிற்பதைத் தடுத்துவிடுகின்றது.

* **ஆடிக்கறக்கிற மாட்டை**
ஆடிக் கறக்க வேண்டும்,
பாடிக் கறக்கிற மாட்டைப்
பாடிக்கறக்க வேண்டும்.
மாறாக - அறுக்க வேண்டிய
மாடுகளும் இருக்கின்றன.

* நிறைவேறாத, நிறைவேறக்கூடிய
பேராசை நிரம்பிய; உலகத்திலுள்ள
அத்தனை ஆசாபாசங்களும்
மனிதனின் தலைக்குள் பதிவாகியிருப்பதனால்
ஒவ்வொரு தலையும் ஒருலகம்
எனக் கூறப்படுகிறது.

* அவனது கையிலிருந்த சாராயக் குப்பியை
அவனது நண்பன் வினவியபோது
கறுப்பும் ஒரு நிறம்தான்.
என்பதுபோல் இதுவும் ஒரு
குடிபானந்தான் என்று
அடித்துச் சொன்னான்.

* **காக்கைக்கும் தன் குஞ்சு**
பொன் குஞ்சு என்றால்
குப்பைத்தொட்டிகளில்
குழந்தைகள் கிடக்கக்கூடாது.
இவைகளை நோக்கும் போது
இப்போது மனிதப் பிள்ளைகள்
குயில் முட்டைகள் போலாகிவிட்டன.

* **ஆபத்துக்குப் பாவமில்லை**
என்ற காரணத்தை வைத்து
ஆபத்திற்கு உதவி செய்து
பாவம் செய்ய பத்திரம் பெறப்படுகின்றது.

* **அலைமோதும் பொழுதே**
தலைமுழுகு என்பதை,
அதிகாரம் இருக்கும்போதே
அள்ளிக்கட்டிக்கொள் என்பதாக
அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது.

* **சூடுகண்ட பூனை**
அடுப்பங்கரையை நாடாது.
என்ற வாக்குக் கமைவாக
ரோசமுள்ள பூனை பகுத்தறிவற்றி
ருந்தாலும் சூடு கண்டவுடன் அடுப்பண்டை
போகவில்லை.
ஆனால், ரோசமற்ற மனிதன்
பகுத்தறிவுள்ளவனாக இருந்தும்
சூடு,படப் படத் தொடர்ந்தும்
அதையே செய்கின்றான்.

* **ஆசை வெட்கமறியாது**
என்ற விதியைப் பிரயோகித்த
பலரின் கன்னங்கள் பாதணிகளால்
பதம் பார்க்கப்பட்டுள்ளன.

* **கத்தி சாணையைத் தின்கிறது**
சாணை கத்தியை தின்கிறது போல
சம்பளம் அதிகரிக்க விலை அதிகரிக்கிறது
விலை அதிகரிக்க சம்பளம் அதிகரிக்கிகன்றது.
இந்த எல்லா அதிகரிப்புக்களும்
அழிவை நோக்கியே செல்கின்றன.

* வேட்பாளர்களும்,கட்சிகளும்
வேலை விண்ணப்பப்படிவங்களை
தேர்தற் பிரச்சாரக் காலத்திலேயே
துரத்திப்பிடித்து வழங்குகிறார்கள்
எருமை வாங்குமுன்
நெய்விலை பேசுவது போல.

* **கண்டது கற்க பண்டிதனாவான்.**
என்பதை காரணமாக வைத்துக்
கண்டவற்றை யெல்லாம் கற்பதாகக் கூறிப்
பால்வடி (நெய்யரி)பற்றுவது போல
கழிவுகளைப் பற்றிப் பிடித்த
பண்டிதர்கள் நம்மில் ஏராளம்.

* **இரக்கப்போனாலும் சிறக்கப்போ**
என்பது, அடப்பன் வைத்த என்வலப்புக்களால்
இப்போது மெய்ப்பிக்கப்படுகிறது.

* **முடவன் கொம்புத்தேனுக்கு**
ஆசைப்படலாமா? ஆம்.
கைச் செழிப்பிருந்தால்
கால்முடம் என்ன செய்யும்?!

* **புத்திமான் பலவான் என்றால்,**
புத்தியே இல்லாத பலவானிடம்
இவன் போய்க் கைகட்டி
நிற்கத் தேவையில்லையே!

* **நல்ல மனச்சாட்சி கடவுளின் குரல்.**
என்றிருந்ததை மனிதன்
மனச்சாட்சிக்கு மாறு செய்து செய்து
மனச்சாட்சியைச் சாத்தானின்
குரலாக மாற்றி விட்டான்.

* **எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்**
என்பதைச் சுனாமி அழிவின்போது
உதவி செய்யச் சென்றவர்கள் உலகுக்கு
உணர்த்திவிட்டார்கள்.

* **கடவுளை நம்பினோர்** (கடவுளால்)
கைவிடப்படார். இதுபோல
கடவுளை நம்பினோர் (கடவுளை)
கைவிடப் (படார்) என
விழுந்துவிடுவர்.

* **பணம் பாதாளம் மட்டும் பாயும்**
பணம் பாதாளம் என்ன
பண்புள்ள மனிதர்களின்
நெஞ்சுகளிலும் பாய்ந்து
பண்பாடற்ற உலகத்தையே
உருவாக்கிவிட்டது.

* அடைத்துச் சடைத்த யோதயனுக்கும்
ஆனைக்கால் நோயனுக்கும் தான்
தாங்கள் பெருத்தது
போதுமென்ற மனமே
பொன்செய்யும் மருந்து
ஆக இருக்கும்.

* **பெண்என்றால் பேயும் இரங்கும்.**
தற்காலிகமாக என்றால். ஆனால்,
நிரந்தர உறவுக்கு என்றால்
நிறையக் கைக்கூலி கொடுக்க வேண்டும்.

* **களவும் கற்று மற** என்பதனால்
கற்கும் போது பெருவாரியாக உழைத்து
மறந்த பின்னர் அவற்றைக் கொண்டு
மங்களமாக வாழலாமென்று
மனிதன் நினைக்கிறான்.

* **எதார்த்த வாதி வெகுசன விரோதி**
என்பதனால்தான் அநேகமான
பொதுநிறுவனங்களின் தலைவர்களிற் சிலர்
பொதுமக்களின் விரோதிகளாக
இருக்கின்றனர்?!

✷ **நக்குற நாய்க்குச்**
செக்கென்ன சிவலிங்கமென்ன
நக்குற நாய்க்கு செக்கு,
சிவலிங்க பேதத்தைவிட
செத்த நாயும் விளங்காது
பெத்த தாயும் விளங்காது.

✷ **பொரிமாவை மெச்சினான்**
பொக்கை வாயன் என்பது போல
நிவாரணப் பொருள் விநியோகத்தில்
தேர்ந்தவர்கள் இன்னொரு சுனாமியோ,
பூகம்பமோ எனது பிரதேசத்தில் வராதா
என ஏங்குகின்றனர்!

✷ மனிதன் நினைப்பது அவனுக்காக
இறைவன் நினைப்பது
அவனுடைய படைப்புக்களுக்காக.
எனவேதான்,
நாம் ஒன்று நினைக்க
தெய்வம் ஒன்று நினைக்கிறது.

✷ **சிறு துளி பெரு வெள்ளம்**
ஆவது போல சிறுகச் சிறுக சுரண்டிச்
சேர்த்தால் செல்வம் பெருகுமென்ற
எண்ணத்தில் சுரண்டலே இப்போது
நடை பெறுகிறது.

✷ **போக்கணம் கெட்டவன்**
ராசாவிலும் பெரியவனாம்
என்பதனாலல்லவா பொண்டாட்டி
ஜித்தாவிலிருக்க புரிசன்
இத்தாவிலிருக்கிறான் இன்னொருத்தியுடன்
பொண்டாட்டியின் சம்பளத்தில்.

✷ **பட்டறைத் தேடலும்,**
சில மொழி ஆக்கமும்
கலாபூஷணம், கலைமணி ஏ.எஸ். இஸ்மாலெவ்வை.

உலகை வெல்லக்கூடிய
8 உபதேசங்கள்

1. செல்வத்தில் மிகப்பெரிய
செல்வம் புத்தி
2. வறுமையில் மிகப்பெரிய
வறுமை மடமை
3. வெருட்சியில் மிகப் பெரும்
வெருட்சி தற்பெருமை
4. பெருந்தன்மையில் மிகப்பெரியது
நற்குணம்
5. நீ,மடையனுடன் நட்புறவு
வையாதே ஏனெனில்,அவன்
உனக்கு நன்மை செய்ய நாடி,
நன்மை என்று நினைத்துச்
செய்வது உனக்குத் தீமையாகவே
இருக்கும்
6. நீ,பொய்யனுடன் நட்புறவு
வையாதே ஏனெனில்
அவன்,தூரமானதைச்
சமீபமாக்குவான்.
சமீபமானதை தூரமாக்குவான்.
7. நீ,உலோபியுடன் கூட்டுறவு
வையாதே. ஏனெனில் மிக மிகத்
தேவைப்படும் சந்தர்ப்பத்தில்
உன்னை விட்டும் தூரப்பட்டு
விடுவான்
8 நீ, கெட்டவனுடன் நட்புறவு
வையாதே. அவன், உன்னை
அற்ப விலைக்கு விற்று விடுவான்

நாட்டார் கவிப்பாடல்களில் புலவரின் கவி நயங்கள்.

இக்காலத்தில் "கிராமம்" என்னும் சொற்பதம் பல்வேறு நவநவமான பெயர்களுக்குள் ஒளிர்ந்து இழைகின்றது.

இவ்வாறு நவமான பெயர்களுக்குள் இழைகின்ற இக்கிராமங்களில் ஆரம்ப காலத்தில் இருந்த புவியியல் அமைவுகள், வாழ்வியல் சூழல்கள் இப்போது இல்லை. இவற்றில் வாழ்ந்த மக்களது அக்காலப் பண்பாடுகள் - பழக்க வழக்கங்கள்கூட இப்போது மருவியதாகவே இருக்கின்றன.

இக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும் காணக்கூடிய பசுமையான புல் தரைகள் - செடிகொடிகள் - நீரோடைகள் - சிற்றாறுகள் ... என்று இக்கிரமங்களின் இயற்கை அழகுகளே தனி இங்கிதம்.

தென்னை ஓலைக்கிடுகுகளால் - நெல் கதிர் போக்கிய வைக்கோல்களால் கூரைகள் வேயப்பெற்ற மண் வீடுகள். இவ் வீடுகள் அமைந்திருக்கும் விசாலாமான நிலவளவுகள் தோறும் காட்சியளிக்கின்ற மா, பலா, வாழை... போன்ற கனிகள் தரும் மரங்கள், பயன் தரும் மற்றும் தென்னை- முருங்கை - பனை மரங்கள், இவை அடர்ந்து இடை இடையே காணப்படும் தென்றல் தவழும் தோட்டங்கள்... என்று இவற்றை எத்தனை தடவைகள் பார்த்தாலும் மனங்களுக்குத்தெவிட்டாது.

ஒவ்வொரு குடியிருப்பு வளவுகளிலேயும் கோழிகள் வளர்ப்பு சரளமாக இருக்கும். ஆடுகள் மாடுகள் வளர்ப்பு வேறு. பால் மடிகளில் இருந்து கறந்தெடுத்துக் காய்ச்சும் பால் - உறையவைக்கும் தயிர் - உருக்கி எடுக்கும் வெண்ணெய் ... இப்படி எத்னையோ பாரம்பரியங்கள். வலை போட்டு மீன்பிடித்தலும் வழக்கம். உழவுத் தொழிலும், சேனைப்பயிர் தொழிலும்தான் உயிர்கள்.

பிரயாணங்களுக்குக் கால் நடைகள்தான் பிரதானம். பின்னர் இரட்டை மாட்டு வண்டிகள், ஒற்றைமாட்டுக் கரத்தைகள், கூட்டு வண்டிகள் என்பனவும் பயன்பட்டன.

இரவு நேரங்களில் கால் நடையில் பிரயாணம் செய்பவர்கள் கைகளில் தீப்பந்தம் இருக்கும். நெருப்புக்கொள்ளியை கையில் எடுத்து வீசி வீசி நடப்பர். இருளைக்கிழித்துக்கொண்டு வெளிச்சம் காட்டும் இது.

இக்கிராமத்து மக்களின் உணவுகள் உண்ணும்முறைகள், உடைகள் அணியும் விதங்கள், இல்லற வாழ்வியலைத்தொட்ட திருமணச்சடங்குகளில் காணப்படும் மரபுகள்... இவ்வாறு வாழ்வியலின் ஒவ்வொரு அம்சங்களிலும் ஒளிர்ந்து வந்த பழக்க வழக்கங்கள் ... எழுதப்போனால் நிறையவே இருக்கின்றன.

இவர்களது வாழ்வியல்களின் ஒவ்வோர் அசைவுகளிலும் பலவகையான கலாசாரப் பழக்க வழக்கங்களையும் காணக்கூடியதாக இருந்தன. இந்த பழக்க வழக்கங்கள் மத்தியில் மனப்பாங்குகளைப் பண்படுத்தக்கூடிய – பொழுதுகளைக் கழிக்கக்கூடிய பல்வேறு கலைகளும் ஒளிர்ந்து பிரகாசித்ததையும் காணக்கூடியதாக இருந்தன.

ஒருவரை ஒருவர் வாதுபோட்டுக் கைகொடுத்து ஒடுதல், தட்டுப்பாய்தல், நொண்டியடித்தல், கட்டைப் பந்து - மட்டைப்பந்து - உத்துப்புள்ளு – கிட்டிப்புள்ளு, சீனடி - சிலம்படி - வாள்வீச்சு - புலி விளையாட்டு ... இன்னோரன்ன விளையாட்டுக்கலைகள் இவர்களது வாழ்வியலில் இழைந்தன.

இத்தோடு குரவை, கூத்து, கும்மி ஆட்டம், கோடு கச்சேரி, நாடகம்... என்று அருமையான கலைகள் இவர்கள் மத்தியில் ஒளிர்ந்து வந்துள்ளதையும் காணக்கூடியதாக இருந்தன.

இந்த விதமாக அக்காலத்தியக் கிராமங்களின் புவியியல் அமைவுகளையும், இயற்கையின் விநோதங்களையும், இக்கிராமத்தவர்களின் வாழ்வியல் தொடர்பான கலைகள் கலாசார பழக்க வழக்கங்களையும் இங்கு எடுத்து விளக்குவதற்குக் காரணம் - இந்த விதமான புவியியல் அமைவுகளும், கற்பனைகளை தூண்டும் இயற்கை வளங்களின் இரம்மியம்மான சூழல்களும் தான். எழுந்த மாத்திரத்தில் பாடல்களை இயற்றி - இசைத்துப்பாடக்கூடிய இயற்கையான புலமைத்தவ ஊற்றுக்கண்கள் திறப்பதற்கு வாய்ப்பாக இலங்கின.
இந்த வாய்ப்புக்கள்தான் அக்காலத்திய எழுதவாசிக்கத் தெரியாதவர்களையே ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றிப்பாடி இசைக்கும் புலவர்கள் ஆக்கியது என்றால் மிகையில்லை.

இப்பாடல்களை கிராமியக் கவிப்பாடல் என்றும், நாட்டார் பாடல் என்றும், ஏடறியா இலக்கியப்பாடல் என்றும் அழைக்கப்படுகின்றன இப்போது.

இக்கிராமியப் பாடல்களை எழுந்த மாத்திரத்தில் இயற்றிப்பாடி இசைப்பவர்கள் கிராமிய கவிப்புலவர்களாக இலங்குகின்றனர். இவர்களில் ஆண்கள் பெண்கள் இருபாலாரும் இருக்கின்றனர்.

இவர்களுக்கு எழுத வாசிக்கத்தெரியாது. பிற்காலத்தில் ஒன்றோ இரண்டோ ஆரம்ப நெறி வகுப்புக்கள் படித்தும் இருக்கலாம்.

இப்புலவர்கள் இயற்றிப்பாடி இசைக்கும் இலக்கியப்பாடல்கள் எப்போது தோன்றின இவற்றை இயற்றிப்பாடி இசைத்த புலவர்களின் ஆரம்பகாலம் எது என்கின்ற விபரங்கள் எதையுமே வரையறுத்துக் கூற இயலாது.

இக்கவிப்புலவர்களில் ஏராளமானோர் அவ்வக்காலங்களில் மரணமடைந்து விட்டனர். இவர்களது பெயர் விபரங்களும் தெளிவாக இல்லை. இலை மறை காய்களாக இருக்கின்ற ஒரு சிலரது பெயர்களைக் கூட தெளிய முடியாமல் இருக்கிறது. இனங்காணப்பட்ட ஒரு சில கவிப்புலவர்களது பெயர்களை மட்டுமாவது இங்கு தருவது பயன்மிக்கதாக இருக்கும்.

புலவர் மகுமூதுலெவ்வை அலியார்(அண்ணாவி), புலவர் ஆதம்பாவா தம்பி லெவ்வை (அண்ணாவி) , புலவர் மீரா முகைதீன் அலியார்(அண்ணாவி) , புலவர் ஆதம்பாவா முகைதீன் பாவா(அண்ணாவி), புலவர் மீராலெவ்வை முகம்மதுத் தம்பி (அண்ணாவி) புலவர் சின்னத்தம்பி ஆதம்பாவா, புலவர் அகமது லெவ்வை அவ்வா உம்மா, புலவர் றிசானா, புலவர் உதுமாலெவ்வை சீனித்தம்பி, புலவர் சின்னமரைக்கார் பக்கீர் உம்மா, புலவர் இஸ்மாலெவ்வை முகைதீன் பாவா, புலவர் மு.இ. முகம்மதுத்தம்பி, புலவர் சிக்கந்தர் மீராமுகைதீன், புலவர் முகம்மதுத்தம்பி அலிமாநாச்சி, புலவர் கலந்தர் லெவ்வை அசனார் (அண்ணாவி), புலவர் ஆதம்பாவா முகம்மது முஸ்தபா(அண்ணாவி) , புலவர் மீரா முகைதீன் முகம்மதிஸ்மாயில்.....

இப்புலவர்களால் எழுந்த மாத்திரத்தில் இயற்றப்பட்டு பாடப்பட்டு - இசைக்கப்பட்ட பல கவிப்பாடல்களும் வாழ்வியலைத்தொட்ட பல்வகையான பொருள்களிலுமே இழைந்து இலங்குகின்றன.

பக்திப் பிரார்த்தனைப் பாடல்கள், பல்வகை இயற்கையின் நிகழ்வுகளைத்தொட்ட பாடல்கள், பெற்ற தாயைப்பற்றி பிள்ளை பாடும் பாடல்கள், பெற்ற பிள்ளையைப் பற்றி தாய் பாடும் பாடல்கள், பருவமடைந்த மங்கை தனது மனம் விரும்பிய ஆடவனைத் தொட்டுப் பாடும் பாடல்கள், பருவமைடைந்த ஆடவன் தனது மனம் விரும்பிய பருவமடைந்த மங்கையைத் தொட்டுப் பாடும் பாடல்கள், பிள்ளை இல்லாதவள் பிள்ளை வேண்டிப்பாடும் பாடல்கள், பாசத்திற்குரிய தன் பிள்ளையைத் தூங்க வைக்கும் தாலாட்டுப் பாடல்கள், பல் வகையான அற நெறிப்பாடல்கள், பல்ரக தொழில் சார்ந்த பாடல்கள், பரிகாச நையாண்டிப் பாடல்கள், பரிதாப ஒப்பாரிப்பாடல்கள், பகை தீர்க்கும் வசைப்பாடல்கள், பாசத்தை வெளிப்படுத்தும் வாழ்த்துப்பாடல்கள்... இவ்வாறு வாழ்வியல்துறை ஒவ்வொன்றிலுமே இக்கவிப்பாடல்கள் அமைந்து இலங்குகின்றன.

இவற்றிற்கு உதாரணமாக இங்கு ஒரு சில கவிப்பாடல்களை படித்துச் சுவைப்பதன் மூலம் இப்பாடல்களின் அருமைகளைத் தெளிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

✓ பக்திப் பிரார்த்தனைப் பாடல்கள்

ஆலத்தைப் படைத்து அதில்
அத்தனையும் படைத்து
கோலங்கள் அழியாமல் எங்களைக்
காத்தருள்வாய் ஆண்டவனே!

இப்பாடலில் ஓர் இலக்கியக்காரனுக்கு இருக்கக்கூடிய மனித வாழ்வியல் பற்றிய பார்வை சாலவும் இழைகிறது. இங்கு "கோலங்கள்" என்பது வாழ்வியலில் இலங்கவேண்டிய அனைத்து வாழ்வியல் பண்புத்தன்மைகளை உணர்த்துவதாக இருக்கின்றன.

தாயே சரஸ்வதியே கலைச்

சங்கரியே என்நாவில்
குடியிருந்து நல்லோசை எனக்குக்
குரல் இனிக்கத் தாரும்அம்மா!

இங்கு சரஸ்வதி என்பவள் கல்வி கலைகளை அருளும் இந்து மதத்தில் ஒளிரும் தெய்வம் ஆகும். இந்தச் சரஸ்வதி தனது நாவில் குடியிருந்து தனக்கு இனிமையான குரலையும், பாடும் சக்தியையும் தரவேண்டும் என்று பிரார்த்திப்பதாக இப்பாடல் இருக்கின்றது.

✓ பல்வகை இயற்கையின் நிகழ்வுகளைத்தொட்ட பாடல்கள்.

பொழுது புலர்வதுவும் வானில்
பொன்னிலவு பூப்பதுவும்
மலைகள் கடல்கள் என்று இந்த
மண்ணுலகின் அதிசயம்பார்!

இயற்கை வளங்களின் நிகழ்வுகளைப்பார்த்த புலவனுக்கு வியக்கத்தக்க அதிசயங்களாக அவை இருக்கின்றன. பொழுது புலர்தல், பொன்னிலவு பூத்தல் என்கின்ற சொற்றொடர்கள் எழுத வாசிக்கத்தெரியாத கவிப்புலவனின் கற்பனை இரசனைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஒண்டா இரண்டா இந்த
ஒலகத்தின் அதிசயங்கள்
எண்ணிக் கணக்கெடுக்க நம்ம
எவராலுமே ஏலாதுகா!

இறைவனின் அற்புதமான இந்த உலகத்தின் இயற்கைப் படைப்புக்கள் எண்ணிக்கணக்கெடுக்க இயலாதவை என்று பாடுவதில் இறைவனின் நிகரில்லாத வல்லமை இழைகிறது.

✓ பெற்ற தாயைப்பற்றி பிள்ளை பாடும் படல்கள்.

பத்துமாதம் சுமந்து என்னைப்
படாத பாடுபட்டு
பெற்றுவளர்த்த ஒன்ன என்னால
பிரிந்திருக்கக் கூடுதில்ல!

பருவமைடைந்த மகள் திருமணம் செய்ததால் தாயை பிரிந்து கணவனுடன் வாழவேண்டிய நிலை - இந்தப் பிரிவினையைத் தாங்க இயலாத மகள் தாயை நினைத்து உருகுகிறாள். இதில் தாய்ப்பாசம் பளிச்சிடுகிறது.

பெட்டி துறந்து அதில்
புதுவிசிறி தான் எடுத்து
வீசுறங்கா உம்மா ஒண்ட
வேர்வை விட்டுப் போவதற்கு!

வேலை செய்து களைத்துபோய் வந்து வியர்வையுடன் சாய்ந்திருக்கும் தாயின் வியர்வை போக- விசிறியால் வீசவேண்டும் என்பது மகளின் ஆதங்கம். பெட்டியை திறந்து புதுவிசிறி ஒன்றை எடுத்து வந்து வீச வேண்டும் என்கின்ற அவளது எண்ணத்தில் மிகமான தாய்ப்பாசம் அப்படியே வெளிப்படுகிறது.

✓ பெற்ற பிள்ளையைப் பற்றி தாய் பாடும் பாடல்கள்

போறாய்கா புள்ளநொக்கு நான்
புத்திசொல்லத் தேவையில்லை

ஊரான் மணிக்கோர்வை கவனம்
ஒடஞ்சுபோனா வந்திவரும!

தன்னுடைய மகள் ஒழுக்கம் தவறவிடக்கூடாது என்பதில் மிகவும் அக்கறை தாய்க்கு. சொல்லாமல் புத்தி சொல்கிறாள். "ஊரான் மணிக்கோர்வை" என்கின்ற சொற்றொடர் எதிர்காலத்தில் வரக்கூடிய கணவனுக்குரிய கற்பு என்று உருவக அணியில் சொல்லப்படுகின்றது.

தங்கமே என்மகளே ஒண்ட
தலையில எழுதினது
பார்க்கப்பொறுக்குதில்ல எனக்கு
பொருந்துதில்ல சோறுதின்ன!

பருவமடைந்தும் மாப்பிள்ளை கிடைக்காமல் திருமணம் இன்றிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் மகளின் துரதிஷ்டத்தை எண்ணி – பொறுக்காது - இத்துயரத்தால் சோறுதின்னவும் மனம் இல்லாத தாயின் வெப்புசாரத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது இப்பாடல்.

✓ பருவமடைந்த மங்கை தனது மனம் விரும்பிய ஆடவனை தொட்டுப்பாடும் பாடல்கள்.

மான்வளர்த்தேன் குதிபாய அழகு
மயில்வளர்த்தேன் தான் ஆட
கிளிவளர்த்தேன் கதைபழக நீ
கிட்டஇருந்தால் போதுமகா!

தனது மனதில் இருக்கின்ற ஆடவன் தனது பக்கத்தில் இல்லாத குறையைப் போக்க மான் வளர்த்து அதோடு சேர்ந்து பாய்ந்து விளையாடிப்பார்க்கிறாள். மயில் வளர்த்தும் அதோடு சேர்ந்து தானும் ஆடிப்பார்க்கிறாள். கிளி வளர்த்து அதற்கு கதை சொல்லிக்கொடுத்தும் - கதைகேட்டும் பர்ர்கிறாள் - எந்த ஒன்று மே அவளுக்குத் திருப்பதி இல்லை. தான் விரும்பிய ஆடவன் தனது பக்கத்தில் இல்லையே என்ற அவளது ஏக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது இப்பாடல்.

வாழையடி வாழைமச்சான் என்ட
வாசலாலே நீபோறாய்
நானும் கடும்கொமரு என்ட
நாணயத்தை காத்திடணும்!

அவளது மனதில் இழையும் சொந்த முறைகார மச்சான் அவன். அவனில் ஆசையும்தான் அவளுக்கு. என்றாலும் தனது வீட்டு வாசலால் அடிக்கடி அவன் ஊடறுத்து செல்வதில் அவளுக்குள் ஏதோ ஒரு தயக்கம். என்ன கூறுகிறாள் தெரியுமா "நானும் கடும்கொமரு என்ட நாணயத்தைக் காத்திடுங்க"! என்று கூறும் போது அவள் தனது கற்புக்குக் கொடுக்கின்ற மதிப்பு உணரப்படுகின்றது.

வட்டை என்னும் வெட்டையில
வெங்கார வீதியில
வம்பன் என்னும் காத்தடிச்சு
மார்பில் துயில் உழுந்து
கொம்பன் என்னும் ஆனவந்து
மச்சான் என்னக்
கோடுகுத்திப் போட்டுதகா!

மனதில் நிறைந்த தனது மச்சானையே எண்ணிக்கொணடிருந்த அந்த மங்கை எதிர்பாராமல் தனக்கு ஏற்பட்ட களங்கத்தை அழுதவாறு விம்மி விம்மி அவனிடம் கூறுகிறாள்.

வெயிலில் வயல் வெளியில் நடந்து வந்து கொண்டிருந்த போது சடுதியாக வீசிய காற்று அவளது மார்பை மறைத்துக்கிடந்த சீலையை விலக்கி விடுகிறது. இவளைப் பின்பற்றிக்கொண்டிருந்த ஒருகாமுகன் இதை அவதானித்து ஆசை கொண்டு அண்மிச்சென்று வளைந்து அவளது கற்பைக்கெடுத்து விடுகிறான்.

இந்தப்பாடலில் "காற்று" வம்பனாக உருவகிக்கப்படுவதும் "கொம்பன் யானை" காமுகனாக உருவகிக்கப்படுவதும் கோடுகுத்தி என்பது " கற்பை களகங்கப்படுத்தி" என்பதும் உணரப்படுகிறது இங்கு.

✓ பருவமடைந்த ஆடவன் தனது மனம் விரும்பிய பருவமடைந்த மங்கையைத் தொட்டுப்பாடுவது

பட்டுப்புடவையில அழகான
பொட்டுப்பொற குத்தினாப் போல்
சித்தரிச்ச பல்லழகி இப்பநீ
சிரிச்சதொண்டும் போதுமகா!

அவன் தனது மனதில் நிறைந்தவளிடம் எவ்வளவுதான் கதைகள் கொடுத்தாலும் அவள் வாய்திறந்து பேசுவதே இல்லை. தலை குனிந்தவாறே செல்வாள் அவளுக்கும் அவன் மீது ஆசைதான் - காட்டிக்கொள்வதில்லை ஒருநாள் அசடு வழியும் அவனது பரிதாப நிலையைக்கண்டதும் அவளுக்குப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது சிரிப்பு. அழகிய பல்வரிசைகள் பளிச்சிடச் சிரித்து விடுகிறாள் அவள். இதைக்கண்டு தாங்க முடியாத சந்தோஷத்தில்தான் "இப்பநீ சிரிச்சதொண்டும் போதுமகா" என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறான் அவன்.

கானான் கறுப்பியரே
கருநிற ஒளிதரும் பொன்னிற வண்டே
கற்பவளக்கொடி முத்தொளி முகத்தாய் ஒன்னைக்
கண்டுவெகு காலமாச்சு!

அவன் தனது மனதில் நிறைந்தவளைக் கண்டு வெகுகாலம். எதிர்பாராமல் அவளைக் காண்கிறான். அடங்காது கற்பனைகள் முகிழ்கின்றன அவனுக்கு. "கானான" என்பது கறுப்பு நிறம் கொண்ட ஒரு கவர்ச்சிப்பறவை. தனது மனதில் நிறைந்த அவளும் கறுப்பு நிறம் கொண்டவளாக இருப்பதால் "கானான்" பறவையாக உருவகிக்கப்படுகிறாள் அவள். அந்தக் கறுப்பு நிறத்திலும் அவளை அழகு சொட்டும் ஒரு பொன்னிற வண்டாக – அவளது மெல்லிய இடையை பவளக்கல்லால் ஆன ஒரு கொடி ஆக – முகத்தை முத்துப் போல் ஒளிரும் முகமாக... இப்படி அந்தக் கறுப்பு நிறத்தவளை அழகுபடுத்துவதுடன் அதில் அந்த ஆடவன் பெருமை கொள்வதாகவும் புலவரின் பாடல் அமைகிறது.

கண்குளமும் கலங்கிருக்கு ஒண்ட
குஞ்சுமுகம் வாடிருக்கு
பழமும் கனிஞ்சிருக்கு ஒண்ட
பாணிதிண்டது ஆர்கிளியே ?

அவள் கண்ணீர் வடித்தவாறு கவலையோடு – வாடிய முகத்தோடு தனது மனதில் நிறைந்த அவன் முன் வந்து நின்று அழுகின்றாள். இவளது நிலை கண்டு அதிர்ந்து போன அவன் அச்சத்தோடும் வாஞ்சையோடும் வினவுகின்றான். கண்கள் கலங்கி இருக்கின்றன - முகம் வாடி இருக்கிறது – பழம் கனிந்து இருக்கிறது " ஒண்ட பாணி திண்டது ஆர் ?" என்று அவன் கேட்கின்ற மாதிரி பாடல் அமைகிறது. இதில் கிளியாக உருவகிக்கப்படும் அவளிடம் இருக்கும் "பழம்" அதில் தின்றதாகச் சொல்லப்படும் "பாணி"... என்று சடுகுடு விளையாடுகிறார் புலவர்.

✓ பிள்ளை இல்லாதவள் பிள்ளை வேண்டிப் பாடும் பாடல்

அல்லைக்குள் பன்புடுங்கி

ஆவரணப் பாய் எழச்சி
போட்டுப் படுக்கஒரு
புள்ளதாடா வல்லவனே!

திருமணம் ஆகிப் பல வருடங்கள் ஆகியும் தனக்கு ஒரு பிள்ளை இல்லையே என்கிற கவலை அவளுக்கு "அல்லை" என்று சொல்லப்படும் பள்ள வயலில் பன்களைப் பிடுங்கி வந்து வண்ணமான பாய் இழைத்து அதில் தன் குழந்தையை அணைத்துப் படுக்கவேண்டும். இது அவளது ஆசை. இது நிறைவேற வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகிறாள் - தனக்கு ஒரு பிள்ளை கிடைக்க வேண்டும் என்று.

மலடி மலடிஎன்று எண்ட
மானரோசம் போகிறது
கோலமயில் போலஒரு
குழைந்தையைத்தா ஆண்டவனே!

பிள்ளை இல்லாதவளைப்பார்த்து "மலடி மலடி" என்று பண்பில்லாதவர் பரிகாசம் செய்வர். இவ்வாறு பலரும் சொல்லும்போது அவள் தனது மானரோசம் போவதாக எண்ணுகிறாள். இதனால் அழகிய மயில் போல் தனக்கு ஒரு பிள்ளை உண்டாகப் பிரார்த்தனை செய்கிறாள் ஆண்டவனை. பிள்ளை இப்பாடலில் மயிலாக உவமிக்கப்படுகிறது.

✓ பாசத்திற்குரிய தன் பிள்ளையைத் தூங்கவைக்கும் தாலாட்டுப்பாடல்கள்.

கூவுவதற்குச் சாவல்வரும்
கொக்கரிக்கக் கோழிவரும்
குலவுசொல்லப் பூனைவரும்
குலமகளே நித்திரைசெய்!

'அழாதே அழாதே கூவி உன்னைச் சந்தோசப்படுத்த சேவல்வரும் கொக்கரித்து உன்னை மகிழ்விக்க கோழிவரும். குலவி உனக்கு கதைகள் சொல்ல பூனை வரும்' என்று தனது குழந்தையின் மனதைத் தேற்றி தூங்க வைக்கிறாள் தாய்.

பால்தரவா பழம்தரவா நீ
பதறியழ என்னசெய்தேன்
வேலைக்கு போனவாப்பா இனி
வந்திடுவார் நித்திரைசெய்!

தனது பிள்ளை பதறியழுகிறது "பால்தரவா பழம்தரவா என்று கேட்கின்றாள் தாய். ஒரு வேளை வாப்பாவின் நினைவு வந்து அழுகிறதோ என்று எண்ணி "வேலைக்கு போனவாப்பா வந்திடுவார்" என்று ஆறுதல் படுத்தி நித்திரை கொள்ளுமாறு கூறுகிறாள் தாய்.

✓ பல் வகையான அறநெறிப்பாடல்கள்.

ஓதிடனும் படித்திடனும் எல்லாரும்
உதவிடனும் எப்பவுமே
நீதிவழி தவறாமல் தர்மங்கள்
நிலைத்திடவே வாழ்ந்திடுவோம்!

'ஓதிடனும் படித்திடனும்' என்பதில் இறைவழி ஒழுக்கம் கல்வி அறிவு ... அத்தனையும் அடங்கி இருக்கின்றன. இத்தனையும் இருந்தாலும் ஒருவொருக்கொருவர் உதவுகின்ற மனப்பாங்கும் இலங்க வேண்டும் - நீதிவழியில் வாழ்வியல் அமைய வேண்டும். அப்போதுதான்

அனைத்தையும் காக்கும் தர்மங்கள் நிலைத்திடும். இவ்வாறு நிலைக்கவேண்டும் என்று வலியிறுத்துகிறது இப்பாடல்.

காணிபூமி சொத்துசுகம் எல்லாம்
கடல்போல இருந்தாலும்
மார்க்கம் பிழைத்தால் அத்தனையும்
மதிப்பிழந்து போகுமகா!

காணி பூமி சொத்து சுகம்... எல்லாம் எவ்வளவு தான் இருந்தாலும் நல் வழியில் வாழ்வு அமையவில்லை என்றால் அத்தனையும் மதிப்பிழந்து போய்விடும் "மார்க்கம்" என்பது இறை மத நீதி நெறி வழிகள் என்பதாகும்.

✓ பல்ரக தொழில்சார்ந்த பாடல்கள்.

உழைச்சிடனும் ஒத்துமையாய் நாம
உழுதுநெல்லு விதைச்சிடனும்
சோளகம் குரக்கன் என்று எல்லாரும்
செய்திடுவோம் சேனைப்பயிர்!

ஓவ்வொருவொரும் வாழ்வியலின் தேவைக்கர்க உழைக்கவேண்டும் - அதுவும் ஒற்றுமையாக. இங்கு உழைப்பினதும் ஒற்றுமையினதும் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு ஒற்றுமையாக இருந்து நெற்செய்கை , சோளம், குரக்கன் போன்ற சேனைப்பயிர்களை செய்வது அவசியம் என்பது இங்கு வலியுறுத்தப் படுகிறது இப்பாடலில்.

நிலத்தை உழுது சம்பா
நெல்லெறிந்து பயிராக்கி
விளையும் கதிர்களில்தான் எங்கட
வாழ்கையெல்லாம் இருக்குதுகா!

நெல் உற்பத்தியின் அவசியமும் விவசாயிகளின் உழைப்புக்களும் இங்கு வலியுறுத்தப்படுகிறது. விவசாயம் இல்லையேல் வாழ்வு இல்லை என்பதும் இப்பாடலில் அழுத்திச் சொல்லப்பட்டுள்ளது.

✓ பரிகாச நையாண்டிப் பாடல்கள்

வில்லு வெராலும் நல்ல
வெருகவிந்த நன்னீரும்
கொண்டவட்டான் சோறும் மச்சானைக்
கொழுக்கவைத்துப் போட்டுதுகா!

அவன் ஒரு விவசாயி கொண்டவட்டான் என்னும் வயலில் வேளாண்மை. வளத்தாபிட்டி வில் வாவியில் முளைத்திருக்கும் வெருகுப் புல்லுகளில் பட்டோடும் சுகந்தமான நீரைக்குடித்துத் தாகம் தீர்த்து - அந்த வாவியில் வரால் மீன்கள் பிடிப்பதும் ஆக்குவதும் சோறு சமைப்பதும் சாப்பிடுவதும்... அவனது வழக்கம். இந்த விதமான வரால் மீன்கறியும் சோறும் சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கொழுத்து விட்டதாக அவனைப் பார்த்து மச்சி நையாண்டி செய்யும் கவிப்பாடலே இது.

கொண்டவட்டான் புட்டியில தங்கிக்
கோடிமாடு கட்டக்கள
சட்டிபான சொறன்டித்திண்ட எண்ட
சண்டியனார் போறாருகா!

கொண்டவட்டான் என்னும் வயலில் அவளுடைய தந்தைக்கும் வேளாண்மை. தந்தை தாயோடு தானும் சென்று வாடியில் சோறுகறி ஆக்கிச் சாப்பிடுவது வழக்கம். இவர்களது வாடி வயலுக்குப் பக்கத்திலுள்ள மேட்டு நிலத்தில் இவளது மச்சானுக்கு மாடுகள் மேய்க்கும் தொழில். அடங்காத கோடிமாடுகளைக் காலைக்குள் போட்டுக் கட்டுவான். பசி எடுத்தால் தனது மச்சியாகிய இவளது வாடிக்குள் வருவான். " சோறுகறி முடிந்து விட்டதே" என்று மச்சி சொல்வாள். இருந்தாலும் ஆக்கிய பானை – சட்டிகளுக்குள் அடியில் ஒட்டி இருக்கின்ற தீஞ்சோற்றையும் வற்றிப்போய் இருக்கின்ற கறியையும் வழித்துச் சுரண்டிக் கலந்து தின்பான். இப்படிபட்டவன் ஒருநாள் அவளைக் கண்டும் காணாதது போல் செல்கிறான். இதை அவதானித்தவள்தான் கூறுகிறாள் "...சண்டியனார் போறாருகா!" என்று எப்படிக் கிண்டல்.

வருக்கன் பலாப்பழத்தை தண்ட
மடியில் வளத்தாட்டி
சுளகளத்தித் தின்னவந்தார் மச்சான்
வாய்க்கவில்லை போறாருகா!

அவனுக்கு தனது மச்சிமீது ஓர் ஆசை. ஆசையை நிறை வேற்ற எண்ணி மச்சியின் வீட்டிற்கு செல்கிறான் அவன். அதற்கு இடம் கொடுக்கவில்லை அவள். பாவம் அவன் ஏமாந்து திரும்பிச் செல்வதைப் பார்த்து அவள் நையாண்டி செய்வதே இப்பாடல். இதில் வருக்கன் பலாப்பழமாக அவள் உருவகிக்கப்படுகின்றாள். சுளை என்பது கற்பு.

✓ பரிதாப ஒப்பாரிப் பாடல்கள்

நீட்டிவிட்டார் கால்கள்தனை மூடி
நெடுகவிட்டார் முக்காட்ட
போட்ட சுறுமாவோடு என்னவிட்டும்
போய்புகுந்தார் எங்க வாப்பா!

தனது தந்தை மரணமாகி விட்டார். எடுத்துச் சென்று அடக்கம் செய்வதற்கு முன் மையத்தைக் குளிப்பாட்டி - சுறுமாவும் போட்டு – கபன் சீலையால் மூடி சந்தூக்கில் எடுத்துச் சென்று அடக்கம் செய்தும் விட்டனர். இதை நினைத்து கவலை உற்றவளாய் மகள் ஒப்பாரி வைப்பதாக சொல்லப்படுகிறது. இப்பாடலில் "போய் புகுந்தார்" என்பது கபுறுக்குள் அடக்கமாகி விட்டார் என்பது பொருள்.

வாப்பாவைப் பறிகொடுத்து நாலு
வருஷங்களும் ஆகவில்லை
தாயே என் தாலிக்குமுன் என்னத்
தனிமரமாய் ஆக்கிட்டியே!

அவள் பருவமடைந்தும் திருமணம் ஆகாதவள். அவளது தந்தை மரணமாகி நான்கு வருடங்கள் ஆவதற்குள் தாயும் மரணமாகி விடுகிறாள். இந்தப் பிரிவுத்துயரத்தைத் தாங்க முடியாது அவள் ஒப்பாரி வைப்பதாக இப்பாடல் அமைகிறது. " தாலிக்கு முன் " என்பது திருமணம் ஆவதற்குமுன்.

✓ பகை தீர்க்கும் வசை பாடல்கள்

தோடம்பழம் போல ஒண்ட
தொண்டையிலே கட்டிடுவாய்
நாவத் துறந்து ஒரு
நல்ல கதை சொல்லுமடா!

அவள் பருவடைந்த மங்கை. அவளில் மனம் வைத்தோ என்னவோ ஆடவன் ஒருவன் அவளைக்காணம் போதெல்லாம் அவளுக்கு பொருத்தமில்லாத வார்த்தைகளை

பிரயோகிக்கிறான். இதைச்சகிக்க முடியாத அந்த ஒழுக்கம் பேணும் மங்கை அவனைப்பார்த்து எரிச்சலுடன் கூறுவதாக இப்பாடல் அமைகிறது. கழுத்தில் ஏற்படுகின்ற "கழல் கட்டி" இதில் தோடம்பழமாக உருவகிக்கப்படுகிறது.

கண்டியிலே ஒரு பொண்டாட்டி அந்தக்
கரவாகுல ஒரு வைப்பாட்டி
நானும் ஒரு பொண்டாட்டி இந்த
நாசமத்துப் போவானுக்கு!

இல்லற வாழ்கையில் ஏதேதோ காரணங்களால் வழிதவறிப் போய்க்கொண்டிருக்கும் தனது கணவனை நோக்கி அன்பும் ஆத்திரமும் கலந்த உணர்வோடு மனைவி கூறுவதாக அமையும் பாடலே இது. இதில் "வைப்பாட்டி" என்பது சமய – சமூக- சட்ட அங்கீகாரம் எதுவுமே இல்லாது வாய்பான பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பது.

ஓதிப் படிச்சு நீ
ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழை நெருப்பு ஒன்ன
எரிக்கிறது சத்தியம் தான்!

கல்வி அறிவுகள் பல கற்று ஊரிலுள்ள பலராலும் புகழப்படுகின்ற ஓர் ஆடவனால் கெடுக்கப்பட்டு – ஏமாற்றப்பட்ட ஓர் ஏழைப் பெண் " எனக்கு நீ செய்த துரோகம் உன்னை நெருப்பாக எரிக்கும்!" என்று சத்தியம் செய்து அந்த ஆடவனை வைகிறாள். எந்த ஓர் ஏழைக்கு எவர் ஒருவர் துரோகம் செய்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது" என்பதையும் உணர்த்துகிறது இக்கவிப்பாடல்.

✓ பாசத்தை வெளிப்படுத்தும் வாழ்த்துப்பாடல்

தங்க மகனாரே நீங்க
தாலிகட்டின பொண்ணோட
சங்கைஒன்று கொறஞ்சிடாமல் எப்பவும்
சதிபதியாய் வாழ்ந்திடணும்!

தன் மகனின் இல்லற வாழ்கையில் அக்கறை கொண்ட பாசமிக்க தாய் மகனைப்பார்த்துக்கூறி வாழ்த்துகிறாள். " சங்கை" என்பது ஒருமனிதனுக்கு இழைந்திருக்க வேண்டிய நல்ல வாழ்வியல் பண்பு நெறிகள். "சதிபதி" என்கின்ற சொற்றொடர் எழுத வாசிக்கத் தெரியாத அக்காலப்புலவரால் உணரப்பட்டிருப்பது சிறப்பு.

செல்லக் கிளிகளாரே நீங்க
சேர்ந்தில பெருமையில்ல
நல்லவர்கள் போற்ற எல்லா
நலனும் பெற்று வாழ்திடணும்.

திருமணம் செய்து ஒன்று சேர்ந்து இல்லற வாழ்கையில் அடிஎடுத்து வைத்துள்ள கணவன், மனைவி இருவரையும் பார்த்து இவர்களில் பாசம் கொண்டவர்கள் கூறுவதாக அமைகிறது இப்பாடல். இதில் கணவனும் மனைவியும் கிளிகளாக உருவகிக்கப்படுகின்றனர்.

இத்தன்மைத்தான பாரம்பரிய வரலாற்றுச்சிறப்புமிக்க இக்கிராமிக் கவிப்பாடல்கள் அருகி – அழிந்து போய் விடாமல் பலராலும் தேடப்பட்டு திரட்டப்படடு பாதுகாக்கப்பட்டு – பேணப்பட்டு வரவேண்டியது இன்றிமையாதது.

கலைவேள் மாறன் - யூ.ஸெயின்

கலை கலாசார நிகழ்ச்சிகள் குழு

1. ஜனாப் எல்.எம். அஸ்லம் - தலைவர்
2. எம்.எஸ்.எம். அஸீம் - செயலாளர்
3. திருமதி மஷூறா மஜீது - ஆலோசகர்
4. திரு S கோணேசமூர்த்தி
5. திருமதி குறைசா நியாஸ்
6. ஜனாப் MT ராஜா
7. ஜனாப் SM ஜவாட்
8. திருமதி சத்தியவாணி
9. ஜனாப் HM ஜவாஹிர்



NEW CYCLE CENTRE



நியூ சைக்கிள் சென்டர்



கவர்ச்சிகரமான வர்ணங்களிலும் வடிவமைப்புக்களிலும் உள்ள அனைத்து விதமான முன்னணி கம்பனிகளினது தரமிக்க சைக்கிள்களையும் Japan, Thaiwan, China ஆகிய நாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதியாகும் Ladies Cycle களையும் Original உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்வதோடு உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள், போட்டோக்கொப்பி, லெமினேற்றிங், பெக்ஸ் வசதிகளோடு கல்முனை - கொழும்புக்கான சொகுசு பஸ் ஆசனப்பதிவுகளுக்கும் நாடுங்கள்

192/2,Ampara Road,Sammanthurai Tel: 077 2635959, 067 2261254
(Opposite: Al-Marjan Muslim Ladies College)

New Samad Tailoring

VILINAYADY JUNCTION, SAMMANTHURAI



நியூ சமட் டெயிலரிங்



விளினையடி சந்தி, அம்பாரை வீதி,
சம்மாந்துறை 077 6366206

மங்கயர்களை மகாராணிகளாக்கி மகிழ்ச்சியூட்டும், மிலேனியமாண்டில்
மின்னலிடும் அசல் 22 கரட் தங்கத்தை தரும் அழகிய நகையகம்



நபா கோல்ட் ஹவுஸ்
NAFA GOLD HOUSE



இளமைக்கு எழிலூட்டும் முகத்திற்கு
பொலிவூட்டும் காலத்திற்கு ஏற்ற தங்க
நகைகளை அழகிய டிசைன்களில் செய்து
கொள்ள சிறந்த இடம்.....

விளினையடி சந்தி, வெளிஸ் மாவத்தை, சம்மாந்துறை
067 7911259, 077 3436145, 0776282250

உரிமையாளர் எஸ்.எல். நபீர்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் அசல் தங்கத்தில் உத்தரவாத முத்திரை பொறித்துத் தரப்படும்
திருமண ஓடர்கள் அனைத்தையும் ஒரே தடவையில் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள உடன் நாடுங்கள்

பிரண்டஷிப் எம்போரியம்

இப்போது ஒரு புதிய தெரிவு உங்கள் அத்தனை பேரினதும்
ஆடைத்தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள,
உங்கள் உடல், உள நலத்துக்கான மருந்துவத்தேவைக்கு சிறந்த இடமாகவும்,
விவசாய அறுவடைத் தேவைகளை பூர்த்தி செய்யவும் நாடவேண்டிய ஒரே இடம்
விளினையடி சந்தியில்



FRIENDSHIP EMPORIUM

விளினையடி சந்தி, சம்மாந்துறை

067 2260183



FRINCE TEX & TAILORS

No: 192/1,AMPARA ROAD,SAMMANTHURAI

Mobile:077 6033763



பிரின்ஸ் டெக்ஸ் அன்ட் டெயிலர்

அம்பாரை வீதி, சம்மாந்துறை

077 6033763



சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



பெயர்கள் மறுபக்கத்தில்



சமூர்த்தி முகாமையாளர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பெயர் விபரம்

1. ஜனாப் எம்.பி.எம்.ஹுசைன் - தலைமைக்காரியாலய முகாமையாளர்
2. ஜனாப் ஏ.எல்.எம்.நஜீப் - சமூர்த்தி முகாமையாளர்
3. ஜனாப் எஸ் எல். எம் மசூர் - சமூர்த்தி முகாமையாளர்
4. ஜனாப் ஏ.ஜினேந்திரன் - சமூர்த்தி முகாமையாளர்
5. ஜனாபா ஜ.எல்.யு ஜுனைதா - சமூர்த்தி முகாமையாளர்
6. ஜனாப் ஏ.எம் தையூப் - மகா சங்க உதவி முகாமையாளர்
7. ஜனாப் எம்.எம்.ஜுனைதீன் - சமூர்த்தி திட்ட உதவியாளர்
8. ஜனாப் ஏ.ஜே.எம்.ஹனீபா - வங்கி உதவி முகாமையாளர்
9. ஜனாப் ஏ.ஏ.அஸீஸ் - வங்கி உதவி முகாமையாளர்
10. ஜனாப் ஏ.றசூல் - வங்கி உதவி முகாமையாளர்
11. ஜனாப் எம்.எம்.ஏ.றசீட் - வங்கி உதவி முகாமையாளர்
12. ஜனாப் எம்.எம்.அமீனுதீன் - வலய உதவி முகாமையாளர்
13. ஜனாப் ஏ.எம்.ஏ.கபூர் - வலய உதவி முகாமையாளர்
14. ஜனாப் எஸ்.எல்.ஜ.்.பர் - வலய உதவி முகாமையாளர்
15. ஜனாப் எம்.எம்.தமீம் - வலய உதவி முகாமையாளர்
16. ஜனாப் ஏ.எம்.இப்றாகிம்
17. ஜனாபா ஏ.சி.றிஸ்வானா
18. ஜனாபா எம்.ரி.நைபா
19. ஜனாபா ஐ.எல்.மரியங்கண்டு
20. ஜனாப் எம்.பி.ஏ.றசூல்
21. ஜனாப் எம்.சி.எம்.பாரிஸ்
22. ஜனாப் எம்.ஐ.டக்கீட்
23. ஜனாபா கே.எல்.மும்தாஜ்
24. ஜனாப் எம்.எல்.நளீம்
25. ஜனாபா எம்.பி.நஜீபா
26. ஜனாப் கே.எல் அமீர் அலி
27. ஜனாப் எம்.எல்.எம்.அன்வர்
28. ஜனாபா எம்.ஏ.கதிசம்பு
29. ஜனாபா ஏ.எல்.நஸீறா
30. ஜனாபா ஏ.சி.பசீறா
31. ஜனாபா எம்.சி. பாத்துமுத்து
32. ஜனாப் ஏ.எம்.முனாஸ்
33. ஜனாப் என்.ஆதம்பாவா
34. ஜனாபா யு.எல்.பாத்திமா
35. ஜனாப் ஐ.எல்.அலி அக்பர்
36. ஜனாபா எம்.வை.யு.ஆயிஷா
37. ஜனாபா யு.எல் ஹிதாயா
38. ஜனாப் ஏ.எம்.நஸ்றுதீன்
39. ஜனாப் ஏ.சி.எம்.காலித்
40. ஜனாபா வி.ரி.குறைசியா
41. ஜனாபா ஐ.எல்.யு.அனூன் பீவி
42. ஜனாப் எஸ்.நாஸர்
43. திருமதி கே.கோசலை
44. ஜனாப் ஏ.எல்.முகம்மட் அலி
45. ஜனாபா எம்.வை.எஸ்.நளீபா
46. ஜனாப் ஏ.பி.சாதிக்
47. ஜனாப் ஏ.சி.எம்.நஜீப்
48. ஜனாபா எம்.ஐ.அகமட் நிஸா
49. ஜனாப் ஏ.ஏ.மஜீட்
50. ஜனாபா வி.ரி.நஜீபா
51. ஜனாப் எம்.ஐ.ஏ.றசீட்
52. ஜனாப் எம்.ஏ.சி.எம்.நளீம்
53. ஜனாப் எம்.ஏ.மஜீட்
54. ஜனாபா எம்.ரி.பௌசியா
55. ஜனாப் ஏ.எல்.நஸீர்
56. ஜனாப் எஸ்.ஐ.அஸீஸ்
57. ஜனாப் எம்.ஏ.ஜௌபர்
58. ஜனாப் ஏ.எம்.முகம்மட்தம்பி
59. ஜனாப் எம்.ஏ.வை பாவா
60. ஜனாப் எம்.எல்.எம்.அமீன்
61. ஜனாப் வை.எம்.இஸ்மாயில்
62. ஜனாபா கே.எல்.அஜிஸா
63. ஜனாபா எம்.எம்.ஆயிஷாபீவி

64. ஜனாபா எஸ்.எல்.எஸ்.ஜனுபா
65. ஜனாப் ஐ.எல்.ஏ.றசீட்
66. ஜனாப் ஏ.எம்.ஏ.அமீர்
67. ஜனாப் ஏ.எம்.அமீர்
68. ஜனாப் ஏ.ஜ.்.பர்
69. திருமதி என்.யோகராணி
70. திருமதி பி.அருந்தவநாயகி
71. ஜனாப் ஏ.எல்.எம். ஜாபிர்
72. திருமதி ரி.இந்திராணி
73. திரு கே.சிறிகரன்
74. திரு என்.புஸ்ப சுரேஸ்
75. திரு ஜே.டப்ளியூ.திஸ்நாயக்க
76. ஜனாபா எஸ்.எம்.கதிஜாஉம்மா
77. ஜனாபா எஸ்.எம்.யு.சல்ஹாஉம்மா
78. ஜனாப் எம்.எம்.நளீம்
79. ஜனாபா எம்.ஏ.நஸீறா
80. ஜனாபா எம்.எல் றசீனா
81. ஜனாப் ஏ.ஏ.றசூல்
82. ஜனாபா ஏ.றசீதா
83. ஜனாபா ஏ.எகினாபீவி
84. ஜனாப் ஏ.எல்.சஹீட்
85. ஜனாப் எம்.ஐ.ஏ.றகுமான்
86. திரு எஸ்.நவனீதக்குமார்
87. திருமதி கே.நந்தினி தேவி
88. திருமதி எஸ்.றாஜி
89. திருமதி ஏ.தயானந்தி
90. ஜனாப் எம்.எம்.மனாஸிர்
91. ஜனாப் எம்.பி.லாபிர்
92. ஜனாப் எஸ்.நஸ்றின்
93. ஜனாபா ஏ.ஜெமிலா

ஊடக பிரசார விளம்பரக்குழு

1. ஜனாப் AJM ஹனீபா JP – தலைவர்
2. ஜனாப் IA றகீம் - செயலாளர்
3. ஜனாப் ULM றியாஸ்
4. ஜனாப் NM புவாட்
5. ஜனாப் SM ஜவாட்
6. ஜனாப் MC அன்சார்
7. ஜனாப் A ஜஹாகான்
8. ஜனாப் MAM ஹிமாயத்தல்லாஹ்

இரு கவிஞர்களின் கூற்று

ஒரு கவிஞர் குறிப்பிடுகிறார்

கதையுங்கள்
முடியுமான அளவு உண்மையானதை.
ஏனெனில்,
பேச்சு உயிருள்ளது.மௌனம் உயிரற்றது.
சொல்வற்கு உண்மை இல்லையானால்
மௌனம்தான் உண்மை.

இன்னொரு கவிஞர் சொல்லுகிறார்

மௌனம் சிறந்தது.
அமைதி பாதுகாப்பானது.
நீ,பேசினால் தேவையற்றதை விட்டு விடு.
மௌனம் சாதித்தமைக்காக
ஒரு முறை வருந்தினாலும்
பேசியதற்காய் பலமுறை
வருந்த வேண்டி வரும்

கானா, காவன்னாக் கவிதை

கவி தருபவன் கவிஞன்
காவித் திரிபவன் கோளன்

கதவு திறந்தால் நுளைதல்
காது திறந்தால் கேட்டல்
கனியைச் சுவைத்தால் இன்பம்
காணியை விதைத்தால் இலாபம்

கல் மூன்று அடுப்பதற்கு
கால் இரண்டு நடப்பதற்கு

களை பிடுங்குதல் நியதி
காளை அடங்குதல் அமைதி

கற்பதால் பயன் அறிவு
காற்பதித்ததால் பயன் உறுதி

கற்றுக் கொடுப்பது தர்மம்
காற்றைக் கெடுப்பது அதர்மம்

கரம் பற்றினால் திருமணம்
காரம் பற்றினால் எரிகுணம்

கப்பம் கொடுப்பது பாவம்
காப்போம் நன்மைகள் யாவும்.

கண்ணை மூடினால் நித்திரை
காண்பது அதன் பின் சொப்பனம்

கருணை காட்டுவான் இறைவன்
காலை வாருவான் பகைவன்

களவு எடுப்பது பாவம்
காத்திருந்து கொடுப்பது புண்ணியம்

கலை கல்வியின் பகுதி
காலை காலத்தின் பகுதி

கண்ணும் கண்ணும் நோக்குதல்
காதும் காதும் இரகசியம்.

கத்தரிக்க வேண்டியது பகையை
காத்திருக்க வேண்டியது பயனை

கருவி இயங்கினால் மனிதருக்குப் பயன்
கார் மேகம் இறங்கினால் மண்ணிற்குப்பயன்

கதறும் மழலை தாயோடு இணையும்
காதறும் மாலை கழுத்தோடு பிரியும்

கண்ணீர் ஓடினால் வருந்துதல்
கால்வாயால் ஓடினால் அருந்துதல்

கடலடிக்குச் சென்றோம் மகிழ்ச்சி
காலடிக்கு அது வந்ததால் சுனாமி

கவிதையில் கண்டால் தவறு
காட்டுவிர் கனிவு தவறாது

மௌலவி:
மு.யா.அஹ்மத் ஜலீல் ஆசிரியர்

காலையினூடே ஒரு சாலை



சேனைவட்டைச் சாலை



சம்மாந்துறையில் கலை இலக்கிய அமைப்புக்கள்.

1950 ஆம் ஆண்டிற்கு முன்பு சம்மாந்துறை மக்கள் மத்தியில் கல்வி அறிவு போதாமை காரணமாக மூட நம்பிக்கைகள் மலிந்து காணப்பட்டன. எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே இருந்தனர். அவர்களும் அந்நம்பிக்கைகளில் உள்வாங்கப்பட்டார்கள். அவர்களின் வாழ்வாதார செயற்பாடுகளும் குறிப்பிட்ட காலங்களுக்குள்ளேயே நிகழ்ந்தன. அதனால் மக்களுக்கு போதிய ஓய்வு நேரம் இருந்தது எனலாம்.

அக்காலத்தில் கல்யாண வீடுகளிலும், சுன்னத்து கல்யாண வீடுகளிலும், பெருநாட் காலங்களிலும் அப்பாஸ் நாடகம், அலிபாதுசா நாடகம், தையா சுல்தான் போன்ற நாடகங்கள் இங்கிருந்த சில குழுவினரால் இராக் காலங்களில் நடாத்திக் கொண்டிருந்தார்கள். மேலும் சில குழுவினர் பள்ளுப் பாடுதல், பஜனைக் கச்சேரி எனும் இசைக் கச்சேரிகளையும், கோடு கச்சேரி எனும் நகைச்சுவை நாடகங்களையும் நடாத்தி மக்களை மகிழ்வித்தனர். இவ்வாறான கலை நிகழ்ச்சிகள் 1950 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் படிப்படியாக மறையத் தொடங்கின.

இதன் பின்னர்தான் கலை, இலக்கியத் துறைகளை வளர்ப்பதற்கு சில அமைப்புக்கள், கழகங்கள் தோன்றின.

அவைகளின் விபரங்கள்.

1. கலாபிவிருத்திக் கழகம் - 1956

அமைப்பாளர்கள்

யூ.எம்.முஸ்தபா
மர்ஹூம் எம்.ஏ.றசீத்
யூ.செயின்
எஸ்.ஏ.றாசீக்
மர்ஹூம் பாவலர் பசீல் காரியப்பர்
மர்ஹூம் ஏ.ஏ.கரீம்
ஏஸ்.எஸ்.மணியம்
ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை
ஏ.எல்.எம் யாசீன்
எஸ்.எச்.எம்.முஸ்தபா
மர்ஹூம் எம்.எம். இஸ்மாயில்

மேடையேற்றிய நாடகங்கள்:

குடியின் கொடுமை, (1956)
யார் குற்றவாளி (1957)
தியாகரத்தம்
தீரன் திப்பு சுல்தான் (1959)
'கலைக்குரல்' கையெழுத்துப் பத்திரிகை

மேலும் 1960 இல் கிழக்கிலங்கை மட்டத்தில் பேச்சு, கட்டுரை, கலைப்போட்டிகளை நடாத்தினார்கள். இதில் பேச்சுப் போட்டியில் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.ப் முதலிடம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஈழ மேகம் பக்கீர் தம்பியின் உரைமலர், மழையும் துளியும், அறவழிக்கீதம் எனும் புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

2. இளைஞர் இசைக் கழகம்: - 1959

அமைப்பாளர்கள்

ஏ.ஏ.றகீம்,
ஏ.சி.இஸ்மாலெவ்வை

எஸ்.எச்.எம்.முஸ்தபா
எம்.இஸ்மாலெவ்வை
வி.எஸ்.வேலாயுதம்

போன்றோர் சங்கீத ஆசிரியர் மூலம் முறையாக கர்நாடக சங்கீதம் கற்றமை, சில மேடைகளில் பாட்டுக் கச்சேரிகள் நடாத்தினார்கள்.

3. கலைச்சுடர் மன்றம் - 1960

ஸ்தாபகர்கள் எஸ்.எச்.எம்.முஸ்தபா
எம்.எம்.முஸ்தபா

நாடகப் பயிற்சி கருத்தரங்குகள், இலக்கிய, சமூக மாதாந்த சஞ்சிகை "முள்" வெளியீடு.

4. முத்தமிழ் முன்னணிக் கழகம் -1962

ஸ்தாபகர்கள் கே.எம்.முஸ்தபா
ஏ.இப்றாஹிம்
மேடைநாடகங்கள் சில அரங்கேற்றப்பட்டன.

5. வசந்த மாளிகை நண்பர்கள் ஒன்றியம் -1966

ஸ்தாபகர்கள் ஏ.எம்.ஏ.லாபிர்.
எஸ்.எல்.எம்.இப்ராஹிம்

இசை நிகழ்வுகள் ,கலை இலக்கியக் கருத்தரங்குகள்.

6. வளர் கலை மன்றம் - 1969

ஸ்தாபகர்கள் எஸ்.கே.லெவ்வை
தினகரன் இஸ்மாயில்

கதை கட்டுரை, கவிதைப் போட்கடிள்

7. நோட் நோட் போர் கலைக்கழகம் - 1969

ஸ்தாபகர்கள் எம்.ரி.ராஜா
ஏம்.ஐ.மீராலெவ்வை

மேடை நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள்

8. மாறன் நாடக இலக்கிய மன்றம் - 1970

ஸ்தாபகர்கள் மாறன் யூ.செயின்
ஏ.எல்.மஹ்முது லெவ்வை

நாடகப் பயிற்சிகள்,நாடக அரங்கேற்றம்

9. மக்கள் கலை வட்டம் - 1971

ஸ்தாபகர்கள் வீ.ஆனந்தன்
ஈழக்குயில் இதிரிஸ்

கலை இலக்கிய கருத்தரங்குகள். களவெட்டி சஞ்சிகை.

10. தேசிய கலைக்குன்றம் - 1971

ஸ்தாபகர்கள் மாறன் யூ.செயின்
எம்.ஐ.மீராலெவ்வை

நாடக அரங்கேற்றம்,கவியரங்குகள், கொள்கை இலக்கிய சஞ்சிகை வெளியீடு.

11. முத்தமிழ் கலா மன்றம் - 1973

ஸ்தாபகர்கள் கே.எல்.எம்.சலீம்
ஏ.மகுமுது லெவ்வை

மேடை நாடகங்கள்,இசையரங்குகள்

12. தமிழ் எழுத்தாளர் சங்கம்[-1973

ஸ்தாபகர்கள் பாவலர் பஸீர்காரியப்பர்
மாறன் யூ.செயின்

கலை இலக்கிய போட்டிகள்,கருத்தரங்குகள்

13. உழைப்பாளர் கலை இலக்கிய ஒன்றியம் - 1976

ஸ்தாபகர்கள் தினகரன் இஸ்மாயில்
வீ.ஆனந்தன்

கலை இலக்கிய போட்டிகள்,கருத்தரங்குகள்

14. தினகரன் மகளிர் கலை வட்டம் - 1982

ஸ்தாபகர்கள் மஷூறா ஏ மஜீட்
மாஜிதா ஏ ஹமீட்

இலக்கிய கருத்தரங்குகள், கவிதைப் போட்டிகள்

15. நிறைமதி கலை இலக்கிய வட்டம் - 1983

ஸ்தாபகர்கள் மஷூறா ஏ மஜீட்
குறைஷா எம் காஸிம்

கருத்தரங்குகள், கலைப் போட்டிகள், "நிறைமதி" சஞ்சிகை வெளியீடு.

16. மத்திய இளைஞர் கலைக் கழகம் - 1986

ஸ்தாபகர்கள் எஸ்.யூ.எம்.நிஸார்
மஷூறா ஏ மஜீட்

"யௌவனம்" கலை, இலக்கிய சஞ்சிகை

17. சமூகசேவைகள் கலை இலக்கிய அபிவிருத்தி அமைப்பு – 1986

ஸ்தாபகர்கள் எம்.ஏ.சீ.எம்.மக்கீன்
ஏ.ஏ.றகீம்

கலை இலக்கியப் போட்டிகள், கருத்தரங்குகள், நாடகப் பயிற்சி

18. தேசிய கலை இலக்கிய தேனகம் - 1992

ஸ்தாபகர்கள் மாறன் யூ.ஸெயின்
ஏ.எல்.சாய்வுத்தம்பி

கலை இலக்கியப் போட்டிகள், கருத்தரங்குகள், தமிழ் இலக்கியம் Iஆம் IIஆம் பாகம், றோசாச்செய்கை, புள்ளியைத்தேடும் புள்ளிமான், அத்தனையும் முத்துக்கள், கூன் நிமிர்கிறது.

19. "ஸ்கொல்ப்" அமைப்பு – 1999

ஸ்தாபகர்கள் ஏ.பீ.எம்.ராஜி
ஏ.கே.எம் ஹப்மி

கலை இலக்கிய கலாசாரப் போட்டிகள், "குமுறல்" சஞ்சிகை வெளியீடு

20. பாவலர் பசீல் காரியப்பர் இரசிகர் வட்டம் -2000

ஸ்தாபகர்கள் ஐ.எல். ஜலீல்
ஏ.எம்.எப் பஸ்மியா

இலக்கிய ஒன்று கூடல் பாவலருடன் ஓர் இரசனைச் சந்திப்பு "அசரா" பத்திரிகை, "பட்டிப்பளை" நூல் வெளியீடு.

21. நாவலர் ஈழமேகம் நினைவு மன்றம் - 2002

ஸ்தாபகர்கள் யூ.எல். அலியார்
றமீஸ் அப்துல்லாஹ்

கருத்தரங்குகள், ஈழமேக நினைவுச்சுவடுகள் நூல் வெளியீடு

22. பிரதேச கலை இலக்கியப் பேரவை – 2002

ஸ்தாபகர்கள் மாறன் - யூ. செயின்
எஸ்.எம்.ஜவாத்

கலை இலக்கியப் போட்டிகள், கருத்தரங்குகள், "கிராமிய சமூக கவிகள்" திரட்டு

23. முற்போக்கு சமூக கலாசார முன்னணி - 2004

ஸ்தாபகர்கள் ஏ.எல்.ஜே. சாதீக்
எஸ்.ஐ.எம் தர்ஷாத்

கலை இலக்கியப் போட்டிகள், கருத்தரங்குகள்

24. பிரதேச கலைக் கழகம் - 2004

ஸ்தாபகர்கள் எம்.ரி ராசா
கே.எல்.எம் கபீர்

கலை இலக்கிய கருத்தரங்குகள், கலைப் பயிற்சிப் பட்டறை

25. சமூக பொருளாதார கலாசார நலன்புரி ஐக்கிய அமைப்பு – 2004

ஸ்தாபகர்கள் ஏ.சீ.ஏ.எம். இஸ்மாயில்
ஏ.பி.எம். சிராஜ்

அஷ்ரப் நினைவு தினப் போட்டிகள், கலை கலாசார கருத்தரங்குகள்

26. "பென்கிளப்" ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பு -2005

ஸ்தாபகர்கள் மாஜிதா தௌபீக்
மஷுறா ஏ. மஜீட்

"ஒலிகள் வெளிவராத ராகங்கள்" பெண்களின் கவிதை திரட்டு கவியரங்குகள்

27. படர்க்கைகள் இணையம் - ஸ்ரீ லங்கா -2006

ஸ்தாபகர்கள் எம்.எச். றிஸ்வானுல் ஹக்
பரீட்

கவியரங்குகள், கலை கலாசார கருத்தரங்குகள்

28. அம்பாறை மாவட்ட எழுத்தாளர் கலைஞர் ஒன்றியம் -2007

ஸ்தாபகர்கள் எம்.ஏ.சீ.எம். மக்கீன்

அகில இலங்கை ரீதியில் கலை கலாசார போட்டிகள்,இலக்கிய கருத்தரங்குகள்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மன்றங்கள் ஏதோ ஒரு வகை உந்துதலால் உருவாக்கப்பட்டாலும் பெரும்பாலான மன்றங்கள் அவற்றின் நோக்கங்களை தொடர்ந்து நிறைவேற்றக் கிடைக்கவில்லை எனக் கொள்ளலாம். அதனால் சம்மாந்துறையின் கலை இலக்கிய விளைவுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இதனை ஈடு செய்வதாக இருந்தால் இப்பிரதேசத்தில் உள்ள உயர் தரப்பாடசாலைகள் இவற்றிற்கு களம் அமைத்துக்கு கொடுக்கவேண்டியது அவசியமாகும். வருடாந்தம் நிகழும் தமிழ் மொழி தினப் போட்டிகளைக்கூட தரமாக நடாத்த இயலாமல் இருப்பது துரதிஷ்டமான நிகழ்வாகும்.

நன்றி

அல் - ஹாஜ் எஸ்.எச்.எம். முஸ்தபா (ஓ.பெற்ற அதிபர்) JP

பெண்களும் பருவங்களும்

1.	பேதை	-	5-7 வயது
2.	பெதும்பை	-	8-12 வயது
3.	மங்கை	-	12-13 வயது
4.	மடந்தை	-	14-19 வயது
5.	அரிவை	-	20-25 வயது
6.	தெரிவை	-	26-31 வயது
7.	பேரிளம்பெண்		31-40 வயது

விருத்தாப்பியனின் சவப்பெட்டி

எம்.எம்.நௌஷாத்

அர்த்தம் பொதிந்த வகையில் தத்துவஞானிகள் உதிர்க்கும் தத்துவங்கள் மீது எனக்கு சின்ன வயதிலிருந்தே அதீத பிரேமை இருந்தது. எனவே பல்கலைக் கழகத்திலே மனித இயலில் பட்டப் படிப்பை முடித்த கையோடு தத்துவவியலில் பட்டப் பின் படிப்பையும் முடித்துக் கொண்டு பிரான்ஸில் உள்ள பிரபலமான பல்கலைக் கழகமொன்றில் விரிவுரையாளராக இணைந்து கொண்டேன் பிரஞ்சு மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்த காரணத்தால். அப்போது எனக்கு வயது இருபத்தெட்டு.

இரவிலே கண்விழித்து பகலிலே பசியோடிருந்து தத்துவங்களை நெட்டுருப் பண்ணி ஒப்பு வித்துத்தான் மாணவர்கள் பட்டங்களையும், விஷேட பட்டங்களையும் பெற்று வந்தனர். இந்த வகையான கிளிப்பிள்ளைக் கல்வி எனக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்கவில்லை. என்னுடைய வாழ்க்கைக்காலத்தில் பெரும்பகுதி பயணங்களில் தான் கழிந்தது. அதற்குக் காரணமும் இருந்தது. பிரமாண்ட அளவில் எழுதப்பட்டிருந்த தத்துவங்களில் சொற்பஅளவாவது யதார்த்தம் இருக்கிறதா? அந்தத் தத்துவங்களின் அட்சரம் பிசகாது இந்த உலகத்தின் எந்த மூலையிலாவது யாராவது வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? என்று அறிந்து கொள்ளத்தான் இந்தச்சஞ்சாரம் எல்லாம். இத்தனை வருடங்களாக அப்படியான ஒரு மனிதனைத்தான் தேடிக் கொண்டிருந்தேன்: கிடைக்க வில்லை.

நான் ஒருமுறை இமயமலையின் அடிவாரத்திற்குச் சென்றிருந்தேன். ஞானிகளையும், ரிஷிகளையும், தத்துவஞானிகளையும் ஒருங்கே தரிசிக்க வேண்டுமென்றால் இமயமலையின் அடிவாரம்தான் இடம். இந்தியத் தத்துவநூல்களில் ரிஷிகள் பற்றி நிறைய வர்ணனைகள் செய்திருந்தார்கள். அவர்கள் காலவோட்டத்திலே தவவலிமை காரணமாக மகரிஷிகளாக உருவெடுப்பார்கள் என்றும் எழுதியிருந்தார்கள். அந்த வர்ணனைகள் அச்சொட்டாகப் பொருந்நக் கூடிய, இடுப்பு வரை தொங்கும் நீண்ட நரைத்த தாடி வளர்த்த, கண்களில் ஞானத்தீட்சண்யம் புதைந்த ஒரு ரிஷியை அங்கு சந்தித்தேன். வாரப்படாத சிக்குடன் காணப்பட்ட பரட்டைத் தலையைப் பார்த்தவுடன் குமட்டல் வந்த போதிலும் பொறுத்துக் கொண்டேன்.

"இந்த இமயமலைச் சாரலிலே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன் நான்.

"தவம் செய்து கொண்டிருக்கிறேன்"

"தவம் என்றால் என்ன?" என்று மீண்டும் கேட்டேன் நான்.

"கண்களை மூடி ஆடாமல் அசையாமல் மனதை ஒருமுகப்படுத்தி கடவுளை நோக்கியவாறு கடவுளின் சிந்தனையுடனேயே இருக்க வேண்டும்"

"அப்படித் தவம் செய்தால் என்ன பிரதிபலன் எங்களுக்குக் கிடைக்கும்?"

"கடவுளின் அனுக்கிரகம் கிடைக்கும்"

"அப்படிக் கடவுளின் அனுக்கிரகம் நமக்குக் கிடைத்தால் அதற்குப் பிறகு?"

"நாம் எவற்றையெல்லாம் நம்முடைய வாழ்க்கையில் விரும்புகிறோமோ அவையெல்லாம் நமக்குக்கிட்டும். அழகான வீட்டின் மீது ஆசையிருந்தால் அது, ஆடம்பர வாகனம் மீது ஆசையிருந்தால் அது, அழகான மனைவி மீது ஆசையிருந்தல் அது..." என்று அடுக்கிக் கொண்டே போனார் ரிஷி.

"நீங்கள் திருமணம் முடித்தவரா?" என்று கேட்டேன் நான்.

"ஐயோ! சம்சார வாழ்க்கை நம் தவத்தை நாசமாக்கி விடும்" என்று காதுகளை மூடிக் கொண்டார் ரிஷி.

"நீங்கள் இந்த இமயமலைச்சாரலிலே எத்தனை வருடங்களாகத்தவம் செய்கிறீர்கள்?" என்று மீண்டும் கேட்டேன் நான்.

"இருபது வருடங்களாக"
"இருபது வருடங்கள் தவஞ் செய்த உங்களுக்கு கடவுளின் அனுக்கிரகம் கிட்டி விட்டதா?"
"இல்லை"
"இருபது வருடங்களாக உங்களுக்குக் கிடைக்காத கடவுளின் அனுக்கிரகம் இனிமேலும் கிடைக்குமென்று நம்புகிறிர்களா?"
"அதிலென்ன சந்தேகம்? நாம் தொடர்ச்சியாக முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்" என்றார் ரிஷி. "ரிஷி அவர்களே நான் சொல்கிறேன் என்று கோபிக்க வேண்டாம் கடவுளை நீங்கள் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள்" என்றேன் நான்.
"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"
"நீங்கள் இந்த இருபது வருடங்களும் உங்கள் கைகளால் உழைத்து வந்திருப்பீர்களென்றால் நீங்கள் என்னென்ன ஆசைப்பட்டீர்களோ எல்லாமே கிடைத்திருக்கும். அழகான மனைவி, ஆடம்பர வாகனம், மாளிகை எல்லாமே. நீங்கள் உங்கள் வாழ்க்கையை வீணடித்து விட்டீர்கள்" என்றேன் நான்.
நான் சொன்ன இந்தத்தத்துவங்கள் ரிஷியை நிலை குலையச்செய்து விட்டது. மனசையும் அப்படியே சுட்டிருக்க வேண்டும். அன்றிலிருந்து என்னுடன் பேசுவதையே அடியோடு நிறுத்திக் கொண்டார் ரிஷி.
அதற்குப் பிறகு சுவர்க்கத்தீவை நோக்கி என்னுடைய சஞ்சாரத்தைத் தொடர்ந்தேன். சுவர்க்கத்து தீவு எனக்கு நன்றாகப் பிடித்துப் போய்விட்டது. நல்ல மனிதர்கள், எப்போதும் முகத்தில் புன்னகை தவழப் பழகுவார்கள். இவ்வாறு சுவர்க்கத்துத்தீவில் பல நாட்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்த போதுதான் ஒர் அபூர்வமான சவப்பெட்டியைச் சந்தித்தேன்.
சவப்பெட்டி அபூர்வமானது; நிறமும் அபூர்வமானது. கபிலமாகவும் இல்லாமல் பொன்னிற மாகவும் இல்லாமல் மஞ்சளாகவும் இல்லாமல் அது ஒலிவ் பச்சையில் இருந்தது. தடவிப் பார்த்தேன். மேற்பரப்பு கரடுமுரடாக இருந்தது. உள்ளே கைகளை விட்டுத் துழாவினேன் உட்பரப்பும் கரடுமுரடாக இருந்தது.
அந்த அபூர்வமான சவப்பெட்டிக்குச் சொந்தக்காரனும் ஒர் அபூர்வமான மனிதன். அவனுடைய பெயர் ஜவான் வயது ஓர் அறுபது இருக்கும் மலையடிவாரத்தில் வாழ்ந்து வந்தான். அருகில் அழகான நீர்வீழ்ச்சியும், பசுமை கொழிக்கும் வனாந்தரமும், நீர் வீழ்ச்சியிலே நீர் விழுந்து தெறிக்கும் ஒலி எந்த வேளையிலும் கேட்டுக் கொண்டும் இருந்தது.
இந்தமனிதனைப் பற்றிக் கிராமத்தில் எல்லோரும் பேசிக் கொண்டே இருந்தார்கள். அவனுக்கு அழகான பட்டப் பெயரும் இருந்தது. "சவப்பெட்டி மனிதன்". என்று. நானும் சவப்பெட்டி மனிதனைச் சந்திக்கும் ஆசையில் அவனுடைய வீட்டிற்குப் போனேன்.
அதனை வீடு என்று அழைக்க முடியாது. கூரை இலைகுழைகளால் வேயப் பட்டிருந்தது. சுவர் மண்ணைக் குழைத்து வரித்துக் கட்டப்பட்டிருந்தது. அதிசயம் என்ன வென்றால் சவப்பெட்டி மனிதனின் வீட்டிற்கு கதவுகள் எதுவும் இருக்கவில்லை.
நான் வீட்டிற்குள் நுழைந்தபோது ஜவான் பெட்டியொன்றிற்குள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். நான் அவனைத் தட்டி எழுப்பி என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.
"என்ன மனிதரே இந்த வீட்டில் எவ்வளவோ இடம் இருக்க எதற்காக இந்தப் பெட்டிக்குள் தூங்கிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன் நான்.
என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு வெடிச்சிரிப்பு சிரித்தான் சவப்பெட்டி மனிதன்.
"நீ இதனைப் பெட்டி என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இது பெட்டி இல்லை நானோ நீயோ செத்துப் போனவுடன் உடலைப்போட்டு ஆணி அறைந்து மூடுவோமே பெட்டி! சவப்பெட்டி" என்றான் ஜவான் பெட்டியின் மூடியை மூடிக் கொண்டே.
இப்போது நன்றாகப்பார்த்தேன் ஜவான் சொன்னது போல் அது சவப்பெட்டிதான்.

"இந்த ஊரே உன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொள்ளும் சவப்பெட்டி இதுதானா?" என்று கேட்டேன் நான். ஜவான் புன்னகைத்துக் கொண்டே 'ஆம்' என்றான். ஏற்கனவே நான் வர்ணித்ததெல்லாம் இந்தச் சவப்பெட்டியைப் பற்றித்தான்.

ஜவானைப் பார்த்தால் உளநோயால் பீடிக்கப்பட்டவனாகவும் தெரியவில்லை, பைத்தியக் காரனாகவும் தெரியவில்லை: அல்லது வாழ்க்கையை வெறுத்து விரக்தியினால் அப்படிச் செய்பவனாகவும் தெரியவில்லை.

அவன் சுடச்சுடக் காப்பி ஊற்றிக் கொண்டு வந்தான். காப்பியின் நறுமணம் அறை முழுவதும் கமழ்ந்தது, அவனே தயாரித்த காப்பி. நீர்விழ்ச்சியின் குளிருக்கு இதமாக இருந்தது, சுவையும் பிரமாதம். அவனிடம் இந்த விருந்தோம்பலைத்தவிர நிறைய நற்குணங்களை அவதானித்தேன்.

"ஜவான் உன்னைப் பார்த்தால் பரம ஏழையாகவும் தெரியவில்லை. எதற்காக இப்படி கஷ்டப்படுகிறாய்? இந்தக் குறுகிய சவப்பெடிக்குள் படுத்துத் தூங்குகிறாய்?" என்று ஆற்றாமையால் கேட்டேன் நான்.

"வாழ்க்கையின் எந்தக் கணத்திலும் மரண ஞாபகத்தில் வாழ்வதற்கு இதைவிடச்சிறந்த வழியைநான் காண வில்லை" என்றான் ஜவான்.

ஜவான் என்னை அவனுடைய சமையலறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு மூன்று கற்கள், ஒரு பானை, ஒர் அகப்பை , ஒரு தீப்பெட்டி, ஒரு பீங்கான் என்பவற்றைத்தவிர சமைப்பதற்கான எந்தத்தடையங்களும் காணப்படவில்லை.

"என்னப்பா ஜவான் இது சமையலறை? நீங்கள் எப்படிச் சாப்பிடுகிரீர்கள்?" என்று கேட்டேன் நான்.

ஜவான் சொன்னான், "கோதுமை மா இருக்கிறது, நீரிலே அவித்துச் சாப்பிடுவேன்; அரிசிஇருக்கிறது, வறுத்துச் சாப்பிடுவேன்; குரக்கன் மா இருக்கிறது, குழைத்துச்சாப்பிடுவேன்"

"இதுவா வாழ்க்கை?" நான் கேட்டேன்.

"உங்கள் உணர்வுகள் எனக்குப் புரிகிறது. எனக்கும் அதிலே உடன்பாடுண்டு. என்றாலும் வாழ்க்கையை வாழ்கிறோம் என்று சொல்லிக் கொண்டு நாம் எலிப்பந்தயம் அல்லவா நடத்திக் கொண்டிருக்கிறோம்"

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்'?

"வாழ்கிறோம் என்றஆசை அதீதமாகி நாம் வந்து நிற்கிற இடம் எங்கே? மற்றைய மனிதனின் கழுத்தை மிதித்துத்தான் ஒவ்வொரு நாணயக்குற்றியையும் நாம் சம்பாதிக்கிறோம்.அப்படியான வழிமுறைக்கு என் மனம் ஒப்பவில்லை, அது மட்டுமல்ல சொத்துக்கள் சேரச்சேர அதனைக் கட்டிக் காக்கும் நடவடிக்கையில் இறங்க வேண்டி வரும், கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டோம்"எனப் பதிலளித்தான் ஜவான்.

ஜவானை எனக்கு நன்றாகப் பிடித்துப் போய் விட்டது. நான் அவனுடைய வீட்டிற்கு அடிக்கடி போய் வந்தேன். வீட்டு வேலைகளுக்கு ஒரு வேலைக் காரியையாவது வைத்துக் கொள்ளும்படி நான் அவனை வேண்டிக் கொண்டேன். அவன் அதனை மறுத்து விட்டான். அவனுடைய மனது ஏதோ ஒருகாரணத்தால் கடுமையாக காயப்பட்டிருப்பதைப் போல் எனக்குத் தோன்றியது.

அவனுடைய இதயத்தைச் சுற்றிக் கட்டப் பட்டிருக்கும் கருங்கல் கோட்டையை உடைக்க நான் பலதடவை முயற்சி செய்தேன். குறைந்த பட்சம் ஒரு கல்லையாவது பெயர்க்க முயற்சி செய்தேன் முடியவில்லை. இவன் இந்த உலகத்தில் வாழ்வதற்கு எவ்விதத்திலும் லாயக் கற்றவன் என்றாலும் அவன் மீது எனக்கு அபரிமிதமான அபிமானம் இருந்தது.

ஒருநாள் எதிர்பாராத் தருணமொன்றிலே ஜவான் என்னை மிகவும் தொலைவிலுள்ள வண்ணத்துப் பூச்சி பூங்காவிற்கு அழைத்துச் சென்றான். அந்தப் பூங்கா உண்மையிலேயே வண்ணமயமான வண்ணத்துப் பூச்சி வகையறாக்களால் நிரம்பி வழிந்த ஓர் அற்புத உலகம்.

சிறுவர்கள் வண்ண வண்ண ஆடைகளுடன் அங்கே வண்ணத்துப் பூச்சிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். எல்லா வகையான வண்ணத்துப் பூச்சிகளும் அங்கே வாழ்ந்தன, பறந்தன, வண்ணத்துப் பூச்சி ரசிகர்கள் அங்கே நிறைந்திருந்தார்கள். யாரும் வண்ணத்துப் பூச்சிகளைத் தொடக்கூடாது. பார்க்கலாம்; ரசிக்கலாம்; சலனப் படங்களாக எடுக்கலாம்; தொடக்கூடாது. அது அந்தப் பூங்காவில் நிலவிய எழுதப்படாத சட்டம்.

"வண்ணத்துப் பூச்சிகளுடன் பேசவும் முடியும்" என்றான் திடீரென்று ஜவான். நான் கிண்டல் கலந்த தொனியில் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"பைத்தியம் பிடித்தால் ஒரு மனிதன் பாம்புகளுடனும் பேசலாம்"

"அப்படியா சொல்கிறாய்?" "அப்படித்தான் சொல்கிறேன்"

சிவப்பு கபிலம் ஆகிய வர்ணச் சேர்க்கைகளால் குழைத்துச் செய்யப்பட்ட இறகுகளுடன் ஒரு வண்ணத்துப் பூச்சி ஜவானின் உள்ளங்கையில் பறந்து வந்து அமர்ந்தது.

"அழகிய வண்ணத்துப் பூச்சியே எந்த உலகத்திலிருந்து நீ வருகிறாய்?" என்று அதனைப்பார்த்துக் கேட்டான் ஜவான்.

வண்ணத்துப் பூச்சி பேசவில்லை. ஜவான் வண்ணத்துப் பூச்சியின் இறகுகளை ஒட்டிப் பிடித்து காதருகே கொண்டு போய்" அங்கே என் மனைவியைக் கண்டாயா?" என்று கேட்டான். ஜவான் என்ன என்னுடன் விளையாடுகிறானா? அல்லது உண்மையாகவே பைத்தியம் பிடித்து விட்டதா?

"யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன் நான்.

"கலைத்துவமிக்க ஆடைகள் அணிந்து வந்து இங்கு நிற்கும் இந்த வண்ணத்துப் பூச்சியுடன்"

"வண்ணத்துப் பூச்சிகள் ஒருபோதும் பேசமாட்டாது" என்றேன் நான் எரிச்சலுடன்.

"வண்ணத்துப் பூச்சிகளின் மொழி நமக்குத்தெரிந்தால் பேசலாம்" என்றான் ஜவான்.

"வண்ணத்துப் பூச்சிகளிற்கும் மொழி இருக்கிறதா?"

"ஏன் இருக்கக்கூடாது? எறும்புகளிற்கும் மொழி உண்டு; ஒட்டச்சிவிங்கிகளிற்கும் மொழி உண்டு இயற்கை என்ற அற்புதமான மொழி. அந்த மொழியைக் கற்றுக் கொண்டால் புல்புல் பறவையுடனும் பேசலாம், சூரியகாந்தி மலருடனும் பேசலாம்" என்றான் ஜவான்.

"தத்துவவியல் பட்டதாரியுடன் தத்துவம் பேசுகிறாயே" என்று சிரித்தேன் நான்.

"நான் செல்லுவது ஏட்டுச்சுரைக்காய் தத்துவமல்ல, உண்மை" என்றான் ஜவான்

"அதுசரி, அந்த விஷயம் ஒருபுறம் இருக்கட்டும். உனக்கு மனைவி இருக்கிறாள் என்ற விஷயத்தை நீ ஒருபோதும் என்னிடம் சொல்லவே இல்லையே"

ஜவான் சற்றுநேரம் கண்களை மூடிக்கொண்டிருந்து விட்டு" அவள் எப்போதோ இறந்து போய் விட்டாள்" என்றான் சோகத்துடன்.

"வாழ்க்கை மீது உனக்கு ஆசை இல்லை பற்று இல்லை என்று தத்துவம் உதிர்த்தாயே எங்கே அந்தத் தத்துவங்கள்?" என்று கேலியுடன் கேட்டேன் நான்.

"வாழ்க்கை மீது ஆசையில்லை என்று நான் ஒருபோதும் சொன்னது கிடையாது அதீத ஆசை கூடாது. மரணத்தை எந்தக் கணமும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். மரணம் வருகிறதே என்று கவலைப் படக்கூடாது. இதுதான் நான்" என்றான் ஜவான்.

"பிள்ளைகள் யாருமில்லையா?"

"இல்லை. குழந்தை வயிற்றில் இருக்கும் போது தான் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு அவள் இறந்து போனாள்"

ஜவான் சொன்னதை கேட்டு நான் துயருற்றேன்.

சடுதியாக ஜவானின் முகம் சோகத்திலிருந்து விடுபட்டு மகிழ்ச்சித்துள்ளலாக மாறியது. பொன்னிற இறகுகளில் மஞ்சள், கறுப்புப் புள்ளிகள் கலந்து போட்ட ஒரு வண்ணத்துப் பூச்சி ஜவானுக்கு அருகிலிருந்த சிறு கற்பாறையில் வந்து அமர்ந்தது. வெயில் பட்டு அதனுடைய இறகுகள் தகதகவென்று மின்னின.

"இதோ என் மனைவி வந்துவிட்டாள்" என்று மகிழ்ச்சிப் பெருக்கால் கூவினான் ஜவான். என்ன இவனுக்கு உண்மையிலேயே பைத்தியம் தான் பிடித்துவிட்டதா? "இந்த வண்ணத்துப் பூச்சி உன் மனைவியா?" இது ஒரு சாதாரண வண்ணத்துப் பூச்சி அழகாக இருக்கிறது. அவ்வளவு தான் அது உன் மனைவியல்ல.

ஜவானுக்குக் கோபம் வந்து விட்டது.

"இந்த வண்ணத்துப் பூச்சி என் மனைவி இல்லை என்றா சொல்லுகிறாய்? என்று கோபத்துடன் கேட்டவாறே விறுவிறு என்று நடக்க ஆரம்பித்தான் ஜவான். நான் "நில் நில்" என்று சொல்லிக் கொண்டே ஜவானுக்குப் பின்னால் ஓடினேன். வீடு வந்து சேர்ந்தபோது எனக்கு கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்கியது.

ஜவான் என்னைப்பார்த்து கலகல வென்று சிரிக்க ஆரம்பித்தான். "என்ன பயந்துவிட்டாயா?" என்று கேட்டான். நானும் சிரித்தேன். ஜவான் என் பக்கம் திரும்பி தன்னுடைய உள்ளங்கையைக் காட்டினான். அந்தப் பொன்னிற வண்ணத்துப் பூச்சி அவனைச்சுற்றிச் சுற்றிப் பறக்க ஆரம்பித்தது. ஜவான் உள்ளே போய்ஒரு நேர்த்தியான தங்க நிற ஆடை யொன்றுடன் வெளியே வந்தான்.

"இதோ என் மனைவி இறந்த போது இந்த ஆடையைத்தான் அணிந்திருந்தாள். இப்போது அவள் வண்ணத்துப் பூச்சியாகத் திரும்பி வந்துள்ளாள்" என்று சொன்ன ஜவான் வண்ணத்துப் பூச்சியின் இறகுகள் இரண்டையும் விரல்களால் பிடித்து ஆடையின் மீது வைத்தான். என்ன ஆச்சரியம். வண்ணத்துப் பூச்சியின் இறகுகளுடன் அந்த ஆடையின் அலங்காரம் அச்சொட்டாக அப்படியே பொருந்தி இருந்தது.

உண்மையாகவே இந்த வண்ணத்துப் பூச்சியை அவனுடைய மனைவி என்று நம்புகிறானா? அல்லது எனக்கு பூச்சாண்டி காட்டுகிறானா என்று எனக்குப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இவன் மொட்டைத் தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சுப் போடுகிறான். என்னையும் அந்த ஆழிக்குள் மூழ்கடிக்க முயற்சி செய்கிறான்.

"உன் மனைவி இறந்து எத்தனை வருடங்களாகின்றன?"

"முப்பது வருடங்கள்"

"ஒரு வண்ணத்துப் பூச்சியால் முப்பது வருடங்கள் ஜீவிக்க முடியுமா?'

"சாகாவரம் பெற்ற வண்ணத்துப் பூச்சியைப் பற்றி கேள்விப்பட இல்லையா? என் மனைவி இதயத்திற்குள் சாகாவரம் பெற்று வாழ்கிறாள். இந்த வண்ணத்துப் பூச்சியும் அப்படித்தான் சாகாவரம் பெற்று வாழ்கிறது" என்றான் ஜவான்.

இவன் என்ன? எல்லாப் புறங்களில் இருந்தும் என்னைத் தாக்குகிறானே.

"நீ எப்போது இறப்பாய்." என்று நானும் இடக்கு முடக்காகக் கேட்டேன்.

"கடவுள்தான் அறிவார். அந்த நல்ல நிகழ்ச்சிக்காகத்தான் நானும் ஆவலொடு காத்திருக்கிறேன்"

"ஏன் தற்கொலை செய்து கொள்ள வில்லை?"

"அது கோழைகளின் செயல்"

"நீ மரணிக்கும் போது எங்கே இருக்க வேண்டு மென்று ஆசைப் படுகிறாய்?"

"சந்தேகமே இல்லாமல் சவப் பெடடிக்குள்தான்"

"சவப்பெட்டிக்குள்ளேயே நீ மரணித்து விட்டாய் என்றே வைத்துக் கொள்ளுவோம்.அந்த மரணத்தை மற்றவர்கள் அறிந்து கொள்ளுவது எப்படி?" நான் கேட்டேன் ஜவான் கொஞ்சநேரம் யோசித்தான்.

"அதற்காகத்தான் என் வீட்டை கதவுகளே இல்லாமல் நிர்மாணித்திருக்கிறேன். வழிப் போக்கர்கள் என்வீட்டிற்குள் நுழைந்து நான் சவப்பெட்டிக்குள் மரணித்துப் போயிருப்பதைக் காண்பார்கள்"

"அதுசரி வீட்டிற்குள் நுழைய முன்பாக நீ சவப்பெட்டிக்குள் மரணித்து இருப்பதை வழிப்போக்கர்கள எப்படி அறிந்து கொள்வார்கள்"

"என் நடமாட்டம் சந்தடி இல்லாததைக் கெண்டு அறிந்து கொள்வார்கள்?"

"உன் நடமாட்டம் இல்லா விட்டால் நீ ஊரில் இல்லை என்றுதான் வழிப் போக்கன் நினைத்துக் கொள்வானே ஒழிய நீ மரணித்து விட்டாய் என்று நினைக்க மாட்டான். நீ இறந்து விட்டாய் என்பதை வழிப்போக்கன் எப்படி அறிந்து கொள்வானென்று நான் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்"

"நீ சவப்பெட்டிக்குள் அப்படியே மரணித்து விடுவாய். இரண்டு மூன்று நாட்கள் கழித்து உன் உயிரற்ற உடம்பு புழுத்து பிணவாடை வீச ஆரம்பிக்கும். வழிப் போக்கன் வந்து பார்ப்பான்; காவல்துறைக்கு அறிவிப்பான். அவர்கள் வந்து அனாதைப் பிணம் என்று சொல்லி எங்கோ ஒரு மூலையிலே அடக்கம் செய்து விடுவார்கள்"

"ஓ இப்படியும் ஒன்று இருக்கிறதா?" என்று யோசிக்க ஆரம்பித்தான் ஜவான்.

"ஜவான் நான் சொல்வதை கவனமாகக் கேள். இருபத்து நான்கு மணி நேரமும் நீ மரணத்தை எதிர்பார்த்து வாழ்கிறாய் அது உண்மை. அதில் எந்தத்தவறும் இல்லை, ஆனால் மரணித்த பின் புழுத்த அனாதைப் பிணமாக அடக்கப் படுவதை யாரும் விரும்ப மாட்டார்கள், குறைந்த பட்சம் உன் மரணத்தை உலகம் தெரிந்து கொள்வதற்காகவாவது ஒரு பெண்ணை மணந்து கொள்" என்று சொன்னேன் நான்.

"அதற்குப் பிறகு இன்னுமின்னும் பணம் சம்பாதிக்க வேண்டு மென்ற பேராசை உண்டாகி விடும்" என்றான் ஜவான்.

"ஜவான் அதற்கும் ஒரு வழி சொல்லுகிறேன். ஒரு பரம ஏழையான பெண்ணைத் திருமணம் செய்து கொள். திருமணம் முடித்த கையோடு உனக்கிருக்கும் எல்லாச் சொத்துக்களையும் அவள் பெயருக்கே எழுதி வைத்து விடு. உன்னுடைய சவப்பெட்டியை மட்டும் உன்னோடு வைத்துக் கொள். அதற்குப் பிறகு ராஜா மாதிரி சவப்பெட்டிக்குள் படுத்துறங்கு. மரணம் பற்றிய கவலையே இல்லாமல்" என்றேன் நான்.

ஜவான் கொஞ்ச நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். "நீங்கள் சொல்லும் யோசனையும் நன்றாகத்தான் இருக்கிறது. அந்த யோசனையையும் பரிசீலித்துப் பார்க்கிறேன்" என்று பதிலளித்தான் ஜவான்.

இதற்கிடையில் சுவர்க்கத்துத் தீவில் என்னுடைய விடுமுறைக்காலம் முடிந்து விட்டது. பல்கலைக் கழகத்திலும் முடிக்க வேண்டிய வேறு காரியங்கள் நிறைய இருந்ததால் நான் உடனடியாகவே பிரான்ஸை நோக்கிப் பயணமானேன்.இரண்டு மூன்று மாதங்கள் கழிந்து ஒருநாள் ஜவான் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் அறிவுறுத்தியபடி நான் ஒரு பரம ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டதாகவும் தான் சொன்னபடியே எல்லாச் சொத்துக்களையும் அவள் பெயருக்கே எழுதி வைத்து விட்டதாகவும் எனக்கு அறிவித்தான் " சவப்பெட்டியின் நிலைமை என்ன? " என்று நான் கேட்டேன். " நிலைமை மாறவில்லை " என்று அவன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

இந்தத் தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு எந்தத் தொடர்புகளும் எங்களுக்கிடையில் இருக்கவில்லை. சுவர்க்கத்துத் தீவுக்கு வரக்கூடிய சாத்தியங்களும் எனக்கு இருக்கவில்லை, வேலைச் சோலியும் அதிகரித்ததால் ஜவானை நான் அடியோடு மறந்து விட்டேன்.

இவ்வளவு நேரமும் நான் சொல்லியது சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த கதை. இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு சுவர்க்கத்துத் தீவிற்கு வேறுகாரியம் நிமித்தம் வந்திறங்கிய பொழுது என்னுடைய ஞாபகத்திற்கு முதல் வந்த மனிதன் ஜவான். அந்த அற்புதமான மனிதனின் ஞாபகங்கள் என்னுடைய அடிமனதிலே இன்னும் நீக்கமற நிறைந்திருந்தன. முதலில் கிறுக்கனாகத்தான் அவன் தோற்றமளித்தான். யோசித்துப் பார்த்த பொழுது தத்துவ ஞானிகளையும் விஞ்சிய இலட்சணங்கள் அவனிடம் இருந்தன. முக்கியமாக கிறுக்குத்தனம். தத்துவ ஞானிகள் எல்லோரும் கிறுக்கர்களாகத்தான் இருந்நார்கள்.

அவனிடம் ஓர் ஆசை இருந்தது. என்னிடம் அதனை அவன் சொன்னான். தான் மரண மடைந்து சவப்பெட்டிக்குள் அவனை வைத்த உடன் சவப்பெட்டியின் மூடியை நான் மூட வேண்டு மென்பதே

அவன் ஆசை. அந்த ஆசை நிறைவேற வில்லை. இப்போது மண்ணோடு மண்ணாக உக்கிப் போயிருப்பான் அவன்.

ஜவானுடைய மனைவியையாவது தரிசித்து விட வேண்டும் என்ற ஆவலில் ஜவான் வாழ்ந்த இடத்திற்கு நான் போனேன். ஜவான் இருந்த இடத்தில் இப்பொது ஓர் அழகிய பங்களா இருந்தது. சுற்றிவரப் பூந்தோட்டம் இருந்தது. கார், காவற்காரர்கள் எல்லோரும் இருந்தார்கள். நான் பிரமித்துப் போய் விட்டேன்.

அடர்த்தியாக மீசை வளர்த்த ஒரு கம்பீரமான அழகிய இளைஞன் என்னை வரவேற்றான். நான் என்னைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்த உடனேயே அந்த இளைஞன் முந்திக் கொண்டு " "எனக்கு உங்களைப் பற்றி நன்றாகத் தெரியும் தந்தை அடிக்கடி உங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்" என்று சொன்னான். என் மனம் நெகிழ்ந்து போய் விட்டது. பெருமையாகவும் இருந்தது. இந்தளவுக்கு என்னை நேசித்த ஒரு மனிதனை நான் வாழ்க்கையில் சந்தித்ததேயில்லை.

சற்று நேரத்தில் ஒரு பெண்மணி வந்தாள். முக இலட்சணங்களை வைத்து ஜவானின் மனைவி அவள் என்பதைப் புரிந்து கொள்ள எனக்கு நேரம் போகவில்லை. அவள் என் முகக் குறிப்பை உணர்ந்தவளாக " நான் தான் ஜவானின் மனைவி " என்று சொன்னாள்.

ஜவானின் சவப்பெட்டிக்கு என்ன நடந்தது என்று அறிந்து கொள்ள என்மனம் ஆவலாய்த்துடித்தது. இந்த விடயத்தை எப்படி இவர்களிடம் கேட்பது? என்னைப் பைத்தியக்காரன் என்று நினைத்துக் கொள்ள மாட்டார்களா? என்றாலும் இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ளாமல் என்னால் பிரான்ஸ் திரும்ப முடியாது.

நான் கொஞ்சம் தயக்கத்துடன் " நீங்கள் கோபித்துக் கொள்ளவில்லை என்றால் ஒரு விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ன ஆவலாய் இருக்கிறேன் நான் " என்றேன்.

"பரவாயில்லை கேளுங்கள்" என்றான் மகன். " உங்கள் தந்தை ஒரு சவப்பெட்டி வைத்திருந்தார். அந்தச் சவப்பெட்டிக்குள்தான் எப்போதும் படுத்துறங்கினார். மரணத்தை எக்கணமும் எதிர்பார்த்துக் காத்திருந்தார். அந்தச் சவப்பெட்டிககு என்ன நடந்தது?" என்று ஆவலோடு கேட்டேன் நான். மகன் சிரித்தான்.

"வாருங்கள் உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி இருக்கிறது அந்த சவப்பெட்டி அப்படியேதான் இருக்கிறது. ஆனால் நீங்கள் நினைப்பது போல் இல்லை, அது களஞ்சியசாலையின் மூலையில் போடப்பட்டு எத்தனையோ வருடங்களாகி விட்டன" என்று சொல்லிக் கொண்டே என்னை வெளிவீட்டிற்கு அழைத்துச் சென்றான் மகன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. ஜவான் இன்னமும் உயிரோடு இருக்கிறான். ஆடம்பரமான கட்டில், அழகிய பஞ்சணை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திண்டு, அலங்கார விளக்குகள், பணிவிடை செய்ய வேலைக்காரர்கள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

நான் எமுப்பினேன், என்னை உடனடியாகவே அடையாளம் கண்டு விட்டான் ஜவான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவனால் அதிகமாகப் பேச முடியவில்லை. வயதுத் தளர்ச்சியா? வாழ்க்கைத் தளர்ச்சியா?

என்னுடைய கைகளைப் பற்றிக் கொண்டே சிரமப்பட்டுப் பேசினான் ஜவான்.

"உங்களைத்தான் இவ்வளவு காலம் எதிர்பார்த்துக் காத்திருந்தேன் நௌஷாத், நீங்கள் வருவீர்களென்று எனக்கு நன்றாகத் தெரியும். என் உயிரை எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினான் ஜவான்.

"ஏன் ஜவான் என்ன நடந்தது" என்று கேட்டேன் நான் பதைபதப்புடன். "டாக்டர்கள் எனக்கு நாள் குறித்து விட்டார்கள். நுரையீரற் புற்று. என்னுடைய மகனின் திருமணத்தை நான் பார்க்க வேண்டும், என்னுடைய பேரப்பிள்ளைகளை நான் பார்க்க வேண்டும். என்னை பிரான்ஸ் நாட்டுக்குக்

கொண்டு போயாவது காப்பாற்றுங்கள். பணத்தைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத்தாயாராக இருக்கிறேன்" என்று கெஞ்சினான் ஜவான்.

நான் என்னால் முடிந்தளவு அவனை ஆறுதல்படுத்தினேன். அவனுடைய சவப்பெட்டியைப் பற்றிப் பேச எனக்கு நேரம் கிடைக்கவில்லை. அதற்குள் என் மடியில் படுத்தவாறே உயிரை விட்டான் ஜவான்.

கடவுள் என்ன காரியத்திற்காக இங்கு என்னை வர வைத்தாரோ தெரியவில்லை. ஆனால் ஜவான் ஆசைப்பட்டபடி அவனுடைய மரணத்திற்கு நான் வந்து சேர்ந்து விட்டேன்.

நான் ஜவானின் மகனைக் கூப்பிட்டு ஜவானின் ஆசையைச் சொன்னேன்.

"இந்த சவப்பெட்டிக்குள் தான் தன்னை அடக்க வேண்டு மென்று உங்கள் தந்தையின் ஆசை இருந்தது. அந்த ஆசையை நிறைவேற்றுவது நம்முடைய கடமை" என்றேன் நான்.

மகன் என்னைக் களஞ்சிய அறைக்குள் அழைத்துச சென்றான். அவன் சொன்னதைப் போலவே அந்தச் சவப்பெட்டி இற்றுப் போய் அனாதையாக ஒரு மூலையில் கிடந்தது.

"ஐயா நீங்கள் சொல்லும் விஷயத்தைப் பற்றி எனக்கு கொஞ்சங்கூடத் தெரியாது. இந்தப் பெரிய வீட்டை என் தந்தை நிர்மாணித்தர். எனக்காகவும் குடும்பத்துக்காகவும் அவர் கடைசி வரை வியர்வை சிந்தி உழைத்தார்; நிறையச் சொத்துக்களைச் சேர்த்தார்; அப்படிப்பட்ட மனிதரை இற்றுப்போன இந்தப் பெட்டிக்குள் அடக்க நான் விரும்பவில்லை" என்று சொல்லி ஒரேயடியாக மறுத்து விட்டான் மகன்.

என்னால் இதற்குமேல் ஒன்றுமே பேச முடியாது. அந்த உரிமை எனக்கு இல்லை. இது அவர்களின் சொந்த குடும்ப விவகாரம்.

இறுதிக்கிரியைகள் எவ்விதப் பிரச்சினைகளும் இல்லாமல் ஆடம்பரமான முறையில் சிறப்பாக நடந்து முடிந்தன. நான் அவர்களின் வீட்டை விட்டுப். புறப்படுவதற்கு முன் மீண்டும் அந்தக்களஞ்சிய அறைக்குச் சென்று சவப்பெட்டிக்கு அருகில் அமர்ந்தேன். மௌனமாக புழுதி படிந்து இற்றுப் போயிருந்த பெட்டியைத் தூசுதட்டி விட்டு மேல் மூடியைத் திறந்தேன். சவப்பெட்டி நிறைய பணத்தாள்கள் கற்றை கற்றையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

(யாவும் கற்பனை)

வயிறு புடைக்கச் சாப்பிடுவோர்க்கு நேரும் 06 ஆபத்துக்கள்.

01. இறைவனிடம் இறைஞ்சும் சுவையை இழப்பான்
02. ஞானத்துடன் செயற்படுவது கஸ்டமாக இருக்கும்
03. படைப்பினங்கள் மீது அன்புசெலுத்துவதைத் துண்டித்துக் கொள்வான்
04. வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது சிரமம்
05. இச்சை அதிகரிக்கும்
06. வணக்கத்தலங்களை விட்டும் தூரமாக்கும்

அலுவலக உத்தியோகத்தர் விபரம்.

1. ஜனாப். ஏ.மன்சூர்	பிரதேச செயலாளர்
2. ஜனாப் ஜே.லியாகத் அலி	உதவி பிரதேச செயலாளர்
3. ஜனாப் ஏ.எல்.ம.்றூப்	கணக்காளர்
4. ஜனாப் கே.எல்.ஏ.ஹமீட்	உதவி திட்டமிடல் பணிப்பாளர்
5. ஜனாப் எம்.ரி.ஏ.வாஹிட்	நிருவாக உத்தியோகத்தர்
6. ஜனாப் சீ.எம்.எம்.சத்தார்	மேலதிக் மாவட்ட பதிவாளர்
7. ஜனாப் எஸ்.அஸீஸ் உல்லா	தலைமை முகாமை உதவியாளர்
8. ஜனாப் எம்.ஐ.ஆதம்பாவா	தலைமை முகாமை உதவியாளர்
9. ஜனாப் எஸ்.எல்.எம்.மன்சூர்	தலைமை முகாமை உதவியாளர்
10. ஜனாப். எம்.ரி.எம்.சரீம்	நிதி உதவியாளர்
11. திருமதி.பி.மாஜிதா	அரச முகாமை உதவியாளர்
12. ஜனாப்.எம்.ஏ.முகைதீன் பாவா	அரச முகாமை உதவியாளர்
13. ஜனாப். கே.பி.சலீம்	அரச முகாமை உதவியாளர்
14. திருமதி.ஏ.யூ.சித்திக்	அரச முகாமை உதவியாளர்
15. திருமதி. எஸ்.ஏ.நபீறா	அரச முகாமை உதவியாளர்
16. திருமதி.ஏ.பழீனா	அரச முகாமை உதவியாளர்
17. திருமதி.ஏ.யூ.பஸீல்	அரச முகாமை உதவியாளர்
18. ஜனாப்.ஏ.எம்.நவாஸ்	அரச முகாமை உதவியாளர்
19. திரு.கே.இராமச்சந்திரன்	அரச முகாமை உதவியாளர்
20. திருமதி.எம்.ஏ.சி.சீனத் உம்மா	அரச முகாமை உதவியாளர்
21. ஜனாப்.ஏ.எல்.ஹம்சா	அரச முகாமை உதவியாளர்
22. திருமதி.என்.எம்.தௌபிக்	அரச முகாமை உதவியாளர்
23. திருமதி.எஸ்.யு.எம்.மாஹிர்	அரச முகாமை உதவியாளர்
24. ஜனாப்.ஏ.ஜாபிர்	அரச முகாமை உதவியாளர்
25. திருமதி.ஏ.எல்.சபீனா	அரச முகாமை உதவியாளர்
26. திருமதி.ரி.எம்.றகீமா	அரச முகாமை உதவியாளர்
27. திருமதி.ஏ.யு.எம்.சமீம்	அரச முகாமை உதவியாளர்
28. திருமதி.எம்.எல்.பரிதா	அரச முகாமை உதவியாளர்
29. ஜனாப்.எம்.ரி.எம்.இஸ்மாயில்	அரச முகாமை உதவியாளர்
30. திருமதி.எம்.பி.பௌசுல் நிஹாரா	அரச முகாமை உதவியாளர்
31. திருமதி.ஜே.மனோகரன்	அரச முகாமை உதவியாளர்
32. ஜனாப்.ஏ.ஏ.கபூர்	அரச முகாமை உதவியாளர்
33. திருமதி.ஏ.எஸ்.றபீனா	அரச முகாமை உதவியாளர்
34. திரு.எஸ்.சண்டேஸ்வரன்	அரச முகாமை உதவியாளர்
35. ஜனாப்.எம்.ரி.ஹமீன்	அரச முகாமை உதவியாளர்
36. திருமதி.எம்.எல்.எஸ்.றெஜினா	அரச முகாமை உதவியாளர்
37. திரு.ஓ.ஜி.கே.குசுமிந்த கீர்த்தி	அரச முகாமை உதவியாளர்
38. திரு.கே.விக்கினேஸ்வரன்	அலுவலக ஊழியர்
39. திரு.ஏ.பவானந்தன்	அலுவலக ஊழியர்
40. திரு.எஸ்.சந்திரன்	அலுவலக ஊழியர்
41. திரு.கே.சண்முகநாதன்	சாரதி

42. ஜனாப்.எம்.எச்.எம்.பிர்தௌஸ் சாரதி
43. திரு.கே.அழகையா அலுவலக ஊழியர்
44. ஜனாப்.எம்.ஏ.அஸீஸ் அலுவலக ஊழியர்
45. ஜனாப்.எம்.ஏ.மன்சூர் அலுவலக ஊழியர்

வெளிக்கள உத்தியோகத்தர்கள் விபரம்.

1. ஜனாப்.எம்.ஏ.சி.யூசுப்லெவ்வை - கிராம அபிவிரத்தி உத்தியோகத்தர்
2. ஜனாப்.ஏ.எல்.எம்.அன்சார் - சமூக சேவை உத்தியோகத்தர்
3. ஜனாப்.ஏ.றகீம் - வெளிக்கள போதனாசிரியர்
4. ஜனாப் ஏ.முஹமட் இதிரிஸ் - சமூக சேவை உத்தியோகத்தர்
5. ஜனாப்.எம்.ஐ.எம்.அஸ்ரப் - கலாசார உத்தியோகத்தர்
6. ஜனாப்.எம்.ஏ.றாபி - காணி உத்தியோகத்தர்
7. திருமதி.வை.என்.எல்.பஸீலா - மாதர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
8. ஜனாப்.எம்.எச்.எம்.பைசால் அமீன் - இளைஞர் சேவை அதிகாரி
9. ஜனாப்.ஐ.எல்.எம்.றாபியு - அபிவிருத்தி இணைப்பாளர்
10. ஜனாப ஏ.எல்.ஜெமில் - பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்
11. ஜனாப்.யு.எம்.முசம்மில் - விஞ்ஞான தொழில் நுட்ப உத்தியோகத்தர்
12. ஜனாப்.யூ.எல்.எம்.பஸீர் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
13. ஜனாப்.ஏ.எச்.எம்.கிபாயதுல்லா - குடியேற்ற உத்தியோகத்தர்
14. ஜனாப்.எம்.ரி.எம்.பசீர் - அபிவிருத்தி உதவியாளர்
15. திருமதி.எம்.ஏ.சகினா - நிவாரண சகோதரி
16. ஜனாப்.ஏ.எல்.ஜாபிர் - அபிவிருத்தி உதவியாளர்
17. ஜனாப்.கே.எம்.றிஸ்வி - மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்
18. திருமதி.ஏ.எல்.மர்சினா - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
19. ஜனாப்.ஏ.அலி அஹமட் - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
20. ஜனாப்.எம்.எஸ்.அப்துல் அன்வர் - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் PA
21. ஜனாப்.கே.எல்.நழீம் - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
22. திருமதி.எம்.எஸ்.றிபானி - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
23. ஜனாப்.பி.எம்.றசீன் - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
24. ஜனாப்.எம்.ரி.எம்.சர்ஜூன் - குடியேற்ற உத்தியோகத்தர் CO
25. திரு.எஸ்.விஜிகரன் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
26. திருமதி.ஏ.றகிபா - அபிவிருத்தி உதவியாளர்
27. ஜனாப்.எம்.எச்.எம்.அஸ்வத் - விளையாட்டு உத்தியோகத்தர் SO
28. ஜனாப்.எம்.எஸ்.ஜரூண் - உளவளத்துணையாளர் CO
29. ஜனாப்.எம்.ரி.எம்.அஸ்வத் - புள்ளி விபரவியல் உத்தியோகத்தர்
30. ஜனாப்.ஏ.றகிம் - தொழில் நுட்ப உத்தியோகத்தர் (NHDA)
31. ஜனாப்.கே.எல்.அல்அமீன் - தொழில் நுட்ப உத்தியோகத்தர் (NHDA)
32. ஜனாப்.எம்.ஐ.எம்.இஸ்மாயில் - தொழில் நுட்ப உத்தியோகத்தர் (NHDA)
33. ஜனாப்.எம்.ரி.எம்.அன்வர் - நெசவுப் போதனாசிரியர்
34. ஜனாப்.எம்.எச்.எம்.சலீம் - நெசவுப் போதனாசிரியர்
35. ஜனாப்.ஏ.முத்துவாப்பா - நெசவு நிலைய காவலாளி
36. ஜனாப்.எஸ்.சக்காப் - நெசவு நிலைய காவலாளி

37. திருமதி.கலீலுல் றகுமான் - தையல் போதனாசிரியர்

கிராம சேவகர்கள் பட்டியல்

1. ஜனாப் எம்.எம் சலீம்
2. ஜனாப் ஏ.எம் இல்யாஸ்
3. ஜனாப் ஏ.எம் றபீக்
4. ஜனாப் ஏ.எல்.எம் இஸ்மாயில்
5. திரு ஏ. புவநேந்திரன்
6. ஜனாப் எம்.எல். இப்றாலெப்பை
7. ஜனாப் யூ.எல். சல்தீன்
8. ஜனாப் எம்.ஐ.எம் சின்னராசா
9. ஜனாப் எம்.ஐ.எம் தௌபீக்
10. ஜனாப் யூ.எல் சலீம்
11. ஜனாப் கே.எல் அபூசாலி
12. திரு என் கோவிந்தசாமி
13. ஜனாப் எம்.ரி.ஏ. கபூர்
14. ஜனாப் ஏ.ஜீ.பி. அஸ்ரப்
15. ஜனாப் எம்.ரி.எம். நசீர்
16. ஜனாப் திரு எஸ். இராசமாணிக்கம்
17. ஜனாப் எம்.எம். சதக்
18. திரு ஏ. சுந்தரலிங்கம்.
19. ஜனாப் ஏ.எல் உதுமாலெவ்வை
20. ஜனாப் ஐ. உபைதுல்லாஹ்
21. ஜனாப் எம்.எம் சல்மான்
22. ஜனாப் எம்.எம்.பாரிஸ்
23. ஜனாப் எம்.ரி சஹீட்
24. ஜனாப் ஏ.எல்எம் இக்பால்
25. ஜனாப் எம்.எம். நசீர்
26. ஜனாப் ஏ.எல் அமீர் அலி
27. திருமதி எம்.ஐ.எஸ் பரீதா
28. ஜனாப் எம்.எல் தாஸீம்
29. ஜனாப் ஐ.எல்.எம் பரீட்
30. ஜனாப் எம்.எம்.எம். ஜலால்
31. ஜனாப் எஸ்.எம்.எம். அறபாத்
32. ஜனாப் எம்.ஏ மிஸபாஹுல் ஹுதா
33. ஜனாப் ஐ.எல்.எம். ஒஜிஸ்கான்
34. திரு ஏ. பிரதீபன்
35. திரு என். புவனராஜ்
36. திரு கே. ரவி
37. திரு எம். உதயராஜன்
38. திரு கே பிரகாஸ்

சமூர்த்தி முகாமையாளர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பெயர் விபரம்

1. ஜனாப் எம்.பி.எம்.ஹுசைன் - தலைமைக்காரியாலய முகாமையாளர்
2. ஜனாப் ஏ.எல்.எம்.நஜீப் - சமூர்த்தி முகாமையாளர்
3. ஜனாப் எஸ் எல். எம் மசூர் - சமூர்த்தி முகாமையாளர்
4. ஜனாப் ஏ.ஜினேந்திரன் - சமூர்த்தி முகாமையாளர்
5. ஜனாபா ஐ.எல்.யு ஜுனைதா - சமூர்த்தி முகாமையாளர்
6. ஜனாப் ஏ.எம் தையூப் - மகா சங்க உதவி முகாமையாளர்
7. ஜனாப் எம்.எம்.ஜுனைதீன் - சமூர்த்தி திட்ட உதவியாளர்
8. ஜனாப் ஏ.ஜே.எம்.ஹனீபா - வங்கி உதவி முகாமையாளர்
9. ஜனாப் ஏ.ஏ.அஸீஸ் - வங்கி உதவி முகாமையாளர்
10. ஜனாப் ஏ.றசூல் - வங்கி உதவி முகாமையாளர்
11. ஜனாப் எம்.எம்.ஏ.றசீட் - வங்கி உதவி முகாமையாளர்
12. ஜனாப் எம்.எம்.அமீனுதீன் - வலய உதவி முகாமையாளர்
13. ஜனாப் ஏ.எம்.ஏ.கபூர் - வலய உதவி முகாமையாளர்
14. ஜனாப் எஸ்.எல்.ஜ.்.பர் - வலய உதவி முகாமையாளர்
15. ஜனாப் எம்.எம்.தமீம் - வலய உதவி முகாமையாளர்
16. ஜனாப் ஏ.எம்.இப்றாகிம் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
17. ஜனாபா ஏ.சி.றிஸ்வானா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
18. ஜனாபா எம்.ரி.நைபா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
19. ஜனாபா ஐ.எல்.மரியங்கண்டு - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
20. ஜனாப் எம்.பி.ஏ.றசூல் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
21. ஜனாப் எம்.சி.எம்.பாரிஸ் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
22. ஜனாப் எம்.ஐ.டக்கீட் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
23. ஜனாபா கே.எல்.மும்தாஜ் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
24. ஜனாப் எம்.எல்.நளீம் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
25. ஜனாபா எம்.பி.நஜீபா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
26. ஜனாப் கே.எல் அமீர் அலி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
27. ஜனாப் எம்.எல்.எம்.அன்வர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
28. ஜனாபா எம்.ஏ.கதிசம்பு - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
29. ஜனாபா ஏ.எல்.நஸீறா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
30. ஜனாபா ஏ.சி.பசீறா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
31. ஜனாபா எம்.சி. பாத்துமுத்து - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
32. ஜனாப் ஏ.எம்.முனாஸ் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
33. ஜனாப் என்.ஆதம்பாவா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
34. ஜனாபா யு.எல்.பாத்திமா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
35. ஜனாப் ஐ.எல்.அலி அக்பர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
36. ஜனாபா எம்.வை.யு.ஆயிஷா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
37. ஜனாபா யு.எல் ஹிதாயா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
38. ஜனாப் ஏ.எம்.நஸ்றுதீன் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
39. ஜனாப் ஏ.சி.எம்.காலித் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

40. ஜனாபா வி.ரி.குறைசியா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
41. ஜனாபா ஐ.எல்.யு.அனூன் பீவி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
42. ஜனாப் எஸ்.நாஸர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
43. திருமதி கே.கோசலை - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
44. ஜனாப் ஏ.எல்.முகம்மட் அலி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
45. ஜனாபா எம்.வை.எஸ்.நளீபா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
46. ஜனாப் ஏ.பி.சாதிக் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
47. ஜனாப் ஏ.சி.எம்.நஜீப் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
48. ஜனாபா எம்.ஐ.அகமட் நிஸா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
49. ஜனாப் ஏ.ஏ.மஜீட் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
50. ஜனாபா வி.ரி.நஜீபா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
51. ஜனாப் எம்.ஐ.ஏ.றசீட் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
52. ஜனாப் எம்.ஏ.சி.எம்.நளீம் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
53. ஜனாப் எம்.ஏ.மஜீட் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
54. ஜனாபா எம்.ரி.பௌசியா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
55. ஜனாப் ஏ.எல்.நஸீர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
56. ஜனாப் எஸ்.ஐ.அஸீஸ் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
57. ஜனாப் எம்.ஏ.ஜௌபர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
58. ஜனாப் ஏ.எம்.முகம்மட்தம்பி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
59. ஜனாப் எம்.ஏ.வை பாவா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
60. ஜனாப் எம்.எல்.எம்.அமீன் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
61. ஜனாப் வை.எம்.இஸ்மாயில் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
62. ஜனாபா கே.எல்.அஜிஸா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
63. ஜனாபா எம்.எம்.ஆயிஷாபீவி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
64. ஜனாபா எஸ்.எல்.எஸ்.ஜனுபா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
65. ஜனாப் ஐ.எல்.ஏ.றசீட் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
66. ஜனாப் ஏ.எம்.ஏ.அமீர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
67. ஜனாப் ஏ.எம்.அமீர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
68. ஜனாப் ஏ.ஜ.்.பர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
69. திருமதி என்.யோகராணி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
70. திருமதி பி.அருந்தவநாயகி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
71. ஜனாப் ஏ.எல்.எம். ஜாபிர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
72. திருமதி ரி.இந்திராணி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
73. திரு கே.சிறிகரன் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
74. திரு என்.புஸ்ப சுரேஸ் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
75. திரு ஜே.டப்ளியூ.திஸ்நாயக்க - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
76. ஜனாபா எஸ்.எம்.கதிஜாஉம்மா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
77. ஜனாபா எஸ்.எம்.யு.சல்ஹாஉம்மா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
78. ஜனாப் எம்.எம்.நளீம் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
79. ஜனாபா எம்.ஏ.நஸீறா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
80. ஜனாபா எம்.எல் றசீனா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
81. ஜனாப் ஏ.ஏ.றசூல் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
82. ஜனாபா ஏ.றசீதா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

83. ஜனாபா ஏ.எகினாபீவி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
84. ஜனாப் ஏ.எல்.சஹீட் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
85. ஜனாப் எம்.ஐ.ஏ.றகுமான் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
86. திரு எஸ்.நவனீதக்குமார் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
87. திருமதி கே.நந்தினி தேவி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
88. திருமதி எஸ்.றாஜி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
89. திருமதி ஏ.தயானந்தி - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
90. ஜனாப் எம்.எம்.மனாஸிர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
91. ஜனாப் எம்.பி.லாபிர் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
92. ஜனாப் எஸ்.நஸ்றின் - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
93. ஜனாபா ஏ.ஜெமிலா - சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

குட்லக் அச்சகம்



உங்களின் சகல விதமான அச்சு வேலைகளையும்,
இறப்பர் சீல்களையும் துரமாக செய்து கொள்ள
Goodluck Offset Printers



விசேடமாக உங்கள் மனம் கவரக்கூடிய
திருமண அழைப்பிதழ்
அட்டைகளையும் பெற்றுக் கொள்ளலாம்







பிரதான வீதி, நிருதவூர் Tel:077 6041606,

பிரதேச சாகித்திய கலாசார விழா – 2009

கௌரவிக்கப்பட்ட பிரதேச சாகித்திய விருது பெறுபவர்கள்

1. **அல்-ஹாஜ் மௌலவி ஓ.எம்.பாஸி ஆலிம்**
   (ஓய்வுபெற்ற மௌலவி ஆசிரியர், அகில இலங்கை குர்ஆன் மத்ரசாக்களின் முன்னாள் பரிசோதகர்)

   - சமயம்சார் பாடநூற்கள் வெளியீட்டுத் துறைப்பணி, கல்வித்துறையிலான பணி, சமய நெறிப்பணி... ஆகியவற்றிற்கு மேலான பங்களிப்புச் செய்தமைக்காக.

2. **அல்-ஹாஜ் எம்.ஏ.அப்துல் மஜீது BA**
   (முன்னாள் ஆசிரியர், முன்னாள் சமூகசேவை உத்தியோகத்தர், முன்னாள் பட்டினசபைத் தலைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர்)

   - முதலாவது பட்டதாரியாக முகிழ்ந்து சம்மாந்துறை மண்பதிக்குப் பெருமை சேர்த்தமைக்காகவும், பல்வேறு சமூகநலத்துறைப்பணிகளில் முன்னோடியாக ஒளிர்ந்து பரவலான அபிவிருத்திகளை மேற்கொண்டமைக்காகவும், சமூக மக்களிடையே இன மத முரன்பாடுகள் இல்லாத சமாதான சூழ்நிலைகளை மலரச்செய்ய முயற்சிகள் எடுத்தமைக்காகவும்.

3. **எழுத்தளர் எஸ்.வேலாயுதன். (ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

   - ஆய்வுக்கட்டுரை இலக்கியம், சோதிடக் கலை ஆகியவற்றிற்கும் சமூக - இந்துசமய - கலாசார வாழ்வியல் நெறிகளின்வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தமைக்காக.

4. **எழுத்தாளர் யூ.எம்.முஸ்தபா JP**
   (ஓய்வுபெற்ற அதிபர், தலைவர்: கலாபிவிருத்திக்கழகம்)

   - பல்துறை இலக்கிய ஆய்வுக் கட்டுரைப் படைப்புக்கள், கை எழுத்துச் சஞ்சிகை – சிறப்பு மலர்கள் வெளியீடுகள், நாடக ஆக்கம், கலை இலக்கியத்துறைகள் தொடர்பான விழிப்புணர்வுகளுக்குரிய காத்திரமான முயற்சிகள்... இன்னோரன்னவற்றிற்குப் பங்களிப்புச் செய்தமைக்காக.

5. **அல்-ஹாஜ் அமீர் இஸ்மாயில் LLB**
   (முன்னாள் சிரேஸ்ட அரச சட்டத்தரணி: சட்டமா அதிபர் திணைக்களம், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர், தவிசாளர்: இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு)

   - நீதித்துறை தொடர்பான ஆய்வுகள், மற்றும் சமூகப்பணிகள், இன்னோரன்னவற்றிற்குப் பங்களிப்புச் செய்து இம்மண்பதிக்குப் பெருமை சேர்த்தமைக்காக.

6. **அல்-ஹாஜ் எம்.பி.அலியார் மௌலவி (தேவபந்) JP(அலியார் ஹஸரத்)**
   (அமீர்: மஜ்லிஸ் அஷ்ஷூறா, அமீர்: தப்லீக் ஜமாஅத் அமைப்பு, அதிபர்: தப்லீகுல் இஸ்லாம் அரபுக்கல்லூரி, தலைவர்: ஜம்இய்யதுல் உலமா சம்மாந்துறை)
   - இஸ்லாமிய அரபுக்கல்வியைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச்சென்று பரவலாக்கியமைக்காகவும், சமய கலாசார நூல்கள் வெளியீடு சமய கலாசார சமூகப்பணிகள் இன்னோரன்னவற்றிற்குப் பங்களிப்புச் செய்தமைக்காக.

7. கவிஞர் யூ.எல்.முகம்மதிஸ்மாயில் (ஈழத்தொண்டன் இஸ்மாயில், தினகரன் இஸ்மாயில்)
(முன்னாள் எழுதுனர்: பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், முன்னாள் செயலாளர்: மக்கள் கலை வட்டம், ஆளுகை உறுப்பினர்: தமிழ் எழுத்தாளர் சங்கம்)

- கவிதை கிராமியக் கவிப்பாடல் இலக்கியம் ஆகியவற்றிறகுப் பங்களிப்புச் செய்தமைக்காக.

8. கலைஞர் ரீ.எம்.கார்த்திகேசு

- நாட்டுக்கூத்து, நடிப்பு ஆகிய கலைத்துறைகளுக்குப் பங்களிப்புக்கள் செய்தமைக்காக.

9. கலைவேள், கவிஞர் யூ.ஸெயின் JP (மாறன் - யூ.ஸெயின்)
(ஓய்வுபெற்ற அதிபர், தலைவர்: சம்மாந்துறை எழுத்தாளர் சங்கம், தலைவர்-பணிப்பாளர்: தேசிய கலை இலக்கியத் தேனகம், துணைத்தலைவர்: பிரதேச கலை இலக்கிய கலாசாரப் பேரவை, தலைவர்: அமீர்அலி நூலக அபிவிருத்திசபை, முன்னாள் செயலாளர்: கலாபிவிருத்திக்கழகம்)

- கவிதை, நாடகம், சிறுகதை, கட்டுரை, வில்லிசைப்பாட்டுக் கலை இலக்கியம்... ஆகியவற்றிற்கும், இலக்கிய நூல்கள் - சஞ்சிகைகளின் வெளியீடுகளுக்கும் கலை இலக்கியத்துறைகளிலான விழிப்புணர் வுகளுக்கும் பங்களிப்புகள் செய்தமைக்காக.

10. கலாபூஷணம் கலைமணி ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை JP., BA, Dip.in Edu.
(ஓய்வுபெற்ற அதிபர், செயலவை உறுப்பினர்: கலாபிவிருத்திக் கழகம், துணைத்தலைவர்: தமிழ் எழுத்தாளர் சங்கம், நம்பிக்கையாளர் சபை முன்னாள் உறுப்பினர், தலைவர்: முகைதீன் மஸ்ஜீத்)

- கவிதை இலக்கியம், இசைப்பாடல், சித்திரக்கலை, எழுத்தணிக்கலை ஆகியவற்றிற்கு பங்களிப்புச் செய்தமைக்காகவும், இவக்கிய நூல்கள் வெளியீடு செய்தமைக்காகவும்.

11. கவிப்புலவர் எஸ்.ஆதம்பாவா

- கிராமியக் கவிப்பாடல் இலக்கியம், இசை அமைப்பு, கழிகோலாட்டக்கலை (பொல்லடி) ஆகியவற்றிற்கு பங்களிப்புச்செய்தமைக்காக.

12. எழுத்தளர் அல்-ஹாஜ் எஸ்.அப்துல் றாஸீக் JP
(ஓய்வுபெற்ற அதிபர், தவிசாளர்: மத்தியஸ்த சபை , செயலாளர் நாயகம்: மஜ்லிஸ் அஷ்ஷூறா, செயலாளர்: தப்லீகுல் இஸ்லாம் அரபுக்கலாசாலை, முன்னாள் தலைவர்/ செயலாளர்: கலாபிவிருத்திக்கழகம், தமிழ் எழுத்தாளர் சங்க கௌரவ உறுப்பினர் , முன்னாள் செயலாளர்: கிழக்குமாகாண பள்ளி வாசல்கள் சம்மேளனம், கோசப்பா குடி மரைக்கார்)

- ஆய்வுக்கட்டுரை, நாடகநடிப்புக்கலை, பேச்சுக்கலை..., ஆகியவற்றிற்கும், கலை இலக்கியத்துறைகளிலும் சமூக நல்லுறவு சமாதானத்துறைகளிலும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியமைக்கும், மஜ்லிஸ் அஷ்ஷூறா அமைப்பு முகிழ்வதற்கும் சாலவும் பங்களிப்புகள் செய்தமைக்காக

13. கலாபூஷணம் அல்-ஹாஜ் மௌலவி ஏ.சீ.ஏ.எம்.புஹாரி JP

(ஓற்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் முஸ்லீம் கமய கலாசார திணைக்கள உத்தயோகத்தர், முன்னாள் தலைவர்: நம்பிக்கையாளர் சபை, முன்னாள் தலைவர்: சம்மாந்துறை உலமாக்கள் சபை, துணைத்தலைவர்: மஜ்லிஸ் அஷ்ஷூறா, தலைவர்: தப்லீகுல் இஸ்லாம் அறபுக்கலாசாலை)

- 'வரலாற்றில் ஓர் ஏடு' சமயம்சார் வானொலி உரைநிகழ்ச்சிகள் மூலம் வாழ்வியல் நெறிக்கு வழிகள் செய்தமைக்கும், மஜ்லிஸ் அஷ்ஷூறா அமைப்பு முகிழ்வதற்கும், எழுத்துத்துத்றை – சமூக – சமய – கலாசாரத் துறைகள் மூலம் மக்கள் வாழ்வியலை வழிப்படுத்தும் பணிகளில் காத்திரமான பங்களிப்புகளைச் செய்தமைக்குமாக.

14. ஆய்வாளர், எழுத்தாளர் எம்.எல்.ஏ.காதர் MA

(பல்கலைக்கழகப் பேராசிரியர், முன்னாள் உபவேந்தர்: தென்கிழக்கு பல்கலைக்கழகம்)

- ஆய்வுக்கட்டுரை, சிறுகதைத்துறைகளிலான இலக்கியத்திற்கும், ஆய்வு நூல்கள் - தொகுப்புகள் வெளியீட்டுத்துறைக்கும் காத்திரமான பங்களிப்புகளைச் செய்தமைக்காக.

15. எழுத்தாளர் அல்-ஹாஜ் எம்.முகம்மது ஜலீல் B.Com (Hon.)
(ஜலீல் மனேஜர்)

(ஓய்வுபெற்ற உதவி பொது முகாமையாளர்: இலங்கை வங்கி)

- நாவல், இலக்கியத்துறைக்கு பங்களிப்புச் செய்தமைக்காகவும், நாவல் இலக்கியத் துறைகளில் சாகித்திய மண்டலப் பரிசு பெற்று சம்மாந்துறை மண்பதிக்குப் பெருமை சேர்த்தமைக்காகவும்.

16. புரட்சிக் கலைஞர் அல்-ஹாஜ் எஸ்.எச்.எம்.முஸ்தபா JP

(ஓய்வுபெற்ற அதிபர், செயலாளர்: கலாபிவிருத்திக்கழகம், செயலாளர்: ஓய்வூதியர் நலன்புரி சமூக சேவைகள் சபை, ஆயுள்காலத் தலைவர்: உஸ்றதுல் ஹசனா சமூக சேவைகள் மன்றம், தலைவர்: விவசாய அமைப்புக்கள்)

- ஆய்வுக்கட்டுரை, கவிதை... இலக்கியத்துறைகளுக்கும் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு - நடிப்புக்கலை ஆகியதுறைகளுக்கும், கலை - இலக்கிய - சமூக நல்லுறவு சமாதான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கும் காத்திரமான பங்களிப்புகளைச் செய்தமைக்காக.

17. எழுத்தாளர் எஸ்.எல்.ஏ.சலாம் BA, Dip.in Edu.

(முன்னாள் அதிபர்: தேசிய பாடசாலை, ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

- ஆய்வுக்கட்டுரை இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கும், வரலாற்று ஆய்வுத்தறையின் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தமைக்காகவும், சமூக நல்லுறவு சமாதான மேம்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும்.

18. கலைஞர் எம்.ரி.தம்பிராசா (எம்.ரி.ராசா)

(ஓய்வு பெற்ற பிரதேச சபை ஊழியர், தலைவர்: பிரதேச கலைக்கழகம், கணக்காய்வாளர்: பிரதேச கலை இலக்கிய கலசாரப்பேரவை)

- சித்திரம், நடிப்பு ஆகிய கலைத்துறைகளுக்கும், நடிப்பு – நாடகக்கலைகளின் விழிப்பணர்வுகளுக்கும் சமூக நல்லுறவு சமதான மேம்பாடுகளுக்கும் பங்களிப்புச் செய்தமைக்காக.

19. கலாபூஷணம் அல்-ஹாஜ் யூ.எல்.அலியார் MA

(ஓய்வு பெற்ற அதிபர், ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர், தலைவர்: நாவலர் ஈழமேகம் நினைவு மன்றம், கௌரவ உறுப்பினர்: தமிழ் எழுத்தாளர் சங்கம்)

- கல்வி, கலை இலக்கிய ஆய்வுக்கட்டுரைத்துறைகளுக்கும், நூல்கள் வெளியீடுகளுக்கும், இவற்றின் விழிப்புணர்வுகளுக்கும் காத்திரமான பங்களிப்புகள் செய்தமைக்காக.

20. எழுத்தாளர் அல்-ஹாஜ் ஐ.எம்.இப்றாகீம் JP., B.Dev, D.Ed.

(ஓய்வு பெற்ற அதிபர், முன்னாள் தவிசாளர்: சம்மாந்துறை பிரதேச சபை, ஆலோசகர்: தமிழ் எழுத்தாளர் சங்கம், உப தலைவர்: தப்லீகுல் இஸ்லாம் அரபுக்கலாசாலை, இணைப்பாளர்: அம்பாறை மாவட்ட சகவாழ்வு மன்றம், முன்னாள் செயலாளர்: அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேனளம்)

- அரசியல், கல்வி, வரலாறு: ஆய்வுக்கட்டுரைத் துறைகளுக்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும், சமூக - இன நல்லுறவு, சமாதான வாழ்வியல் மேம்பாட்டிற்குக் காத்திரமான பங்களிப்புக்கள் - அர்ப்பணிப்புக்களை செய்து வருகின்றமைக்கவும்.

21. இறையருட் கவிஞர் ஏ.இப்றாகீம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஆளுகை உறுப்பினர்: தமிழ் எழுத்தாளர் சங்கம்)

- கவிதை இலக்கியம் ஆகியவற்றிற்குப் பங்களிப்புச் செய்தமைக் காகவும், சமூக – சமய கலாசார வாழ்வியல் நெறிகளின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும்.

22. கலைஞர் கே.எல்.அசனார் (வரிசை முகம்மது)

(கௌரவ உறுப்பினர்: மத்தியஸ்த சபை, முன்னாள் தலைவர்: மஸ்ஜிதுல் ஜாரியாப் பள்ளிவாசல், செயலாளர்: வீரயடிக் கட்டு விவசாய அபிவிருத்தி அமைப்பு)

- கழிகோலடி (பொல்லடி) கலைத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தமைக்காகவும், சமூக – சமய கலாசார வாழ்வியல் நெறிகளின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தமைக்காக.

23. எழுத்தாளர் எம்.எல்.சுபைதா B.Ed. (சுபைதா அமீர்) (ஓய்வு பெற்ற அதிபர்)

- சிறுகதை இலக்கியம், கட்டுரை இலக்கியம், வானொலி ஆகிய இலக்கிய கலைத் துறைகளின் வளாச்சிக்குப் பங்களிப்புக்கள் செய்தமைக்காக.

24. கவிஞர் எஸ்.எல். இப்றாஹிம் (சுலைமா எல் இப்றாஹிம்)

(முன்னாள் இலிகிதர்: இ.போ.வ.ச.முகாமையாளர் அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு வட்டி இல்லா கடனுதவி நிதியம்)

- கவிதை இலக்கியம்,சமூக,சமய நெறி விழுமியங்களுக்குப் பங்களிப்புச் செய்தமைக்காக

25. கவிஞர் ஏ.அஸீஸ் (சம்மாந்துறை அஸீஸ்)

(பொருளாளர் சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம்)

- கவிதை இலக்கியத்துறைக்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும், சமூக – நல்லுறவு – சமாதான வாழ்வியல் முயற்சிக்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும்.

26. எழுத்தாளர் எம்.ஐ. பௌஸ்தீன். (அபூநஜாத் பௌஸ்தீன்)(முன்னாள் ஆசிரியர்)

- கவிதை, ஆய்வுக் கட்டுரை, ஆகியவற்றிற்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும், பத்திரிகை சஞ்சிகை – நூல் வெளியீடு ஆகிய துறைகளில் காத்திரமான பங்களிப்புக்களை செய்தமைக்காகவும்.

27. கலைஞர் ஐ.ஏ.றசூல்

(முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி)

- சித்திரக்கலைத்துறைக்கும் இசை அமைத்தல், இசைத்துப்பாடுதல், ஆகிய கலைத்துறைகளுக்கும், காத்திரமான பங்களிப்புக்களைச் செய்தமைக்காக.

28. கவிஞர் எச்.எம்.பாறூக் B.Com (Hon.), PGDE, PGDEM(அதிபர் தேசியக்கல்லூரி)

- கவிதை இலக்கியத்துறைக்கும், இலக்கியச் சஞ்சிகைகள் - நூல்கள் வெளியீடுகளுக்கும், சமூக - சமய - கல்வி - நல்லுறவு சமாதான வாழ்வியல் முயற்சிகளுக்கும் சாலவும் பங்களிப்புக்கள் செய்தமைக்காக.

29. கவிஞினி எம்.ஐ.பரீதா (பரீதா இஸ்மாயில்) ஆசிரியை

(தலைவர்: அல் அமானா சமூகசேவை அபிவிருத்தி ஒன்றியம், ஆளுகை உறுப்பினர்: சம். தமிழ் எழுத்தாளர் சங்கம்)

- கவிதை, கட்டுரை, பாடல், நாடக நடிப்பு, வானொலி நிகழ்ச்சி, பேச்சு ஆகிய இலக்கிய - கலைத்துறைகளுக்குச் சாலவும் பங்களிப்புக்கள் செய்தமைக்காகவும், சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமைக் காகவும்.

30. கவிஞர் மன்சூர் ஏ காதர் BA (Hon.), MA

(பதில் பதிவாளர்: தென் கிழக்குப் பல்கலைகழகம், சேமநல சேவைத்தலைவர்: தமிழ் எழுத்தாளர் சங்கம், செயலாளர்: சகாத் நிதியம், கையூர் மலையார் குடிமரைக்கார்)

- கவிதை, ஆய்வுக்கட்டுரை, சிறுகதை, பேச்சு ஆகிய இலக்கியத் துறைகளுக்குப் பங்களிப்புச் செய்தமைக்காகவும் சமூக - சமய – கலாசார சமாதான வாழ்வியலுக்குச் சாலவும் பங்களிப்புக்கள் செய்தமைக்காகவும்.

31. கலைஞர் அல் ஹாபிழ் எஸ்.முஹம்மது ஹனிபா Dip in Lib. &Info. Sc.

(சிரேஷ்ட ஒலிபரப்பாளர்)

- இலங்கை வானொலி ஊடாக ஒலிபரப்புத்துறை மூலம் சம்மாந்துறை மண்பதிக்குப் முதன் முதல் பெருமை சேர்த்தமைக்காக.

32. கலாநிதி எஸ்.எம்.முகம்மது இஸ்மாயில் M.Sc, P.hD (நகீப்)

(கலாநிதி பட்டப் பிற்படிப்பு, சர்தேச சமாதானத் தூதுவர், பொதுநலவாய கல்விமான், உபவேந்தர் தென்கிழக்குப் பல்கலைகழகம்)

- கல்வி சமூக பொருளதாரம், இலங்கை முஸலீம்களின் அரசியல் வரலாறு, எயிட்ஸ் மூலமான சமூக பொருளாதார தாக்கங்கள், பல்லின வகைகள் கையாளுதல்,

சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய ஒன்றியத்தின் வளர்ச்சி, இன்னோரன்ன ஆய்வுகள் நூல்கள் வெளியீடு செய்தமைக்காக.

33. எழுத்தாளர் எம்.எம்.நௌஷாட் (MBBS)
(மார்பு நோய் வைத்திய மாவட்ட அதிகாரி)

- சிறுகதை, ஆய்வுக்கட்டுரை... இலக்கியத்துறைகளுக்கும், நூல்கள் - சஞ்சிகைகள் வெளியீட்டுத் துறைகளுக்கும் சாலவும் பங்களிப்புக்கள் செய்தமைக்காக.

34. கவிஞினி மசூறா சுஹைர்தீன் ஆசிரியை
(தலைவர்: நிறைமதி கலை இலக்கிய கழகம், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சேமநலச் சேவைச் செயலாளர்)

- கவிதை கட்டுரை இலக்கியத்துறைகளுக்கும், இசையமைப்பு நாடகம்... ஆகிய கலைத் துறைகளுக்குப் பங்களிப்புக்கள் செய்தமைக்காகவும், கையெழுத்து – அச்சுப்பதிப்புச் சஞ்சிகைகள் வெளியீடு செய்தமைக்காகவும், கலை இலக்கியத்துறைகளின் விழிப்புணர்வுகளுக்குக் காத்திரமான பணிகளைச் செய்து வருகின்றமைக்காகவும்.

35. பல்துறைக்கலை ஆய்வாளர் எம்.ஏ.முகம்மது றமீஸ் BA. (Hon.), M.Pil. (றமீஸ் அப்துல்லாஹ்)
(மொழித்துறைத் தலைவர்: தென்கிழக்குப் பல்கலைக் கழகம், ஆலோசகர்: தமிழ் எழுத்தாளர் சங்கம்)

- ஆய்வுக்கட்டுரை, விமர்சனக் கட்டுரை, ஆகிய இலக்கியத் துறைகளுக்கும், இலக்கியச் சஞ்சிகை – நூல்கள் வெளியீடுகளுக்கும், சமூக – நல்லுறவு – சமாதான வாழ்வியலுக்கு பங்களிப்புக்கள் செய்து வருகின்றமைக்காக.

36. கலைஞர் வீ.ஸ்ரீதரன்
(போதனாசிரியர், நுண்கலைத்துறை சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவனம்)

- மிருதங்க வாத்தியம், இசைப்பாடல், நடிப்புக்கலை ஆகியவற்றிற்குப் பங்களிப்புக்கள் செய்தமைக்காக.

37. கலைஞினி ஆர்.துஷ்யந்தி MA
(விரிவுரையாளர்: நடனம் சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவனம்)

- பரத நாட்டியம், இசை... மற்றும் நுண்கலைத்துறைகளின் வளர்ச்சிக்குப் பங்களிப்புக்கள் செய்து இம்மண்பதிக்குப் பெருமை சேத்தமைக்காக.

(இத்தெரிவுகள் வயது முதிர்வு அடிப்படையில் பட்டியல் படுத்தப்பட்டதாகும்)

RUZAN
DIGITAL STUDIO

M.A. Nazurudeen
Proprietor

ரூஸான்
டிஜிட்டல் ஸ்டூடியோ

Right Choice for Digital Video & Photography technology

- All types of Video filming
- Wedding Photographs
- Group Photographs
- Digital Photography
- Urgent ID photos in seconds...
- First Holy Communion Photographs
- Printing Negative
- Enlarging Black & White, Colour Photographs
- Framing with High Protection
- Hot / Cold Laminating
- Photocopy
- Type Settings & Print out
- Book Binding, Spiral Binding
- Local, IDD Calss & Fax service
- Reloads for Phone

No-01, Hijra Junction, Ampara Road, Sammanthurai.
+94672260641, +94776660002, +94777853891

சம்மாந்துறை பிரதேசத்தில் 2005- 2008 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பல்கலை துறைகளில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டுதல்.

ஆண்டு	மாணவர் பெயர்	போட்டி		தேசிய நிலை
பாடசாலை				
2005	எம்.சி.பாத்திமா நுஸைபா	ஆங்கில மொழி (இந்திய சுற்றுப்பயணம்)	01	சது /தேசிய பாடசாலை
	ஏ.எம்.இப்திகார் தூபா	ஆங்கில மொழி (பிரதி பண்ணல்)	03	சது /தேசிய பாடசாலை
2007	எம்.எச்.எம்.பெறோஸ்	புத்தாக்குனர் போட்டி (ஸ்டவ் அடுப்பு செய்தமை- வெள்ளிப்பதக்கம்)	02	சது /தேசிய பாடசாலை
2008	ஏ.எச்.எம்.ஹலீம்	இளம் கணணி விஞ்ஞானப் போட்டி (வெண்கலப் பதக்கம்)	03	சது /தேசிய பாடசாலை
2008	எம்.ஏ.பாத்திமா ஸாஜிதா	கட்டுரைப் போட்டி (அகில இலங்கை – தங்கப்பதக்கம்)	01	சது /தேசிய பாடசாலை
2009	ஏ.சி.ஸமா அப்ரின்	கட்டுரைப் போட்டி (அமெரிக்க தூதுவர் ஆலையம்)	03	சது /தேசிய பாடசாலை
2005	எம்.ஐ.கன்சுல் இக்ராமா	சிசு உதான சாதனையாளர் (ஜனாதிபதி விருது)		சது /தேசிய பாடசாலை
2005	எஸ்.ரி.ஸன்பறா	பேச்சுப் போட்டி(தமிழ்)	01	சது /தேசிய பாடசாலை
2008	ஏ.பி.பாத்திமா றினோசா	சிங்களம்(பேச்சு)	02	சது /தேசிய பாடசாலை
2006	ஐ.எல்.பஸ்மிறா	இளம் கணணி விஞ்ஞானப் போட்டி	03	சது /சென்னல் ஸாஹிரா
2006	எல்.முஹமட் அஸ்லம்	சிறுகதை (தமிழ்)	01	சது /தாறுஸ்ஸலாம் வித்
2007	ஏ.எல்.நஜிய்யா ஹானிம்	பேச்சு - ஆங்கிலம்	01	சது /தாறுஸ்ஸலாம் வித்
2007	எம்.ஏ.எவ்.ஸிப்னா பானு	பேச்சு- சிங்களம்	01	சது /முஸ்லிம் மகளிர் வித்
2008	எம்.என்.எப்.நுஹா	கிரகித்தலும்,மொழிப் பிரயோகமும் (சிங்களம்)	02	சது /முஸ்லிம் மகளிர் வித்
2008	ஏ.பி.சஹ்னாஸ் பானு	குர் ஆன் மனனம்	01	சது /முஸ்லிம் மகளிர் வித்
2008	ஏ.எஸ்.எவ்.றிசானி	பேச்சு- தமிழ் தின விழா	01	சது /முஸ்லிம் மகளிர் வித்
2005	எம்.எஸ்.பாத்திமா ஸுல்பா	பேச்சு-அரபு	01	மட்/மில்லத் மகளிர் வித்
2006	எம்.ஐ.பாத்திமா நுஸ்றத்		01	சது/தேசிய பாடசாலை

National Level Award Winners who obtained 100 Marks By Institute of Western Music & Speech- IWMS Colombo.

Year	Full name	Type of Exam	Area Institute
2008	M.I.Ishrath Banu	Spoken English	Royal Education Centre Sammanthurai
2006, 2008	A.G.Fathima Rifa	Spoken English	"
2008	M.M.Apsana Sahani	Spoken English	"
2006, 2008	M.Mohamed Milhan	Spoken English	"
2008	M.Ashmal Ahamed	Spoken English	"
2008	A.Fathima Jazla	Spoken English	"
2008	M.T.A.Seema Rosny	Spoken English	"
2008	M.L.Ahamed Nifli	Spoken English	"
2007, 2008	M.F.Fathima Shara	Spoken English	"
2007	M.M.Farha Fathima	Spoken English	"
2007	M.M.Mohamed Munsheef	Spoken English	"
2007	M.M.Afeek Hana	Spoken English	"
2007	M.R.Fathima Nuha	Spoken English	"
2007	M.A.M.Saban Mufa	Spoken English	"
2007	A.R.Nihra Banu	Spoken English	"
2007	M.J.M.Ashluf Aman	Spoken English	"
2007	M.A.Muflih Ahamed	Spoken English	"
2007	A.H.F.Shabni Reezman	Spoken English	"
2006, 2007	I.L.Ajas Ahamed	Spoken English	"
2006	A.L.Hajistha	Spoken English	"
2006	M.M.Inas Iffa	Spoken English	"
2006	M.N.A.Ihsan Mohamed	Spoken English	"
2006	R.F.Shahunaz	Spoken English	"
2006, 2007	A.N.F.Thabisha	Spoken English	"
2006	T.Fathima Sharafa	Spoken English	"
2006	M.N.Zeinab Nazahah	Spoken English	"
2007	M.M.Aneeza	Spoken English	"
2006,2007	I.Sulfa Ihsana	Spoken & Written English	"
2006,2007	A.Nusrath Nufaila	Spoken & Written English	"
2008	A.L.F.Rosni	Written English	"
2008	A.B.Hilul Risla	Written English	"
2008	M.A.F.Shifana Banu	Written English	"

சம்மாந்துறை பிரதேசத்தில் 2005 – 2008 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா.த), க.பொ.த.(உ.த) பரீட்சைகளில் அதியுயர் சித்தி பெற்று முதல் நிலையிலுள்ள மாணவர்களைப் பாராட்டுதல்.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு	மாணவர் பெயர்	பெற்ற புள்ளி	அதியுயர் பாடசாலை.
2005	எம்.பி.முஹமட் நப்ரீஸ்	156	சது/அல் முனீர் வித்தியாலயம்
2006	எம்.ஐ.பாத்திமா உர்பா	173	சது/தேசிய பாடசாலை
2007	எம்.ஏ.சி.சியாவுர் றஹீன்	178	சது/முஸ்லிம் மகளிர் வித்தியாலய
	எம்.ஐ.பாத்திமா சியாமா	178	சது/முஸ்லிம் மகளிர் வித்தியாலய
2008	எம்.ஐ.பாத்திமா நுஹா	158	சது/அல் முனீர் வித்தியாலயம்

க.பொ.த.(சா.த) பரீட்சை

2005	எம்.எஸ்.சியாத் அஹமட்	10ஏ	சது/தேசிய பாடசாலை
	ஏ.எம்.எம்.மனாஸ்	10ஏ	சது/தேசிய பாடசாலை
	எம்.எவ்.அனீசுல் சிஹ்னாஸ்	10ஏ	சது/அல் மர்ஜான் மகளிர் வித்தி
2006	எம்.ஐ.பிஸ்றுல் ஹாபி	10ஏ	சது/தேசிய பாடசாலை
	ஏம்.ஏ.எச்.எவ்.ஸமீறா	10ஏ	சது/தேசிய பாடசாலை
2007	எம்.ரஜ.எவ்.நுஸைபா	10ஏ	சது/தேசிய பாடசாலை
2008	எம்.எம்.பாத்திமா சியாதா	09ஏ	சது/அல் மர்ஜான் மகளிர் வித்தி

க.பொ.த.(உ.த) பரீட்சை

ஆண்டு	பிரிவு	பெயர்	மாவட்ட நிலை	பாடசாலை
2005	கணிதம்	எம்.பி.ஹறூஸ் முஹமட்	01	சது/தேசிய பாடசாலை
	விஞ்ஞானம்	ஏ.எல்.எம்.பௌசான்	08	சது/தேசிய பாடசாலை
	வர்த்தகம்	ஏ.பி.ஐனுல் பாஹிமா	29	சது/தேசிய பாடசாலை
	கலை	எம்.எல்.றிசானா	01	சது/அல் மர்ஜான் மகளிர்
2006	கணிதம்	ஏ.எம்.முஹமட் மனாஸ்	07	சது/தேசிய பாடசாலை
	விஞ்ஞானம்	எம்.எஸ்.ஸபானா பேகம்	19	சது/தேசிய பாடசாலை
	வர்த்தகம்	எஸ்.எல்.எம்.ஸமூண்	81	சது/தேசிய பாடசாலை
	கலை	ஏ.எம்.முஹமட் பிர்னாஸ்	01	சது/தேசிய பாடசாலை
2007	கணிதம்	எம்.ஏ.முஹமட் ஸியாம்	43	சது/தேசிய பாடசாலை
	விஞ்ஞானம்	ஏ.எம்.அஹமட் ஸகி	09	சது/தேசிய பாடசாலை
	வர்த்தகம்	ஏ.எல்.பைசால்	56	சது/தேசிய பாடசாலை
	கலை	எம்.ஏ.பாத்திமா மிபாஸா	01	சது/அல் மர்ஜான் மகளிர்
2008	கணிதம்	எம்.ஏ.முஹமட் ஸியாம்	16	சது/தேசிய பாடசாலை
	விஞ்ஞானம்	எம்.எம்.ஹாலிப்f	04	சது/தேசிய பாடசாலை
	வர்த்தகம்	எம்.பி.நஸீபா	125	சது/தேசிய பாடசாலை
	கலை	எம்.ஐ.றினோசியா	48	சது/தேசிய பாடசாலை

ஒரு தசாப்த காலங்களைக் கடந்து சம்மாந்துறை மக்களின் நெஞ்சங் களில் இடம் பிடித்து வெற்றி நடை போடும் ஆடைகளின் பூங்காவனம்

SR எஸ்.ஆர். செலக்ஷன்

ஆண்களுக்கான சேட்.,சாறம், ரௌசர்,பெண்களுக்கான ஹபாயா,ஹிஜாப்,சல்வார், சாறி,சிறுவர்களுக்கான ரி சேட்,டெனிம் சேட்,ரௌசர்,சூட் மற்றும் இன்னோரன்ன ஆடைகள் முஸ்லிம்,தமிழ்,சிங்கள,கொண்டாட்டங்கள்,திருமண வைபவங்கள் ஏனைய தேவைகளின் போதான ஆடைகளின் தெரிவிற்கு

SR

S.R.SELECTION

கனிவான பேச்சு,குறைவான விலை,தரம்மிக்க
பயன்பாடு,சுதந்திரமான தெரிவு,நுகர்வோர் திருப்தி

AMPARA ROAD, (Nearest to Al Marjan School) SAMMANTHURAI

சம்மாந்துறை பிரதேச செயலக சாகித்திய கலாசார விழா–2009
சிறப்புற எமது வாழ்த்துக்கள்

3 நிமிடத்தில்

உங்களது வாழ்வில் நிகழும் சகல வித
வைபவங்களையும் தத்துருபமான முறையில்
வீடியோ, புகைப்படம் ஆக்கிட நவீன
படப்பிடிப்புத் துறையின் முன்னோடி நிறுவனம்



ஹில்டன்

டிஜிடல் ஸ்ரூடியோ அன் வீடியோ,

வினைனையடி சந்தி. சம்மாந்துறை.

HOT NO.077 3245759,0772981215
E.MAIL:HILTONSTUDIO@YAHOO.COM

தேசிய ரீதியிலான போட்டிகளில் வெற்றி பெற்ற இளம் எழுத்தாளர்கள்,கலைஞர்கள்.

1 ஆய்வாளர் ஐ.எஸ்.ஜலீல்

இலக்கியத்துறைகளில் மிளிர்ந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய ரீதியில் நடாத்திய சிறந்த இளைஞருக்கான விருதினைப் பெற்றுப் பெருமை தேடித்தந்தமைக்காக சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழாவில் பாராட்டப்படுகிறார்.

2 கவிஞர் எம்.எச்.எம்.றிஸ்வானுல் ஹக்

இலக்கியத்துறைல் மிளிர்ந்து கொழும்பு கம்பன் கழகம் அகில இலங்கை மட்டத்தில் நடாத்திய கவிதைப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த தங்கப்பதக்கத்தைப் பெற்றமைக்காக சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழாவில் பாராட்டப்படுகிறார்.

3 கலைஞர் எஸ்.எம். முஹம்மது ஜவாட்
(அறிவிப்பாளர்,இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)

பல்துறை ஊடகக்கலைத்துறையில் மிளிர்ந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய துறுனு சக்தி இளமையின் நுண்கலை ஊடக அறிவிப்பாளர் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றமைக்காக சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழாவில் பாராட்டப்படுகிறார்.

4 கவிஞர் துறையூரான் எம்.எஸ்.எம். அஸாறுதீன்
(பல்கலைக்கழக மாணவர்)

இலக்கியத்துறைகளில் “ பதக்கடச் சாக்கு” எனும் கவிதை நூலை எழுதி கலாச்சார அமைச்சு தினைக்களத்தின் அகில இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுப் பெருமை தேடித்தந்தமைக்காக சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழாவில் பாராட்டப்படுகிறார்.

5 கலைஞர் எம்.எஸ்.எம். சறூக் (கீழக்கு ஊடக இல்லம்)

பல்துறை ஊடகக்கலைத்துறையில் மிளிர்ந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் சுவர்ண வாஹினியும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய துறுனு சக்தி (இளமையின் நுண்கலை உலா) அறிவிப்பாளர் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றமைக்காக சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழாவில் பாராட்டப்படுகிறார்.







பிரதேச சாகித்திய கலாசார விழா பேரவைத் செயலாளரான கலாசார உத்தியோகத்தரின் நன்றிப்பூக்கள்

உலக நாகரீகமானது மனிதனது கலை உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளினால் தோற்றுவிக்கப் பட்டதாகும். இது விரிவடைந்து ஒவ்வொரு நாட்டிற்குரிய, இனத்திற்குரிய, பிரதேசத்திற்குரியவைகளாகவும் - சமயங்களின் செல்வாக்கு இழையோடியதாகவும் காணப்படுகின்றது.

அந்தவகையில் சம்மாந்துறைப் பிரதேசமும் நீண்டகால கலாசார பாரம்பரிய வரலாற்றைக்கொண்ட ஒரு பரந்துபட்ட பிரதேசமாகும். ஏராளமான கலை அம்சங்கள் மங்கி மறைந்துவரும் இன்றைய காலக்கட்டத்தில் இன்னும் உயிர்கொண்டு வாழ்பவற்றோடு அருகிவரும் கலை அம்சங்களும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும், அவற்றை எதிர்காலச் சந்ததிக்கு ஓர் ஆவணமாக முன்வைக்கவேண்டும் என்ற அவாவோடு இந்த சாகித்திய கலைப் பெருவிழா பெரிய எதிர்பார்ப்புடனும், பாரிய முயற்சியின் மத்தியிலும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மண்ணுக்குப் பெருமை தேடித்தரும் ஒரு நிகழ்வாக இந்த விழா இன்று, முதன் முறையாக இம் மண்ணில் நடைபெறுகிறது. அதற்கு எமது பிரதேச செயலாளரும், பிரதேச சாகித்திய கலாசார விழா பேரவைத் தலைவருமாகிய ஜனாப் ஏ.மன்சூர் அவர்கள் காரணமாக இருந்தார்கள்.

அவர்களோடு செயலகத்தின் பிரதம உத்தியோகத்தர்களும், ஏனையவர்களும் செயலகத்திற்கு வெளியே உள்ள பல பிரமுகர்களும் பங்காற்றியுள்ளனர். உள்ளேயும், வெளியேயுமான அங்கத்தவர்களைக்கொண்ட பல குழுக்கள் மும்முரமாகத் தொழிற்பட்டன.

இப்பெருவிழாவில் கலாசார உத்தயோகத்தரான எனது பொறுப்புக்கள் மிகக்கூடுதலானவை. என்றாலும், செயலகத்தின் முக்கியத்தர்கள், வெளிப்பிரமுகர்கள், அயராதுழைத்த குழுக்களின் முக்கியத்தர்கள் அனைவரும் சிரத்தையோடு இயங்கியதால் என் பணியில் எனக்குப்பாரம் ஏற்படவில்லை. ஆகவே, இவற்றுக்காக உழைத்த அனைவருடனும் நானும் என்னால் இயன்ற பங்களிப்பைச்செய்து திருப்தியடைகின்றேன். 'பட்டறை' நினைவு மலர் இதன் பொருட்டால் வெளியாகிறது. சிரமமான இப்பணியை மேற்கொண்டவர்களுக்கும், எல்லாவற்றுக்குமான நிதியைச் சேகரிப்புச்செய்த நிதிக்குழுவினருக்கும், விழாவுக்கு உதவிய அனைத்து தரத்தினர்களுக்கும் எனது நன்றிப்பூக்களைச் சொரிகின்றேன்.

எம்.ஐ.எம்.அஸ்ரப் (கலாசார உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம்,
சம்மாந்துறை.





Printed By : GoodLuck Offset 0776041606.

Designed By : Multi Design 0775023223.